# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## இளங்கலை இலக்கியம் - மூன்றாமாண்டு

## பி.லிட். (தமிழ்)

## ஐந்தாம் பருவம்

## தாள்: 10754

# தொல்காப்பியம் – சொல் – சேனாவரையம்

**Author:**
**Dr.S.RAJARAM,** *Professor and Head , Department of Tamil ,Alagappa University, Karaikudi -630003.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. S. SENTHAMIZH PAVAI,** *Professor & Director, Centre for Tamil culture, Alagappa University, Karaikudi. 630003.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE12-27/Preparation and Printing of Course Materials/2020 Dated 12.08.2020 Copies 2000**

# தாள்: 10754 – தொல்காப்பியம் – சொல் – சேனாவரையம்

பாடத்திட்டம்

### பிரிவு – 1 சொல்லாக்கமும் வேற்றுமை மரபும்

கூறு – 1: தொல்காப்பியம் – சொல் – கிளவியாக்கம்

கூறு – 2: தொல்காப்பியம் – சொல் – வேற்றுமையியல்

கூறு – 3: தொல்காப்பியம் – சொல் – வேற்றுமை மயங்கியல்

கூறு – 4: தொல்காப்பியம் – சொல் – விளி மரபு

### பிரிவு -2 பெயரும் வினையும்

கூறு – 5: தொல்காப்பியம் – சொல் – பெயரியல் - உயர்திணைப்பெயர்

கூறு – 6: தொல்காப்பியம் – சொல் – பெயரியல் – அஃறிணைப்பெயர், விரவுப்பெயர்

கூறு – 7: தொல்காப்பியம் – சொல் – வினையியல் – வினைப் பாகுபாடு, உயர்திணை வினை

கூறு – 8: தொல்காப்பியம் – சொல் – வினையியல் –அஃறிணை வினை, விரவுவினை

### பிரிவு -3 இடையும் உரியும்

கூறு – 9: தொல்காப்பியம் – சொல் – இடையியல் – முதல் 21 நூற்பாக்கள்

கூறு – 10: தொல்காப்பியம் – சொல் – இடையியல் – நூற்பா 22 முதல் 48 வரை

கூறு – 11: தொல்காப்பியம் – சொல் – உரியியல்

### பிரிவு – 4 எஞ்சிய சொல் மரபுகள்

கூறு – 12: தொல்காப்பியம் – சொல் – எச்சவியல் – முதல் 25 நூற்பாக்கள்

கூறு – 13: தொல்காப்பியம் – சொல் – எச்சவியல் – நூற்பா 26 முதல் 44 வரை

கூறு – 14: தொல்காப்பியம் – சொல் – எச்சவியல் – நூற்பா 45 முதல் 67 வரை

# பிரிவு – 1

# சொல்லாக்கமும் வேற்றுமை மரபும்

## கூறு – 1 தொல்காப்பியம் – சொல் – கிளவியாக்கம்

**அமைப்பு**

அறிமுகம்
நோக்கங்கள்
1.1 திணை , பால் பாகுபாடுகள்
1.1.1 திணைப் பாகுபாடு
1.1.2 பால் பாகுபாடு
1.1.2.1 உயர்திணைக்குரிய பால் வகைப்பாடு
1.1.2.1.1 ஆண்பால் ஈறு
1.1.2.1.2 பெண்பால் ஈறு
1.1.2.1.3 பலர் பால் ஈறுகள்
1.1.2.2 அஃறிணைக்குரிய பால் வகைப்பாடு
1.1.2.2.1 ஒன்றன் பால் ஈறுகள்
1.1.2.2.2 பலவின் பால் ஈறுகள்
1.1.3 பேடியும் தெய்வமும்
1.2 வழுவும் வழுவமைதியும்
1.2.1 திணை வழுவமைதி
1.2.2 பால் வழுவமைதி
1.2.2.1 திணையோடு கூடிய பால் வழுவமைதி
1.2.3 இட வழுவமைதி
1.2.4 கால வழுவமைதி
1.2.4.1செப்பு வழுவமைதி
1.2.5 வினா வழுவமைதி
1.2.6 மரபு வழுவமைதி
1.2.6.1 தகுதியும் வழக்கும்
1.2.6.2 இனச்சுட்டில்லாப் பண்புக்கொள் பெயர்
1.2.6.3 இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள்

1.2.6.4 வண்ணச்சினைச்சொல்

1.2.6.5 இனைத்தென அறிந்த சினைமுதற்கிளவி

1.2.6.6 மன்னாப் பொருள்

1.2.6.7 இயற்பெயரும் சுட்டுப்பெயரும்

1.2.6.8 சுட்டு முதலாகிய காரணக்கிளவி

1.2.6.9 இயற்பெயரும் சிறப்புப் பெயரும்

1.2.6.10 ஒருபொருள் குறித்த வேறுபெயர்க்கிளவி

1.2.6.11 வேறுவினைப்பொதுச்சொல்

1.2.6.12 இரட்டைக்கிளவி

1.2.6.13 ஒருபெயர்ப் பொதுச்சொல்

1.2.6.14 ஒன்றொழி பொதுச்சொல்

1.2.6.15 பலபொருள் ஒருசொல்

1.2.6.16 தெரித்துமொழி கிளவி

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

**அறிமுகம்**

தொல்காப்பியம் தமிழில் தோன்றி, இன்று கிடைக்கப்பெறும் நூல்களுள் மிகப்பழமையானது. 'தமிழ் முதனூல்' என்று போற்றப்படும் சிறப்புடையது. மூவாயிரம் ஆண்டுப் பழமையுடையதாயினும் இன்றும் ஆதிக்கம் செலுத்தும் இலக்கணமாகத் தொல்காப்பியம் விளங்குகிறது. இது எழுத்து, சொல், பொருள் என முப்பெரும் பிரிவுகளை உடையது. 'எழுத்து' என்ற பெரும் பிரிவில் தனிநின்ற எழுத்து, சொல்லிடை வரும்போதுஅவ்வெழுத்தின் நிலை, எழுத்துக்களின் உச்சரிப்பு நிலை, சொற்களில் எழுத்துக்கள் தொடர்ந்து நிற்கும் நிலைகள், சொற்கள் புணரும் போது ஏற்படும் எழுத்து மாற்றங்கள் ஆகியன கூறப்படுகின்றன.

'சொல்' பற்றிய பெரும் பிரிவில் சொற்கள் தொடர்ந்து தொடர்களாக அமையும் முறை, தமிழுக்குச் சிறப்பாக அமையும் அல்வழி, வேற்றுமைத் தொடரிலக்கணம், தனிச்சொற்களின் இலக்கணம் ஆகியன பேசப்படுகின்றன. 'பொருள்' பற்றிய பெரும் பிரிவில் அகம், புறம் பற்றிய இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. இது தமிழில் மட்டுமே காணப்படும் தனிச்சிறப்புடைய பகுதியாகும். மக்கள் வாழ்வு இலக்கியமாக ஆக்கம்பெறும் முறை வரையறுக்கப்பட்டுள்ளது. அகத்திணை, புறத்திணை மரபுகள் மட்டுமல்லாமல் இலக்கியத்தின் வடிவமான யாப்பு இலக்கணம், உவமை, மெய்ப்பாடு, மரபு போன்ற இலக்கியப் பொதுமைக் கூறுகளும் இடம்பெற்றுள்ளன.

எழுத்து, சொல், பொருள் என மூன்றதிகாரங்களைக் கொண்ட தொல்காப்பியம் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது ஒன்பது இயல்களை உள்ளடக்கியது. பனம்பாரனார் பாடிய சிறப்புப் பாயிரம் நூன்முகமாய் அணிசெய்கிறது. இளவழகனாரின் கழகப்பதிப்பின்படி எழுத்ததிகாரத்தில் 483 நூற்பாக்கள், சொல்லதிகாரத்தில் 463 நூற்பாக்கள், பொருளதிகாரத்தில் 664 நூற்பாக்கள் என மொத்தம் 1610 நூற்பாக்கள் உள்ளன.

தொல்காப்பியத்திற்குக் காலந்தோறும் உரைகள் தோன்றியுள்ளன. இன்று கிடைப்பவற்றுள் காலத்தால் முந்திய உரை இளம்பூரணர் உரையாகும். இவர் கி.பி. 12- ஆம் நூற்றாண்டினர். தொல்காப்பியம் முழுமைக்கும் இவர் உரை கிடைத்துளது. காலத்தால் பிற்பட்ட நச்சினார்க்கினியர் உரை எழுத்து, சொல்லுடன், பொருளில் முதல் ஐந்து இயல்கள், செய்யுளியல் ஆகியவற்றுக்குக் கிடைத்துளது. பேராசிரியர் உரை மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்ற இறுதி நான்கு இயல்களுக்கு மட்டும் கிடைத்துளது. நச்சினார்க்கினியர் பேராசிரியரைப் பின்பற்றியுள்ளமை பல இடங்களில் தெரிய வருகிறது. சொல்லதிகாரத்திற்கு மட்டுமே விரிவான பல உரைகள் கிடைத்துள்ளன. இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் உரைகள் குறிப்பிடற்பாலன. இவ்வுரைகளுள் சேனாவரையர் உரையையே அறிஞர்கள் போற்றுவர். இவர் கி.பி. 13–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உரை எழுதியுள்ளார்.

சொல்லதிகாரம் கிளவியாக்கம் முதலாக எச்சவியல் ஈறாக ஒன்பது இயல்களைக் கொண்டது. ‘கிளவியாக்கம்’ என்னும் முதல் இயல் சொற்கள் தொடர்ந்து தொடராகுமாற்றைக் கூறுகிறது. அல்வழித்தொடர்கள் பற்றிச் சிறப்பாக முதல் இயலில் விளக்கும் தொல்காப்பியர் அடுத்துவரும் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்னும் மூன்று இயல்களில் வேற்றுமைத் தொடர்கள் பற்றி விளக்குகிறார். அடுத்து வரும் நான்கு இயல்களில் முறையே பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு வகைச் சொற்கள் பற்றிய இலக்கணக் கூறுகளைத் தனித்தனியே விரித்துரைப்பர். இறுதி ‘எச்சவியல்’ பெயருக்கேற்ப முன்னர்க் கூறாது விடுத்தனவும் முன்னர்க் கூறியனவற்றுக்கான பொதுவான இலக்கணங்களைப் பேசுகிறது.

கிளவியாக்கம் என்னும் இயல் பெயரைப் பிரித்துப் பொருள் கொள்வதில் இருவேறு கொள்கைகள் உள்ளன. கிளவி- சொல் ஆக்கம்- ஆகிவருதல் எனப் பொருள் கொண்டு இன்னின்ன சொற்கள் இன்ன பொருள்மேல் ஆகி வருவனவாம் என்பதை இவ்வியல் உணர்த்துதலில் கிளவியாக்கமாயிற்று என்பது ஒருசாரார் கொள்கை. கிளவி- சொல் ஆக்கம்- அமைத்துக்கொள்ளுதல் எனப் பொருள் கொண்டு, சொற்களில் வழுவுடையன் இவை, வழுவற்றன இவை எனத் தெரிந்து வழுவற்ற சொற்களை அமைத்துக்கொள்ளுதலின் இவ்வியல் கிளவியாக்கமாயிற்று என்பது மற்றொரு சாரார் கொள்கை. சேனாவரையர் இவ்விரு கொள்கைகளையும் ஏற்பர். இதனை, “வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான், இவ்வோத்து கிளவியாக்கமாயிற்று. ஆக்கம் அமைத்துக்கோடல். நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை, அரிசியாக்கினார் என்பவாகலின் சொற்கள் பொருள்கள்மேல் ஆமாறு உணர்த்தினமையால் கிளவியாக்கமாயிற்று எனினும் அமையும்” என்னும் உரைப்பகுதி எடுத்துரைக்கும். இவற்றால், கிளவியாக்கம் என்பது சொற்களால் கட்டமைக்கப்படும் சொற்றொடர் அல்லது வாக்கியங்கள் பற்றிக் கூறுவது என்பது பொருந்துவதாகும்.

## நோக்கங்கள்

- திணை, பால் பாகுபாட்டுக் கோட்பாடுகளை விளக்குதல்
- வழு வழுவமைதி பற்றி உணர்த்துதல்

- திணை, பால், இடம், காலம், செப்பு, வினா, மரபு வழுவமைதிகளை எடுத்துரைத்தல்
- மரபு வழுவமைதியின் பல்வேறு வகைப்பாடுகளை விளக்குதல்

## 1.1 திணை , பால் பாகுபாடுகள்

திணை அடிப்படையிலும் பால் அடிப்படையிலும் சொற்களைப் பாகுபடுத்துவது தொல்காப்பியரின் கோட்பாடு ஆகும். தொல்காப்பியரின் இக்கோட்பாட்டை அறிந்து கொள்வதற்கு முன் ‘சொல்’ என்பதன் வரையறையையும் விளக்கத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். எழுத்துக்கள் தனித்தோ அல்லது தொடர்ந்தோ நின்று பொருள்தரின் அது சொல் எனப்படும். இதனையே சேனாவரையர், சொல்லாவது எழுத்தொடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது என்பர். அதாவது, எழுத்துக்கள் தன்னிலையில் இருக்கும்பொழுது பெறும் இலக்கணங்களை மொழிநிலையில் இருக்கும்பொழுது முழுவதும் பெறுவதில்லை; ஒருபுடையே (சிறுபான்மையே) பெறும் என்பது பொருளாகும்.

சொல், தனிமொழியும் தொடர்மொழியும் என இரு வகைப்படும். இவற்றுள் தனிமொழி என்பது பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும். மரம் என்பது பெயர்ச்சொல். உண்டான் என்பது வினைச்சொல். மற்று என்பது இடைச்சொல். நனி என்பது உரிச்சொல். இச்சொற்கள் அனைத்தும் சொல் தோன்றிய காலத்திலேயே அச்சொல் அப்பொருளை உணர்த்துக என்னும் இடுகுறி பற்றியோ காரணம் பற்றியோ முறைமை அடிப்படையில் பொருள் உணர்த்துவனவாகும். இதனை, “தனிமொழியாவது, சமய ஆற்றலால் பொருள் விளக்குவது” என்பர் சேனாவரையர். சமய

ஆற்றல் என்பதற்கு இறைவனது ஆணை என்றும் பொருள் கூறுவர்.

தொடர்மொழி என்பது இருமொழித்தொடர், பன்மொழித்தொடர் என இருவகைப்படும். 'சாத்தன் வந்தான்' என்பது இருமொழித்தொடர். 'அறம் வேண்டி அரசன் உலகம் புரந்தான்' என்பது பன்மொழித்தொடர். இத்தொடர்மொழி, அவாய் நிலையானும் தகுதியானும் அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்கும். ஒரு சொல் தன்னொடு சேர்ந்து பொருள் முடித்தற்குரிய சொல்லை அவாவி நிற்பது அவாய் நிலை எனப்படும். எ.கா: மா பழுத்தது. இதில் மா என்னும் சொல் பழுத்தது என்னும் சொல்லை அவாவி நின்று மரம் என்னும் பொருளை உணர்த்தியது. மா என்பதற்கு விலங்கு என்னும் பொருளும் உண்டு. பொருள் விளக்கும் சொற்கள் தம்முள் தகுதி நோக்கி இணைந்து நின்று பொருள் உணர்த்துவது தகுதி நிலை எனப்படும். எ.கா: நீரால் நனை, நெருப்பால் சுடு. இவை நீரால் சுடு என்றோ, நெருப்பால் நனை என்றோ இணைந்து பொருள் உணர்த்தாது. சொற்களை இடையீடின்றிக் கூறுவதாலேயே பொருள் விளங்கி நிற்பது அண்மை நிலை எனப்படும். எ.கா: மரஞ் செடி கொடிகள் பூத்துக் குலுங்கின. இத்தகைய இயல்புகளையுடைய சொற்களை உயர்திணைச் சொல், அஃறிணைச்சொல் என இரண்டாகப் பாகுபடுத்தி விளக்குவது தொல்காப்பியரின் திணைப் பாகுபாட்டுக்கோட்பாடாகும்.

## 1.1.1 திணைப் பாகுபாடு

சொல்லதிகாரத்தின் முதல் நூற்பாவிலேயே உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல் என்னும் இரு திணைப் பாகுபாட்டைத் தொல்காப்பியர் வரையறுப்பர். மக்கள் என்று நன்கு மதிக்கப்படும் பொருள் உயர்திணை எனப்படும். மக்கள் என்று

கருதப்படாத பிற பொருள்கள் அஃறிணை எனப்படும். இவ்விரு திணைகள் மேலும் சொற்கள் நிகழும். இதனை,

> உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை என்மனார் அவரல பிறவே
> ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே (சொல்.1)

என்னும் நூற்பா விளக்கும். இதில் தொல்காப்பியர் இரு இடங்களில் 'என்மனார்' என்று கூறுவது, உயர்திணை, அஃறிணை என்பன தொல்லாசிரியர் குறி என்பதை உணர்த்துவதற்காகவேயாகும் என்பர் சேனாவரையர்.

தொல்காப்பியர் இந்நூற்பாவில் 'உயர்திணை என்மனார் மக்கள்' எனக் கூறாது 'மக்கட் சுட்டு' என்று கூறியதற்குரிய காரணத்தையும் சேனாவரையர் நுட்பமாக விளக்குவர். 'மக்கள்' என்னாது 'மக்கட்சுட்டு' என ஆசிரியர் கூறற்குக் காரணம் மக்களாகப் பிறந்தால் மட்டுமின்றி, அவர்களை மக்கள் என்று கருதிய வழியே அவர்கள் உயர்திணை என்று மதிக்கப்படுவர் என்பதைக் குறிப்பதற்கேயாகும்.செயற்கரிய செய்த ஒருவன் இறந்துவிடின், அவனுடைய பிணத்தையும் உயர்திணை என்றே மதிப்பர். இழிந்த பல செயல்கள் செய்த ஒருவன் உயிருடன் இருப்பினும் அவனைப் பதடி என அஃறிணையாகவே மதிப்பர் என்பது கருத்து. இதனை, "ஈண்டு மக்கள் என்றது, மக்கள் என்னும் உணர்வை. எனவே மக்களேயாயினும் மக்களென்று சுட்டாது பொருளென்று சுட்டியவழி உயர்திணை எனப்படாது என்பதாம்" என்னும் சேனாவரையர் உரையால் தெளிவாகும். அவர் இம் மக்கட்சுட்டை, பண்புத்தொகை பிறந்த அன்மொழித்தொகை என்பர்.

தொல்காப்பியர் இந்நூற்பாவில் அவரல, பிற ஆகியவற்றுள் ஒன்றை மட்டும் கூறாது இரண்டையும் சேர்த்துக் கூறியதற்குக் காரணம், உயிருடையன, உயிர் இல்லன, மக்களின் உயிர், உடம்பு ஆகிய அஃறிணையின் பகுதி அனைத்தும் அஃறிணையில் அடங்கும் என்பதைக் காட்டுவதற்காகவேயாகும்.

## 1.1.2 பால் பாகுபாடு

'ஐம்பால்' என்பது தொல்காப்பியரின் பால் பாகுபாட்டை நன்கு விளக்கும். உயர்திணைக்குரிய மூன்று பால் பாகுபாடுகளும் அஃறிணைக்குரிய இரண்டு பால் பாகுபாடுகளும் சேர்ந்து 'ஐம்பால்' எனப்பட்டது.

### 1.1.2.1 உயர்திணைக்குரிய பால் வகைப்பாடு

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்பன உயர்திணைக்குரிய பால் பாகுபாடாகும். இதனை,

> ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
> பல்லோரறியுஞ் சொல்லொடு சிவணி
>
> அம்முப்பாற்சொல் உயர்திணை யவ்வே (சொல்.2)

என்னும் நூற்பா விளக்கும். ஆடூஉ அறிசொல்லும் மகடூஉ அறிசொல்லும் பல்லோர் அறியுஞ் சொல்லொடு பொருந்தி அம்மூன்று கூற்றுச் சொல்லும் உயர்திணையவாம் என்பது இந்நூற்பாவின் பொருள். ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல், பல்லோரறியுஞ் சொல் எனத் தொல்காப்பியர் கூறியுள்ள முறைவைப்பின் காரணத்தைச் சேனாவரையர், "அறிவு முதலியவற்றான் ஆண்மகன் சிறந்தமையின் 'ஆடூஉ அறிசொல்' முற்கூறப்பட்டது. பன்மை இருபாலும் பற்றி வருதலின் 'பல்லோரறி சொல்' பிற்கூறப்பட்டது" என்பர். இன்றைய காலகட்டத்தில் ஆண், பெண் ஆகிய இருபாலரும் அறிவு முதலியவற்றான் சிறந்து

விளங்குதலால், இவ்வுரையை அவர் காலச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கால உரையாகவே கொள்ள வேண்டும்.



### 1.1.2.1.1 ஆண்பால் ஈறு

னகர ஒற்று ஆண்பாலைக் குறிக்கும். இதனை,

னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல் (சொல்.5)

என்னும் நூற்பா சுட்டும். எ.கா: உண்டனன், உண்டான், உண்ணாநின்றனன், உண்ணாநின்றான், உண்பன், உண்பான், கரியன், கரியான்.

இந்நூற்பாவிற்குச் சேனாவரையர், "ஆடூஉ அறிசொல்லாவது னகார ஈற்றுச் சொல்லாயினும் பால் உணர்த்துதற் சிறப்பு நோக்கி 'னஃகான் ஒற்றே' என்றார். 'அறமாவது அழுக்காறின்மை' என்றாற் போல னஃகான் ஒற்றென்பது ஆடூஉ அறிசொல் என்றாராயினும் ஆடூஉ அறிசொல்லாவது னஃகான் ஒற்றென்பது கருத்தாகக் கொள்க. ளஃகான் ஒற்று முதலாயினவற்றிற்கும் இவை ஒக்கும்" என உரை கூறுவர்.

அறங்கள் பலவற்றினும் அழுக்காறின்மை சிறப்புடைத்தாதல் பற்றி, அறமாவது அழுக்காறின்மை என்றனரேயன்றி, அழுக்காறின்மை ஒன்றே அறம், ஏனைய அறமல்ல என்றாரல்லர். அதுபோல னகர ஒற்று ஏனைய, பகுதி முதலியவற்றுடன் வந்தே ஆண்பாற் பொருளை உணர்த்துமேனும், பாலுணர்த்தும் சிறப்பு நோக்கி 'னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்' என்றார். எனவே இவ்வாறு கூறுவது கொண்டு னஃகான் ஒற்று ஒன்றே தனித்து நின்று ஆண்பாற் பொருளை உணர்த்தும் எனக் கொள்ளலாகாது என்பது சேனாவரையர் கருத்து. ஆனால் 'உண்டான்' என்னும் சொல்லில் நான்கு எழுத்துக்கள் இருப்பினும் னகர ஒற்று ஒன்றே

ஆண்பால் உணர்த்துதலின் அது நோக்கியே தொல்காப்பியர் 'னஃகான் ஒற்றே' எனப் பிரிநிலை ஏகாரமாகக் கூறினார் என்னும் இளம்பூரணர் கருத்தே ஏற்புடையதாகும். சேனாவரையர் அசைநிலை ஏகாரமாகக் கொள்வது பொருந்துவதன்றாம்.

### 1.1.2.1.2 பெண்பால் ஈறு

ளகர ஒற்று பெண்பாலைக் குறிக்கும்.

ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல் (சொல்.6)

என்பது நூற்பா. எ.கா: உண்டனள், உண்டாள், உண்ணாநின்றனள், உண்ணாநின்றாள், உண்பள், உண்பாள், கரியள், கரியாள்.

### 1.1.2.1.3 பலர் பால் ஈறுகள்

ரகர ஒற்று, பகர இறுதி, மார் என்னும் சொல் ஆகிய மூன்றும் பலர் பாலைக் குறிக்கும்.

ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே (சொல்.7)

என்பது நூற்பா. எ.கா: உண்டனர், உண்டார், உண்ணாநின்றனர், உண்ணாநின்றார், உண்பர், உண்பார், கரியர், கரியார்; கூறுப, வருப; கொண்மார், சென்மார்.

தொல்காப்பியர் பலர் பாலுக்குரிய ஈறுகள் மூன்றனுள் 'ரகாரம்' மூன்று காலமும் வினைக்குறிப்பும் பற்றிப் பெருவழக்கிற்றாய் வருதலின் முன் வைத்தார். 'மார்', 'பகர இறுதி' சிறு வழக்கிற்றாகலின் பின் வைத்தார். மூன்று காலமும் வினைக்குறிப்பும் பற்றி வருதல் ஒப்புமை நோக்கி அர், ஆர் என்னும் இரண்டு ஈற்றையும் 'ரஃகான்' என அடக்கினார்.

### 1.1.2.2 அஃறிணைக்குரிய பால் வகைப்பாடு

ஒன்றன்பால், பலவின்பால் என அஃறிணை இரு வகைப்படும்.

ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று
ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே (சொல்.3)

என்பது நூற்பா. ஒன்றனை அறியுஞ் சொல்லும் பலவற்றை அறியுஞ் சொல்லும் என அவ்விரண்டு கூற்றுச் சொல்லும் அஃறிணையவாம் என்பது இதன் பொருள்.

#### 1.1.2.2.1 ஒன்றன் பால் ஈறுகள்

து, று,டு என்பன ஒன்றன்பாலைக் குறிக்கும் ஈறுகளாகும்.

ஒன்றறி கிளவி த ற ட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும் (சொல்.8)

என்பது நூற்பா. ஒன்றறி சொல்லாவது த ற ட என்னும் ஒற்றை ஊர்ந்த குற்றியலுகரத்தை இறுதியாக உடைய சொல்லாம் என்பது இதன் பொருள்.

எ.கா: வந்தது, வாரா நின்றது, வருவது, கரிது; கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று; குண்டுகட்டு, கொடுந்தாட்டு, குறுந்தாட்டு.

குண்டுகட்டு - குழிந்த கண்ணையுடையது; கொடுந்தாட்டு - வளைந்த காலையுடையது; குறுந்தாட்டு - குறுகிய காலையுடையது என்பது பொருளாகும்.

#### 1.1.2.2.2 பலவின் பால் ஈறுகள்

அ, ஆ, வ என்பன பலவின் பாலைக் குறிக்கும் ஈறுகளாகும்.

அஆவ என வரூஉம் இறுதி

அப்பால் மூன்றே பலவறி சொல்லே (சொல்.9)

என்பது நூற்பா. பலவறி சொல்லாவன அ ஆ வ என வரும் இறுதியையுடைய அவ்வீற்று மூன்று சொல்லாம் என்பது இதன் பொருள்.

எ.கா: உண்டன, உண்ணா நின்றன, உண்பன, கரியன; உண்ணா, தின்னா; உண்குவ, தின்குவ.

இவ்வாறு திணை, பால் பாகுபாடுகளை விளக்கும் தொல்காப்பியர் நிறைவாக, உயர்திணை, அஃறிணை என்னும் இரண்டு திணைக்கண்ணும் உளவாகிய ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் ஐந்து பாலும் அறிய அவ்வச் சொல்லின் இறுதிக்கண் நின்று ஒலிக்கும் னகர ஒற்று, ளகர ஒற்று, ரகர ஒற்று, பகர இறுதி, மாரைக் கிளவி, து, று, டு, அ, ஆ, வ என்னும் பதினோரெழுத்துக்களும் வினைச் சொற்களின் இறுதியில் நிற்கும் பொழுது மட்டுமே திணை, பால்களை நன்கு அறிய முடியும் என்று வரையறுப்பர்.

இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றில் நின்றி சைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே (சொல்.10)

என்பது நூற்பா. இவ்வாறு பதினோரெழுத்துக்களும் வினைச்சொற்களின் இறுதியில் நிற்கும்பொழுது மட்டுமே திணை பால்களை நன்கு அறிய முடியும் எனப் பொதுவாகக் கூறப்பட்டிருப்பினும் படர்க்கை வினையையே கொள்ள வேண்டும் என்பது சேனாவரையர் கருத்தாகும்.

### 1.1.3 பேடியும் தெய்வமும்

ஆண்தன்மை குறைந்து பெண் தன்மை மிக்கு உள்ளவரைப் பேடி என்பர். இப்பேடியரைக் குறிக்கும் பெயர்ச்சொற்களையும் தெய்வத்தைக் குறிக்கும் பெயர்ச்சொற்களையும் உயர்திணையாகக்

கொண்டு அதற்குரிய ஈறுகளாலேயே பால் பிரிந்து வழங்குதல் வேண்டும்.

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும்அந் தம்தமக் கிலவே
உயர்திணை மருங்கின் பால்பிரிந் திசைக்கும்
(சொல்.4)

என்பது நூற்பா. எ.கா: பேடி வந்தாள், பேடர் வந்தார், பேடியர் வந்தார்; தேவன் வந்தான், தேவி வந்தாள், தேவர் வந்தார்.

பெண் தன்மை குறைந்து ஆண் தன்மை மிக்கதை அலி என்பர். ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிக்கதைப் பேடி என்பர். இவ்விரு தன்மையில் ஒன்றேனும் மிகுதல் குறைதலின்றி ஒருவகையானும் கூறப்படுதல் அல்லாததாய் இருப்பதைப் பேடு என்பர். தொல்காப்பியர், ‘பேடியென்னும் பெயர்நிலைக்கிளவி’ என்று சுட்டாது ‘பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி’ என்று பெண்மை சுட்டுதல், ஆண்மை திரிதல் என்னும் இரு பண்புகளை விதந்து கூறியமைக்கான காரணத்தைச் சேனாவரையர் நுட்பமாக விளக்குவர். அலி என்னும் பெயரையும் பேடு என்னும் பெயரையும் நீக்குவதற்கு ‘பெண்மை சுட்டிய’ என்று கூறினார். மகடூஉப் பெயரை நீக்குவதற்கும் பெண்மை திரிதலும் உண்டு என்றாலும் ஆண்மை திரிதல் பெரும்பான்மை என்பதாலும் ‘ஆண்மை திரிந்தும்’ என்றும் கூறினார். இவ்விரு இயல்புகளையும் விதந்து கூறியமையால் பேடி என்னும் சொல் மட்டுமல்லாமல் பேடியர், பேடிமார், பேடிகள் என்னும் சொற்களும் அடங்கும் என்பர்.

## 1.2 வழுவும் வழுவமைதியும்

வழு என்றால் குற்றம் என்பது பொருள். இது திணை வழு, பால் வழு, மரபு வழு, செப்பு வழு, வினா வழு, இட வழு, கால வழு என ஏழு வகைப்படும்.

- ஒரு திணைக்குரிய சொல் இன்னொரு திணைக்குரிய சொல்லோடு முடிதல் திணை வழு எனப்படும். எ.கா: அவன் வந்தது.
- ஒரு பாலுக்குரிய சொல் அத்திணையில் உள்ள இன்னொரு பாலுக்குரிய சொல்லோடு முடிதல் பால் வழு எனப்படும். எ.கா: அவன் வந்தாள்.
- எப்பொருளை எச்சொல்லால் உயர்ந்தோர் கூறி வந்தனரோ அப்படியன்றி மாற்றிக் கூறுதல் மரபு வழு எனப்படும். எ.கா: சுடுகாட்டை நன்காடு என்றல், செத்தாரைத் துஞ்சினார் என்றல்.
- ஒருவர் வினவும் வினாவுக்குரிய நேர் விடையினைக் கூறாது வேறொன்று கூறுதல் செப்பு வழு எனப்படும். எ.கா:சாத்தா உண்டியோ என்ற வினாவிற்கு 'வயிறு குத்திற்று' என விடை கூறுதல்.
- ஒன்றனைக் குறித்து வினவும் பொழுது தவறாக வினவுதல் வினா வழு எனப்படும். எ.கா: ஒரு பொருளைச் சுட்டி 'இது சிறிதோ பெரிதோ' எனல்.
- தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களுள் ஓர் இடத்திற்கு உரிய சொல் வேறோர் இடத்திற்குரிய சொல்லோடு முடிதல் இட வழு எனப்படும். எ.கா: யான் வந்தாய்.

- நிகழ்வு, இறப்பு, எதிர்வு என்னும் மூன்று காலங்களுல் ஒரு காலத்திற்குரிய சொல் ஏனைக் காலத்தோடு முடிதல் கால வழு எனப்படும். எ.கா: நேற்று வருவேன்.

சொற்களைப் பயன்படுத்தும் பொழுது இவ்வாறு ஏற்படும் குற்றங்களைக் காத்தல் வழுக் காத்தல் எனப்படும். இது வழுவற்க என்றலும் வழுவமைத்தலும் என இரு வகைப்படும். குறித்த பொருளை அதற்குரிய சொல்லால் சொல்லுக என்றல் வழுவற்க என்றலாகும். குறித்த பொருட்குரிய சொல் அல்லவாயினும் ஒருவாறு அப்பொருளை விளக்குவதால் அமைத்துக் கொள்க என்றல் வழுவமைத்தலாகும். இவற்றுள் வழுவமைத்தலை 'வழுவமைதி' என்பர். தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் இவ்விரு நிலைகளிலும் வழுக்காத்தலை விளக்கியுள்ளார்.

### 1.2.1 திணை வழுவமைதி

- தன்மைச்சொல் உயர்திணைக்குரியது. இத் தன்மைச்சொல்லும் அஃறிணைச் சொல்லும் எண்ணுதற் பொருளில் விரவி வரும். அவ்வாறு விரவி வந்து உயர்திணை முடிபு கொள்ளும். அது வழுவாகாது. எ.கா: யானும் என்னெஃகமும் சாறும்.

இதில் 'யான்' என்பது தன்மைச்சொல்; எஃகம் என்பது அஃறிணைச்சொல். இவை இரண்டும் எண்ணுதற் பொருளில் வந்து 'சாறும்' என உயர்திணை முடிபு கொண்டுள்ளது.

> தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்று
> எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்
> (சொல்.43)

என்பது நூற்பா. தன்மை உயர்திணைக்கே உரியது என்பது தொல்காப்பியர் கருத்து. தன்மைச்சொல்லையும் அஃறிணைச்சொல்லையும் சேர்த்து எண்ணி, அவற்றிற்கு முடிபு

கொடுக்குங்கால் உயர்திணை முடிபு கொள்ளினும் இழுக்காகும். அஃறிணை முடிபு கொள்ளினும் இழுக்காகும். ஆதலின் அதனைத் தன்மைப் பன்மை வினையால் முடிக்க என்பது இந்நூற்பாவின் கருத்து என்பர் சேனாவரையர். தன்மைப்பன்மை வினையும் உயர்திணையேயாகலின், அத்துடன் அஃறிணைச் சொல்லைச் சேர்த்து உயர்திணை முடிபு கொள்ளுதல் பொருந்தாதேனும் அதனைத் திணை வழுவமைதியாகக் கொள்க என்றும் கூறுவர்.

- வியங்கோளோடு தொடரப்பெறும் எண்ணுப்பெயரும் எண்ணுதற்கண் விரவப்பெறும். அதாவது உயர்திணையும் அஃறிணையுமாக விரவி எண்ணப்படும் பெயர்ச்சொற்கள் வியங்கோள் வினை கொண்டு முடியும். ஆயினும் வழுவில்லை.

எ.கா: ஆவும் ஆயனும் செல்க - இதில் 'ஆ' என்பது அஃறிணை; 'ஆயன்' என்பது உயர்திணை. இவை இரண்டும் எண்ணுதற்கண் விரவி வரும்பொழுது அஃறிணை முடிபோ உயர்திணை முடிபோ கொடுக்காது 'செல்க' என வியங்கோள் முடிபு கொடுக்கப்பட்டுள்ளது. வியங்கோள் இருதிணைக்கும் பொதுவாதலின் இரு திணையும் விரவி வருங்கால் வியங்கோள் முடிக்கும் சொல்லாக வருதல் இழுக்கில்லை என வழுவமைதி கூறப்பட்டுள்ளது.

வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்
(சொல்.45)

என்பது நூற்பா.

- திணை விரவி எண்ணப்பட்ட பெயர்கள் செய்யுளில் வரும்பொழுது பெரும்பான்மை அஃறிணையைக் கொண்டு முடியும். சிறுபான்மை உயர்திணையைக் கொண்டு முடியும்.

பலவயி னானும்எண் ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே (சொல்.51)

என்பது நூற்பா. எ.கா:

கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் (புறநா.55)

இப்பாடலில் களிறு, கலிமா, தேர், மறவர் என அஃறிணையும் உயர்திணையும் விரவி வந்து 'மாண்டது' என அஃறிணை முடிபு பெற்றுள்ளது. செய்யுளில் பெரும்பான்மை இவ்வாறே அமையும்.

பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு (சிலப். வஞ்சினமாலை)

இப்பாடலில் பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர், மூத்தோர், குழவி என உயர்திணையும் அஃறிணையும் விரவி வந்து 'இவர்' என உயர்திணை முடிபு பெற்றுள்ளது. இவ்வாறு உயர்திணை முடிபு கொடுத்தல் செய்யுளில் சிறுபாண்மையாகவே வரும்.

இவற்றால், இருதிணையும் விரவி வந்து ஒரு திணைச் சொல்லான் முடிதல் வழுவாயினும், செய்யுளகத்து அமைக என வழுவமைதி கூறப்பட்டுள்ளமை புலனாகும்.

- குடிமை, ஆண்மை, இளமை, மூப்பு, அடிமை, வன்மை, விருந்து,குழு, பெண்மை, அரசு, மகவு, குழவி, தன்மை திரிபெயர் (அலி), உறுப்பின் கிளவி (குருடு, முடம் என்னும் தொடக்கத்தன), காதற்சொல் (பாவை, யானை என ஒப்புமை கருதாது காதல் பற்றி வருவன), சிறப்புச்சொல் (கண் போலச் சிறந்தானைக் கண் என்றலும், உயிர் போலச் சிறந்தானை உயிர் என்றலும் என இவை முதலாயின), செறற்சொல் (கோபத்தைப் புலப்படுக்கும்

பொறியறை முதலியன), விறற்சொல் (வெற்றியைப் புலப்படுக்கும் அருந்திறல் முதலியன) ஆகியன உயர்திணைப்பொருளை உணர்த்துவனவாயினும் அஃறிணை முடிபு கொள்ளும்; ஒரோவழி உயர்திணை முடிபுங் கொள்ளும்.

குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத் தினுணருங் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும் (சொல்.56)

என்பது நூற்பா. எ.கா: குடிமை நன்று, குடிமை தீது; ஆண்மை நன்று, ஆண்மை தீது.

'அன்ன பிறவும்' என்றதனான், வேந்து, வேள், குரிசில், அமைச்சு, புரோசு (புரோகிதன்) என்னும் தொடக்கத்தனவும் கொள்க. இவ்வாறு குடிமை முதலியன உயர்திணை உணர்த்தும்வழி அஃறிணையான் முடிதல் வழுவாயினும் அமைக எனத் திணை வழுவமைதி கூறப்பட்டுள்ளது.

- காலம், உலகம், உயிர், உடம்பு, பால்வரை தெய்வம், வினை, பூதம், ஞாயிறு, திங்கள், சொல் ஆகியனவும் உயர்திணைப்பொருளை உணர்த்துவனவாயினும் அஃறிணை முடிபு கொள்ளும். இச்சொற்கள் அனைத்தும் ஈறு திரியாதவழியே அஃறிணை முடிபு கொள்ளும்; ஈறு திரிந்தவழி உயர்திணை முடிபு கொள்ளும்.

இவற்றுள் காலம் என்பது காலக்கடவுளையும் உலகம் என்பது மக்கட் தொகுதியையும் உணர்த்தும். உயிரும் உடம்பும்

பொதுவகையால் கூறப்பட்டிருந்தாலும் அவை மக்கள் உயிரையும் உடம்பையுமே குறிக்கும். பால்வரை தெய்வம் என்பது எல்லார்க்கும் இன்ப, துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது. வினை என்பது அறத்தெய்வம். சொல் என்பது நாமகளாகிய தெய்வம் என்பர் சேனாவரையர்.



காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி யெல்லாம்
பால்பிரிந்திசையா உயர்திணை மேன (சொல்.57)

என்பது நூற்பா. எ.கா: இவற்குக் காலமாயிற்று, உலகம் பசித்தது, உயிர் போயிற்று, உடம்பு நுணுகிற்று, தெய்வஞ் செய்தது, வினை விளைந்தது, பூதம் புடைத்தது, ஞாயிறு பட்டது, திங்கள் எழுந்தது, சொல் நன்று.

காலம் முதலிய இச் சொற்கள் அனைத்தும் ஈறு திரியாதவழியே அஃறிணை முடிபு கொள்ளும்; ஈறு திரிந்தவழி உயர்திணை முடிபு கொள்ளும். எ.கா: காலன் கொண்டான், உலகர் பசித்தார்.

‘பிறவும்’ என்றதனால் பொழுது நன்று, யாக்கை தீது, விதி வலிது, கனலி கடுகிற்று, மதி நிறைந்தது, வெள்ளி எழுந்தது, வியாழ நன்று என்பன போல்வன கொள்க என்பர் சேனாவரையர்.

## 1.2.2 பால் வழுவமைதி

தொல்காப்பியர் பால் வழுவற்க, பால் வழுவமைதியாகக் கொள்க என இருவகையிலும் இலக்கணம் வகுப்பர்.

- ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிக்கதைப் பேடி என்பர். இப்பேடி என்னும் சொல் ‘பேடி வந்தாள்’ எனப்

பெண்பாலுக்குரிய ஈறு பெற்றே வரும். இது வழுவற்க என்பர் தொல்காப்பியர்.

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்றே (சொல்.12)

என்பது நூற்பா. ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியாகிய 'பேடி' என்னும் சொல் ஆண்பாலுக்குரிய ஈறு பெற்று வராது என்பது இந்நூற்பாவின் பொருளாகும்.

- திணை துணிந்து பால் துணியாத ஐயப் பொருளை அந்தந்த திணைப் பன்மையால் கூற வேண்டும்.

பால்மயக் குற்ற ஐயக் கிளவி
தான்அறி பொருள்வயின் பன்மை கூறல் (சொல்.23)

என்பது நூற்பா. ஒருமையால் கூறினால் வழுவாகும் என்பதால் பன்மையால் கூறுக என்றார். எனவே ஆணோ பெண்ணோ என ஐயுற்றுழித் தோன்றுவான் என்றோ தோன்றுவாள் என்றோ கூறாது தோன்றுவார் என உயர்திணைப் பலர்பாலாய்க் கூற வேண்டும் என்பது கருத்து. எ.கா: ஆண்மகன் கொல்லோ பெண்டாட்டி கொல்லோ இஃதோ தோன்றுவார்.

இவ்வாறே அஃறிணைக்கண்ணும் ஒன்றோ பலவோ என ஐயுற்றவழி 'செய்புக்கன' எனப் பன்மையாற் கூற வேண்டும். இது வழுவற்க என்பதாம். எ.கா: ஒன்றோ பலவோ செய்புக்கன.

- உருபெனச் சொல்லுமிடத்தும் ஒருமையும் பன்மையுமாகப் பிரிக்கப்படும் அஃறிணைப் பொதுச்சொற்கண்ணும் இவ்விரு கூற்றினும் ஐயப் புலப் பொதுச்சொல்லைப் பயன்படுத்த வேண்டும். ஐயத்திற்கிடமாயவழிக் கூறப்படும் பொதுச்சொல் ஐயப்புலப் பொதுச்சொல்லாகும். அஃதாவது உருபு, பெற்றம் போல்வன.



உருபென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும

இருவீற்று முரித்தே சுட்டுங் காலை (சொல்.24)

என்பது நூற்பா. எ.கா: ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டி கொல்லோ தோன்றா நின்ற உருபு, ஒன்று கொல்லோ பல கொல்லோ செய்புக்க உருபு.

இவை உயர்திணையிலும் அஃறிணையிலும் பால் ஐயம் தோன்றியவழியும் திணை ஐயம் தோன்றிய வழியும் 'உருபு' என்ற சொல்லைப் பயன்படுத்தியமைக்குச் சான்றாகும். எ.கா: ஒன்று கொல்லோ பல கொல்லோ செய்புக்க பெற்றம்

இஃது அஃறிணையில் பால் ஐயந் தோன்றியவழி அஃறிணைப் பெயராகிய 'பெற்றம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியமைக்குச் சான்றாகும்.

❖ ஐயுற்றுத் துணியும்வழி, துணிந்து தழீஇக் கொள்ளப்பட்ட பொருளின் வேறாய பொருளிடத்து, அன்மைக் கிளவி அன்மைத் தன்மையைச் சுட்டி நிற்றலும் உரித்து.

தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான (சொல்.25)

என்பது நூற்பா. இதனை, "அன்மைக்கிளவி தன்மை சுட்டலும் உரித்து வேறிடத்தான" எனக் கொண்டுகூட்டிப் பொருளுரைப்பர் சேனாவரையர். குற்றியோ மகனோ என்று ஐயுற்றுப் பின் மகன் என்று துணிந்தவழி அத்துணிபொருள் அல்லாத குற்றி என்பதன்கண் அன்மைச்சொல்லை வைத்துச் சொல்ல வேண்டும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இதன்கண் துணிந்து தழீஇக் கொள்ளப்பட்ட பொருள் மகன்; அதனின் வேறாய பொருள் குற்றி.

எ.கா:

- குற்றிகொல்லோ மகன்கொல்லோ என்று ஐயுற்று, மகனென்று துணிந்தவழி குற்றியன்று மகன் எனவும் குற்றியென்று துணிந்தவழி மகனல்லன் குற்றி எனவும் சுட்டுதல்.
- ஒருவன் கொல்லோ ஒருத்தி கொல்லோ என ஐயுற்று, ஆண்மகனென்று துணிந்தவழிப் பெண்டாட்டியல்லள் ஆண்மகன் எனவும் பெண்டாட்டியென்று துணைந்தவழி ஆண்மகனல்லன் பெண்டாட்டி எனவும் சுட்டுதல்.
- ஒன்று கொல்லோ பல கொல்லோ என ஐயுற்று, ஒன்றென்று துணிந்தவழிப் பலவல்ல ஒன்று எனவும் பலவென்று துணிந்தவழி ஒன்றன்று பல எனவும் சுட்டுதல்.

இவற்றில் மறுக்கப்படும் பொருள்மேல் அன்மைக்கிளவி அன்மைத் தன்மையைச் சுட்டி நின்றது புலனாகும். இது வழுவற்க என்பதாம்.

❖ ஒருவனையும் ஒருத்தியையும் சொல்லும் பன்மைச்சொல்லும் ஒன்றனைச் சொல்லும் பன்மைச்சொல்லும் இலக்கண நெறி அல்லவாயினும் உயர்த்துக் கூறும் முகத்தான் கூறப்படுதலின் வழக்கு நெறியில் அமைவுடையன என்றே கருதப்படும். இது வழுவமைதி.

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல (சொல்.27)

என்பது நூற்பா. எ.கா: யாம் வந்தேம், நீயிர் வந்தீர், இவர் வந்தார்

தன்னின முடித்தல் என்பதனான் எருத்தையும் ஆவையும் எந்தை வந்தான், எம்மன்னை வந்தாள் என உயர்திணையாய் உயர்த்து வழங்கலும், ஒன்றென முடித்தல் என்பதனால் கன்னி ஞாழல் (சிலப்.கானல் வரி .18), கன்னி எயில் என அஃறிணையாய் நின்று உயர்திணை வாய்பாட்டால் கூறப்படுதலும் பண்புகொள் பெயர்க் கொடை வழக்கினகத்தும் பெருங்கொற்றன்,

பெருஞ்சாத்தன் என இல்குணம் அடுத்து உயர்சொல்லாய் வருதலுங் கொள்க என்பர் சேனாவரையர்.

❖ 'ஒருவர்' என்னும் சொல் ஆண், பெண் இருவர்க்கும் ஏற்றலின் ஆடவர், பெண்டிர் ஆகிய இரு சாரார்க்கும் பொதுவான சொல்லாகும். இப் பொதுமையிலிருந்து பிரிப்பதற்கு ஒருவன், ஒருத்தி என வழங்க வேண்டும். இவை பொதுப்பிரிபாற் சொல்லாகும். ஆண், பெண் என்ற பொதுத்தன்மையிலிருந்து பிரிந்து ஒருவன் என்பது ஆண்பாலையும் ஒருத்தி என்பது பெண்பாலையும் குறித்தலால் இவை பொதுப்பிரிபாற் சொல்லாயின. இவ்வாறு ஒருவன், ஒருத்தி என வழங்குவது போல் இருவன், இருத்தி என வழங்குதல் இல்லை. இது வழுவற்க என்பதாம்.

ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லாது (சொல்.44)

என்பது நூற்பா.

### 1.2.2.1 திணையோடு கூடிய பால் வழுவமைதி

கண், தோள், முலை முதலியன பன்மை குறித்த சினைச் சொற்களாகும். சினைச் சொற்களெல்லாம் அஃறிணை எனப்படும். எனவே இவை அஃறிணை முடிபு கொள்ள வேண்டும். அவ்வாறன்றி உயர்திணை முடிபு கொள்ளினும் அமைக என்பர் தொல்காப்பியர்.

கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம்வினைக்கு இயலும் எழுத்தலங் கடையே (சொல்.61)

என்பது நூற்பா. எ.கா: கண்ணல்லள், தோணல்லள், முலை நல்லள்; கண்ணல்லர், தோணல்லர், முலை நல்லர்.

பிறவும் என்றதனால் புருவம், காது என்னுந் தொடக்கத்தனவும் கொள்க என்பர் சேனாவரையர்.

### 1.2.3 இட வழுவமைதி

செலவு, வரவு, தரவு, கொடை ஆகிய நான்கு சொற்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடத்திற்கும் உரியனவாம். இவற்றுள் தருதல், வருதல் என்பனவற்றைக் குறிக்கும் தரவு, வரவு ஆகிய இரு சொற்களும் முன்னிலைக்கண் வரும். செல்லுதல், கொடுத்தல் என்பனவற்றைக் குறிக்கும் செலவு, கொடை ஆகிய இரு சொற்களும் படர்க்கைக்கண் வரும். இதனை,

செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப (சொல். 28)

அவற்றுள்

தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த (சொல்.29)

ஏனை யிரண்டும் ஏனை யிடத்த (சொல்.30)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். எ.கா:

- எனக்குத் தந்தான் (தன்மை), நினக்குத் தந்தான் (முன்னிலை) – தருதல் (தரவு)
- என்னுழை வந்தான் (தன்மை), நின்னுழை வந்தான் (முன்னிலை) – வருதல் (வரவு)

- அவன்கட் சென்றான், ஆங்குச் சென்றான் (படர்க்கை) – செல்லுதல் (செலவு)
- அவற்குக் கொடுத்தான் (படர்க்கை) – கொடுத்தல் (கொடை)

இவ்வாறு நான்கு சொற்களும் வழுவற்க என்பது தொல்காப்பியர் கருத்தாகும். செலவு முதலாயின முற்றாய் வருங்கால் சென்றான், வந்தான், தந்தான், கொடுத்தான் என வரும்; வினையெச்சமாக வருங்கால் சென்று, வந்து, தந்து, கொடுத்து என வரும்; பெயரெச்சமாக வருங்கால் சென்ற, வந்த, தந்த, கொடுத்த என வரும்; தொழிற்பெயராக வருங்கால் செல்லல், வருதல், தருதல், கொடுத்தல் என வரும். இவ்வாறு பல விகற்பமாய் வரினும் இவற்றுக்கெல்லாம் அடிப்படைச் சொல்லாக இருப்பன செலவு, வரவு, தரவு, கொடை ஆகிய நான்குமேயாகலின் தொல்காப்பியர் 'அந்நாற்சொல்லும்' எனக் கிளந்தோதினார் என்பர் சேனாவரையர். இவற்றுள் செலவு, வரவு என்பனவற்றிற்குப் பொதுவாய சொல் இயங்குதல் என்பதாகும். தரவு, கொடை என்பனவற்றிற்குப் பொதுவாய சொல் ஈதல் என்பதாகும். இயங்குதல், ஈதல் போல்வன இன்ன இடத்திற்குரிய என்னும் வரையறை இல்லை. எனவே அவற்றைக் கூறாது வரையறையுடைய செலவு, வரவு, தரவு, கொடை ஆகிய நான்கு சொற்களைக் கூறியுள்ளார்.

### 1.2.4 கால வழுவமைதி

தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் கால வழுவமைதி பற்றிய இலக்கணங்களை வரையறுக்கவில்லை. எனினும் "வினையின் தோன்றும் பாலறி கிளவியும். பெயரின் தோன்றும் பாலறி கிளவியும், மயங்கல் கூடா தம்மர பினவே" (சொல்.11) என்னும் நூற்பாவில் காலவழு கடிதற்குரியது என்னும் கருத்தினை உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். இக் காலவழுவமைதி பற்றிய இலக்கணங்களைத் தொல்காப்பியர் வினையியலில் எட்டு

நூற்பாக்களில் (சொல். 239-245& 247,248) விரிவாக எடுத்துரைப்பர். வினைச்சொல் காலமொடு வருதலை இலக்கணமாக உடையது என்பதால் இக் காலவழுவமைதியை இங்கு கூறாது வினையியலில் கூறியுள்ளார்.

### 1.2.4.1 செப்பு வழுவமைதி

வினவிய பொருளுக்கு விடை கூறுவது செப்பு எனப்படும். இது செவ்வனிறை, இறைபயப்பது என இரு வகைப்படும். செப்பு, இறை என்பன ஒரு பொருள் குறிக்கும் சொற்கள். நேரிதாகச் சொல்லும் விடை செவ்வனிறை எனப்படும். எ.கா: உயிர் எத்தன்மைத்து எனக் கேட்பின் உணர்தல் தன்மைத்து எனல். நேரிதாக விடை கூறாது குறிப்பாகப் பெறுமாறு விடை சொல்லுதல் இறை பயப்பது எனப்படும். எ.கா: உண்டியோ எனக் கேட்டவழி வயிறு வலிக்கின்றது எனக் கூறுதல்.

❖ செப்பினை வழுவாமல் போற்றுக என்பர் தொல்காப்பியர். இதனை,

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் (சொல்.13)

என்னும் நூற்பா எடுத்துரைக்கும். கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா எனக் கேட்டவழி, பருநூல் பன்னிரு தொடி என்பது செப்பு வழுவாகும். சொல் எப்பொருள் உணர்த்தும் என்று வினவியவழி, சொல் ஒரு பொருளும் உணர்த்தாது என்று கூறுவதும் செப்பு வழுவாகும். ஏனெனில் வினாய பொருளை வினாவால் உணர்ந்து, வினாய பொருளையன்றித் தான் குறித்த பொருளைச் செப்பால் உணர்த்துகின்றான் என்பர் சேனாவரையர்.

❖ வினாய பொருளை ஒருவாற்றான் விளக்கி, வினாவிற்கு மறுமொழியாய் வரின் வினாவும் செப்பு எனக் கருதப்படும் என்பர் தொல்காப்பியர்.

வினாவும் செப்பே வினாஎதிர் வரினே (சொல்.14)

என்பது நூற்பா. எ.கா: சாத்தா உண்டியோ என்று வினாயவழி உண்ணேனோ எனல்.

❖ செப்பு வழுவி வரினும் ஏற்றுக் கொள்க என்றும் கூறுவர் தொல்காப்பியர்.

செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான (சொல்.15)

என்பது நூற்பா. ஒரு வினாவிற்குரிய விடை நேராக இல்லாமல் இறை பயத்தலாக இருப்பினும் அதனையும் விடையாக ஏற்றுக் கொள்க என்பது இந் நூற்பாவின் கருத்தாகும். எ.கா: சாத்தா உண்டியோ என்று வினாயவழி, நீ உண் எனல்; வயிறு குத்தும் எனல்; பசித்தேன் எனல்; பொழுதாயிற்று எனல்.

❖ ஒருவன் பயறுளவோ எனக் கேட்பின் அது தன்னிடத்து இல்லையாயின் இல்லை எனக் கூறலாம். அவ்வாறு இல்லாமல், 'அல்லதில்' என்னும் வாய்பாட்டை வைத்து இல்லை எனக் கூற விரும்பினால் அப்பொருளல்லாத பிறிது பொருளில் வைத்துக் கூற வேண்டும்.

எப்பொரு ளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல் (சொல்.35)

என்பது நூற்பா. எ.கா: பயருளவோ வணிகீர் என்று வினாயவழி, உழுந்தல்லதில்லை; கொள்ளல்லதில்லை என விடை கூறுதல் – இதில் 'அல்லதில்' என்னும் வாய்பாடு பின்பற்றப்பட்டுள்ளது.

❖ பிறிது பொருள் கூறாது கேட்போர் பொருளிலேயே வைத்துக் கூற வேண்டின், 'இப்பயறல்லதில்லை' எனச் சுட்டிக் கூற வேண்டும். இவ்வாறு கூறுதலை வழுவற்க என்பர் தொல்காப்பியர்.

அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல் (சொல்.39)

என்பது நூற்பா. எ.கா: பயறுளவோ என்று வினாயவழி பசும்பயறல்லது இல்லை எனக் கூறுதல்.

❖ உழுந்துண்டோ என வினவின் அவ்வுழுந்து தன்பால் இருப்பின் அதனை சுட்டி 'இவ்வுழுந்தல்ல தில்லை' எனக் கூறலாம். இது பொருளொடு புணர்ந்த சுட்டு எனப்படும். அவ்வாறன்றி, 'இதுவல்லதில்லை' என்றும் கூறலாம். இவ்வாறு கூறுவதில் 'இது' என்பது பொருளொடு புணராச் சுட்டு எனப்படும். இருப்பினும் அவ்வுழுந்தினைக் காட்டிக் கூறுவதால் அவ்விடை பொருளொடு புணர்ந்த சுட்டு போலவே கருதப்படும். இதுவும் செப்பு வழுவாதலின் தொல்காப்பியர் இதனை வழுவமைதியாகக் கூறியுள்ளார்.

பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே (சொல்.37)

என்பது நூற்பா.

## 1.2.5 வினா வழுவமைதி

❖ அறிய வேண்டியதை வெளிப்படுத்துவது வினா எனப்படும். இது அறியான் வினா, ஐய வினா, அறிபொருள் வினா என மூவகைப்படும்.

ஒரு பொருளைப் பற்றிப் பொதுவாகத் தெரிந்து கொண்ட ஒருவன் அதன் சிறப்பியல்புகளையும் அறிந்து கொள்ள வினவுவானாயின் அது அறியான் வினா எனப்படும். எ.கா: உயிர் உண்டென்று பொது வகையான் தெரிந்துகொண்ட ஒருவன், அதன் சிறப்பியல்புகள் எவ்வியல்பின எனக் கேட்டல்.

ஒரு பொருளைப் பற்றி ஐயம் ஏற்பட்டுழி வினவுதல் ஐய வினா எனப்படும். எ.கா: குற்றியோ மகனோ.

அறியப்பட்ட பொருளையே ஒரு பயன் நோக்கி வினவுதல் அறிபொருள் வினா எனப்படும். எ.கா: ஆசிரியர் மாணாக்கர்களை நோக்கி இந்நூற்பாவிற்குப் பொருள் யாது? என வினவுதல்.

இவ்வாறு வினவுதலை வழுவாமல் போற்றுக என்பர் தொல்காப்பியர்.

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் (சொல்.13)

என்பது நூற்பா.

- ❖ வினாப் பொருளில் வரும் யாது, எவன் என்ற இரு சொற்களும் அறியாத பொருளை வினவும் பொழுது பயன்படும்.

யாதுஎவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும் (சொல்.31)

என்பது நூற்பா. இங்கு அறியாப் பொருள் என்பது பொது வகையான் அறியப்பட்டுச் சிறப்பு வகையான் அறியப்படாத பொருளைக் குறிக்கும். எ.கா: இச்சொற்குப் பொருள் யாது?, இச்சொற்குப் பொருள் எவன்?.

- ❖ கூறப்பட்ட இரண்டனுள் 'யாது' என்னும் வினாச்சொல் அறியாப் பொருள்வயின் வினாவாதலேயன்றி அறிந்த பொருட்கண் ஐயம் நீக்குதற்கு ஆராய்ந்த சொல்லாகவும் வரும்.

அவற்றுள்
யாதுஎன வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாதலு முரித்தே (சொல்.32)

என்பது நூற்பா. எ.கா: இம்மரங்களுள் கருங்காலி யாது?, நம்மெருது ஐந்தனுள் கெட்ட எருது யாது?

❖ செப்பின்கண்ணும் வினாவின்கண்ணும் சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும் உறழ்பொருளும் துணைப்பொருளும் அவ்வப் பொருளுக்கு அவ்வப் பொருளே வரும். எனவே சினையும் முதலும் தம்முள் மயங்கி வருதல் வழு. அவ்வாறு மயங்கி வராமல் வழுவற்க என்பர் தொல்காப்பியர்.

செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே
(சொல்.16)

என்பது நூற்பா. ஒப்புமை கூறாது மாறுபடக் கூறுதல் உறழ்பொருள் எனப்படும். ஒப்புமை கூறப்படுவது துணைப்பொருள் எனப்படும். எ.கா:

- இவள் கண்ணின் இவள் கண் பெரிய, நும் அரசனின் எம் அரசன் முறை செய்யும் – உறழ்பொருள்.
- இவள் கண் ஒக்கும் இவள் கண், எம் அரசனை ஒக்கும் நும் அரசன் – துணைப்பொருள்.

தன்னின முடித்தல் என்பதனால் ‘பொன்னுந் துகிலும் முத்தும் மணியும் (புறநா.218) என எண்ணுங்காலும் இனமாய பொருளே எண்ணப்படுமென்பது கொள்க என்பர் சேனாவரையர்.

### 1.2.6 மரபு வழுவமைதி

தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் தகுதியும் வழக்கும், இனச்சுட்டில்லாப் பண்புக்கொள் பெயர், இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள், வண்ணச்சினைச்சொல், இனைத்தென அறிந்த சினைமுதற்கிளவி, மன்னாப்பொருள், இயற்பெயரும் சுட்டுப்பெயரும், சுட்டு முதலாகிய காரணக்கிளவி, இயற்பெயரும் சிறப்புப் பெயரும், ஒருபொருள் குறித்த வேறுபெயர்க்கிளவி, வேறுவினைப்பொதுச்சொல், இரட்டைக்கிளவி, ஒருபெயர்ப்

பொதுச்சொல், ஒன்றொழி பொதுச்சொல், பலபொருள் ஒருசொல், தெரித்துமொழி கிளவி, எடுத்துமொழி இனஞ்செப்பல் ஆகியவை பற்றிய மரபு வழுவமைதிகளை எடுத்துரைப்பர்.

### 1.2.6.1 தகுதியும் வழக்கும்

ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல் இருப்பினும் அச்சொல் சொல்லுதற்குத் தகுதியுடையதாய் இல்லாதிருப்பின் அதனை நீக்கி வேறொரு சொல்லாற் சொல்லுதல் 'தகுதி' எனப்படும். ஒரு காரணமுமின்றி இதுகாறும் மக்கள் வழங்கிய வழக்காற்றினையே நெறியாகக் கொண்டு கூறுதல் 'வழக்கு' எனப்படும். இவ்வாறு வழங்கப்பெறும் தகுதிச் சொல்லையும் வழக்குச் சொல்லையும் வழுவமைதியாகக் கொள்க என்பர் தொல்காப்பியர்.

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே (சொல். 17)

என்பது நூற்பா. எ.கா:

- செத்தாரைத் துஞ்சினார் என்றல், சுடுகாட்டை நன்காடு என்றல், ஓலையைத் திருமுகம் என்றல், கெட்டதனைப்பெருகிற்று என்றல் – தகுதி
- வெள்யாடு – வழக்கு. இதில் அடைமொழி வெண்மையை உணர்த்தினும் வழக்காற்றில் அவ்வெண்மையைக் கருதாது ஆட்டினங்களில் ஒருவகை இனத்தை உணர்த்தி நிற்றல்.

### 1.2.6.2 இனச்சுட்டில்லாப் பண்புக்கொள் பெயர்

ஒரு பொருளின் பண்பை அடுத்து வரும் பெயர், இனஞ் சுட்டுவனவும் உள; இனஞ் சுட்டாதனவும் உள. 'சில் தாழிசைக் கொச்சகக் கலிப்பா' என்பதில் வரும் 'சில் தாழிசை' என்பது 'பஃறாழிசை' என்னும் இனத்தைச் சுட்டுவதாகும். 'செஞ்ஞாயிறு'

*தொல்காப்பியம் – சொல் – சேனாவரையம்*

**குறிப்பு**

என்றவிடத்து ஞாயிறு ஒன்றேயாதலால் இதன்கண் உள்ள 'செம்மை' இனஞ்சுட்டாது வருவதாகும். இவ்வாறு இனஞ்சுட்டாது வருகின்ற பண்புகொள் பெயர் வழக்காற்றின்கண் வராது செய்யுட்கண் வருதலே மரபாகும். இம்மரபை வழக்கின்கண் வழுவற்க என்றும் செய்யுட்கண் வழுவமைக்க என்றும் கூறுவர் தொல்காப்பியர்.

இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே (சொல்.18)

என்பது நூற்பா. எ.கா:

செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்திங்களுள் வெயில் வேண்டினும் (புறநா.38)

பண்பை அடுத்து வராமல், வடவேங்கடந் தென்குமரி, முட்டாழை, கோட்சுறா எனத் திசையும் உறுப்பும் தொழிலும் முதலாய அடையடுத்து இனஞ்சுட்டாது வருவன ஒன்றென முடித்தல் என்பதனால் செய்யுளாறென அமைத்துக் கொள்ளப்படும் என்பர் சேனாவரையர்.

### 1.2.6.3 இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள்

❖ உலகத்துப் பொருள்கள் அனைத்தும் இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என இரு வகையில் அடங்கும். இவற்றுள் இயற்கைப் பொருளாகிய ஐம்பெரும் பூதங்களின் இயல்பைக் கூறும் பொழுது ஆக்கங் கொடுத்துக் கூறுதல் கூடாது; இயல்பாகக் கூற வேண்டும்.

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் (சொல்.19)

என்பது நூற்பா. எ.கா: நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளி உளரும், உயிர் உணரும்.

இவ்வாறு இயற்கைப் பொருளை இயல்பாகக் கூறாது 'ஆயிற்று' என ஆக்கங் கொடுத்துக் கூறினால் நீருக்குத் தண்மை (குளிர்ச்சி) உடன் தோன்றாது பின் தோன்றியது என்னும் கருத்துப் பெறும். எனவே ஆக்கங் கொடுத்துக் கூறுதல் வழுவாகும்.



❖ செயற்கைப் பொருளாயின் அதனை ஆக்கங் கொடுத்துச் சொல்லுதல் மரபு. அவ்வாக்கச் சொல்லிற்கு முன் காரணங் கொடுத்துச் சொல்லுதலும் உண்டு; காரணம் சொல்லாதிருத்தலும் உண்டு. இதனை,

செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் (சொல்.20)

ஆக்கந் தானே காரண முதற்றே (சொல்.21)
ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே (சொல்.22)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். எ.கா:

- கடுக்கலந்த கைபிழி எண்ணெய் பெற்றமையான் மயிர் நல்லவாயின,
- எருப்பெய்து இளங்களை கட்டு நீர்கால் யாத்தமையான் பைங்கூழ் நல்லவாயின.
- நீர் கலத்தலால் நிலம் மெலிதாயிற்று.
- தீச்சார்தலால் நீர் வெய்தாயிற்று.

இவை ஆக்கமும் காரணமும் கொடுத்துக் கூறிய செயற்கைப் பொருள்களாகும்.

- மயிர் நல்லவாயின
- பயிர் நல்லவாயின்

இவை ஆக்கமும் காரணமும் கொடுக்காது வழக்கினுள் கூறிய செயற்கைப் பொருள்களாகும். இவ்வாறு வழக்கினுள் ஆக்கக் கிளவி காரணம் இன்றியும் வழங்கப்பெறும் என்னும்

விதிவிலக்கினைப் பெறுவதால் செய்யுளுட் காரணம் பெற்றெ வரும் என்பது பெறப்படும்.

### 1.2.6.4 வண்ணச்சினைச்சொல்

பண்பைக் குறிக்கும் சொல், உறுப்பைக் குறிக்கும் சொல் ஆகிய இவ்விரண்டும் அவற்றிற்குரிய முதற்சொல்லோடு சேர்ந்துவரின், அது வண்ணச்சினைச்சொல் எனப்படும். இம் மூன்றும் வழக்கின்கண் சேர்ந்து வருங்கால் அடை, சினை, முதல் என முறை மாறாமல் வருதல் வேண்டும். அடையாகிய பண்பைக் குறிக்கும் சொல் வழக்கில் பெரும்பாலும் வண்ணச்சொல்லாகவே அமையும் என்பதால் வழக்குப் பயிற்சி நோக்கி வண்ணச்சினைச்சொல் என்றார் என்பர் சேனாவரையர்.

> அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை
> நடைபெற்றியலும் வண்ணச் சினைச்சொல் (சொல்.26)

என்பது நூற்பா. எ.கா: செங்கால் நாரை, பெருந்தலைச்சாத்தன்

இவை வழக்கினுள் கால்செந்நாரை, தலைபெருஞ்சாத்தன் என முறை மயங்கி வரின் அது மரபு வழுவாகும். வழக்கினுள் மயங்காது வரும் என்பதால் செய்யுளில் மயங்கியும் வரும் என்பது பெறப்படும். எ.கா:

> கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
> செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவர
> வாய்வன் காக்கையும் கூகையுங் கூடி (புறநா.238)

இதில் செஞ்செவிசேவல், வன்வாய்காக்கை என்பன முறையே செவிசெஞ்சேவல், வாய்வன்காக்கை என மயங்கி வந்தன.

### 1.2.6.5 இனைத்தென அறிந்த சினைமுதற்கிளவி

கேட்போரான் இத்துணை என்று வரையறுக்கப்பட்ட சினைச்சொல்லையும் முதற் சொல்லையும் வினைப்படுத்திச்

சொல்லுமிடத்து உம்மை கொடுத்துச் சொல்ல வேண்டும் என்பது மரபு. இது வழுவற்க என்பர் தொல்காப்பியர்.

இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும் ( சொல்.33)

என்பது நூற்பா. எ.கா: பன்னிரு கையும் பாற்பட வியற்றி (முருகு. 118), முரசு முழங்குதானை மூவரும் கூடி (பொருந. 54).

### 1.2.6.6 மன்னாப் பொருள்

இல்லாத பொருளை (மன்னாப் பொருள்) இடம், காலம், பொருள் ஆகிய இவற்றோடு இயைத்து இன்மை கூறின் உம்மை கொடுத்துச் சொல்லுதல் மரபு. அவ்வாறு இன்றேல் அது வழுவாம். இது வழுவற்க என்பர் தொல்காப்பியர்.

மன்னாப் பொருளும் அன்ன இயற்றே (சொல். 34)

என்பது நூற்பா. எ.கா: பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை, குருடு காண்டல் பகலும் இல்லை.

### 1.2.6.7 இயற்பெயரும் சுட்டுப்பெயரும்

❖ இயற்பெயரும் சுட்டுப்பெயரும் ஒருங்கு வந்து, இவ்விரு பெயரும் ஒன்று ஒன்றற்கு முடிபாகாது, இரண்டும் சேர்ந்து, வேறுவினை கொள்ளுமாயின் இயற்பெயரை முன்னரும் சுட்டுப்பெயரைப் பின்னரும் சொல்லுக என்பது மரபு.

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலந் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர் (சொல்.38)

என்பது நூற்பா.

எ.கா:

- சாத்தன் அவன் வந்தான் – இரு பெயரும் ஒரு வினை கொண்டது.
- சாத்தன் வந்தான் அவன் போயினான், சாத்தி வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க – இவற்றில் இரு பெயரும் தனித்தனி வினை கொண்டன.

❖ இயற்பெயரும் சுட்டுப்பெயரும் செய்யுட்கண் வரும்பொழுது சுட்டுப்பெயர் முன்னர்க் கூறவும் படும்.

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே (சொல்.39)

என்பது நூற்பா. எ.கா:

அவன்அணங்கு நோய்செய்தான் ஆயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி

இச் செய்யுளில் ‘அவன்’ என்னும் சுட்டுப்பெயர் முன்னரும் ‘சேந்தன்’ என்னும் இயற்பெயர் பின்னரும் வந்துள்ளமை செய்யுளுள் மரபு வழு அமைத்தமைக்குச் சான்றாகும்.

### 1.2.6.8 சுட்டு முதலாகிய காரணக்கிளவி

சுட்டை முதலாகவுடையதாய்க் காரணத்தை உணர்த்தி வரும் சொல் ‘சுட்டு முதலாகிய காரணக்கிளவி’ எனப்படும். ‘அதனால்’ என்பது சுட்டு முதலாகிய காரணக் கிளவியாகும். இச் சொல்லும் சுட்டுப்பெயர் போல, வழக்காயின் தொடர்மொழிப் பொருளுக்குப் பின்னரும் செய்யுளாயின் தொடர்மொழிப் பொருளுக்கு முன்னரும் வரும்.

சுட்டுமுத லாகிய காரணக் கிளவியும்
சுட்டுப்பெய ரியற்கையின் செறியத் தோன்றும்
(சொல்.40) என்பது நூற்பா.

எ.கா:

- சாத்தன் கையெழுதுமாறு வல்லன் அதனால் தந்தை உவக்கும்.
- சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள் அதனால் கொண்டான் உவக்கும்.

இவை வழக்கு என்பதால் இவற்றில் 'அதனால்' என்னும் சுட்டு முதலாகிய காரணக்கிளவி தொடர்மொழிப் பொருளுக்குப் பின்னர் வந்தன. சாத்தன் கையெழுதுமாறு வல்லன், சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள் என்பன தொடர்மொழிப் பொருள்களாகும்.

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு (குறள்.642)

இது செய்யுளாகையால் சுட்டு முதலாகிய காரணக்கிளவி தொடர்மொழிப் பொருளுக்கு முன்னர் வந்துள்ளது. சொல்லின்கட் சோர்வு காத்தோம்பல் என்பது தொடர்மொழிப் பொருளாகும். ஆக்கமும் கேடும் சொல்கின்ற சொல்லால் வருதலால் ஒருவன் தன்னுடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக்கொள்ள வேண்டும் என்பது இக்குறட்பாவின் பொருளாகும்.

இந்நூற்பாவால் தொல்காப்பியர் வழக்கின்கண் மரபு வழாநிலையும் செய்யுட்கண் மரபு வழுவமைதியும் உணர்த்தினார்.

### 1.2.6.9 இயற்பெயரும் சிறப்புப் பெயரும்

இயற்பெயரும் சிறப்புப் பெயரும் வினைக்கு ஒருங்கு இயலும்வழிச் சிறப்புப் பெயரை முன்னரும் இயற்பெயரைப் பின்னரும் சொல்லுக என்பது மரபு.

சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார் (சொல்.41)

என்பது நூற்பா. எ.கா: ஏனாதி நல்லுதடன், காவிதி கண்ணந்தை

உம்மையால், தவம், கல்வி, குடி, உறுப்பு முதலாயினவற்றான் ஆகிய பெயரும் கொள்ளப்படும்.

- முனிவன் கத்தியன் – தவம்
- தெய்வப்புலவன் திருவள்ளுவன் – கல்வி
- சேரமான் சேரலாதன் – குடி
- குருடன் கொற்றன் - உறுப்பு

### 1.2.6.10 ஒருபொருள் குறித்த வேறுபெயர்க்கிளவி

ஒரு பொருளைக் குறித்துப் பல பெயர்கள் வருமாயின் பெயர்தோறும் வினைமுடிபு கொடுக்காமல் இறுதியில் ஒரு வினை முடிபே கொடுத்தல் மரபு. இது வழுவற்க என்பதாம். அவ்வாறு பெயர்தோறும் வேறாகிய தொழில்களைக் கொடுத்து முடிப்பின், ஒரு பொருளவாய் ஒன்றாது என்பர்.

ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே
(சொல்.42)

என்பது நூற்பா. எ.கா: ஆசிரியர் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்துண்டு சென்றான்.

இவ்வாறு இறுதியில் வினைமுடிபு கொடுக்கப்பட்டுள்ள மையால், வந்ததும் உண்டதும் சென்றதும் ஒருவரே என்பது புலனாகும். இவ்வாறு கூறாது, ஆசிரியன் வந்தான்; பேரூர்கிழான் உண்டான்; செயிற்றியன் சென்றான் எனப் பெயர்தோறும் வேறு தொழில் கொடுக்கும் போது ஒவ்வொரு செயலுக்கும் உரியவர் ஒருவரே எனக் கொள்வதில் இடர்பாடு ஏற்படும். இவ்வாறு இந்நூற்பா மரபு வழுக் காத்தது.

### 1.2.6.11 வேறுவினைப்பொதுச்சொல்

*தொல்காப்பியம் – சொல் – சேனாவரையம்*

**குறிப்பு**

❖ வேறுவேறு வினையை உடையவாய் நின்ற சொற்களை ஒரு வினையாற் சொல்லாது பொது வினையாலேயே சொல்லுதல் மரபு.

வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார்
(சொல்.46)

என்பது நூற்பா. எ.கா: அடிசில், அணி, இயம், படை என்னும் தொடக்கத்தன.

உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன என்னும் நால்வகைக்கும் 'அடிசில்' என்பது பொதுச்சொல். இவ்வடிசில் என்பதை அடிசில் அயின்றார், அடிசில் மிசைந்தார் எனப் பொதுவினையாலேயே சொல்லுதல் மரபு. மாறாக, அடிசில் தின்றார், அடிசில் பருகினார் என ஒருசார்க்குரிய வினையால் சொல்லுதல் மரபு வழுவாகும்.

❖ வேறு வினைப் பொருள்களைப் பொதுச் சொல்லால் கூறாது பிரித்தெண்ணுமிடத்தும் அதனிலக்கணம் ஒரு வினையாற் கிளவாது பொதுவினையாற் கிளத்தலேயாகும். அதாவது, பல்வேறு வினைகளுக்கும் பொதுவாகிய பொருள்களைப் பிரித்து எண்ணியவழியும் பொதுவினை கொடுத்தலே மரபு. இது வழுவற்க என்பதாம்.

எண்ணுங் காலும் அதுஅதன் மரபே (சொல்.47)

என்பது நூற்பா. எ.கா: சோறுங் கறியும் அயின்றார், யாழுங் குழலும் இயம்பினார்.

இவற்றை சோறுங் கறியும் தின்றார், யாழுங் குழலும் ஊதினார் என வினை முடிபு கொடுத்தல் வழுவாகும்.

### 1.2.6.12 இரட்டைக்கிளவி

இரட்டித்து நின்று பொருளுணர்த்தும் சொற்கள் இரட்டைக்கிளவி எனப்படும். இதனை அவ்விரட்டித்தலினின்று பிரித்து சொல்லுதல் மரபு வழுவாகும். இது வழுவற்க என்பதாம்.

இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா (சொல்.48)

என்பது நூற்பா. ஈண்டு இரட்டைக்கிளவி என்றது, மக்களிரட்டையும் விலங்கிரட்டையும் போல வேற்றுமையுடையனவற்றையன்றி, இலையிரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றையென்று உணர்க என்பர் சேனாவரையர். எ.கா:

- சுருசுருத்தது, மொடுமொடுத்தது – இசை
- கொறுகொறுத்தார் (கோபித்தார்), மொறுமொறுத்தார் (முணுமுணுத்தார்) – குறிப்பு
- குறுகுறுத்தது, கறுகறுத்தது - பண்பு

### 1.2.6.13 ஒருபெயர்ப் பொதுச்சொல்

பலபொருட்கும் பொதுவாகியதொரு இடத்தையோ அன்றிப் பொருளையோ அப்பொதுமையினின்றும் நீக்கிச் சிறப்புச் சொல்லாற் கூறின் அது ஒரு பெயர்ப் பொதுச்சொல் எனப்படும். அத்தகைய சிறப்புச்சொல் தலைமை பற்றியோ அல்லது பன்மை பற்றியோ அமையும். இது உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைக்கும் ஒக்கும்.

ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும் (சொல்.49)

என்பது நூற்பா.

எ.கா:

- பார்ப்பனச் சேரி – உயர்திணைக்கண் தலைமை பற்றிய வழக்கு
- எயினர் நாடு – உயர்திணைக்கண் பன்மை பற்றிய வழக்கு
- கமுகந் தோட்டம் – அஃறிணைக்கண் தலைமை பற்றிய வழக்கு
- ஒடுவங்காடு – அஃறிணைக்கண் பன்மை பற்றிய வழக்கு



### 1.2.6.14 ஒன்றொழி பொதுச்சொல்

உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணையின்கண்ணும் ஆண், பெண் இருபாற்கும் உரிய பொதுச்சொற்கள் தத்தம் பாற்பொதுமையினின்றும் நீங்கிச் சிறப்பாக ஒவ்வொரு பாலுக்கே உரியதாய் வருதலும் உண்டு. இதனை அத்தொடரின்கண் வரும் பெயரோ அல்லது வினையோ குறிப்பாக விளக்கி நிற்கும். இதனை நன்னூலார் 'ஒன்றொழி பொதுச்சொல்' என்பர். இவ்வாறு உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரினானும் வினையினானும் பொதுமையிற் பிரிந்து ஆண்மைக்கும் பெண்மைக்கும் உரியவாய் வருவனவெல்லாம் வழக்குவழிப்பட்டனவாகலான் வழுவாகாது என்பர் தொல்காப்பியர்.

> பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
> மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன (சொல்.50)

என்பது நூற்பா.எ.கா:

- தொடியோர் கொய்குழை யரும்பிய குமரி ஞாழல் – இது உயர்திணைக்கண் பெயரிற் பிரிந்த ஆணொழி மிகுசொல் – இதில் தொடிசெறித்தல் என்னும் இயல்பால் 'தொடியோர்' என்னும் பெயர் பெண்பாலுக்குரியதாகும்.

- வடுகு அரசர் ஆயிரவர் மக்களையுடையார் - இது உயர்திணைக்கண் பெயரிற் பிரிந்த பெண்ணொழி மிகுசொல் – இதில் 'மக்கட் தன்மை' என்னும் இயல்பாலும் அரசர் என்னும் சார்பாலும் 'மக்கள்' என்னும் பெயர் ஆண்பாலாகிய வீரரைக் குறித்தது.
- இவர் வாழ்க்கைப்பட்டார் - இது உயர்திணைக்கண் தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகுசொல் – இதில் வாழ்க்கைப்படுதல் என்னும் வினை பெண்பாலுக்கே உரியதாகும்.
- இவர் கட்டிலேறினார் - இது உயர்திணைக்கண் தொழிலிற் பிரிந்த பெண்ணொழி மிகுசொல் – இதில் கட்டிலேறுதல் என்னும் வினை ஆண்பாலுக்கே உரியதாகும்.
- நம்பி நூறு எருமையுடையன் – இது அஃறிணைக்கண் பெயரிற் பிரிந்த ஆணொழி மிகுசொல் – இதில் எருமை என்னும் பெயர் எருமைத் தன்மையாலும் நம்பி என்னும் சார்பாலும் பெண்பாலுக்குரியது.
- நம்மரசன் ஆயிரம் யானையுடையன் - இது அஃறிணைக்கண் பெயரிற் பிரிந்த பெண்ணொழி மிகுசொல் – இதில் யானை என்னும் பெயர் யானைத் தன்மையாலும் அரசர் என்னும் சார்பாலும் ஆண்பாலுக்குரியது.

சேனாவரையர் அஃறிணைக்கண் தொழிலிற் பிரிந்தனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் கொடுக்காமல் 'உளவேல் கண்டு கொள்க' என்பர்.

### 1.2.6.15 பலபொருள் ஒருசொல்

இது வினைவேறுபடும் பலபொருள் ஒருசொல், வினைவேறுபடா பலபொருள் ஒருசொல் என இரு வகைப்படும்.



வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்

வினைவேறு படாஅப் பலபொரு
ளொருசொல்லென்று
ஆயிரு வகைய பலபொரு ளொருசொல் (சொல்.52)

என்பது நூற்பா.

❖ ஒரு பொருட்கே சிறந்த வினையானும், இனத்தானும், சார்பானும் பொருள் தெரிநிலைக்கண் பொதுமை நீங்கித் தெளியத் தோன்றும் சொல் வினை வேறுபடும் பலபொருள் ஒரு சொல் எனப்படும்.

அவற்றுள்
வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினுஞ் சார்பினுந்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே (சொல்.53)

என்பது நூற்பா. எ.கா:

- மா பூத்தது – வினை
- மாவும் மருதும் ஓங்கின – இனம்
- கவசம் புக்கு மாக் கொனா – சார்பு

'மா' என்னும் சொல் வண்டு, மரம், குதிரை என்னும் பலபொருட்கு உரியதாயிருத்தலின் அது பலபொருள் ஒருசொல் எனப்படும். அது இப்பொருளில் வந்தது என்பதைத் தனித்து நிற்கும் பொழுது அறிய இயலாது. அதனோடு இயைந்த வினையைக் கொண்டோ, இனத்தைக் கொண்டோ, சார்பைக் கொண்டோ தான் பொருள் விளங்க இயலும்.

❖ வினை, இனம், சார்பு என்ற மூன்றும் கொண்டு பலபொருள் ஒருசொற்களை இன்னதென விளங்கிக் கொள்ளலாமேனும், சில வினை கொடுக்குமிடத்து அவற்றானும் பொருள் விளங்காமல் போதலும் உண்டு. அவற்றை வினை வேறுபடாப் பலபொருள் ஒருசொல் என்பர். அவ்வகையில், வேறுபடாத வினை கொண்டவழி வேறுபடாது தோன்றும் வினை வேறுபடாப்

*தொல்காப்பியம் – சொல் – சேனாவரையம்*

**குறிப்பு**

*Self-Instructional Material*

பலபொருள் ஒருசொல் ஆராயுங்கால் கிளந்து சொல்லப்படும் என்பர் தொல்காப்பியர். அதாவது, முன்னும் பின்னும் வரும் சார்பு முதலியனவற்றால் குறித்த பொருள் விளங்காக்கால் வெளிப்படையாகச் சொல்லுதல் வேண்டும் என்பது பொருளாகும்.

ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங்கு இயலும் (சொல்.54)

என்பது நூற்பா. எ.கா: மாமரம் வீழ்ந்தது, விலங்குமா வீழ்ந்தது

மேலே சுட்டியவற்றை 'மா வீழ்ந்தது' என்று மட்டும் சுட்டினால், வீழ்ந்தது மரமா, விலங்கா என ஐயம் ஏற்படும். எனவே இவற்றைத் தெளிவாக விளக்கும் வகையில் மரம், விலங்கு என்னும் சொற்கள் கொடுத்துக் கிளத்தல் மரபாகும். குறித்த பொருள் விளங்காது கூறல் மரபு இல்லை. ஆகையால் இது மரபு வழுக் காத்தது.

### 1.2.6.16 தெரித்துமொழி கிளவி

ஒருவன் ஒரு பொருளின் வேறுபாட்டைச் சொல்லுங்கால் அவ்வேறுபாட்டினை இயற்கையாகவே பிறன் உணர்ந்து கொள்ளுவானாயின் அப்பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் சொல்ல வேண்டுவதில்லை. இயற்கையாக விளங்காதாயின் அவ்வேறுபாட்டிற்குரிய காரணத்தை விளங்கச் சொல்லுதல் வேண்டும். இதனைத் தொல்காப்பியர், ஒரு பொருள் வேறுபாடு குறித்தோன், அஃது ஆற்றல் முதலியவற்றால் விளங்காதாயின், அதனைத் தெரித்து (விளங்க) சொல்லுக என்பர். இது வழுவற்க என்பதாம்.

குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி (சொல்.55)

என்பது நூற்பா. இதில் 'கூற்று' என்பது 'கூற்றம்' என நின்றது. எ.கா:

வாரு மதுச்சோலை வண்டுதிர்த்த நாண்மலரால்
நாறு மருவி நளிமலை நன்னாட

இப்பாடலில் ‘நாறும் அருவி’ என்று மட்டும் கூறினால் அது பொருள் தெளிவு பெறாது; அதே சமயத்தில், ‘வண்டுதிர்த்த நாண்மலரால் நாறும் அருவி’ எனக் கூறிவதால் பொருள் தெளிவாகப் புலப்படும். இவ்வாறு தெரித்து மொழியாதவழிக் குறித்தது விளங்காது வழுப்படுதலின் மரபு வழூக்காத்தவாறு. வடநூலார் இதனை நேயமென்ப என உரைப்பர் சேனாவரையர்.

## 1.2.6.17 எடுத்த மொழி இனஞ்செப்பல்

இனமாகிய பலபொருள்கள் ஒன்றை மட்டும் எடுத்துக் கூறின் அச்சொல் தன் பொருளுக்கு இனமாகிய பிற பொருளைக் குறிப்பால் உணர்த்துதலும் உண்டு; உணர்த்தாமையும் உண்டு. இது வழுவமைதியாகும்.

எடுத்த மொழிஇனஞ் செப்பலும் உரித்தே (சொல்.60)

என்பது நூற்பா. எடுத்த பொருளை உணர்த்தும் மொழியை ‘எடுத்த மொழி’ என்றார்.

எ.கா: அறஞ்செய்தான் துறக்கம் புகும்.

அறம், மறம், துறக்கம், நரகம் என்பன இனப்பொருள்களாகும். அறம் செய்தான் துறக்கம் புகுவன் என ஒன்றனைக் கூற, அதற்கு இனமாக மறம் (பாவம்) செய்தான் நரகம் புகுவன் என்ற கருத்து பெறப்படும். இது இனமாகிய பிற பொருளைக் குறிப்பால் உணர்த்துவதற்குச் சான்றாகும். இவ்வாறு இனப்பொருளைக் குறிப்பால் உணர்த்துதல் சொல்லுவார்க்கு அக்கருத்து உள்வழியே ஆகும். இல்லையெனில் அவ்வினப் பொருளை உணர்த்தாது.

ஒரு சொல் தனக்கு இனமான சொல்லைக் குறிப்பால் உணர்த்தின் அது சொல்லாற்றல் என்றும், ஒரு பொருள் தனக்கு இயைபான பொருளை உணர்த்தின் அது பொருளாற்றல் என்றும் சேனாவரையர் கருதுவர். எடுத்துக்காட்டாக, ‘அறம் செய்தான் துறக்கம் புகும்’ என்னும் தொடர் ‘மறம் செய்தான் நிரயம் புகும்’

என்னும் தொடர்மொழியைக் குறிப்பால் உணர்த்தலின் அது சொல்லாற்றலால் பெறப்பட்டதாகும். புகையென்னும் பொருள் தனக்கு இயைபான நெருப்பைக் காட்டுவது பொருளாற்றலாகும்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

---

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. உயர்திணை என்பது யாது?

…………………………………………………………………………………
……………………

2. ஐம்பால் எனப்படுவன யாவை?

…………………………………………………………………………………
……………………

3. வழு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

…………………………………………………………………………………
…………………….

4. இயற்கைப் பொருளை எவ்வாறு கூற வேண்டும்?

…………………………………………………………………………………
……………………..

5. தெரித்து மொழிதல் என்றால் என்ன?

…………………………………………………………………………………
……………………..

## தொகுத்தறிவோம்

கிளவி என்பதற்குச் சொல் என்பது பொருள். சொற்களால் ஆக்கப்படும் சொற்றொடர்களைப் பற்றிக் கூறுவது கிளவியாக்கம் எனப்படும். திணை உயர்திணை அஃறிணை என இரு வகைப்படும். மக்கள் என்று நன்கு மதிக்கப்படும் பொருள் உயர்திணை எனப்படும். மக்கள் என்று கருதப்படாத பிற பொருள்கள் அஃறிணை எனப்படும். உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூவகைப்படும். அஃறிணை ஒன்றன் பால் பலவின் பால் என இரு வகைப்படும். ன, ள, ர, ப, மார், து, று, டு, அ, ஆ, வ ஆகிய பதினொன்றும் இரு திணை ஐம்பால்களில் இறுதியில் வரும். வழு என்றால் குற்றம் எனபது பொருள். இது திணை, பால், மரபு, செப்பு, வினா, இடம், காலம் என்னும் ஏழு வகைகளில் வரும். சொற்களைப் பயன்படுத்தும்பொழுது இவற்றில் ஏற்படும் குற்றங்களைக் காத்தல் 'வழுக்காத்தல்' எனப்படும். குறித்த பொருளை அதற்குரிய சொல்லால் சொல்லுக என்றல் வழுவற்க என்றலாகும். குறித்த பொருட்குரிய சொல் அல்லவாயினும், ஒருவாறு அப்பொருளை விளக்குவதால் அமைத்துக் கொள்க என்றல் வழுவமைத்தலாகும். தொல்காப்பியர் இவ்விரு நிலைகளிலும் கிளவியாக்கத்தில் வழுக்காத்தலை விளக்கியுள்ளார்.

## அருஞ்சொற்பொருள்

சிவணி –பொருந்தி; அந்தம் – இறுதி; காலம் – காலக்கடவுள்; உலகம் – மக்கட் தொகுதி; பால்வரை தெய்வம் – எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இரு வினையையும் வகுப்பது; வினை – அறத் தெய்வம்; சொல் – நாமகளாகிய தெய்வம்.

## உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. மக்கள் என்று நன்கு மதிக்கப்படும் பொருள் உயர்திணை எனப்படும்.
2. ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின் பால்.

3. வழு ஏழு வகைப்படும். அவையாவன: திணை வழு, பால் வழு, மரபு வழு, செப்பு வழு, வினா வழு, இட வழு, கால வழு.
4. இயற்கைப் பொருளை இயல்பாகக் கூற வேண்டும்.
5. விளங்கச் சொல்லுதல் என்பது பொருள்.

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. தொல்காப்பியரின் திணை, பால் பற்றிய கோட்பாடுகளை விளக்குக.
2. இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய ஈற்றில் வரும் ஈறுகளைச் சுட்டித்தெளிவுபடுத்துக.
3. திணை வழுவமைதி பற்றிய இலக்கணத்தைக் கூறுக.
4. பால் வழுவமைதி குறித்த செய்திகளை எடுத்துரைக்க.
5. இட வழுவமைதி பற்றிய தொல்காப்பியர் கருத்துக்களை விளக்குக.
6.செப்பு, வினா வழுவமைதிகள் குறித்து எழுதுக.
7. தகுதியும் வழக்கும் பற்றி விளக்குக.
8. 'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல், - விளக்குக
9. மரபு வழுவமைதி குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.
10. 'இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா' – விளக்குக.

## கூறு – 2

## தொல்காப்பியம் – சொல் – வேற்றுமையியல்

**அமைப்பு**

அறிமுகம்

நோக்கங்கள்

2.1 வேற்றுமையின் வகையும் பெயரும்

2.1.1 பெயர் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை)

2.1.2 இரண்டாம் வேற்றுமை

2.1.3 மூன்றாம் வேற்றுமை

2.1.4 நான்காம் வேற்றுமை

2.1.5 ஐந்தாம் வேற்றுமை

2.1.6 ஆறாம் வேற்றுமை

2.1.7 ஏழாம் வேற்றுமை

2.2 வேற்றுமைத்தொகை விரியுங்கால் படும் இயல்பு

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்



## அறிமுகம்

வேற்றுமை என்பது உருபும், அது கொள்ளும் பெயரும், அது கொண்டு முடியும் வினைச்சொல்லும் சேர்ந்ததாகும். பெயர்ப்பொருளைச் செயப்படுபொருள் முதலாக வேற்றுமை செய்தலின் வேற்றுமை எனப் பெயர்பெற்றது என்பர் சேனாவரையர். வேற்றுமை உருபையும் அது ஏற்கும் பெயரையும் வேற்றுமை என்பர் தொல்காப்பியர். வேற்றுமை உருபையே வேற்றுமை என்பர் நன்னூலார்.

தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு சொற்களுக்கும் பொதுவிலக்கணம் உணர்த்தினார். அடுத்து பெயரது சிறப்பிலக்கணத்தை உணர்த்துதல் வேண்டும். அவ்வாறு உணர்த்தாது வேற்றுமை இலக்கணத்தை வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்னும் மூன்று இயல்களில் எடுத்துரைப்பர். இவ்வாறு கிளவியாக்கத்திற்கும் பெயரியலுக்கும் இடையே வேற்றுமை இலக்கணத்தை மூன்று இயல்களால் தொல்காப்பியர்

எடுத்துரைத்திருப்பதன் காரணங்களாகச் சேனாவரையர் பின்வருவனவற்றைக் கூறுவர்.

- இவ்விடத்தில் வேற்றுமை இலக்கணம் உணர்த்தவில்லையெனில் வேறு யாண்டும் உணர்த்துதற்கு இடனில்லாது போகின்றது.
- வேற்றுமையாவது உருபும் உருபேற்ற பெயருமாதலின் இதுவும் கிளவியாக்கம் போன்ற பொதுவிலக்கணமாகவே உள்ளது.
- வேற்றுமை உருபு இடைச்சொல் ஆதலானும், அதனை ஏற்பது பெயராதலானும் இவ்வேற்றுமையியலும் பெயர்ச்சொல், இடைச்சொல் ஆகிய இரண்டின் பொது இலக்கணமாகின்றது.
- பெயரது இலக்கணங்களில் உருபேற்றலும் ஒன்று. அவ்வுருபின் இலக்கணத்தை முன்னர் உணர்த்தி, இவ்விலக்கணங்களை உடைய உருபினையே பெயர் ஏற்று வரும் எனப் பின்னர்க் கூறின் அது முறையாகவும் தெளிவாகவும் இருக்கும்.

**நோக்கங்கள்**

- வேற்றுமையின் வகையும் பெயரும் பற்றி உணர்த்துதல்.
- பெயர் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை ஒவ்வொரு வேற்றுமையின் வரைவிலக்கணத்தையும் பொருள்களையும் வாய்பாடுகளையும் விவரித்தல்
- வேற்றுமைத்தொகை விரியுங்கால் படும் இயல்பு பற்றி விளக்குதல்

## 2.1 வேற்றுமையின் வகையும் பெயரும்

வேற்றுமையாவன ஏழென்று சொல்லுவர் தொல்லாசிரியர். தொல்காப்பியர் விளியையும் சேர்த்து எட்டு என்பர். அவையாவன, 1) பெயர், 2) ஐ, 3) ஒடு, 4) கு, 5) இன், 6) அது, 7) கண், 8) விளி என்பனவாகும். இதனை,

வேற்றுமை தானே ஏழென மொழிப (சொல். 62)

விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே (சொ.63)

அவைதாம்
பெயர் ஐ ஒடு கு
இன்அது கண்விளி யென்னும் ஈற்ற (சொல்.64)

வேற்றுமைகள் எட்டும் பெயர் இறுதியாக வரும். இது 'ஈறுபெயர்க்காகும் இயற்கைய' (சொல்.69) என்று கூறுவதால் விளங்கும். பெயரும் விளியும் நீங்கலாக மற்றைய ஆறு வேற்றுமைகளும் எண்ணிக்கையாலும் பெயர்பெறும். எனவே அவற்றை இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை என வழங்கும் மரபும் விளங்கும்.

தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமை உருபு 'ஒடு' என்றும் ஆறாம் வேற்றுமை உருபு 'அது' என்றும் சிறப்பானவற்றைக் கூறினாலும் மூன்றாம் வேற்றுமைக்கு 'ஆன்' உருபும் ஆறாம் வேற்றுமைக்கு 'அகர' உருபும் கொள்ளப்படும் என்பர் சேனாவரையர்.

நன்னூலார் காலத்தில் 'ஆல்' என்னும் உருபு மூன்றாம் வேற்றுமைக்குச் சிறப்பாக வழங்கியது போலும் . எனவே தொல்காப்பியர் 'ஒடு' என்று கூறியதை விலக்கி நன்னூலார் 'ஆல்' என்பதைச் சிறப்பாகக் கூறியுள்ளார்.

பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
வினையென் றாகும் அவற்றின் பெயர்முறை (நன்.292)

என்பது நன்னூல் சூத்திரம்.

## 2.1.1 பெயர் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை)

❖ உருபினையும் விளியினையும் ஏற்காது, பிற சொல்லோடு சேராது தனித்து நிற்கும் பெயர் 'எழுவாய் வேற்றுமை' எனப்படும்.

அவற்றுள்

எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே
(சொல்.65)

என்பது நூற்பா. எ.கா: ஆ, அவன்

❖ பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல், வினைநிலை உரைத்தல், வினாவிற்கு ஏற்றல், பண்புகொள வருதல், பெயர் கொளவருதல் ஆகிய ஆறு நிலைகளில் எழுவாய் வேற்றுமை அமையும்.

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல்
அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே (சொல். 66)

என்பது நூற்பா. ஒரு தொடர்மொழியில் முடிக்குஞ் சொல்லாக வருவது எதுவோ, அதில்தான் அத்தொடர்மொழியின் பொருள் விளங்கி நிற்கும். எனவேதான் அம்முடிக்கும் சொல்லைப் பயனிலை என்றார். எ.கா:

- ஆ வுண்டு – பொருண்மை சுட்டல்
- ஆ செல்க – வியங்கொள வருதல்
- ஆ கிடந்தது – வினைநிலை உரைத்தல்
- அஃது யாது? – வினாவிற்கு ஏற்றல்
- ஆ கரிது - பண்புகொள வருதல்
- ஆ பல – பெயர்கொள வருதல்

❖ பெயரோடு பெயரும் பெயரோடு வினையும் சேர்ந்து ஒரு மொழிபோல் வருமாயின் அவற்றைத் ‘தொகை’ என்பர். அவற்றுள் பெயரோடு பெயர் சேர்ந்த தொகைச்சொல் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கொண்டு முடியும்.

பெயரி னாகிய தொகையுமா ருளவே
அவ்வு முரிய அப்பா லான (சொல்.67)

என்பது நூற்பா.

எ.கா:

- யானைக்கோடு கிடந்தது – வேற்றுமைத்தொகை
- மதிமுகம் வியர்த்தது – உவமைத்தொகை
- கொல்யானை நின்றது – வினைத்தொகை
- கருங்குதிரை ஓடிற்று – பண்புத்தொகை
- உவாப்பதினான்கு கழிந்தன – உம்மைத்தொகை
- பொற்றொடி வந்தாள் – அன்மொழித்தொகை

❖ பெயர், பயனிலை கொண்டு முடியும் போது அப்பெயர் வெளிப்பட்டு நிற்கும்; வெளிப்படாதும் நிற்கும். பெயர் வெளிப்படாது நிற்றலைத் 'தோன்றா எழுவாய்' என்பர். பெயர் வெளிப்படாது நிற்றல் சிறப்பிற்குரியதல்ல. இருப்பினும் சிறுபான்மை பெயர்கள் தோன்றாது நின்று பயனிலை மட்டும் வருவது உண்டு.

> எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
> அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப (சொல்.68)

என்பது நூற்பா. மூவிடத்துப் பெயரும் செவிப்புலனாகத் தோன்றி நின்று பயனிலைகோடல் செவ்விதென்ப ஆசிரியர் என்பது இதன் பொருள். எ.கா:

- கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா என்றவழிச் செல்வல் எனல் – இதில் 'யான்' என்னும் எழுவாய் வெளிப்படாது நின்று 'செல்வல்' என்னும் பயனிலை கொண்டது – தன்மை.
- யான் யாது செய்வல் இது என்றவழிச் செய் எனல் – இதில் 'நீ' என்னும் எழுவாய் வெளிப்படாது நின்று 'இது செய்' என்னும் பயனிலை கொண்டது – முன்னிலை.
- இவன் யார் என்றவழிப் படைத்தலைவன் எனல் – இதில் இவன் என்னும் எழுவாய் வெளிப்படாது நின்று

'படைத்தலைவன்' என்னும் பயனிலை கொண்டது – படர்க்கை.

❖ பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்று கூறப்பட்ட முறைமையினையுடைய உருபு தன் நிலை திரியாது பெயர்க்கு ஈறாகும் இயல்பினையுடையது என்று சொல்லுவர் ஆசிரியர்.

கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப (சொல். 69)

என்பது நூற்பா. இதனால் பெயர்கள் உருபினை ஏற்கும்போது அவ்வுருபுகள் பெயரது இறுதியிலேயே வரும். மேலும் அவ்வுருபுகள் தன் நிலை திரியாது நிற்கும் என்பது விளங்கும். மேலும், உருபு பெயர் சார்ந்து வரும் என்பதால் உருபேற்றலாகிய பெயரிலக்கணமும் பெறப்பட்டது என்பர் சேனாவரையர்.

எ.கா: சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் என வரும்.

❖ வினைச்சொல்லோடு ஒக்கும் ஒரு கூறல்லாதவிடத்து, பெயர்ச்சொற்கள் காலந்தோன்றாது என்பர் தொல்காப்பியர்.

பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே (சொல்.70)

என்பது நூற்பா. இதனால் பெயர்ச்சொற்கள் காலத்தைக் காட்டமாட்டா. ஆனால் வினைச்சொல்லோடு ஒக்கும் வினையாலணையும் பெயர் காலத்தைக் காட்டும் என்பது பெறப்படும். எ.கா:

- சாத்தன், கொற்றன், உண்டல், தின்றல் – இவற்றில் பெயர்கள் காலந்தோன்றாது நின்றன.

- உண்டான், தின்றான் – இவற்றில் வினையாலணையும் பெயர்கள் காலங்காட்டி நின்றன.

மேலே சுட்டிய உண்டான், தின்றான் என்பன வினையாகவும் கருதப்படும்; வினையாலணையும் பெயராகவும் கருதப்படும். இவை ஒலிக்கப்படும் இயல்பு அடிப்படையிலேயே வேறுபடும். எடுத்துச் சொல்லும்பொழுது தெரிநிலை வினைமுற்றாகவும் படுத்துச் சொல்லும்பொழுது வினையாலணையும் பெயராகவும் கருதப்படும். இதனைச் சேனாவரையர், "உண்டான், தின்றான் என்னுந் தொடக்கத்துப் படுத்துச் சொல்லப்படும் தொழிற்பெயர் வினைச்சொல்போலத் திணையும் பாலுங் காலமும் முதலாயினவற்றை விளக்கி, அன், ஆன் முதலாகிய ஈற்றவாய் வருதலின், 'தொழில்நிலை யொட்டும்' என்றார்" என உரைப்பர். மேலும், "பெயரிலக்கணமும் உருபேற்றலுமாகிய பெயரிலக்கணம், ஈண்டுப் பெறப்படுதலின் அவற்றோடியையக் காலந் தோன்றாமையாகிய பெயரிலக்கணமும் ஈண்டே கூறினார். பெரும்பான்மை பற்றிக் காலந்தோன்றாமை பெயரிலக்கணமாயிற்று" என்றும் கூறுவர்.

## 2.1.2 இரண்டாம் வேற்றுமை

❖ இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' ஆகும். அது தெரிநிலை வினை (வினை), குறிப்பு வினை (வினைக்குறிப்பு) ஆகிய இரண்டின் காரணமாக வரும் செயப்படுபொருளைப் பொருளாகக் கொண்டு வரும்.

ஒருவன் யாதானும் ஒரு தொழில் செய்யின், அதன் பயனை எது கூறுகின்றதோ அதுவே செயப்படுபொருளாகும். குடத்தை வனைந்தான் என்றவிடத்து வனைந்தவன் குயவனாகும். அவனது தொழில் வனைதலாகும். அத்தொழிலின் பயனைப் பெற்றது

குறிப்பு

குடமாகும். எனவே குடம் என்பது செயப்படுபொருள். இது தெரிநிலை வினையின் காரணமாக வந்த செயப்படுபொருளாகும். குழையையுடையவன் என்பது குறிப்பு வினையின் காரணமாக வந்த செயப்படுப்பொருளாகும். இதில் அதனை உடைமையாகிய வினையின் பயனைக் குழை பெறுதலின் அது செயப்படுபொருளாக ஆயிற்று.

இரண்டாகுவதே
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு
அவ்விரு முதலில் தோன்றும் அதுவே (சொல்.71)

என்பது நூற்பா. இதில் தொல்காப்பியர், இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள், செயப்படுபொருள் என நேரடியாகக் குறிக்காமல் வினை, வினைக்குறிப்பு ஆகிய இரண்டின் காரணமாகத் தோன்றுவது எதுவோ, அதுவே பொருளாக வரும் எனக் கூறியுள்ளார். இதற்கான காரணத்தை சேனாவரையர், செயப்படுபொருள் என்பது வினை, வினைக்குறிப்பு ஆகிய இரண்டின் காரணமாகத் தோன்றுமாதலானும், பொதுவாகச் செயப்படுபொருளே இவ்வேற்றுமைக்குப் பொருளாம் என்று கூறிவிடின், தெரிநிலை வினையினால் வரும் செயப்படுபொருளைக் கூறினாரோ அல்லது குறிப்பு வினையினால் வரும் செயப்படுபொருளைக் கூறினாரோ என்று ஐயம் ஏற்படும் ஆதலானும், அவ்வையம் நீங்க வினை, வினைக்குறிப்பு ஆகிய இரண்டின் வாயிலாக வரும் செயப்படுபொருளும் இதற்குப் பொருளாம் என விளக்கமாகக் கூறினார் என்பர்.

❖ காப்பு முதலாக இருபத்தெட்டுப் பொருள்களை இரண்டாம் வேற்றுமைக்கு உரியதாக வரையறுப்பர் தொல்காப்பியர்.

காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஓப்பின் புகழின் பழியின் என்றா

பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்றா
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார் (சொல். 72)

என்பது நூற்பா. இவற்றைச் சேனாவரையர் இயற்றப்படுவன, வேறுபடுக்கப்படுவன, எய்தப்படுவன என மூவகைப்படுத்துவர்.

- இயற்றப்படுதல் – முன் இல்லதனை உண்டாக்குதல். இதற்குரிய வாய்பாடு இழைத்தல் மட்டுமே ஆகும். எ.கா:எயிலை இழைத்தான்.
- வேறுபடுக்கப்படுதல் – முன் உள்ளதை வேறுபடுத்தல். இதற்குரிய வாய்பாடுகள் ஓப்புதல், இழத்தல், அறுத்தல், குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், ஆக்கல், சிதைத்தல் என்னும் எட்டுமாகும். எ.கா: கிளியை ஓப்பும், பொருளை இழக்கும், நாணை அறுக்கும், மரத்தைக் குறைக்கும், நெல்லைத் தொகுக்கும், வேலியைப் பிரிக்கும், அறத்தை ஆக்கும், நாட்டைச் சிதைக்கும்.
- இயற்றுதலும் வேறுபடுத்தலுமின்றித் தொழில் பயன்படும் முறையில் நிற்றல். இதற்குரிய வாய்பாடுகள்: காத்தல், ஒத்தல், ஊர்தல், புகழ்தல், பழித்தல், பெறல், காதல், வெகுளல், செறல், உவத்தல், கற்றல், நிறுத்தல், அளத்தல், எண்ணல், சார்தல், செலல், கன்றல், நோக்கல், அஞ்சல் என்னும் பத்தொன்பதுமாகும். எ.கா: ஊரைக் காக்கும், தந்தையை ஒக்கும், தேரை ஊரும், குரிசிலைப் புகழும், நாட்டைப் பழிக்கும், புதல்வரைப் பெறும், மனைவியைக் காதலிக்கும், பகைவரை வெகுளும், செற்றாரைச் செறும், நட்டாரை உவக்கும், நூலைக் கற்கும், பொன்னை நிறுக்கும், அரிசியை அளக்கும், அடைக்காயை எண்ணும், ஊரைச் சாரும், நெறியைச்

செல்லும், சூதினைக் கன்றும், கணையை நோக்கும், கள்வரை அஞ்சும்.

'அன்ன பிறவும் என்றதனால் பகைவரைப் பணித்தான், சோற்றை யட்டான், குழையை யுடையான், பொருளையிலன் என்னுந் தொடக்கத்தனவும் கொள்க என்பர் சேனாவரையர்.

### 2.1.3 மூன்றாம் வேற்றுமை

❖ மூன்றாம் வேற்றுமை உருபு 'ஒடு' என்பதாகும். இது வினைமுதலும் கருவியுமாகிய இரு பொருளை உடையது. வினைமுதல் என்பது கருவி முதலாகிய காரணங்களைத் தொழிற்படுத்துவது. கருவி என்பது வினைமுதலின் தொழிற்பயனை செயப்படுபொருட்கண் உய்ப்பது.

மூன்றாகுவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே (சொல்.73)

என்பது நூற்பா. எ.கா:

- கொடியொடு துவக்குண்டான் (கட்டப்பட்டான்) – வினைமுதல்
- ஊசியொடு குயின்ற (தைக்கப்பட்ட) தூசும் பட்டும் - கருவி

❖ தொல்காப்பியர் பத்துப் பொருள்களை மூன்றாம் வேற்றுமைக்கு உரியதாக வரையறுப்பர். இதனால் இது இயன்றது, இதனால் இது தகும், இதனால் இது தொழிற்படும், இதனால் இது ஆயிற்று, இதனால் இது கொள்ளப்பட்டது, இதனோடு இது மயங்கிற்று, இதனோடு இது இயைந்த வினையாயிற்று, இதனோடு இது இயைந்த வேறு வினையாயிற்று, இதனோடு இது இயைந்து ஒப்பல்லாத ஒப்பாயிற்று, இன்னும் ஆனும் ஏதுவாக வருதல் என்பன அப்பொருள்களாகும்.

அதனி னியறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனி னாதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனோ டியைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னா னேது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார் (தொல்.74)

என்பது நூற்பா. எ.கா:

- மண்ணானியன்ற குடம் – அதனின் இயறல் – மண் முதற் காரணம். முதற்காரணமாவது காரியத்தோடு ஒற்றுமையுடையது.
- வாயாற்றக்கது வாய்ச்சி, அறிவானமைந்த சான்றோர் – அதன்தகு கிளவி – வாய்ச்சி என்பது தச்சர்கள் பயன்படுத்தும் கருவி.

இவை இரண்டும் கருவிப் பாற்படும்.

- சாத்தனான் முடியுமிக் கருமம் – அதன் வினைப்படுதல்

இது வினைமுதற்பாற் படும்.

- வாணிகத்தானாயினான் – அதனின் ஆதல் – இது காரக ஏது என்பர் சேனாவரையர். காரகம் என்பது தொழிலை இயற்றுவிப்பது. வாணிகத்தானாயினான் என்பதற்கு வாணிகத் தொழிலை இயற்றியதனால் இவ்வாக்கத்தைப் பெற்றான் என்பது கருத்து.
- காணத்தாற் கொண்டவரிசி – அதனின் கோடல் –காணம் என்பது பொன்னைக் குறிக்கும்

இவை இரண்டும் கருவிப் பாற்படும். இவை ஐந்து பொருளும் ஒடு உருபிற்கும் சிறுபான்மை உரியவாயினும், பெரும்பான்மை பற்றி ஆன் உருபிற்கே உரிய போலக் கூறினார்.

- எண்ணொடு விராய அரிசி – அதனொடு மயங்கல்
- ஆசிரியனொடு வந்த மாணாக்கன் – அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி – இதில் வருதல் தொழில் இருவர்க்குமொத்தலின் 'ஒருவினைக் கிளவி' ஆயிற்று.
- மலையொடு பொருத மால்யானை – அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி – பொருதல் யானைக்கல்லது இன்மையின் வேறுவினைக் கிளவி ஆயிற்று.
- பொன்னொடு இரும்பனையர் நின்னொடு பிறரே – அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை – ஒப்பல்லதனை ஒப்பாகக் கூறலின் ஒப்பல் ஒப்புரை ஆயிற்று.
- முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது – இன்னானேது – இன்னுருபிற்கும் ஆனுருபிற்கும் உரித்தாகிய ஏது – சேனாவரையர் இதனை ஞாபக ஏது என்பர். ஞாபகம் என்பது அறிவிப்பது. ஒலி முயற்சியாற் பிறத்தலான் அது நிலையாததாம் என அறிவிப்பது காரணமாக வருதலின் ஞாபக ஏதுவாயிற்று.

'அன்ன பிறவும்' என்றதனால், கண்ணாற்கொத்தை (கண்ணின்மையால் குருடன்), தூங்கு கையான் ஓங்கு நடைய (புறநா.22), மதியோடொக்கு முகம், சூலொடு கழுதை பாரஞ் சுமந்தது என்பன போல்வன கொள்க என்பர் சேனாவரையர். நன்னூலார் ஆல், ஆன், ஒடு, ஓடு என்னும் நான்கினையும் மூன்றாம் வேற்றுமை உருபுகளாகக் கொள்வர். கருவி, கருத்தா,

உடனிகழ்வு ஆகிய மூன்றினையும் அதற்குரிய பொருளாகக் கொள்வர் (நன்.297).

### 2.1.4 நான்காம் வேற்றுமை

❖ நான்காம் வேற்றுமை உருபு 'கு' என்பதாகும். அது யாதாயினுமொரு பொருளாயினும் அதனை ஏற்று நிற்கும். அதாவது கோடற் பொருளில் (கொள்ளுதல்) வரும்.

நான்கா குவதே
கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினுங் கொள்ளும் அதுவே (சொல்.75)

என்பது நூற்பா. எ.கா: அந்தணர்க்கு ஆவைக் கொடுத்தான்

மாணாக்கர்க்கு நூற்பொருளுரைத்தான் என்பதில், கொடைப்பொருளவாகிய சொல் அமையாமல் 'உரைத்தான்' எனப் பிற வாய்பாடு வந்துள்ளது. மாணாக்கர்க்கு அறிவு கொடுத்தான் என்று கூறும்போது அது காட்சி வகையான் புலப்படாது கருத்து வகையான் கொடுத்தலை உணர்த்துகிறது. இவ்வாறு எல்லாப் பொருளும் நான்காம் வேற்றுமைக்கு உரியதாக அமையும் என்பதை உணர்த்துவதற்காகவே தொல்காப்பியர் 'எப்பொருளாயினும்' என்றார் என்றும் இவ்வாறு பிற பொருளும் உளவாயினும் கோடற்பொருள் சிறந்தமையின் 'எப்பொருளாயினும் கொள்ளும்' என்றார் என்றும் கூறுவர் சேனாவரையர்.

❖ ஒன்றற்கு ஒன்று பயன்படுதல், ஒன்றற்கு ஒரு பொருளை இனிக் கொடுப்பதாக உடன்படுதல், ஒன்றற்கு உரிமை உடையவாய பொதுவாகிய பொருளைக் கூறு இடப்படுதல், ஒன்றற்கு ஒன்றாகத் திரிந்து வருதல், ஒன்றற்கு ஒன்று பொருத்தமுடைத்தாதல், ஒரு பொருளினை இனிப் பெறுதல் காரணமாக ஒரு தொழில் நிகழ்தல், ஒன்றற்கு ஒன்று நட்பாதல்,

ஒன்றற்கு ஒன்று பகையாதல், ஒன்றற்கு ஒன்று காதல் உடைத்தாதல், ஒன்றற்கு ஒன்று சிறத்தல் ஆகிய பொருள்களில் நான்காம் வேற்றுமை வரும்.

அதற்குவினை யுடைமையின் அதற்குடம் படுதலின்
அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின் அதன்பொருட் டாதலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பினென்று
அப்பொருட் கிளவியும் அதன்பால என்மனார் (சொல்.76)

என்பது நூற்பா. எ.கா:

- கரும்பிற்கு வேலி – அதற்கு வினையுடைமை
- சாத்தற்கு மகளுடம்பட்டார் – அதற்குடம்படுதல்
- சாத்தற்கு கூறு கொற்றன் – அதற்குப் படுபொருள்
- கடிசூத்திரத்திற்குப் (அரைஞான்) பொன் – அதுவாகு கிளவி – பொன் கடிசூத்திரமாகத் திரியுமாகையால் அதுவாகு கிளவி (பொருள்) என்றார்.
- கைக்கு யாப்புடையது கடகம் – அதற்கு யாப்புடைமை
- கூழிற்குக் குற்றேவல் செய்யும் – அதன் பொருட்டாதல்
- அவற்கு நட்டான் – நட்பு
- அவற்குப் பகை – பகை
- நட்டார்க்குக் காதலன் – காதல்
- கற்பார்க்குச் சிறந்தது செவி – சிறப்பு

அப்பொருட் கிளவியும் என்றதனால் பிணிக்கு மருந்து, நட்டார்க்குத் தோற்கும், அவற்குத் தக்காள் இவள், உற்றார்க்கு உரியர் பொற்றொடி மகளிர் என்பன போல்வனவெல்லாம் கொள்க என்பர் சேனாவரையர்.

## 2.1.5 ஐந்தாம் வேற்றுமை

❖ ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' என்பதாகும். இது இப்பொருளை நோக்க இப்பொருள் இத்தன்மைத்தாக இருக்கும் என்னும் பொருளில் வரும்.

ஐந்தாகுவதே
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது வென்னு மதுவே (சொல்.77)

என்பது நூற்பா.

❖ வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈறாக இருபத்தெட்டு வாய்பாடுகளை ஐந்தாம் வேற்றுமைக்குரியனவாக வரையறுப்பர் தொல்காப்பியர்.

வண்ணம் வடிவே யளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்றா
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை யென்றா
முதுமை யிளமை சிறத்த லிழித்தல்
புதுமை பழமை ஆக்க மென்றா
இன்மை யுடைமை நாற்றந் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்று
அன்ன பிறவும் அதன்பால என்மனார் (சொல்.78)

என்பது நூற்பா.

பொருவு (ஒப்பு), எல்லை, நீக்கம், ஏது என நான்கு பொருண்மைகளை உடையது ஐந்தாம் வேற்றுமை என்பர் சேனாவரையர். இவற்றுள் பொருவு உறழ் பொருவு, உவமப் பொருவு என இரு வகைப்படும். ஏதுவும் ஞாபக ஏது, காரக ஏது என இரு வகைப்படும். அவற்றுள் ஞாபக ஏதுப் பொருண்மை இன்னான் ஏது (சொல்.74) என மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருளில் கூறப்பட்டது. காரக ஏதுப் பொருண்மை அச்சம், ஆக்கம் என இந்நூற்பாவில் கூறப்பட்டுள்ளது. நீக்கப் பொருண்மை தீர்தல்,

பற்று விடுதல் என்பனவற்றால் பெறப்படும். ஏனைய பொருவு, எல்லை ஆகிய இரண்டும் 'இதனின் இற்றிது' (சொல். 77) என்பதால் கொள்ளப்படும் என்பர் சேனாவரையர். எனவே அச்சம், ஆக்கம், தீர்தல், பற்று விடுதல் ஆகிய நான்கும் ஒழிந்த இருபத்து நான்கும் பொருவு, எல்லை ஆகிய இரண்டுக்கும் உரிய வாய்பாடுகளாகும்.

➢ **பொருவுப் பொருள்:** இது ஒன்றையொன்று உவமித்தலாகிய உவமப்பொருளிலும், ஒன்றைக் காட்டிலும் ஒன்று உயர்ந்தோ அல்லது தாழ்ந்தோ வரும் உறழ் பொருளிலும் வரும். இப்பொருள் பல வாய்பாட்டோடு வழக்கின்கட் பயின்று வருதல் உடைமையால் பெரும்பான்மையும் அதனையே விரித்தார் என்பர் சேனாவரையர். எ.கா:

- காக்கையிற் கரிது களம்பழம் – வண்ணம்
- இதனின் வட்டம் இது – வடிவு
- இதனின் நெடிது இது - அளவு
- இதனிற் றீவிது இது – சுவை
- இதனிற் தண்ணிது இது – தண்மை
- இதனின் வெய்து இது – வெம்மை
- இதனின் நன்று இது – நன்மை
- இதனிற் றீது இது – தீமை
- இதனிற் சிறிது இது – சிறுமை
- இதனிற் பெரிது இது – பெருமை
- இதனின் வலிது இது – வன்மை
- இதனின் மெலிது இது - மென்மை
- இதனிற் கடிது இது – கடுமை
- இதனின் முதிது இது – முதுமை

- இதனின் இளைது இது – இளமை
- இதனிற் சிறந்தது இது – சிறத்தல்
- இதனின் இழிந்தது இது – இழித்தல்
- இதனிற் புதிது இது – புதுமை
- இதனிற் பழைது இது – பழமை
- இதனின் இலன் இவன் – இன்மை
- இவனின் உடையவன் இவன் – உடைமை
- இதனின் நாறும் இது – நாற்றம்
- இதனிற் பல இவை – பன்மை
- இதனிற் சில இவை – சின்மை

➢ **எல்லைப் பொருள்:** இப்பொருட்கும் மேற்கூறிய இருபத்து நான்கு வாய்பாடுகளும் உரியனவாகும். எ.கா:

- கருவூரின் கிழக்கு, இதனின் ஊங்கு

இவற்றில் கிழக்கு, ஊங்கு என்பன வினைக்குறிப்பு அல்லவேனும் இற்றென்னும் பொருள்பட நிற்றலின் இற்று என்றலேயாம் என்பர் சேனாவரையர்.

➢ **நீக்கப்பொருள்:** இதற்குத் தீர்தல், பற்றுவிடுதல் என்னும் இரண்டு வாய்பாடுகளும் உரியன. எ.கா:

- ஊரிற் தீர்ந்தான் – தீர்தல்
- காமத்திற் பற்றுவிட்டான் – பற்றுவிடுதல்

➢ **ஏதுப்பொருள்:** இந்நூற்பாவில் கூறப்படும் காரக ஏதுவிற்கு அச்சம், ஆக்கம் என்னும் இரண்டு வாய்பாடுகளும் உரியன. எ.கா:

- கள்ளரின் அஞ்சும் – அச்சம்
- வாணிகத்தின் ஆயினான் - ஆக்கம்

'அன்ன பிறவும்' என்றதனால், அவனின் அளியன் இவன், அதனிற் சேய்த்து இது, இகழ்ச்சியிற் கெட்டான், மகிழ்ச்சியின் மைந்துற்றான் என்பன போல்வன கொள்க என்பர் சேனாவரையர்.

## 2.1.6 ஆறாம் வேற்றுமை

❖ ஆறாம் வேற்றுமை உருபு 'அது' என்பதாகும். இது தன்னோடு ஒற்றுமையுடைய பொருளாகிய தற்கிழமைப்பொருளிலும், தன்னின் வேறாம் பொருளாகிய பிறிதின்கிழமைப் பொருளிலும் வரும். இதனது இது என்பதுபட நிற்குங் கிளவியிற் தோன்றும் கிழமையைப் பொருளாகக் கொண்டு வரும்.

ஆறாகுவதே
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதன(து) இதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே (சொல். 79)

என்பது நூற்பா.

தன்னோடு ஒற்றுமையுடைய பொருளைத் தற்கிழமை என்பர். இது ஒன்றுபல குழீஇயது, வேறுபல குழீஇயது, ஒன்றியற் கிழமை, உறுப்பின் கிழமை, மெய் திரிந்தாய தற்கிழமை என ஐந்து வகைப்படும். தன்னின் வேறாகிய பொருள் பிறிதின் கிழமை எனப்படும். இது பொருளின் கிழமை நிலத்தின் கிழமை, காலத்தின் கிழமை என மூவகைப்படும்.

❖ இயற்கை முதலாக வாழ்ச்சி ஈறாகச் சொல்லப்பட்டனவும் திரிந்து வேறுபடுவனவுமாகிய கிழமைப் பொருட்கண் தோன்றும் சொல்லெல்லாம் ஆறாம் வேற்றுமைத் திறத்தன என்று சொல்லுவர் புலவர் என்பர் தொல்காப்பியர்.

இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்

செயற்கையின் முதுமையின் வினையின் என்றா
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி உறுப்பின் குழுவின் என்றா
தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்
திரிந்து வேறுபடூஉம் பிறவும் அன்ன
கூறிய மருங்கின் தோன்றுங் கிளவி
ஆறன்பால என்மனார் புலவர் (சொல்.80)

என்பது நூற்பா.

- **தற்கிழமை -5**
  - ஒன்றுபல குழீஇயது – இதற்குக் குழு என்பது வாய்பாடு எ.கா: எள்ளது குப்பை.
  - வேறுபல குழீஇயது– இதற்குக் குழு என்பது வாய்பாடு எ.கா: படையது குழாம்.
  - ஒன்றியற் கிழமை – இதற்கு இயற்கை, நிலை என்பன வாய்பாடுகள் எ.கா: சாத்தனது இயற்கை, சாத்தனது நிலைமை.
  - உறுப்பின் கிழமை – இதற்கு உறுப்பு என்பது வாய்பாடு எ.கா: யானையது கோடு.
  - மெய்திரிந்தாய கிழமை – இதற்கு செயற்கை, முதுமை, வினை என்பன வாய்பாடுகள் எ.கா: சாத்தனது கற்றறிவு (செயற்கை), அரசனது முதுமை, சாத்தனது செலவு (வினை).

- **பிறிதின் கிழமை -3**
  - பொருளின் கிழமை – இதற்கு உடைமை, முறைமை, கருவி, துணை, கலம், முதல், தெரிந்து மொழிச் செய்தி (செய்யுட் கிழமை) என்பன வாய்பாடுகளாகும். எ.கா: சாத்தனது தோட்டம், மறியது தாய், வனைகலத்தது திகிரி, அவனது

துணை, நிலத்தது ஒற்றிக்கலம் (நிலத்தது போக்கிய பத்திரம்) , ஒற்றியது முதல், கபிலரது பாட்டு.

- நிலத்தின் கிழமை – இதற்கு கிழமைக் கிழமை, வாழ்ச்சிக் கிழமை என்பன வாய்பாடுகளாகும். எ.கா: முருகனது குறிஞ்சி நிலம், யானையது காடு
- காலத்தின் கிழமை – இதற்கு கிழமைக் கிழமை வாய்பாடாகும். எ.கா: வெள்ளியது ஆட்சி

'திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவும்' என்றதனால் எட்சாந்து, கோட்டு நூறு, சாத்தனது ஒப்பு, தொகையது விரி, பொருளது கேடு, சொல்லது பொருள் என்னுந் தொடக்கத்தன கொள்க. அவற்றுள் எட்சாந்து, கோட்டு நூறு என்பன முதலாயின முழுவதூஉந் திரிதலின்ன் வேறு கூறினார் என்பர் சேனாவரையர்.

## 2.1.7 ஏழாம் வேற்றுமை

❖ ஏழாம் வேற்றுமை உருபு 'கண்' என்பதாகும். இது தொழில் நிகழ்கின்ற இடம், நிலமாகிய இடம், காலமாகிய இடம் ஆகிய மூவகைப் பொருளிலும் வரும்.

> ஏழாகுவதே
> கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
> அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே

(சொல்.81)

என்பது நூற்பா. எ.கா:

- தட்டுப்புடைக்கண் வந்தான் – வினைசெய் இடம் . தட்டுப்புடை – நெல் கொழிக்கின்ற இடம்; ஒருவகை விளையாட்டிடமுமாம்.
- மாடத்தின்கண் இருந்தான் – நிலம்

* கூதிர்க்கண் வந்தான் – காலம்

கண் முதலிய உருபுகள் யாண்டு வரினும் அவ்விடமெல்லாம் ஏழாம் வேற்றுமையாகக் கொள்ளக்கூடாது. இடம், நிலம், காலம் ஆகிய பொருள்களை இடமாகக் குறித்து வருகின்றபொழுது மட்டுமே அவற்றை வேற்றுமை என்று கருதவேண்டும் என்பர் சேனாவரையர். இதனை சேனாவரையர் 'குறிப்பின் தோன்றுமது' என்பதால் கொள்வர்.

❖ கண் முதலாக இடம் ஈறாகச் சொல்லப்பட்ட பத்தொன்பது பொருளும் அவை போல்வன பிறவும் ஏழாவதன் திறத்தன என்பர் தொல்காப்பியர்.

கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை யெனாஅ
முன்னிடை கடைதலை வலமிட மெனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார் (சொல். 82)

என்பது நூற்பா. இதன்கண் வரும் கண் முதலாயினவற்றை உருபின் பொருள்பட வரும் பிறசொற்கள் என்பர் சேனாவரையர். எ.கா: கண்ணின்று சொல்லியான், ஊர்க்காற் செய், ஊர்ப்புறத்து மரம், எயிலகத்துப் புக்கான், இல்லுள் இருந்தான், அரசனுழை இருந்தான், ஆலின்கீழ் கிடந்த ஆ, மரத்தின் மேலிருந்த குரங்கு, ஏர்ப்பின் சென்றான், காட்டுச்சார் ஓடுவது, உறையூர்க்கு அயல் நின்ற சிராப்பள்ளிக்குன்று, எயிற்புடை நின்றார், வடபால் வேங்கடம் (தேவகை – திசைக்கூறு), புலிமுன் பட்டான், நூலின் இடையும் கடையும் தலையும் நின்ற மங்கலம், கைவலமுள்ளது, தன்னிடத்து நிகழ்வது.

## 2.2 வேற்றுமைத்தொகை விரியுங்கால் படும் இயல்பு

வேற்றுமைத் தொகையை விரிப்புழி இடையில் சில சொற்கள் விரிந்து நின்று பொருள்படுதல் போல அன்மொழித்

தொகையை விரிப்புழியும் சில சொற்கள் விரிந்து நின்று பொருள் உணர்த்தும்.

வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலுந் தொகைவயின் பிரிந்து
பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய வென்ப (சொல்.83)

என்பது நூற்பா. இதில் 'ஈற்று நின்றியலுந் தொகை' என்பது அன்மொழித்தொகையைக் குறிக்கும். அன்மொழித்தொகை பண்புத்தொகை முதலாகிய தொகை இறுதியின் நிற்கும் இயல்புடையதாகும். எ.கா: தாழ்குழல், பொற்றொடி, மட்காரணம் என்னும் அன்மொழித் தொகைகளை விரிக்கும்போது தாழ்குழலையுடையாள், பொற்றொடியை யணிந்தாள், மண்ணாகிய காரணத்தானியன்றது என வரும். இவற்றில் உடைமையும் அணிதலும் இயறலும் ஆகிய சொற்கள் விரிந்து வந்துள்ளன. இது கருங்குழற் பேதை, பொற்றொடி யரிவை, மட்குடம் என்னும் வேற்றுமைத் தொகைகளை விரிப்புழி, கருங்குழலையுடைய பேதை, பொற்றொடியை அணிந்த அரிவை, மண்ணானியன்ற குடம் என சில சொற்கள் விரிந்து நின்று பொருள் உணர்த்தியது போன்றதாகும்.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

---

**குறிப்பு:**

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. வேற்றுமை எத்தனை வகைப்படும்?

……………………………………………………………………………

……………………

2. பெயர் வேற்றுமைக்கு வழங்கும் மற்றொரு பெயர் யாது?

……………………………………………………………………………

……………………

3. 'சார்தல்' பொருள் எந்த வேற்றுமைக்கு உரியது?

……………………………………………………………………………

……………………

4. மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபு எது?

……………………………………………………………………………

……………………..

5. ஆறாம் வேற்றுமைப் பொருளுக்குரிய இரு வகைக் கிழமைகள் யாவை?

……………………………………………………………………………

……………………..

**தொகுத்தறிவோம்**

வேற்றுமை என்பது உருபும் அது கொள்ளும் பெயரும், அது கொண்டு முடியும் வினைச்சொல்லும் சேர்ந்ததாகும். இது பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என எட்டு வகைப்படும். பெயர் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்றும் பெயர் பெறும். ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்பனவற்றை முறையே இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை என்றும்

வழங்குவர். மூன்றாம் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஓடு என்பனவும் உருபுகளாகக் கொள்ளப்படும். அன்மொழித் தொகையை விரிக்கும் பொழுது சொற்களைக் கொண்டு விரிப்பது போல வேற்றுமைத் தொகையையும் விரித்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

**அருஞ்சொற்பொருள்**

செவ்விது – சிறப்பிற்குரியது; துவக்குண்டான் – கட்டப்பட்டான்; குயின்ற - தைக்கப்பட்ட ; ஒப்பு – பொருவு.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. வேற்றுமை எட்டு வகைப்படும்.
2. எழுவாய் வேற்றுமை
3. இரண்டாம் வேற்றுமை
4. ஒடு
5. தற்கிழமை, பிறிதின் கிழமை

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. வேற்றுமை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
2. எழுவாய் வேற்றுமை குறித்தெழுதுக.
3. இரண்டாம் வேற்றுமையின் உருபையும் பொருளையும் சுட்டி விளக்குக.
4. மூன்றாம் வேற்றுமை குறித்த தொல்காப்பியர் கருத்துக்களை எழுதுக.
5. நான்காம் வேற்றுமைக்குரிய பொருள்களைக் கூறுக.
6. ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள்களை விவரி.
7. ஆறாம் வேற்றுமையின் தற்கிழமை, பிறிதின்கிழமைகளைக் கட்டுரைக்க.
8. ஏழாம் வேற்றுமை குறித்தெழுதுக.

# கூறு – 3

## தொல்காப்பியம் – சொல் – வேற்றுமை மயங்கியல்

**அமைப்பு**

அறிமுகம்
நோக்கங்கள்
3.1 பொருள் மயக்கம்
3.1.1 இரண்டாம் வேற்றுமை பிற பொருளில் மயங்குதல்
3.1.1.1 சார்பு
3.1.1.2 கன்றல், செலவு என்பன
3.1.1.3 நோக்கப்பொருள்
3.1.1.4 ஓம்படைச்சொல்
3.1.2 நான்காம் வேற்றுமை பிற பொருளில் மயங்குதல்
3.1.2.1 கொடையெதிர் கிளவி
3.1.2.2 பிற நான்கன் உருபில் மயங்கல்
3.2 ஒரு பொருளில் ஈருருபு மயங்குதல்
3.2.1 ஏதுப்பொருள்
3.2.2 அச்சப்பொருள்
3.2.3 தடுமாறு தொழிற்பெயர்
3.2.4 சினைச்சொல்
3.2.5 முதற்சினைக் கிளவி
3.2.6 பிண்டப்பெயர்
3.2.7 ஒருவினை ஒடுச்சொல்
3.3 உருபு மயக்கம்
3.4 வேற்றுமைக்கு ஓதிய இலக்கணத்தில் பிறழ்ந்து வழுவி அமைவன
3.4.1 உருபு தொடர்ந்தடுக்கல்

3.4.2 உருபுகள் விரிந்து நிற்கும் இடம்

3.5 பிறவும் இயைபுடைய கருத்துகள்

3.5.1 வேற்றுமைப் பொருள்கள் தோன்றுதற்குரிய இடம்

3.5.2 ஆகுபெயர்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

## அறிமுகம்

பொருள் மயக்கம், உருபு மயக்கம் என்னும் இருவகை மயக்கமும் உணர்த்துதலின் இவ்வியல் ‘வேற்றுமை மயங்கியல்’ எனப் பெயர் பெற்றது. இவ்வியலில் வேறு பிற செய்திகளும் உணர்த்தப்பட்டிருந்தாலும் தலைமை பற்றி இப்பெயர் பெற்றது. இவ்வியலில் உணர்த்தப்படுவனவற்றைப் பொருள் மயக்கம், உருபு மயக்கம், வேற்றுமைக்கோதிய இலக்கணத்தில் பிறழ்ந்து வழீஇ அமைவன, பிறவும் இயைபுடையன என நான்கு வகையாகப் பிரித்து விளக்குவர் சேனாவரையர்.

## நோக்கங்கள்

- பொருள் மயக்கங்களைத் தொகுத்துக் கூறுதல்
- உருபு மயக்கம் பற்றி விளக்குதல்
- வேற்றுமைக்கோதிய இலக்கணத்தில் பிறழ்ந்து வழீஇ அமைவனவற்றை எடுத்துரைத்தல்
- பிறவும் இயைபுடையனவற்றைக் கூறுதல்.

## 3.1 பொருள் மயக்கம்

ஒரு வேற்றுமை தன் பொருளை விடாது, பிறிதொரு வேற்றுமைப் பொருளிலும் சென்று இயைந்து பொருள் தருமேல் அது பொருள் மயக்கம் எனப்படும். இதனையே 'தன் பொருளில் தீராது பிறிதொன்றன் பொருட்கண் சேறல்' என்பர் சேனாவரையர். இவ்வாறன்றி ஒரு பொருளில் ஈருருபு சென்று இயைபினும் அதுவும் பொருள் மயக்கம் எனப்படும்.

### 3.1.1 இரண்டாம் வேற்றுமை பிற பொருளில் மயங்குதல்

இரண்டாம் வேற்றுமைப் பொருள்களான சார்பு, கன்றல், செலவு, நோக்கப்பொருள் ஓம்படைச்சொல் ஆகியன பிறபொருளில் மயங்கும்.

#### 3.1.1.1 சார்பு

இது கருமச் சார்பு, கருமமல்லாச் சார்பு என இரு வகைப்படும். ஒன்றனையொன்று உடம்பால் சார்தல் கருமச் சார்பாகும். எ.கா: தூணைச் சார்ந்தான். உடம்பால் சார்தலன்றி மனத்தால் சார்தல் கருமமல்லாச் சார்பாகும். எ.கா: அரசரைச் சார்ந்தான். இவற்றுள் கருமமல்லாச் சார்பிற்கு இரண்டாம் வேற்றுமை வருதலேயன்றி ஏழாம் வேற்றுமையும் வரும்.

> கரும மல்லாச் சார்பென் கிளவிக்கு
> உரிமையுமுடைத்தே கண்ணென் வேற்றுமை
> (சொல்.84)

என்பது நூற்பா. எ.கா: அரசர்கட் சார்ந்தான் – இதில் கருமமல்லாச் சார்புப் பொருண்மை தனக்குரிய இரண்டாம் வேற்றுமைச் செயப்படுபொருளின் நீங்காது, ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளிலும் மயங்கி வந்துள்ளது. தூண் பற்றாக ஒருவன்

சார்ந்தாற்போல அரசர் பற்றாக ஒருவன் சார்ந்தொழுகுதலின் அது சார்பாயிற்று.

### 3.1.1.2 கன்றல், செலவு என்பன

இரண்டாம் வேற்றுமைக்குரிய கன்றல், செலவு ஆகிய இரண்டும் இரண்டாம் வேற்றுமைக்கண் மட்டுமன்றி ஏழாம் வேற்றுமைக்கண்ணும் வரும்.

கன்றலுஞ் செலவும் ஒன்றுமார் வினையே (சொல்.86)

என்பது நூற்பா. எ.கா:

- சூதினைக் கன்றினான்; சூதின்கட் கன்றினான்.
- நெறியைச் சென்றான்; நெறிக்கட் சென்றான்.

### 3.1.1.3 நோக்கப்பொருள்

இது நோக்கிய நோக்கம், நோக்கல் நோக்கம் என இரு வகைப்படும். கண்ணால் நோக்கும் நோக்கத்தை நோக்கிய நோக்கம் என்றும் மனத்தால் நோக்கும் நோக்கத்தை நோக்கல் நோக்கம் என்றும் கூறுவர். இவற்றுள் நோக்கல் நோக்கப் பொருண்மை இரண்டாம் வேற்றுமையில் வருதலோடு மூன்றாம் வேற்றுமைக்கும் ஐந்தாம் வேற்றுமைக்கும் உரிய ஏதுப் பொருளிலும் வரும்.

இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம்அவ்
இரண்டன் மருங்கின் ஏதுவு மாகும் (சொல்.93)

என்பது நூற்பா.எ.கா:

வானோக்கி வாழு முயிரெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி.

இக்குறட்பாவில் வானோக்கி வாழும், கோனோக்கி வாழும் என்பன முறையே வானை நோக்கி வாழும், கோலை நோக்கி

வாழும் என இரண்டாம் வேற்றுமைகுரிய நோக்கல் நோக்கப் பொருளில் வரும். இவ்வாறு இரண்டாம் வேற்றுமைக்குரிய நோக்கல் நோக்கப்பொருளில் வருவதோடு வானான் நோக்கி வாழும்; வானின் நோக்கி வாழும், கோலான் நோக்கி வாழும்; கோலின் நோக்கி வாழும் என மூன்றாவது வேற்றுமைக்கும் ஐந்தாம் வேற்றுமைக்கும் உரிய ஏதுப் பொருளிலும் வரும்.



### 3.1.1.4 ஓம்படைச்சொல்

ஓம்படை என்னும் சொல்லிற்குப் பாதுகாத்தல் என்பது பொருள். இது இரண்டாம் வேற்றுமைக்கு மட்டுமல்லாமல் மூன்றாம் வேற்றுமைக்கண்ணும் வரும். இது வேற்றுமைத் தொகையில் நிகழும்.

ஓம்படைக் கிளவிக் கையும் ஆனும்
தாம்பிரி விலவே தொகைவரு காலை (சொல்.97)

என்பது நூற்பா. எ.கா: புலி போற்றி வா - இதில் ஓம்படைச் சொல்லான போற்றி என்பது இரண்டாவது வேற்றுமைக்குரிய காப்புப் பொருளில் அடங்குவதால் புலியைப் போற்றி வா என ஐ உருபு பெறும். அவ்வாறே, புலி அவன் போற்றி வருவதற்குக் காரணமும் ஆனதால் புலியாற் போற்றி வா என ஆன் உருபும் பெறும்.

## 3.1.2 நான்காம் வேற்றுமை பிற பொருளில் மயங்குதல்

### 3.1.2.1 கொடையெதிர் கிளவி

கொடையினை ஏற்றுக்கொள்ளும் சொல் ‘கொடையெதிர் கிளவி’ எனப்படும். இதில் ‘கு’ என்னும் நான்கன் உருபு தொக்கு வந்தால் அது ‘குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி’

எனப்படும். இக்கிளவிக்கண் நான்கன் உருபை விரித்தலேயன்றி ஆறன் உருபையும் விரிக்கலாம்.

குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி
அப்பொருள் ஆறற் குரித்து மாகும் (சொல்.99)

என்பது நூற்பா. எ.கா: நாகர் பலி – இது நாகர்க்கு நேர்ந்த பலி என விரிவதோடு மட்டுமல்லாமல் நாகரது பலி எனவும் விரியும்.

### 3.1.2.2 பிற நான்கன் உருபில் மயங்கல்

இதனது இது இத்தன்மைத்து என்னும் ஆறாவதன் பொருண்மையும், ஒன்றனையொன்று கொள்ளும் என்னும் இரண்டாவதன் பொருண்மையும், ஒன்றனான் ஒன்று தொழிற்படற்கு ஒக்கும் என்னும் மூன்றாவதன் பொருண்மையும், முறைப் பொருண்மையைக் கொண்டு நின்ற பெயர்ச்சொல்லினது ஆறாம் வேற்றுமைப் பொருண்மையும், நிலத்தை வரைந்து கூறும் பொருண்மையும், பண்பின்கண்ணாகும் பொருவுமாகிய ஐந்தாவதன் பொருண்மையும் காலத்தின்கண் அறியப்படும் ஏழாம் வேற்றுமைப் பொருண்மையும் பற்றுவிடு பொருண்மையும் தீர்ந்துமொழிப் பொருண்மையுமாகிய ஐந்தாவதன் பொருண்மையும் அவை போல்வன பிறவும் நான்கன் உருபால் தோன்றுவது தொன்னெறி மரபின என்பர் தொல்காப்பியர். இவையனைத்தும் தொடர்மொழிக்கண் மயங்குவன என்பர் சேனாவரையர்.

இதன திதுவிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பி னாக்கமும்
காலத்தி னறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்க னுருபில்

தொன்னெறி மரபின தோன்ற லாறே (சொல்.110)

என்பது நூற்பா. எ.கா:

- யானைக்குக் கோடு கூரிது – இதனது இது இத்தன்மைத்து என்னும் ஆறாவதன் பொருண்மை நான்கன் உருபில் மயங்கியது.
- இவட்குக் கொள்ளும் இவ்வணி – ஒன்றனையொன்று கொள்ளும் இரண்டாவதன் பொருள் நான்கன் உருபில் மயங்கியது.
- அவற்குச் செய்யத்தகும் அக்காரியம் – ஒன்றற்கு ஒன்று தொழிற்படற்கு ஏற்கும் மூன்றாவதன் பொருள் நான்கன் உருபில் மயங்கியது.
- ஆவிற்குக் கன்று – முறைப்பொருளைக் கொண்டு நின்ற பெயர்ச்சொல்லினது ஆறாவது பொருள் நான்கன் உருபில் மயங்கியது.
- கருவூர்க்குக் கிழக்கு, சாத்தற்கு நெடியன் – இவற்றில் நிலத்தை வரைந்து கூறும் பொருளும் பண்புப் பொருளுமாகிய ஐந்தாம் வேற்றுமைப் பொருள் நான்கன் உருபில் மயங்கியது.
- காலைக்கு வரும் – காலத்தின்கண் அறியப்படும் ஏழாவதன் பொருள் நான்கன் உருபில் மயங்கியது.
- மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான், ஊருக்குத் தீர்ந்தான் – இவற்றில் முறையே பற்று விடுதலும் தீர்தலுமாகிய ஐந்தாவதன் பொருள் நான்கன் உருபில் மயங்கியது.

'அன்ன பிறவும்' என்றதனால் ஊர்க்கட் சென்றான், ஊர்க்கண் உற்றது செய்வான் என்னும் ஏழாவது பொருட்கண்ணும், ஊரிற் சேயன் என்னும் ஐந்தாவது பொருட்கண்ணும் ஊர்க்குச்

சென்றான், ஊர்க்கு உற்றது செய்வான், ஊர்க்குச் சேயன் என நான்காவது வருதல் கொள்க என்பர் சேனாவரையர்.

## 3.2 ஒரு பொருளில் ஈருருபு மயங்குதல்

### 3.2.1 ஏதுப்பொருள்

இது, ‘அதன்வினைப் படுதல் அதனி னாதல்’ (சொல்.74) என்னுமிடத்து அதனினாதல் என்பதால் மூன்றாம் வேற்றுமைக்கும், ‘புதுமை பழமை ஆக்கம் என்றா’ (சொல்.78) என்னுமிடத்து ‘ஆக்கம்’ என்பதால் ஐந்தாம் வேற்றுமைக்கும் உரியதாக வேற்றுமையியலில் கூறப்பட்டது. அதனையே தொல்காப்பியர் மயக்கமாதல் பற்றி வேற்றுமை மயங்கியலிலும் கூறியுள்ளார். ஆக்கத்தோடு கூடிய ஏதுப் பொருளில் மூன்றாம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் சென்று மயங்கும்.

மூன்றனும் ஐந்தனுந் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கோ ரனைய என்மனார் புலவர் (சொல்.92)

என்பது நூற்பா.எ.கா: வாணிகத்தானாயினான், வாணிகத்தினாயினான் – இவற்றில் வாணிகத்தான், வாணிகத்தின் என்பதனை அடுத்து வரும் ‘ஆயினான்’ என்ற சொல் ‘ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவி’ ஆகும். இவற்றில் மூன்றாம் வேற்றுமை உருபும் ஐந்தாம் வேற்றுமை உருபும் வந்துள்ளமையால் ஒரு பொருளில் ஈருருபு மயங்குதல் விளங்கும்.

### 3.2.2 அச்சப்பொருள்

இது, ‘நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா’ (சொல்.72) என்னுமிடத்து ‘அஞ்சல்’ என்பதனால் இரண்டாம் வேற்றுமைக்கும், ‘தண்மை வெம்மை அச்சம் என்றா’ என்னுமிடத்து ‘அச்சம்’ என்பதனால் ஐந்தாம் வேற்றுமைக்கும் உரியதாக

வேற்றுமையியலில் கூறப்பட்டது. இவ்வச்சப்பொருளில் இரண்டாம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் சென்று மயங்கும்.

அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்
எச்ச மிலவே பொருள் வயினான (சொல்.100)

என்பது நூற்பா. எ.கா: பழியஞ்சும் – இது பழியினஞ்சும் என்றும் பழியை அஞ்சும் என்றும் ஐந்தாம் வேற்றுமையிலும் இரண்டாம் வேற்றுமையிலும் மயங்கி வந்துள்ளது.

### 3.2.3 தடுமாறு தொழிற்பெயர்

முன்னும் பின்னும் பெயர்ச் சொல்லும் இடையில் ஒரு தொழிற் சொல்லும் இருந்து, அத் தொழிற் சொல் முன்னும் பின்னும் உள்ள இரு பெயரோடும் இயைந்து வருமாறு அமையுமானால் அத்தொழிற் சொல் தடுமாறு தொழிற் சொல் எனப்படும். அத்தடுமாறு தொழிற் சொல்லோடு இயைந்த பெயரைத் 'தடுமாறு தொழிற் பெயர்' என்பர். இத்தொடரில் இரண்டனுருபும் மூன்றனுருபும் சென்று மயங்கும்.

தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டும் மூன்றுங்
கடிநிலை யிலவே பொருள்வயி னான (சொல். 95)

என்பது நூற்பா. எ.கா: புலிகொன்ற யானை

இதில் புலி என்பதன் பின்னும் யானைஎன்பதன் முன்னும் உள்ள 'கொன்ற' என்பது தடுமாறு தொழிற் சொல்லாகும். இச்சொல்லோடு இயைந்த பெயர் தடுமாறு தொழிற் பெயர் எனப்படும். இதில் புலியைக் கொன்ற யானை எனவும் புலியாற் கொல்லப்பட்ட யானை எனவும் இரண்டாம் வேற்றுமையும் மூன்றாம் வேற்றுமையும் மயங்கி வந்துள்ளன.

தடுமாறு தொழிற் பெயரை விரிக்காத நிலையில் வினைமுதலையும் செயப்படு பொருளையும் கண்டறிய இயலாது.

அவற்றைத் தெரிந்து கொள்வதற்கு அத்தொடரின் இறுதியில் பிறிதொரு சொல் வரும். அச்சொல்லை 'மெய்யறி பனுவல்' என்பர்.

ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப வுணரு மோரே (சொல். 96)

என்பது நூற்பா. எ.கா: புலி கொல் யானை ஓடா நின்றது.

இதில் 'ஓடா நின்றது' என்பது மெய்யறி பனுவலாகும். இது இல்லாத நிலையில் இரண்டன் உருபையோ மூன்றன் உருபையோ வைத்து விரித்தால்தான் பொருள் விளங்கும். இல்லையெனில் வினை முதல் எது? செயப்படு பொருள் எது? எனத் தெரியாது. எனவே பொருள் வேறுபாடு அறிய உதவும் சொல்லை மெய்யறி பனுவல் என்றனர்.

### 3.2.4 சினைச்சொல்

உறுப்பினைக் குறிப்பதாகிய சினைச்சொல்லில் இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினைநிலைக்கண் சென்று மயங்கும்.

சினைநிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும்
வினைநிலை யொக்கும் என்மனார் புலவர் (சொல் .85)

என்பது நூற்பா. இதில் தொல்காப்பியர் 'வினை' எனப் பொதுப்படக் கூறினும் அவற்றுள் வேறுபடுத்தற்குரிய வாய்பாட்டு வினைகளாகிய அறுத்தல், குறைத்தல் என்பனவே கொள்ளப்படும் என்பர் சேனாவரையர். எ.கா: கோட்டைக் குறைத்தான், கோட்டின்கட் குறைத்தான்.

### 3.2.5 முதற்சினைக் கிளவி

❖ முதற்சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல் 'முதற்சினைக் கிளவி' எனப்படும். இதில் முதற்கண் ஆறாம் வேற்றுமை

வருமாயின், சினைச்சொல்லின்கண் இரண்டாம் வேற்றுமையே வரும்.

முதற்சினைக் கிளவிக்கு அதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கு ஐ வருமே (சொல்.87)

என்பது நூற்பா. எ.கா: யானையது கோட்டைக் குறைத்தான்.

❖ முதற் சொல்லில் 'ஐ' உருபு வந்தால் சினைச்சொல்லில் 'கண்' உருபு வரும்.

முதல்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுதல் வருதல் தெள்ளி தென்ப (சொல்.88)

என்பது நூற்பா. எ.கா: யானையைக் கோட்டின்கட் குறைத்தான்.

'தெள்ளிதின் என்பதால் சிறுபான்மை ஈரிடத்தும் ஐ உருபு வருதலும் உண்டு என்பர் சேனாவரையர். எ.கா: யானையைக் கோட்டைக் குறைத்தான்.

### 3.2.6 பிண்டப்பெயர்

பலபொருள் சேர்ந்த தொகுதியைப் 'பிண்டம்' என்பர். அதிலிருந்து பிரிக்கப்பட்ட பொருளைப் 'பிண்டித்த பொருள்' என்பர். உதாரணமாக, குப்பை என்பது பிண்டப் பொருள்; அதிலிருந்து தனித்துக் குவிக்கப்பட்ட ஒரு பொருள் பிண்டித்த பொருள் ஆகும். இப்பிண்டப் பெயரும் முதற் சினைப் பொருளுக்குரிய இலக்கணத்தில் பிழையாது வரும்.

பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய மரபே (சொல்.90)

என்பது நூற்பா.

- பிண்டப் பெயருக்கு ஆறாவது வேற்றுமை உருபுவரின் பிண்டித்த பொருட்கு இரண்டாவது வேற்றுமை உருபு வரும். எ.கா: குப்பையது தலையைச் சிதறினான்

- பிண்டப் பெயருக்கு இரண்டாவது வேற்றுமை உருபுவரின் பிண்டித்த பொருட்கு ஏழாவது வேற்றுமை உருபு வரும். எ.கா: குப்பையைத் தலைக்கட் சிதறினான்

- சிறுபான்மை ஈறிடத்தும் ஐ உருபு வருதலும் உண்டு. எ.கா: குப்பையைத் தலையைச் சிதறினான்

### 3.2.7 ஒருவினை ஒடுச்சொல்

ஒன்றனோடு ஒன்று இயைந்து தொழிற்படுதற்கண் வரும் உருபு ‘ஒடு’ உருபாகும். அது உயர்ந்த பொருளை உணர்த்தும் பெயரினிடமாகவே தோன்றும்.

ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே (சொல்.91)

என்பது நூற்பா. எ.கா: அரசனொடிளையர் வந்தார், ஆசியனொடு மாணக்கர் வந்தார்.

### 3.3 உருபு மயக்கம்

ஓர் உருபு நிற்க வேண்டிய இடத்தில் பிறிதோர் உருபு இயைபின்றி நிற்குமாயின் அது உருபு மயக்கம் எனப்படும். இதனைச் சேனாவரையர், “ தன் பொருளில் தீர்ந்து பிறிதொன்றன் பொருட்கண் சேறல்” என்பர்.

ஒரு வேற்றுமைப் பொருள் மற்றொரு வேற்றுமை உருபால் கூறப்பட்டதாயினும், அவ்வுருபு மயங்கி வந்தமையின் அவ்வுருபு சென்ற வழியே பொருள் செல்லாது பொருள் சென்ற வழியே உருபு செல்லும்.

யாத னுருபிற கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும் (சொல். 106)

என்பது நூற்பா. எ.கா:

கிளையரி நாணற் கிழங்குமணற் கீன்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய் (அகநா. 212)

இதில் ‘கிழங்கு மணற்கீன்ற’ என்பது உருபு மயக்கமாகும். ‘மணற்கு’ என்பதில் உள்ள ‘கு’ என்ற நான்காம் வேற்றுமை உருபு, தன் பொருளாகிய கொடைப் பொருளின் நீங்கி, ‘மணற்கண் ஈன்ற’ என ஏழாம் வேற்றுமை இடப்பொருளிலேயே வைத்துச் சொல்லப்பட்டது. எனவே இது உருபு மயக்கமாகும்.

## 3.4 வேற்றுமைக்கு ஓதிய இலக்கணத்தில் பிறழ்ந்து வழுவி அமைவன

### 3.4.1 உருபு தொடர்ந்தடுக்கல்

பலவுருபுந் தம்முள் தொடர்ந்து அடுக்கி வந்த வேற்றுமைச் சொற்களெல்லாம் முடிக்கும் சொல் ஒன்றனால் பொருள் செல்லுமிடத்து முற்றுப் பெற்று நடக்கும். பல உருபும் தம்முள் தொடர்ந்து அடுக்கி ஒரு சொல்லால் முடியினும் அப்பொருள் வேறுபடாதிருக்குமாயின் அவ்வாறு முடிதலில் இழுக்கில்லை என்பது பொருளாகும்.

உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி

ஒருசொன் னடைய பொருள்சென் மருங்கே (சொல்.102)

என்பது நூற்பா. எ.கா: என்னொடு நின்னொடுஞ் சூழாது (அகநா.128)

### 3.4.2 உருபுகள் விரிந்து நிற்கும் இடம்

❖ ஆறு உருபுகளும் அவ்வத் தொடர்க்கண் இறுதியிலும் இடையிலும் விரிந்து நிற்கும்.

இறுதியும் இடையும் எல்லா வுருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார் (சொல். 103)

என்பது நூற்பா. எ.கா:

- கடந்தான் நிலத்தை, வந்தான் சாத்தனொடு, கொடுத்தான் சாத்தற்கு, வலியன் சாத்தனின், ஆடை சாத்தனது, இருந்தான் குன்றத்துக்கண் – இவற்றில் வேற்றுமை உருபுகள் இறுதியில் விரிந்து வந்துள்ளன.
- நிலத்தைக் கடந்தான், சாத்தனொடு வந்தான், சாத்தற்குக் கொடுத்தான், சாத்தனின் வலியன், சாத்தனது ஆடை, குன்றத்துக்கண் இருந்தான் – இவற்றில் வேற்றுமை உருபுகள் இடையில் விரிந்து வந்துள்ளன.

❖ பிறிதோர் உருபு பிறிதோர் உருபை ஏற்றலும் ஆறு உருபுந் தொக்கு நிற்றலும் நெறிப்பட வழங்கிய வழக்கைச் சார்ந்து வருதலான் வழுவாகாது.

பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப (சொல்.104)

என்பது நூற்பா. ‘ஏற்புழிக்கோடல்’ என்பதனால் பிறிதோர் உருபு ஏற்பது ஆறாவதேயாம். பிறிதேற்றலும் என்றமையால் தானல்லாப் பிறவுருபு ஏற்றல் கொள்க என்பர் சேனாவரையர். எ.கா:

- சாத்தனதனை, சாத்தனதனொடு, சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதன்கண் - இவற்றில் ஆறாம் வேற்றுமை உருபு தன்னல்லாப் பிறவுருபு ஏற்றது.
- நிலங்கடந்தான், தாய்மூவர், கருப்புவேலி, வரைவீழருவி, சாத்தன்கை, குன்றக்கூகை – இவற்றில் முறையே ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் வேற்றுமை உருபுகள் தொக்கு வந்தன.

❖ ஐகார வேற்றுமைப் பொருளும், கண்ணென் வேற்றுமைப் பொருளும் அல்லாத பிறபொருள்மேனின்ற உருபு, தொடர்மொழி இறுதிக்கண் தொக்கு நில்லாது.

ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ இறுதி யான (சொல்.105)

என்பது நூற்பா. எ.கா: கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து – இவற்றில் முறையே ஐயும் கண்ணும் இறுதியில் மறைந்து வந்துள்ளன.

இவ்வாறு வேற்றுமை உருபுகள் விரிந்து நின்று தம் பொருள் உணர்த்துவதும், பெயர் உருபேற்பதுமே முறை. அவ்வாறன்றி உருபுகள் மறைந்து நின்று தம் பொருளை உணர்த்துவது வழுவாகும். ஆயினும் தொல்காப்பியர் இதனை வழுவமைதியாகக் கொள்க என்பர்.

❖ கு, ஐ, ஆன் என வரூஉம் மூன்று உருபுகளும் செய்யுளுள் தொடர் இறுதிக்கண் நின்றவழி அகரத்தோடு பொருந்தி நிற்கும்.

கு ஐ ஆனென வரூஉ மிறுதி
அவ்வொடு சிவணுஞ் செய்யு ளுள்ளே (சொல்.108)

என்பது நூற்பா. அஃறிணைப் பெயர்க்கண் அகரத்தோடு சிவணி ஈறு திரிதல் குவ்வும் ஐயும் இல்லை என எய்தியது விலக்குவர்.

அஎனப் பிறத்தல் அஃறிணை மருங்கின்
குவ்வும் ஐயும் இல்லென மொழிப (சொல்1090

என்பது நூற்பா. இவற்றால் உயர்திணை, அஃறிணை ஆகிய இரு பெயர்க்கண்ணும் ‘ஆன்’ என்னும் உருபு அகரமாகத் திரிந்துவரும் என்பதும் குவ்வும் ஐயும் ஆகிய உருபுகள் உயர்திணைக்கண் மட்டுமே அகரமாகத் திரிந்து வரும் என்பதும் விளங்கும்.

எ.கா:

- புரைதீர் கேள்விப் புலவ ரான – உயர்திணையில் 'ஆன்' உருபு 'ஆன' எனத் திரிந்தது.
- உள்ளம் போல உற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான – அஃறிணையில் 'ஆன்' உருபு 'ஆன' எனத் திரிந்தது.
- கடிநிலை யின்றே யாசிரி யற்க – உயர்திணையில் குவ்வுருபு அகரமாகத் திரிந்தது.
- காவ லோனக் களிறஞ் சும்மே – உயர்திணையில் ஐ உருபு அகரமாகத் திரிந்தது.

## 3.5 பிறவும் இயைபுடைய கருத்துகள்

### 3.5.1 வேற்றுமைப் பொருள்கள் தோன்றுதற்குரிய இடம்

❖ வினை, வினைமுதல், செயப்படுபொருள், நிலம், காலம், கருவி, இன்னதற்கு, இது பயன் என்னும் எட்டினையும் நிலைக்களனாகக் கொண்டே எத்தொழில்களும் பிறக்கும். இவை காரியத்திற்கு முன் நிற்றலின் 'தொழில் முதனிலை' எனப்படும்.

> வினையே செய்வது செயப்படு பொருளே
> நிலனே காலம் கருவி யென்றா
> இன்னதற் கிதுபய னாக வென்னும்
> அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
> ஆயெட் டென்ப தொழில்முத னிலையே (சொல். 112)

என்பது நூற்பா. எ.கா: வனைந்தான் → இதில் வனைதல் – தொழில்; வனைந்த கருத்தா - வினைமுதல்; குடம் – செயப்படுபொருள்; வனைதற்கிடமாகிய நிலம் – நிலம்; தொழில் நிகழும் காலம் – காலம்; திகிரி – கருவி; வனையப்பட்ட குடத்தைக் கொள்வான் – இன்னதற்கு; கொடுத்தல் – வனைந்ததன் பயன்.

❖ தொழில் முதனிலைகள் எட்டும் எல்லாத் தொழிற்கும் வரும் என்பது இல்லை. வழக்கின்கண் சில தொழிற்கண் குன்றத் தகுவன குன்றிவரும்.

அவைதாம்
வழக்கியன் மருங்கின் குன்றுவ குன்றும் (சொல்.113)

என்பது நூற்பா. செயப்படுபொருளும் ஏற்பதும் பயனும் ஆகிய மூன்றும் அவ்வாறு குன்றி வரும். எ.கா: கொடியாடிற்று, வளி வழங்கிற்று – இவற்றுள் செயப்படுபொருளும் ஏற்பதும் பயனுமாகிய முதனிலைகள் இல்லையாயினும் ஒழிந்தவற்றான் ஆடுதலும் வழங்கலுமாகிய தொழில் நிகழ்ந்தமை விளங்கும்.

## 3.5.2 ஆகுபெயர்

❖ யாதானுமொரு இயைபு பற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். இது முதலாகு பெயர், சினையாகு பெயர், இடவாகு பெயர், பண்பாகு பெயர், காரணவாகு பெயர், இருபெயரொட்டு ஆகுபெயர், கருத்தாவாகு பெயர் எனப் பல வகைப்படும்.

முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்கும் கிளவியொடு தொகைஇ
அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி (சொல்.114)

என்பது நூற்பா. முதற்சொல் வாய்பாட்டாற் கூறப்படும் சினையறி கிளவியும், சினைச்சொல் வாய்பாட்டாற் கூறப்படும் முதலறி கிளவியும், நிலத்துப் பிறந்த பொருண்மேல் அந்நிலப் பெயர் கூறலும், பண்புப் பெயர் அப்பண்புடையதனை உணர்த்திப் பண்புகொள் பெயராய் நின்றதூஉம், முதற்காரணப் பெயரான அக்

காரணத்தானியன்ற காரியத்தைச் சொல்லுதலும், அன்மொழிப் பொருண்மேல் நின்ற இருபெயரொட்டும், செய்யப்பட்ட பொருண்மேல் அதனைச் செய்தான் பெயரைச் சொல்லும் சொல்லும் என அப்பெற்றிப்பட்ட இலக்கணத்தையுடையன ஆகுபெயர் என்பது இந்நூற்பாவின்பொருளாகும். எ.கா:

- தெங்கு தின்றான் – முதலாகு பெயர் – முதற்பொருளின் பெயர் சினைப் பெயர்க்கு ஆதல்
- பூ நட்டு வாழும் – சினையாகு பெயர் – சினைப் பொருளின் பெயர் முதற்பொருளுக்கு ஆதல்.
- குழிப்பாடி (நிலத்துப் பிறந்த ஆடை) நேரிது – இடவாகு பெயர் – ஓரிடத்தின் பெயர் அவ்விடத்தில் பிறந்த ஆடைக்கு ஆதல்.
- இம் மணி நீலம் – பண்பாகு பெயர் – பண்பின் பெயர் அப்பண்புடையதற்கு ஆதல்.
- இக்குடம் பொன் – காரணவாகு பெயர் – ஒன்றற்கு முதற்காரணமான பெயர் அக்காரணத்தாலியன்ற காரியத்தைக் குறித்தல்.
- பொற்றொடி வந்தாள் – இருபெயரொட்டு ஆகுபெயர் – இருபெயர்கள் சேர்ந்து ஆகுபெயராதல்.
- இவ்வாடை கோலிகன் – கருத்தாவாகு பெயர் – செய்தான் பெயர் அவனால் செய்யப்பட்ட பொருள்மேல் வருதல்.

❖ ஆகுபெயர் தத்தம் பொருளின் நீங்காது தம் பொருளின் வேறல்லாத பொருளோடு புணர்தலும், தம் பொருட்கு இயைபில்லாத பிறிது பொருளைச் சுட்டி நிற்றலும் என இரு இயல்புகளைக் கொண்டது. இவ்வேறுபாடு போற்றி உணரப்படும்.

அவைதாம்
தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியான் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை

வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும் (சொல். 115)

என்பது நூற்பா. எ.கா:

- கடு – முதற்பெயர் முதலோடு ஒற்றுமையுடைய சினைமேல் நிற்றல், தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணல்.
- குழிப்பாடி – இடப்பெயர் இடத்தின் வேறாய ஆடைமேல் நிற்றல், ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டல்.

❖ அளவுப்பெயரும் நிறைப்பெயரும் ஆகுபெயராகக் கொள்ளும் இடமும் உடைய என்று சொல்லுவர் உணர்ந்தோர்.

அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே (சொல்.116)

என்பது நூற்பா. எ.கா:

- இந்நெற் பதக்கு, இப்பயறு தூணி – இவற்றில் பதக்கு, தூணி என்னும் அளவுப்பெயர்கள் நெல்லுக்கும் பயறுக்கும் ஆகி வந்தன.
- இப்பொன் தொடி, இவ்வெள்ளி துலாம் – இவற்றில் தொடி, துலாம் என்னும் நிறைப்பெயர்கள் பொன்னுக்கும் வெள்ளிக்கும் ஆகி வந்தன.

❖ மேற்சொல்லப்பட்டனவேயன்றி பிறவும் ஆகுபெயர் உளவேல் அவையெல்லாம் சொல்லப்பட்டவற்றது இயல்பான் உணர்ந்து கொள்க என்பர் தொல்காப்பியர்.

கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலாம் உணர்ந்தனர் கொளலே (சொல்.117)

என்பது நூற்பா. எ.கா:

- யாழ் கேட்டான், குழல் கேட்டான் – இவற்றில் யாழ், குழல் என்னும் கருவிப்பெயர் அவற்றானாகிய ஓசைக்கு ஆகி வந்தன.

- யானை வந்தான், பாவை வந்தாள் – இவற்றில் யானை, பாவை என்னும் உவமைப்பெயர் உவமிக்கப்படும் பொருளுக்கு ஆகி வந்தன.
- இஃதோர் ஏறு, இஃதோர் குத்து – இவற்றில் ஏறு, குத்து என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால் ஆன வடுவின்மேல் ஆகி வந்தன.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

---

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. வேற்றுமை மயக்கம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

……………………………………………………………………………

……………………

2. பொருள் மயக்கம் என்றால் என்ன?

……………………………………………………………………………

……………………

3. உருபு மயக்கம் என்றால் என்ன?

……………………………………………………………………………

…………………….

4. உருபுகள் விரிந்து நிற்கும் இடங்கள் யாவை?

……………………………………………………………………………

……………………..

5. ஆகுபெயர் என்றால் என்ன?

…………………………………………………………………………………

……………………..



குறிப்பு

## தொகுத்தறிவோம்

வேற்றுமை மயக்கம், பொருள் மயக்கம், உருபு மயக்கம் என இரு வகைப்படும். ஒரு வேற்றுமை தன் பொருளை விடாது பிறிதொரு வேற்றுமைப் பொருளிலும் சென்று இயைந்து பொருள் தந்தால் அது பொருள் மயக்கம் எனப்படும். ஓர் உருபு நிற்க வேண்டிய இடத்தில் பிறிதோர் உருபு இயைபின்றி நிற்குமாயின் அது உருபு மயக்கம் எனப்படும். ஆறு உருபுகளும் அவ்வத் தொடர்க்கண் இறுதியிலும் இடையிலும் விரிந்து நிற்கும். வினை, வினைமுதல், செயப்படும்பொருள், நிலம், காலம், கருவி, இன்னதற்கு, இது பயன் என்னும் எட்டினையும் நிலைக்களனாகக் கொண்டே எத்தொழில்களும் பிறக்கும். இவை காரியத்திற்கு முன் நிற்றலின் 'தொழில் முதனிலைகள்' எனப்படும். யாதானுமொரு இயைபு பற்றி ஒன்றன்பெயர் ஒன்றற்கு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். இது முதலாகு பெயர், சினையாகு பெயர், இடவாகு பெயர், பண்பாகு பெயர், காரணவாகு பெயர், இருபெயரொட்டு ஆகுபெயர், கருத்தாவாகு பெயர் எனப் பலவகைப்படும்.

## அருஞ்சொற்பொருள்

ஓம்படை – பாதுகாத்தல்; மெய்யறி பனுவல் – உண்மையை அறிந்துகொள்ள உதவும் சொல்; சினை – உறுப்பு.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. வேற்றுமை மயக்கம் இரு வகைப்படும். அவையாவன: பொருள் மயக்கம், உருபு மயக்கம்.
2. ஒரு வேற்றுமை தன் பொருளை விடாது பிறிதொரு வேற்றுமைப் பொருளிலும் சென்று இயைந்து பொருள் தந்தால் அது பொருள் மயக்கம் எனப்படும்.
3. ஓர் உருபு நிற்க வேண்டிய இடத்தில் பிறிதோர் உருபு இயைபின்றி நிற்குமாயின் அது உருபு மயக்கம் எனப்படும்.
4. தொடரின் இறுதியிலும் இடையிலும் விரிந்து நிற்கும்.
5. யாதானுமொரு இயைபு பற்றி ஒன்றன் பெயர் ஒன்றற்கு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. கருமச் சார்பு, கருமமல்லாச் சார்பு பற்றி எழுதுக.
2. இரண்டாம் வேற்றுமைக்குரிய நோக்கப்பொருள் பிற பொருளில் மயங்குதலை எழுதுக.
3. கொடையெதிர் கிளவி பிறபொருளில் மயங்குதலை விளக்குக.
4. ஒரு பொருளில் ஈருபு மயங்குதல் குறித்துக் கட்டுரைக்க.
5. வேற்றுமை உருபுகள் விரிந்து நிற்கும் இடங்கள் யாவை?
6. வேற்றுமைப்பொருள்கள் தோன்றுவதற்குரிய இடங்களைக் கூறுக.
7. ஆகுபெயர் என்பது குறித்து விளக்குக.
8. வேற்றுமை மயங்கியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

# கூறு – 4

## தொல்காப்பியம் – சொல் – விளிமரபு



**அமைப்பு**

அறிமுகம்

நோக்கங்கள்

4.1 விளி வேற்றுமை

4.2 விளியேற்கும் பெயர்கள்

4.2.1 உயர்திணைப்பெயர்கள் விளியேற்றல்

4.2.1.1 உயிரீறுகள் விளியேற்றல்

4.2.1.2 புள்ளியீறுகள் விளியேற்றல்

4.2.2 உயர்திணை விரவுப்பெயர்கள் விளியேற்றல்

4.2.3 அஃறிணைப்பெயர்கள் விளியேற்றல்

4.2.4 அஃறிணை விரவுப்பெயர்கள் விளியேற்றல்

4.3 விளியேலாப் பெயர்கள்

4.3.1 விளியேலாத உயர்திணைப்பெயர்கள்

4.3.2 விளியேலாத அஃறிணைப்பெயர்கள்

4.3.3 விளியேலாத அஃறிணை விரவுப்பெயர்கள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்



**அறிமுகம்**

பெயரது விகாரம் 'விளி' எனப்படும். இது எட்டாம் வேற்றுமையாகும். இவ்வேற்றுமை ஏனைய வேற்றுமை போல அத்துணை சிறப்புடையது அல்ல. இச்சிறப்பின்மை கருதியே தொல்காப்பியர் முதற்கண் எழுவகை வேற்றுமையும் அவற்றது மயக்கமும் உணர்த்தி இறுதியில் இதனை வைத்துள்ளார். படர்க்கைப் பெயரைத் தனக்கு முன்னிலைப் பெயராக ஆக்குவதே இதன் பயனாகும். நன்னூலார், "படர்க்கையோரைத் தன்முகமாகத் தானழைப்பதுவே" என இதனை விளக்குவர்.

**நோக்கங்கள்**

- விளி வேற்றுமையை வரையறுத்து விளக்குதல்
- விளியேற்கும் ஈறுகள் பற்றி உணர்த்துதல்
- உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள் , விரவுப்பெயர்கள் விளியேற்றல் பற்றி எடுத்துரைத்தல்
- உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள், விரவுப்பெயர்கள் விளியேலாமை குறித்து விளக்குதல்

## 4.1 விளி வேற்றுமை

விளி வேற்றுமை என்பது தன்னை ஏற்கும் பெயரின் இடமாகத் தோன்றும் இயல்பை உடையது.

விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய வென்ப (சொல்.118)

என்பது நூற்பா. பெயர் இயல்பாகியும் ஈறு திரிந்தும் ஈற்றயல் நீண்டும் பிறிது வந்தடைந்தும் விளியேற்கும். பெயர்களுள் விளியேற்பனவும் உள; ஏலாதனவும் உள. இதனையே

சேனாவரையர் 'கொள்ளும் பெயரொடு' எனவே 'கொள்ளாப் பெயரும் உள' என்பதாம் என்பர்.

## 4.2 விளியேற்கும் பெயர்கள்

விளியேற்கும் பெயர்களைச் சேனாவரையர் உயர்திணைப் பெயர், உயர்திணை விரவுப்பெயர், அஃறிணைப் பெயர், அஃறிணை விரவுப்பெயர் என நான்காகப் பாகுபடுத்துவர்.

### 4.2.1 உயர்திணைப்பெயர்கள் விளியேற்றல்

#### 4.2.1.1 உயிரீறுகள் விளியேற்றல்

❖ உயர்திணைப் பெயரில் இ, உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிரீறுகளும் விளியேற்கும்.

அவைதாம்
இஉ ஐஓ வென்னு மிறுதி
அப்பால் நான்கே யுயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே
(சொல்.120)

என்பது நூற்பா. அஃறிணைப்பெயர் ஆகுபெயராய் உயர்திணைக்கண் வந்துழியும் விரவுப்பெயர் உயர்திணைக்கண் வருங்காலும், அவை விளியேற்குமிடத்து உயர்திணைப்பெயராகும்.

எ.கா:

- சுடர்த்தொடீஇ கேளாய் – இதில் 'சுடர்த்தொடி' என்னும் அஃறிணைப்பெயர் பெண்ணைக் குறிக்கும் உயர்திணைப்பெயராய் வந்து விளியேற்றது.
- சாத்தீ – இதில் 'சாத்தி' என்னும் விரவுப்பெயர் உயர்திணைப்பெயராய் வந்து விளியேற்றது.

❖ அவற்றுள் 'இகர' ஈற்றுப்பெயர் 'ஈகார' மாயும் 'ஐகார' ஈற்றுப்பெயர் 'ஆய்' ஆகவும் திரிந்து விளியேற்கும்.

அவற்றுள்
இ ஈ யாகும் ஐ ஆய் ஆகும் (சொல்.121)

என்பது நூற்பா. எ.கா: நம்பி → நம்பீ; நங்கை → நங்காய்

❖ ஓகார ஈற்றுப் பெயரும் குற்றியலுகர உகர ஈற்றுப் பெயரும் ஏகார ஈறாக விளியேற்கும். இதனை,

ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும் (சொல். 122)

உகரம் தானே குற்றிய லுகரம் (சொல்.123)

என்னும் நூற்பாக்கள் விளக்கும். எ.கா: கோ → கோவே; வேந்து → வேந்தே

❖ மேற்கூறப்பட்ட நான்கு ஈறுமல்லாத உயிரீறுகள் உயர்திணைக்கண் விளி கொள்ளாது.

ஏனை யுயிரே யுயர்திணை மருங்கில்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர் (சொல்.124)

என்பது நூற்பா.

❖ தன் அளவில் மிக்கு ஒலிக்கும் இகர ஈற்று அளபெடைப் பெயர் ஈயாகும் என்னும் விதிப்படி ஈயாகாது இயல்பாய் விளியேற்கும்.

அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப (சொல்.125)

என்பது நூற்பா. எ.கா: தொழீஇஇ

❖ இ. உ, ஐ, ஓ என்னும் நான்கு ஈற்றுச் சொற்களும் அண்மை விளியேற்கும் பொழுது இயல்பாக விளியேற்கும். எ.கா: நம்பி வாழி; வேந்து வாழி; நங்கை வாழி; கோ வாழி.

### 4.2.1.2 புள்ளியீறுகள் விளியேற்றல்



❖ உயர்திணைப்பெயரில் ன, ர, ல, ள என்னும் நான்கு புள்ளியீறுகளும் விளியேற்கும். இந் நான்குமல்லாத புள்ளியீறுகள் விளி கொள்ளாது. இதனை,

> னரலள என்னும் அந்நான் கென்ப
> புள்ளி யிறுதி விளிகொள் பெயரே (சொல். 128)
>
> ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா (சொல்.129)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும்.

❖ விளியேற்கும் புள்ளியீறுகளுள் 'அன்' ஈறு 'ஆ' எனத் திரிந்து விளியேற்கும் ; அண்மை விளியாக வரும்போது அகரமாகும். இதனை,

> அவற்றுள்
> அன்னென் இறுதி ஆவா கும்மே (சொல்.130)
>
> அண்மைச் சொல்லிற்கு அகர மாகும் (சொல்.131)

என்னும் நூற்பாக்கள் விளக்கும். எ.கா: சோழன் → சோழா; ஊரன் → ஊர - இது அண்மை விளி.

❖ ஆன் ஈற்றுப் பெயர் இயல்பாய் விளியேற்கும்.

> ஆனென் இறுதி இயற்கை யாகும் (சொல்.132)

என்பது நூற்பா. எ.கா: சேரமான்.

❖ வினைச்சொல்லில் வரும் ஆன் ஈறும் பண்புப் பெயரில் வரும் ஆன் ஈறும் ஆய் என விளியேற்கும். இதனை,

> தொழிலில் கூறும் ஆனென் இறுதி
> ஆயா கும்மே விளிவயி னான (சொல்.133)
>
> பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே (சொல்.134)

என்னும் நூற்பாக்கள் சுட்டும்.

- வந்தான் → வந்தாய்; சென்றான் → சென்றாய் – வினை
- கரியன் → கரியாய்; செய்யான் → செய்யாய் – பண்பு

❖ தன் அளவில் மிக்கு ஒலிக்கும் ஆன் ஈற்று அளபெடைப் பெயர் இயல்பாய் விளியேற்கும்.

அளபெடைப் பெயரே அளபெடை இயல (சொல்.135)

என்பது நூற்பா. எ.கா: உழாஅஅன்; கிழாஅஅன்.

❖ அர், ஆர் என்னும் இரண்டு ஈற்றுப் பெயரும் 'ஈர்' ஆகத் திரிந்து விளியேற்கும்.

ஆரும் அருவும் ஈரொடு சிவணும் (சொல்.138)

என்பது நூற்பா. எ.கா: பார்ப்பார் → பார்ப்பீர்; கூத்தர் → கூத்தீர்.

❖ வினையாலணையும் பெயரிலும் பண்புப் பெயரிலும் வரும் அர், ஆர் என்னும் இரண்டு ஈறுகளும் ஈர் என்பதனோடு ஏகாரம் பெற்றும் விளியேற்கும். இதனை,

தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே (சொல்.139)

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே (சொல்.140)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். எ.கா:

- வந்தார் → வந்தீரே; சென்றார் → சென்றீரே – வினையாலணையும் பெயர்

'அர்' ஈற்றுத் தொழிற் பெயர் வந்தவழிக் கண்டு கொள்க. 'ஏகாரம் வருதலும் வழுக்கின்று' என்றதனான், ஏகாரம் பெறாது ஈரொடு சிவணலே பெரும்பான்மை யென்பதாம் என்பர் சேனாவரையர்.

- கரியார் → கரியீர் → கரியீரே; இளையர் → இளையீர் → இளையீரே – பண்புகொள் பெயர்

❖ தன் அளவில் மிக்கு ஒலிக்கும் ரகர ஈற்று அளபெடைப் பெயர் இயல்பாய் விளியேற்கும்.

அளபெடைப் பெயரே அளபெடை யியல (சொல். 141)

என்பது நூற்பா. எ.கா: சிறாஅஅர்; மகாஅஅர்

❖ லகர ளகர ஈற்றுப் பெயர்கள் ஈற்றயல் நீண்டு விளியேற்கும். அவ்வீறுகளின் அயல் எழுத்து நெட்டெழுத்தாயின் இயல்பாய் விளியேற்கும். இதனை,

எஞ்சிய விரண்டின் இறுதிப் பெயரே
நின்ற ஈற்றல் நீட்டம் வேண்டும் (சொல்.144)

அயல்நெடி தாயின் இயற்கை யாகும் (சொல்.145)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். எ.கா:

- குரிசில் → குரிசீல்; மக்கள் → மக்காள்.
- பெண்பால் → பெண்பால்

❖ வினையாலணையும் பெயர்க்கண்ணும் பண்புப் பெயர்க்கண்ணும் வரும் 'ஆள்' ஈற்றுப் பெயர் இயல்பாகாது 'ஆய்' ஆக விளியேற்கும்.

வினையினும் பண்பினும்
நினையத் தோன்றும் ஆளென் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான (சொல். 146)

என்பது நூற்பா. எ.கா: நின்றாள் → நின்றாய் – தொழிற் பெயர்; கரியாள் → கரியாய் – பண்புப் பெயர்.

❖ தன் அளவில் மிக்கு ஒலிக்கும் லகர ளகர ஈற்று அளபெடைப் பெயர் இயல்பாய் விளியேற்கும்.

அளபெடைப் பெயரே அளபெடை யியல (சொல். 149)

என்பது நூற்பா. எ.கா: மாஅஅல்; கோஒஒள்

### 4.2.2 உயர்திணை விரவுப்பெயர்கள் விளியேற்றல்

❖ முறைப்பெயரிடத்து ஐகார ஈற்று உயர்திணை விரவுப்பெயர் ஆ என்றுதிரிந்து விளியேற்கும்.

முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவொடு வருதற் குரியவு முளவே (சொல்.126)

என்பது நூற்பா. 'வருதற்கும்' என்பதில் உள்ள உம்மையால் ஐகார ஈறு 'ஆய்' ஆகத் திரிந்து விளியேற்றலும் பெறப்படும் என்பர் சேனாவரையர். எ.கா:

- அன்னை → அன்னா; அத்தை → அத்தா
- அன்னை → அன்னாய்; அத்தை → அத்தாய்

❖ னகர ளகர ஈற்று முறைப்பெயர்கள் ஏகாரம் பெற்று விளியேற்கும். இதனை,

முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே (சொல்.136)

முறைப்பெயர்க் கிளவி முறைப்பெய ரியல (சொல். 147)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். எ.கா:

- மகன் → மகனே; மருமகன் – மருமகனே
- மகள் → மகளே; மருமகள் – மருமகளே

### 4.2.3 அஃறிணைப்பெயர்கள் விளியேற்றல்

புள்ளியீறும் உயிரீறுமாக உள்ள அஃறிணைப் பெயர்கள் அனைத்தும் விளிகொள்ளும் காலம் தோன்றின் ஏகாரம் பெற்று விளியேற்கும்.

புள்ளியு முயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கி னெல்லாப் பெயரும்

விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்
தெளிநிலை யுடைய ஏகாரம் வரலே (சொல்.151)

என்பது நூற்பா. எ.கா: மரம் → மரமே; அணில் → அணிலே; நரி → நரியே; புலி → புலியே.



## 4.2.4 அஃறிணை விரவுப்பெயர்கள் விளியேற்றல்

இ, உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிரீறுகளும் ன, ர, ல, ள என்னும் நான்கு புள்ளியீறுகளும் அஃறிணைப் பெயரில் விளியேற்கும். இவ்வெட்டு ஈறுகளும் உயர்திணைப் பெயர்களில் எவ்வாறு விளியேற்குமோ அவ்வாறே அஃறிணை விரவுப் பெயர்களிலும் விளியேற்கும்.

கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை (சொல். 150)

என்பது நூற்பா. ஓகார ஈறும் ரகர ஈறுமாய் வரும் அஃறிணை விரவுப்பெயர்கள் உளவேற் கொள்க என்பர் சேனாவரையர். எ.கா: சாத்தி → சாத்தீ; பூண்டு → பூண்டே; தந்தை – தந்தாய்; சாத்தன் – சாத்தா; கூந்தல் → கூந்தால்; மக்கள் → மக்காள்.

## 4.3 விளியேலாப் பெயர்கள்

### 4.3.1 விளியேலாத உயர்திணைப்பெயர்கள்

❖ இ, உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிர் ஈறுகளும் ன, ர, ல, ள என்னும் நான்கு புள்ளி ஈறுகளும் தவிர ஏனைய ஈறுகள் விளி ஏற்காது. இதனை,

ஏனை உயிரே உயர்திணை மருங்கில்

தாம்விளி கொள்ளா என்மனார் புலவர் (சொல். 124)

ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா (சொல். 129)

என்னும் நூற்பாக்கள் சுட்டும்.

❖ னகர ஈற்றுள் தான், அவன், இவன், உவன், யான், யாவன் என்பன விளி ஏற்காது.

தானென் பெயரும் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி யனைத்தும் விளிகோ ளிலவே (சொல்.137)

என்பது நூற்பா.

❖ ரகர ஈற்றுள் அவர், இவர், உவர், நீயிர், யாவர் என்பன விளி ஏற்காது. .இதனை,

சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன (சொல்.142)

நும்மின் திரிபெயர் வினாவின் பெயரென்று
அம்முறை யிரண்டும் அவற்றியல் பியலும் (சொல்.143)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். அவர், இவர், உவர் என வரும் ரகார ஈற்று சுட்டு முதற்பெயர், னகார ஈற்று சுட்டு முதற் பெயரே போல விளி கொள்ளாது. நும்மின் திரிபாகிய நீயிரும் வினாவின் பெயராகிய யாவரும் ஆகிய இரண்டும் மேற்கூறிய சுட்டுப்பெயரே போல விளி கொள்ளாது என்பது இந்நூற்பாக்களின் கருத்தாகும்.

❖ ளகார ஈற்றுள் அவள், இவள், உவள், யாவள் என்பன விளிகொள்ளாது.

சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர் (சொல்.148)

என்பது நூற்பா. அவள், இவள், உவள் என்னும் ளகார ஈற்றுச் சுட்டு முதற்பெயரும் யாவள் என்னும் வினாப் பெயரும் மேற்கூறிய

சுட்டுமுதற் பெயரும் வினாப் பெயரும் போல விளி கொள்ளாது என்பது இதன் பொருளாகும்.



❖ த, ந, நு என்னும் உயிர்மெய்யையும் எ என்னும் உயிரையும் முதலாகவுடையவாய் ஒருவனது கிழமைப் பொருண்மையைக் குறித்து நின்ற ன, ர, ள என்னும் மூன்று புள்ளியையும் இறுதியாக உடைய சொல் விளியேற்காது.

தநநு எஎன அவைமுத லாகித்
தன்மை குறித்த னரளஎன் இறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொளலே (சொல்.154)

என்பது நூற்பா. எ.கா:

- தமன், தமர், தமள்; நமன், நமர், நமள்; நுமன், நுமர், நுமள்; எமன், எமர், எமள்.
- தம்மான், தம்மார், தம்மாள்; நம்மான், நம்மார், நம்மாள்; நும்மான், நும்மார், நும்மாள்; எம்மான், எம்மார், எம்மாள்.

அன்ன பிறவும் என்றதனால் மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையாள், பிறன், பிறர், பிறள் என வருவன கொள்க என்பர் சேனாவரையர்.

### 4.3.2 விளியேலாத அஃறிணைப்பெயர்கள்

தொல்காப்பியர் அஃறிணைப்பெயர்களில் விளி ஏற்காதன இவை என வரையறுக்கவில்லை. எனினும் அது, இது, உது; அஃது, இஃது, உஃது; அவை, இவை, உவை; அவ், இவ், உவ்; யாது, யா, யாவை என்பன போல்வன விளியேற்காது.

### 4.3.3 விளியேலாத அஃறிணை விரவுப்பெயர்கள்

இ, உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிர் ஈறுகளும் ன, ர, ல, ள என்னும் நான்கு புள்ளியீறுகளும் தவிர ஏனையவை விளியேற்காது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. விளி என்றால் என்ன?

…………………………………………………………………………………
……………………

2. விளியேற்கும் உயிரீறுகள் யாவை?

…………………………………………………………………………………
……………………

3. விளியேற்கும் புள்ளியீறுகள் யாவை?

…………………………………………………………………………………
……………………..

4. உயர்திணையில் ‘ஆன்’ ஈற்று அளபெடைப் பெயர்கள் எவ்வாறு விளியேற்கும்?

…………………………………………………………………………………
……………………..

5. உயர்திணை விரவுப் பெயரில் ஏகாரம் பெற்று விளியேற்கும் ஈறுகள் யாவை?

…………………………………………………………………………………
……………………..

**தொகுத்தறிவோம்**

பெயரது விகாரம் ‘விளி’ எனப்படும். விளி வேற்றுமை என்பது தன்னை ஏற்கும் பெயரின் இடமாகத் தோன்றும் இயல்பை உடையது. உயர்திணைப் பெயரில் இ, உ, ஐ, ஓ என்னும் நான்கு உயிரீறுகளும் ன, ர, ல, ள என்னும் நான்கு புள்ளியீறுகளும் விளியேற்கும். இவையல்லாத மற்ற உயிரீறுகளும் புள்ளீயீறுகளும்

விளி கொள்ளாது. புள்ளியீறும் உயிரீறுமாக உள்ள அஃறிணைப் பெயர்கள் அனைத்தும் விளிகொள்ளும் காலம் தோன்றின் ஏகாரம் பெற்று விளியேற்கும்.



**அருஞ்சொற்பொருள்**

சுட்டு முதற் பெயர் – அ,இ, உ என்பனவற்றை முதலாகக் கொண்ட பெயர்கள்; நும்மின் திரிபெயர் – நீயிர்; வினாவின் பெயர் – யாவர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. பெயரது விகாரம் விளி எனப்படும்.
2. இ, உ, ஐ, ஓ
3. ன, ர, ல, ள
4. இயல்பாய் விளியேற்கும்.
5. னகர ளகர ஈறுகள்

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1.விளியேற்கும் உயர்திணைப் பெயர்கள் குறித்தெழுதுக.

2. விளியேற்கும் அஃறிணைப் பெயர்கள் பற்றி எழுதுக.
3. விளியேலாப் பெயர்கள் குறித்து விளக்குக.
4. விளிமரபு இயல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

# பிரிவு - 2 பெயரும் வினையும்

## கூறு – 5 தொல்காப்பியம் – சொல் – பெயரியல்-உயர்திணைப்பெயர்

**அமைப்பு**

அறிமுகம்
நோக்கங்கள்
5.1 நால்வகைச் சொற்களின் பொதுவிலக்கணம்
5.2 சொற்களின் பாகுபாடு
5.3 பெயர்ச்சொற்களின் வகைகள்
5.4 உயர்திணைப்பெயர்கள்
5.4.1 வழக்கின்கண் பயின்று வரும் உயர்திணைப்பெயர்கள்
5.4.2 வழக்கின்கண் அதிகம் பயின்று வராத உயர்திணைப்பெயர்கள்
5.4.3 காரணம் பற்றி வரும் உயர்திணைப் பெயர்கள்
5.4.4 அன்ன பிற உயர்திணைப்பெயர்கள்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.
தொகுத்தறிவோம்
அருஞ்சொற்பொருள்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

**அறிமுகம்**

சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும். இவற்றின் பொது இலக்கணத்தைத் தொல்காப்பியர் கிளவியாக்கத்துள் கூறினார்.

பொது இலக்கணமாதல் ஒப்புமையானும் வேற்றுமை பெயரோடு இயைபுடைமையானும் பெயரிலக்கணத்திற்கும் பொது இலக்கணத்திற்கும் இடையே வேற்றுமை இலக்கணத்தை வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்னும் மூன்று இயல்களில் உணர்த்தினார். இனிச் சிறப்பு வகையான் நான்கு சொல்லும் உணர்த்தத் தொடங்கும் ஆசிரியர் இவ்வியலில் முதற்கண் பெயரிலக்கணம் உணர்த்துகிறார். பெயரிலக்கணம் உணர்த்துவதால் இவ்வியல் பெயரியல் எனப் பெயர் பெற்றது.

பெயர் என்பது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பனவற்றுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்ட சொற்களைக் குறிக்கும். அச்சொற்களைப் பெயர்ச்சொல் என்பர்.

**நோக்கங்கள்**

- நால்வகைச் சொற்களின் பொது இலக்கணம் உணர்த்துதல்
- சொற்களின் பாகுபாட்டை விளக்குதல்
- பெயர்ச் சொற்களின் வகைகளைக் கூறுதல்
- உயர்திணைப் பெயர்களை எடுத்துரைத்தல்

## 5.1 நால்வகைச் சொற்களின் பொதுவிலக்கணம்

❖ பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய எல்லாச் சொல்லும் பொருள் குறித்தே வரும். எந்தச் சொல்லும் பொருள் குறியாது நில்லா.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (சொல். 155)

என்பது நூற்பா. அசைநிலை முதலாயினவும் பொருள் குறித்து நிற்கும் என ஐயம் அறுத்தற்கு இந்நூற்பா வேண்டும் என்பர் சேனாவரையர்.

❖ தன்னின் வேறாகிய பொருளறியப்படுதலும் பொருளறியப்படாது அச்சொல் தானே அறியப்படுதலும் ஆகிய

இரண்டும் சொல்லான் ஆகும் என்று சொல்லுவர் புலவர். அதாவது சொற்கள் பொருளையும் உணர்த்தும் தம்மையும் உணர்த்தும்.

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர் (சொல். 156)

என்பது நூற்பா. எ.கா:

- சாத்தன் வந்தான், பண்டுகாடுமன் – பொருளை உணர்த்துதல்
- நீயென் கிளவி, செய்தெனெச்சம் – தம்மை உணர்த்துதல்

❖ சொற்கள் பொருளை உணர்த்தும் போது வெளிப்படையாகவும் உணர்த்தும்; குறிப்பாகவும் உணர்த்தும்.

தெரிபுவேறு நிலையலுங் குறிப்பில் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே (சொல். 157)

என்பது நூற்பா. எ.கா:

- அவன், இவன், உவன், வந்தான், சென்றான் – தெரிபு வேறு நிலையல் (பொருள் வெளிப்படையாகத் தோன்றுதல்).
- சோறு உண்பவன் கல்லைக் கடித்துவிட்டு 'நன்கட்டாய்' எனல் – இதில் 'தீங்கட்டாய்' என்பது குறிப்பால் தோன்றியது - குறிப்பில் தோன்றல்.

## 5.2 சொற்களின் பாகுபாடு

❖ சொல்லாவன, பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என இரண்டு என்று சொல்லுவர் அறிந்தோர்.

சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே (சொல். 138)

என்பது நூற்பா.

இவற்றுள் பெயர்ச் சொல்லுக்கு இலக்கணம் வேற்றுமையியலில் கூறினார். வினைச்சொல்லுக்கு இலக்கணம் வினையியலில் கூறுவார். இடைச்சொல், உரிச்சொல் என்னும் இரண்டும் இருந்தாலும் இவ்விரு சொற்களின் சிறப்பு நோக்கி ஆசிரியர் 'பெயரே வினையென்று ஆயிரண்டென்ப' என்றார். இவற்றுள்ளும் பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழில் பற்றாது அப்பொருள் பற்றி வரும் சிறப்புடைமையால் பெயரை முற்கூறினார் என்பர் சேனாவரையர்.

- இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும்.

> இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
> அவற்றுவழி மருங்கில் தோன்று மென்ப (சொல்.159)

என்பது நூற்பா.

இவற்றால் சொல் நான்கு வகைப்படும் என்பது கொள்ளப்படும். சார்ந்து தோன்றும் என்பதால் இச்சொற்கள் சிறப்பற்றன என்பது பெறப்படும். இவ்விரண்டனுள்ளும் வழக்குப் பயிற்சி நோக்கி இடைச்சொல்லை முற்கூறினார்.

## 5.3 பெயர்ச்சொற்களின் வகைகள்

- பெயர்ச்சொற்கள் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் என மூன்று வகைப்படும்.

> அவற்றுள்
> பெயரெனப் படுபவை தெரியுங் காலை
> உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
> ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்
> அம்மூ வுருபின தோன்ற லாறே (சொல்.160)

என்பது நூற்பா.

❖ இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவியாதற்குப் பெயருள் உரியன உரியவாம்.

இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை யுரிய பெயர்வயி னான (சொல்.161)

என்பது நூற்பா. அவன், பெண்மகன், சாத்தன் என னகர வீற்றுப் பெயர் ஆடூவிற்கும் மகடூவிற்கும் அஃறிணை ஆண்பாற்கும் உரித்தாய் வரும். அவள், மக்கள், மகள் என ளகர வீற்றுப் பெயர் மகடூவிற்கும் பல்லோர்க்கும் அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வரும். பெண்டாட்டி, நம்பி என்னும் இகர வீற்றுப் பெயரும் ஆடூ, மகடூ என்னும் ஊகார வீற்றுப் பெயரும் இருபாற்கும் உரியவாய் வரும். இவ்வாறு பெயர்ச்சொல்லில் இன்ன ஈறு இன்ன பால் உணர்த்தும் என்பது பெறப்படாது என்பதால் தொல்காப்பியர் ‘உரியவையுரிய’ என்றார் என்பர் சேனாவரையர்.

## 5.4 உயர்திணைப்பெயர்கள்

உயர்திணைப் பெயர்ச்சொற்களைச் சேனாவரையர், வழக்கின்கண் பயின்று வரும் உயர்திணைப்பெயர்கள், வழக்கின்கண் அதிகம் பயின்று வராத உயர்திணைப்பெயர்கள், காரணம் பற்றி வரும் உயர்திணைப்பெயர்கள் என மூன்றாகப் பாகுபடுத்துவர்.

### 5.4.1 வழக்கின்கண் பயின்று வரும் உயர்திணைப்பெயர்கள்

அவன், இவன், உவன் என்ற ஆண்பாற் பெயர்களும் அவள், இவள், உவள் என்ற பெண்பாற் பெயர்களும் அவர், இவர், உவர் என்ற பலர்பாற் பெயர்களும் யான், யாம், நாம், யாவன், யாவள், யாவர் என வரும் பெயர்களும் உயர்திணையில் இன்ன பால் என விளங்க நிற்பனவாகும்.

அவ்வழி
அவன் இவன் உவனென வரூஉம் பெயரும்

அவள் இவள் உவளென வரூஉம் பெயரும்
அவர் இவர் உவரென வரூஉம் பெயரும்
யான் யாம் நாமென வரூஉம் பெயரும்
ஆவயின் மூன்றொடு அப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே (சொல்.162)

என்பது நூற்பா.



### 5.4.2 வழக்கின்கண் அதிகம் பயின்று வராத உயர்திணைப்பெயர்கள்

ஆண்மகன், பெண்மகள், பெண்டாட்டி, நம்பி, நங்கை, மகன், மகள், மாந்தர், மக்கள், ஆடூஉ, மகடூஉ, அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன், அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான், அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி, பொன்னன்னான், பொன்னன்னாள் என்ற பெயர்கள் உயர்திணையில் இன்னபால் என விளங்கி நிற்கும். இவை மேலே கூறப்பட்ட பெயர்களைப் போல அதிகம் பயின்று வராத தன்மை குறித்துத் தொல்காப்பியர் தனியாகக் கூறியுள்ளார்.

ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த இகர இறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்க ளென்னும் பெயரும்
ஆடூ மகடூ ஆயிரு பெயரும்
சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்
அவைமுத லாகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன (சொல்.163)

என்பது நூற்பா.

### 5.4.3 காரணம் பற்றி வரும் உயர்திணைப் பெயர்கள்

❖ இது நிலப்பெயர், குடிப்பெயர், குழுவின் பெயர், வினைப் பெயர், உடைமைப் பெயர், பண்புகொள் பெயர், பல்லோர் குறித்த முறைநிலைப் பெயர், பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர், பல்லோர் குறித்த திணைநிலைப் பெயர், கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர், எண்ணியற் பெயர் எனப் பல வகைப்படும்.

நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயரோடு
அன்றி யனைத்தும் அவற்றியல் பினவே (சொல். 165)

என்பது நூற்பா. எ.கா:

- அருவாளன், சோழியன் – நிலப் பெயர்
- மலையமான், சேரமான் – குடிப் பெயர்
- குழுவின் பெயர் – அவையத்தார், அத்திகோசத்தார்
- வருவார், செல்வார், கொல்லன், தச்சன் - வினைப்பெயர்
- கரியான், செய்யான் – பண்புகொள் பெயர்
- அம்பர் கிழான், பேரூர் கிழான், வெற்பன், சேர்ப்பன் – உடைமைப் பெயர்
- தந்தையர், தாயர் – பல்லோர் குறித்த முறைநிலைப் பெயர்
- பெருங்காலர், பெருந்தோளர் – பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர்
- ஆயர், வேட்டுவர் – பல்லோர் குறித்த திணைநிலைப் பெயர்
- பட்டிபுத்திரர், கங்கை மாத்திரர் – கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர்
- ஒருவர், இருவர், முப்பத்து மூவர் – எண்ணியற் பெயர்

### 5.4.4 அன்ன பிற உயர்திணைப்பெயர்கள்

❖ மேற்கூறப்பட்ட பெயர் போல்வன பிறவும் உயர்திணைக்கண் பன்மையும் ஒருமையுமாகிய பாலறி வந்த எல்லாப் பெயரும் உயர்திணைப் பெயராகும்.

அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே (சொல்.166)

என்பது நூற்பா. அன்ன பிறவுமாவன, ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார் என்னுந் தொடக்கத்தன என்பர் சேனாவரையர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. சொல்லின் வகைகள் யாவை?

…………………………………………………………………………………………………

2. பெயர்ச்சொற்களின் வகைகளைச் சுட்டுக.

…………………………………………………………………………………………………

3. நம்மூர்ந்து வரும் இகர ஐகாரம் எனப்படுவன யாவை?

…………………………………………………………………………………………………

4. சுட்டு முதலாகிய அன்னும் ஆனும் ஆகிய பெயர்கள் யாவை?

……………………………………………………………………………
……………………..

5. கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர்களுக்குச் சான்று கூறுக.

……………………………………………………………………………
……………………..

**தொகுத்தறிவோம்**

சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும். எல்லாச் சொல்லும் பொருள் குறித்தே வரும். சொற்கள் பொருளையும் உணர்த்தும் தம்மையும் உணர்த்தும். சொற்கள் பொருளை உணர்த்தும்போது வெளிப்படையாகவும் உணர்த்தும்; குறிப்பாகவும் உணர்த்தும். இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து வரும். பெயச்சொற்கள் உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர் என மூன்று வகைப்படும்.

**அருஞ்சொற்பொருள்**

அத்திகோசத்தார் – யானை மேலேற்றும் அளவிற்கு நிதிக்குவை உடையார்; பட்டிபுத்திரன் – இவன் உச்சயினி நாட்டு விக்கிரமாதித்தனின் அமைச்சன், மதிநுட்பமும் நூலறிவும் மிக்கவன்; கங்கை மாத்திரர் – கங்கையை அளவிடுபவர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.
2. உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர்.
3. நம்பி, நங்கை
4. அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன்; அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான்.
5. பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர்

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. நால்வகைச் சொற்களின் பொதுவிலக்கணம் கூறுக.
2. சொற்களின் பாகுபாடு குறித்தெழுதுக.
3.உயர்திணைப் பெயர்களை விளக்குக.
4. அஃறிணைப் பெயர்களை எடுத்துரைக்க.

## கூறு – 6 தொல்காப்பியம் – சொல் – பெயரியல் – அஃறிணைப்பெயர், விரவுப்பெயர்

**அமைப்பு**

அறிமுகம்

நோக்கங்கள்

6.1 அஃறிணைப்பெயர்கள்

6.1.1 வழக்கின்கண் பயின்று வரும் அஃறிணைப்பெயர்கள்

6.1.2 வழக்கின்கண் அதிகம் பயின்று வராத அஃறிணைப்பெயர்கள்

6.1.3 கள்ளொடு சிவணும் அஃறிணை இயற்பெயர்

6.2 விரவுப்பெயர்கள்

6.2.1 விரவுப்பெயர்களின் பாகுபாடு

6.2.1.1 இயற்பெயர்

6.2.1.2 சினைப்பெயர்

6.2.1.3 சினைமுதற்பெயர்

6.2.1.4 முறைப்பெயர்

6.2.1.5 தாம்

6.2.1.6 தான்

6.2.1.7 எல்லாம்

6.2.1.8 நீயிர் & 6.2.1.9 நீ

6.3 ஒருவர் என்னும் பெயர்

6.4 நீயிர், நீ, ஒருவர் என்னும் மூன்றனுக்கும் பொது விதி

6.5 பெண்மகன்

6.6 செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாகத் திரிதல்

6.7 செய்யுளுள் கருப்பொருள்மேல் வரும் இருதிணைப்பெயர் இயல்பு
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.
தொகுத்தறிவோம்
அருஞ்சொற்பொருள்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

## அறிமுகம்

தொல்காப்பியர் பெயரியலில் உயர்திணைப் பெயர்களை விளக்குவது போல அஃறிணைப் பெயர்களையும் விரவுப்பெயர்களையும் வரையறுத்து எடுத்துரைப்பர். இவற்றுள் அஃறிணைப் பெயர்களை வழக்கின்கண் பயின்று வருவன, வழக்கின்கண் அதிகம் பயின்று வராதன, பால்பகா அஃறிணைப் பெயர் என மூன்றாகப் பாகுபடுத்தி விளக்குவர் சேனாவரையர். விரவுப்பெயர்களை இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர், முறைப்பெயர், தாம், தான், எல்லாம், நீயிர், நீ என ஒன்பதாக வகைப்படுத்துவர் தொல்காப்பியர். இவ்வியலில் ஒருசார் உயர்திணைப் பெயர்க்கும் விரவுப் பெயர்க்கும் எஞ்சி நின்ற ஒழிபு இலக்கணங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன.

## நோக்கங்கள்

- அஃறிணைப் பெயர்களின் வகைகளை விளக்குதல்.
- விரவுப்பெயர்களின் வகைகளை எடுத்துரைத்தல்.
- ஒழிபு இலக்கணங்களை உணர்த்துதல்.

## 6.1 அஃறிணைப்பெயர்கள்

### 6.1.1 வழக்கின்கண் பயின்று வரும் அஃறிணைப்பெயர்கள்

அது, இது, உது என வரும் பெயர்களும், அஃது, இஃது, உஃது என வரும் பெயர்களும், அவை, இவை, உவை என வரும் பெயர்களும், அவ், இவ், உவ் என வரும் பெயர்களும், யாது, யா, யாவை என வரும் வினாவின் பெயர்களும் அஃறிணையில் இன்ன பால் என விளங்கி நிற்கும்.

அதுஇது உதுவென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவைஇவை உவையென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை யென்னும் பெயரும்
ஆவயின் மூன்றொ டப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே (சொல். 167)

என்பது நூற்பா.

### 6.1.2 வழக்கின்கண் அதிகம் பயின்று வராத அஃறிணைப்பெயர்கள்

பல்ல, பல, சில என்னும் பெயர்களும் உள்ள, இல்ல என்னும் பெயர்களும் வருவது செல்வது போன்ற வினாப் பெயர்களும் கரியது, செய்யது போன்ற பண்புகொள் பெயர்களும் ஒன்று, பத்து, நூறு போன்ற இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயர்களும் பொன்னன்னது, பொன்னன்னவை என்பன போன்ற ஒப்பினாகிய பெயர்களும் அஃறிணையில் இன்னபால் என விளங்கி நிற்கும்.

பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள வில்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பி னாகிய பெயர்நிலை உளப்பட

அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன (சொல். 168)

என்பது நூற்பா.

இவற்றுள் பல்ல, பல, சில, உள்ள, இல்ல என்னும் ஐந்து பெயரும் தம்மை உணர்த்தி நின்றன; அல்லன பொருள் உணர்த்தி நின்றன.

### 6.1.3 கள்ளொடு சிவணும் அஃறிணை இயற்பெயர்

❖ கள்ளென்னும் ஈற்றொடு பொருந்தும் அஃறிணை இயற்பெயர் கள்ளீற்றோடு பொருந்துதற்கண் பலவறி சொல்லாகும்.

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே (சொல்.169)

என்பது நூற்பா.

அஃறிணை இயற்பெயராவன, ஆ, நாய், குதிரை, கழுதை, தெங்கு, பலா, மலை, கடல் என்னும் தொடக்கத்துச் சாதிப் பெயர்களைக் குறிக்கும். ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலின் 'இயற்பெய'ரென்றார் என்பர் சேனாவரையர்.

எ.கா: ஆக்கள், குதிரைகள் – இவை கள்ளென்னும் ஈற்றவாய் நின்றவழிப் பன்மை விளக்கலின் பலவறி சொல்லாயின.

❖ கள்ளொடு சிவணாத அஃறிணை இயற்பெயர், அதற்கேற்ற வினையொடு தொடர்ந்த வழி, ஒருமையும் பன்மையும் விளங்க வரும்.

தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே (சொல். 171)

என்பது நூற்பா. எ.கா:

- ஆ வந்தது, ஆ வந்தன; குதிரை வந்தது, குதிரை வந்தன – இவற்றில் வினையாற் பால் விளங்கியவாறு கண்டுகொள்க.

❖ மேற்கூறப்பட்ட பெயர் போல்வன பிறவும், அஃறிணைக்கண் பன்மையும் ஒருமையுமாகிய பால் விளங்க வந்த எல்லாப் பெயரும் அஃறிணைக்குரியனவாகும்.

அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறிவந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே (சொல்.170)

என்பது நூற்பா. 'அன்ன பிறவும்' என்றதனால் பிறிது, பிற; மற்றையது மற்றையன; பல்லவை, சில்லவை; உள்ளது, இல்லது; உள்ளன, இல்லன என்னுந் தொடக்கத்தன கொள்ளப்படும் என்பர் சேனாவரையர்.

## 6.2 விரவுப்பெயர்கள்

❖ உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகிய பெயர்கள் விரவுப்பெயர் எனப்படும். இத்தகைய பெயர்களில் வினைகளைக் கொண்டு திணை அறிய இயலுமேயொழிய, வினை இல்லாதவழி அவற்றை இன்ன திணை என அறிய இயலாது. இதனைத் தொல்காப்பியர்,

இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே (சொல். 172)

என்பர். எ.கா: சாத்தன் வந்தான்; சாத்தன் வந்தது, முடவன் வந்தான்; முடவன் வந்தது.

இரு திணைக்கும் பொதுவாகிய சொல் வினையாற் பொதுமை நீங்கி இரு திணைச் சொல்லாகும் என்பது கருத்தாகலின் இந்நூற்பாவில் பால் எனப்பட்டது திணையையே குறிக்கும். 'தத்தம்

மரபின் வினையோ டல்லது பால்தெரி பிலவே' என்றாரேனும் சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று எனத் தத்தம் மரபின் பெயரோடு வந்து பால் விளக்குதலும் கொள்க என்பர் சேனாவரையர்.

❖ நிகழ்காலம் பற்றி வரும் பலர்வரை கிளவியான் உயர்திணையொருமைப்பால் தோன்றுதற்கேற்ற வினையிடத்து, உயர்திணையொருமைபால் தோன்றுதலும் உரித்து.

நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியின்
உயர்திணை யொருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயி னான (சொல். 173)

என்பது நூற்பா.

விரவுப்பெயர்களின் திணையை அறிய வினைகள் மட்டும் அல்லாமல் 'செய்யும்' என்னும் முற்றுச்சொல்லும் கருவியாகப் பயன்படும். இச்செய்யும் என்னும் முற்றுச்சொல் நிகழ்காலம் பற்றியும், பல்லோர் படர்க்கை ஒழிந்த நான்கு பால்களிலும் வரும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். தொல்காப்பியர் செய்யும் என்னும் முற்றுச் சொல்லைப் 'பலர்வரைகிளவி' என்றார் என்பர் சேனாவரையர்.

எ.கா: சாத்தன் யாழ் எழூஉம், சாத்தி சாந்தரைக்கும் – இவற்றுள் யாழ் எழூஉதலும் சாந்தரைத்தலுமாகிய வினைஅஃறிணைக்கு ஏலாது ஒருவனுக்கும் ஒருத்திக்கும் ஏற்றலின் உயர்திணை ஒருமைப்பால் விளங்கியது புலனாகும்.

## 6.2.1 விரவுப்பெயர்களின் பாகுபாடு

❖ இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர், தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்னும் ஒன்பதும் விரவுப்பெயர்களாகும்.



இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே

எல்லா நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவு மாஅங்கு
அன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே (சொல்.174)

என்பது நூற்பா. எ.கா:

- சாத்தன், கொற்றன் – இயற்பெயர்
- பெருங்காலன், முடவன் - சினைப்பெயர்
- சீத்தலைச் சாத்தன், கொடும்புற மருதி – சினைமுதற் பெயர்
- தந்தை, தாய் – முறைப்பெயர்
- தாம், தான், எல்லாம், நீயிர், நீ – இவை ஐந்தும் தம்மை உணர்த்தி நின்றன

'பிறவும்' என்றதனால் மக, குழவி போல்வனகொள்க என்பர் சேனாவரையர்.

❖ மேற்சுட்டிய விரவுப்பெயர்களுள் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர் ஆகிய மூன்றையும் நான்கு வகையாகவும் முறைப்பெயரை இரண்டு வகையாகவும் ஏனைய ஐந்து பெயர்களையும் தனித்தனியாகவும் விளக்குவர்.

அவற்றுள்
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி இரண்டா கும்மே
ஏனைப் பெயரே தத்தம் மரபின (சொல். 175)

என்பது நூற்பா.

### 6.2.1.1 இயற்பெயர்

இது பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர், பன்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர் என நான்கு வகைப்படும்.

அவைதாம்
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயர்
அந்நான் கென்ப இயற்பெயர் நிலையே (சொல்.176)

என்பது நூற்பா. எ.கா:

- சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் – பெண்மை இயற்பெயர்
- சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான் – ஆண்மை இயற்பெயர்
- யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் – பன்மை இயற்பெயர்
- கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள் – ஒருமை இயற்பெயர்

### 6.2.1.2 சினைப்பெயர்

இது பெண்மைச் சினைப்பெயர், ஆண்மைச் சினைப்பெயர், பன்மைச் சினைப்பெயர், ஒருமைச் சினைப்பெயர் என நான்கு வகைப்படும்.

அவைதாம்
பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயரென்று
அந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே (சொல்.177)

என்பது நூற்பா. எ.கா:

- முடத்தி வந்தது, முடத்தி வந்தாள் – பெண்மைச் சினைப்பெயர்
- முடவன் வந்தது, முடவன் வந்தான் – ஆண்மைச் சினைப்பெயர்
- நெடுங்கழுத்தல் வந்தது, நெடுங்கழுத்தல் வந்தன, நெடுங்கழுத்தல் வந்தான், நெடுங்கழுத்தல் வந்தாள் – பன்மைச் சினைப்பெயர்

- செவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள் – ஒருமைச் சினைப்பெயர்

### 6.2.1.3 சினைமுதற்பெயர்

இது பெண்மை சுட்டிய சினைமுதற் பெயர், ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயர், பன்மை சுட்டிய சினைமுதற் பெயர், ஒருமை சுட்டிய சினைமுதற் பெயர் என நான்கு வகைப்படும்.

பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்று
அந்நான் கென்ப சினைமுதற் பெயரே (சொல்.178)

என்பது நூற்பா. எ.கா:

- முடக்கொற்றி வந்தது, முடக்கொற்றி வந்தாள் – பெண்மை சுட்டிய சினைமுதற்பெயர்
- முடக்கொற்றன் வந்தது, முடக்கொற்றன் வந்தான் – ஆண்மைசுட்டிய சினைமுதற்பெயர்
- பெருங்கால் யானை வந்தது, பெருங்கால் யானை வந்தன, பெருங்கால் யானை வந்தான், பெருங்கால் யானை வந்தாள் – பன்மை சுட்டிய சினைமுதற்பெயர்
- கொடும்புற மருதி வந்தது, கொடும்புற மருதி வந்தான், கொடும்புற மருதி வந்தாள் – ஒருமை சுட்டிய சினைமுதற் பெயர்

### 6.2.1.4 முறைப்பெயர்

இது பெண்மை முறைப்பெயர், ஆண்மை முறைப்பெயர் என இரு வகைப்படும்.

பெண்மை முறைப்பெயர் ஆண்மை
முறைப்பெயரென்று

ஆயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே (சொல்.179)

என்பது நூற்பா.எ.கா:

- தாய் வந்தது, தாய் வந்தாள் – பெண்மை முறைப்பெயர்
- தந்தை வந்தது, தந்தை வந்தான் – ஆண்மை முறைப்பெயர்

இவ்வாறு இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர் ஆகிய நான்கையும் பகுத்துரைக்கும் தொல்காப்பியர் பெண்மை, ஆண்மை, பன்மை, ஒருமை என்ற வகைப்பாட்டின் அடிப்படையிலும் கூறுவர்.

❖ பெண்மை பற்றி வரும் நான்கு பெயரும் அஃறிணைப் பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் உரியதாகும்.

பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே (தொல்.180)

என்பது நூற்பா.

❖ ஆண்மை பற்றி வரும் நான்கு பெயரும் அஃறிணை ஆண் ஒன்றற்கும் உயர்திணை ஒருவனுக்கும் உரியதாகும்.

ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே (தொல். 181)

என்பது நூற்பா.

❖ பன்மை சுட்டி வரும் மூன்று பெயரும் அஃறிணை ஒருமையும், அஃறிணைப் பன்மையும் உயர்திணை ஒருமையும் எனச் சொல்லப்பட்ட மூன்று பாற்கும் உரியதாகும்.

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே யொருவ ரென்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே (சொல்.182)

என்பது நூற்பா.

❖ ஒருமை சுட்டி வரும் ஒருமை இயற்பெயரும், ஒருமைச் சினைப்பெயரும், ஒருமைச் சினைமுதற் பெயரும் அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் உரியவாகும்.

ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே (சொல். 183)

என்பது நூற்பா.

### 6.2.1.5 தாம்

'தாம்' என்னும் பெயர் இரு திணைக்கண்ணும் பன்மைப் பாலுக்கு உரியதாகும்.

தாமென் கிளவி பன்மைக்கு உரித்தே (சொல். 184)

என்பது நூற்பா. எ.கா: தாம் வந்தார்; தாம் வந்தன.

### 6.2.1.6 தான்

'தான்' என்னும் பெயர் இரு திணைக்கண்ணும் ஒருமைப் பாலுக்கு உரியதாகும்.

தானென் கிளவி யொருமைக்கு உரித்து (சொல். 185)

என்பது நூற்பா. எ.கா: தான் வந்தான், தான் வந்தாள்; தான் வந்தது.

### 6.2.1.7 எல்லாம்

❖ 'எல்லாம்' என்னும் பெயர் இரு திணைக்கண்ணும் பன்மை குறித்து வரும்.

எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே (சொல். 186)

என்பது நூற்பா. எ.கா: எல்லாம் வந்தோம், எல்லாம் வந்தீர், எல்லாம் வந்தார்; எல்லாம் வந்தன.

❖ எல்லாம் என்னும் சொல் உயர்திணையில் தன்மைப் பன்மைக்கல்லது முன்னிலைப் பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் வராது.

தன்னு ளுறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்க மில்லை (சொல். 187)

என்பது நூற்பா.

### 6.2.1.8 நீயிர் & 6.2.1.9

❖ நீயிர், நீ என்னும் இரண்டு பெயர்ச்சொல்லும் திணைப் பகுதி தெரிய நில்லாது. இரு திணையும் உடன்தோன்றி நிற்கும்.

நீயிர் நீயென வரூஉங் கிளவி
பால்தெரி பிலவே யுடன் மொழிப் பொருள (சொல். 188)

என்பது நூற்பா. எ.கா: நீயிர் வந்தீர், நீ வந்தாய்.

❖ மேற்சொல்லப்பட்ட இரண்டு பெயருள் 'நீ' என்னும் பெயர் ஒருமைக்குரியதாகும். இங்கு ஒருமை என்பது ஒருவன், ஒருத்தி, ஒன்று ஆகிய மூன்றையும் குறிக்கும் என்பர் சேனாவரையர்.

அவற்றுள்
நீயென் கிளவி யொருமைக்கு உரித்தே (சொல். 189)

என்பது நூற்பா. எ.கா: நீ வந்தாய்.

❖ 'நீயிர்' என்னும் பெயர் பன்மைக்கு உரியதாகும். பன்மை என்பது பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை என்பர் சேனாவரையர்.

ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே (சொல். 190)

என்பது நூற்பா. எ.கா: நீயிர் வந்தீர்

### 6.3 ஒருவர் என்னும் பெயர்

❖ 'இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயரில்' (சொல்.165) ஒருவர் அடங்கும். இப் பெயர்ச்சொல் உயர்திணை முப்பாலுள் ஒருபால் விளங்காது ஒருவன், ஒருத்தி என்னும் இருபாலுக்கும் பொதுவாய் நிற்கும்.

ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை (சொல்.191)

என்பது நூற்பா. எ.கா: ஒருவர் வந்தார்.

❖ ஒருவர் என்னும் பெயரது இயல்பு கருதின் அஃது ஒருமைப் பெயராயினும் பல்லோர் அறியும் சொல்லோடு தொடர்புடையதாகும்.

தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும் (சொல்.192)

என்பது நூற்பா. எ.கா: ஒருவர் வந்தார்; ஒருவர் அவர்.

### 6.4 நீயிர், நீ, ஒருவர் என்னும் மூன்றனுக்கும் பொது விதி

நீயிர், நீ, ஒருவர் ஆகியவற்றை இன்ன பாற்பெயர் என அறிய வேண்டின் சொல்லுவான் கருத்தினையொட்டியே அறிதல் வேண்டும்.

இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
முன்னஞ் சேர்த்தி முறையி னுணர்தல் (சொல். 193)

என்பது நூற்பா. எ.கா:

- ஒரு சாத்தன் ஒருவனானும் ஒருத்தியானும் பலரானும் ஒன்றானும் பலவானுந் தன்னுழைச் சென்றவழி, நீ வந்தாய், நீயிர் வந்தீர் எனல். அதனைக் கேட்பவன் இவன் இன்ன பால் கருதிக் கூறினான் என்பது உணர்தல்.
- ‘ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுக லாற்றின்’ (நாலடி. 309) என்றவழிச் சொல்லுவானொடு கேட்டான் இவன் ஆடூஉ ஒருமை குறித்தான் என விளங்குதல்.

### 6.5 பெண்மகன்

மகடூஉப் பொருண்மைக்கண் பால் திரிந்து வரும் பெண்மகன் என்னும் பெயர், வினை கொள்ளுமிடத்து, மகடூஉவிற்குரிய வினையையே கொள்ளும்.

மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயி னான (சொல். 194)

என்பது நூற்பா. எ.கா: பெண்மகன் வந்தாள்.

### 6.6 செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாகத் திரிதல்

ன, ள, ர, ய என்னும் நான்கு புள்ளியீறுகளைக் கொண்ட பெயர்களின் ஈற்று அயல் எழுத்திலுள்ள ஆகாரம் செய்யுளுள் வரும்பொழுது ஓகாரமாகத் திரியும்.

ஆவோ வாகும் பெயருமா ருளவே

ஆயிட னறிதல் செய்யுளுள்ளே (சொல்.195)

என்பது நூற்பா. எ.கா:

வில்**லோன்** காலன கழலே தொடி**யோள்**
……… ……….. ……….. ……….
வேய்பயில் அழுவம் முன்னி **யோரே.**
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா **தோயே.**

## 6.7 செய்யுளுள் கருப்பொருள்மேல் வரும் இருதிணைப்பெயர் இயல்பு

❖ செய்யுளுட் கருப்பொருள்மேற் கிளக்கப்படும் இரு திணைக்குமுரிய பெயர் உயர்திணையை உணர்த்தாது. இதற்கு அவ்வந் நிலத்துவழி அஃறிணைப் பொருளவாய் வழங்கப்பட்டு வருதலே காரணமாகும்.

இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுட் கிளக்கும்
இயற்பெயர்க்கிளவி யுயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கின் தோன்ற லான (சொல்.199)

என்பது நூற்பா. எ.கா:

கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை யயர்ந்த வன்பறழ்க் குமரி

இதில் கடுவன், மூலன், குமரி என்பன அஃறிணைப் பொருளவாய் உயர்திணை சுட்டாமை விளங்கும்.

❖ கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் உயர்திணை சுட்டாது அஃறிணை சுட்டுவது, அவ்வத்திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயரல்லாதவிடத்து ஆகும்.

திணையொடு பழகிய பெயரலங் கடையே (சொல்.197)

என்பது நூற்பா. எனவே, திணைக்குரியவாய் வழங்கப்பட்டுவரும் பெயர் இரு திணையும் சுட்டி வரும் என்பது புலனாகும். திணையொடு பழகிய விரவுப்பெயராவன, காளை, விடலை என்னும் தொடக்கத்தன. எ.கா:

- செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் **காளை** (நற். 184)

**குறிப்பு**

- திருந்துவேல் **விடலை**யொடு வருமெனத் தாயே (அகநா. 195)

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

---

**குறிப்பு:**

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. விரவுப்பெயர் என்றால் என்ன?

……………………………………………………………………………
……………………

2. விரவுப்பெயரின் வகைகள் யாவை?

……………………………………………………………………………
……………………

3. இயற்பெயரின் வகைகள் யாவை?

……………………………………………………………………………
…………………….

4. முறைப்பெயரின் வகைகள் யாவை?

……………………………………………………………………………
……………………..

5. ஒருவன், ஒருத்தி என்னும் இருபாலுக்கும் பொதுவாய் நிற்கும் பெயர் எது?

……………………………………………………………………………
……………………..

---

**தொகுத்தறிவோம்**

---

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகிய பெயர் விரவுப்பெயர் எனப்படும். இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர், முறைப்பெயர், தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்னும் ஒன்பதும் விரவுப்பெயர்களாகும். தொல்காப்பியர் இயற்பெயர்,

சினைப்பெயர், சினைமுதற்பெயர் ஆகிய மூன்றையும் நான்கு வகையாகவும் முறைப் பெயரை இரண்டு வகையாகவும் ஏனைய ஐந்து பெயர்களையும் தனித்தனியாகவும் விளக்குவர். இவ்வாறு இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர் ஆகிய நான்கையும் பகுத்துரைக்கும் தொல்காப்பியர் பெண்மை, ஆண்மை, பன்மை, ஒருமை என்ற வகைப்பாட்டின் அடிப்படையிலும் கூறுவர்.

**அருஞ்சொற்பொருள்**

கடுவன், மூலன் – குரங்கு; காளை, விடலை – பாலை நிலத்து மக்கட் பெயர்கள்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகிய பெயரை விரவுப்பெயர் என்பர்.
2. இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர், தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்பன.
3. பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர், பன்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர் என்பன.
4. பெண்மை முறைப்பெயர், ஆண்மை முறைப்பெயர் என்பன.
5. ஒருவர்

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. விரவுப்பெயர் என்றால் என்ன?
2. விரவுப் பெயரின் பாகுபாட்டை விளக்குக.
3. பெண்மை சுட்டிய விரவுப் பெயர்கள் யாவை?
4. ஆண்மை சுட்டிய விரவுப் பெயர்கள் யாவை?
5. பன்மை சுட்டிய விரவுப்பெயர்கள் யாவை?
6. ஒருமை சுட்டிய விரவுப் பெயர்கள் யாவை?

# கூறு – 7

## தொல்காப்பியம் – சொல் – வினையியல்- உயர்திணை வினை

*தொல்காப்பியம் – சொல் – சேனாவரையம்*

**குறிப்பு**

**அமைப்பு**

அறிமுகம்
நோக்கங்கள்
7.1 வினைச்சொல்லின் பொது இலக்கணம்
7.2 வினைச்சொல்லின் பாகுபாடு
7.3 உயர்திணை வினை
7.3.1 உயர்திணைக்குரிய தெரிநிலை வினை
7.3.1.1 தன்மைப்பன்மை வினைமுற்று
7.3.1.2 தன்மையொருமை வினைமுற்று
7.3.1.3 படர்க்கையொருமை வினைமுற்று
7.3.1.4 படர்க்கைப்பன்மை வினைமுற்று
7.3.1.5 தன்மைப்பன்மை வினை – ஒரு வேறுபாடு
7.3.1.6 வினைமுற்றுக்களின் ஈறுகளில் சில திரிதல்
7.3.2 உயர்திணைக்குரிய குறிப்பு வினை
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.
தொகுத்தறிவோம்
அருஞ்சொற்பொருள்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

**அறிமுகம்**

வினை என்பதற்குத் தொழில் என்பது பொருள். அது தொழில் நிகழ்ச்சியைப் பற்றிய சொல்லுக்கு ஆகியது. அதனால் வினை என்பது வினைச்சொல் எனப் பொருள்படும். வினைச்சொல் பற்றிய இலக்கணம் கூறும் இயல் வினையியல் எனப்பட்டது.

**நோக்கங்கள்**

- வினைச்சொல்லின் பொது இலக்கணம் உணர்த்துதல்.
- வினைச்சொல்லின் பாகுபாடு விளக்குதல்.
- உயர்திணை வினைகளுள் தெரிநிலை வினை, குறிப்பு வினை பற்றி எடுத்துரைத்தல்.

## 7.1 வினைச்சொல்லின் பொது இலக்கணம்

வினைச்சொல் வேற்றுமை உருபினை ஏற்காது. இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலத்தையும் பொருந்தி வரும்.

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் (சொல். 198)

என்பது நூற்பா. வேற்றுமை கொள்ளாமை, காலமொடு தோன்றுதல் ஆகிய இரண்டும் வினைச்சொல்லின் இலக்கணம் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். எ.கா: உண்டான், கரியன்.

## 7.2 வினைச்சொல்லின் பாகுபாடு

❖ காலம் மூன்று வகைப்படும். இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படும் அம்மூன்று காலமும் குறிப்பு வினையொடும் பொருந்தும் மெய்ந்நிலைமையையுடைய ஆகும். இதனை,

காலந் தாமே மூன்றென மொழிப (சொல். 199)

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக்காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்நிலை யுடைய தோன்ற லாறே (சொல். 200)

என்னும் நூற்பாக்கள் விளக்கும். இதனால் வினைச்சொல் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரு வகைப்படும் என்பதும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்தையும் வெளிப்படக் காட்டுவது தெரிநிலை வினை என்பதும் முக்காலத்தையும் வெளிப்படக் காட்டாதது குறிப்பு வினை என்பதும் விளங்கும். எ.கா: உண்டான், உண்ணா நின்றான், உண்பான்.

இறப்பாவது, தொழிலது கழிவு; நிகழ்வாவது, தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை; எதிர்வாவது, தொழில் பிறவாமை ஆகும். தொழில் என்பது பொருளினது புடைபெயர்ச்சி ஆகலின், அஃது ஒருகண் நிற்பதல்லது இரண்டுகண் நில்லாமையின் நிகழ்ச்சி என்பதொன்று அதற்கு இல்லை. ஆயினும், உண்டல், தின்றல் எனப் பலதொழிற் தொகுதியை ஒரு தொழிலாகக் கொள்வதால் உண்ணா நின்றான், வாரா நின்றான் என நிகழ்ச்சி உடைத்தாயிற்று என்பர் சேனாவரையர்.

❖ குறிப்பு வினையிடத்தும் தெரிநிலை வினையிடத்தும் தோன்றிக் காலமொடு வரும் எல்லா வினைச்சொல்லும் உயர்திணைக்கு உரியனவாயும் அஃறிணைக்கு உரியனவாயும் இரு திணைக்கும் ஒப்ப உரியனவாயும் என்று மூன்று வகையினவாய்த் தோன்றும்.

> குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
> காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
> உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
> ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்
> அம்மூ வுருபின தோன்ற லாறே (சொல். 201)

என்பது நூற்பா. எ.கா:

- உண்டான் – உயர்திணை – தெரிநிலை வினை
- கரியன் – உயர்திணை – குறிப்பு வினை
- சென்றது – அஃறிணை – தெரிநிலை வினை
- செய்யது – அஃறிணை – குறிப்பு வினை
- வந்தனை – விரவு வினை – தெரிநிலை வினை
- வெளியை – விரவு வினை – குறிப்பு வினை

## 7.3 உயர்திணை வினை

### 7.3.1 உயர்திணைக்குரிய தெரிநிலை வினை

இத்திணைக்குரிய தெரிநிலை வினைகளைத் தொல்காப்பியர் தன்மை வினை, படர்க்கை வினை என இரு

வகையாகப் பகுத்துக் கூறுவர். முன்னிலை வினை விரவு வினைக்கு உரியதாகையால் இங்கு கூறவில்லை.

### 7.3.1.1 தன்மைப்பன்மை வினைமுற்று

அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும் ஆகிய எட்டு ஈறுகளும் தன்மைப் பன்மைக்கு உரியனவாகும்.

அவைதாம்
அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற வென்னும்
அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே (சொல்.202)

என்பது நூற்பா.

தன்மை வினை, ஒருமைத் தன்மையும் பன்மைத் தன்மையும் என இரு வகைப்படும். தன்னை மட்டும் உணர்த்தி வருவது ஒருமைத்தன்மையாகும். தன்னொடு பிறரையும் உளப்படுத்தி வருவது பன்மைத் தன்மையாகும். அவ்வுளப்படுத்தல் முன்னின்றாரை உளப்படுத்தல், படர்க்கையாரை உளப்படுத்தல், அவ்விருவரையும் ஒருங்கு உளப்படுத்தல் என மூன்று வகைப்படும்.

- முன்னின்றாரை உளப்படுத்தல் – அம், ஆம். எ.கா: அஞ்சினம், அஞ்சினாம்
- படர்க்கையாரை உளப்படுத்தல் – எம், ஏம். எ.கா: அஞ்சினெம், அஞ்சினேம்.
- அவ்விருவரையும் ஒருங்கு உளப்படுத்தல் – கும், டும், தும், றும். எ.கா: உண்கும், உண்டும், வருதும், சேறும்.

அம், ஆம் என்பன தமராயவழி படர்க்கையாரையும் உளப்படுக்கும். அம், ஆம், எம், ஏம் என்பன மூன்று காலமும் பற்றி வரும். உம்மொடு வரூஉங் கடதற எதிர்காலம் பற்றி வரும்.

### 7.3.1.2 தன்மையொருமை வினைமுற்று

❖ கடதற வென்னும் நான்கு மெய்யை ஊர்ந்து வரும் குற்றியலுகரத்தை ஈறாக உடைய சொல்லும் என், ஏன், அல்

என்னும் ஈற்றவாகிய சொல்லும் என அவ்வேழும் ஒருமை உணர்த்தும் தன்மைச் சொல்லாகும்.

கடதற வென்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோடு
என்ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்கும் தன்மைச் சொல்லே (சொல்.203)

என்பது நூற்பா.

- குற்றுகரம் நான்கும் அல்லும் எதிர்காலம் பற்றி வரும்.
  எ.கா: உண்கு, உண்டு, வருது, சேறு, உண்பல்
- என், ஏன் என்பன எதிர்காலம் பற்றி வரும்.
  எ.கா: உண்டனென், உண்ணாநின்றனென்,
  உண்குவென்; உண்டேன், உண்ணா நின்றேன், உண்பேன்.

❖ மேற்கூறப்பட்ட ஒருமைத்தன்மை வினை ஏழனுள் ‘செய்கு’ என்னும் சொல் வினையொடு முடியுமாயினும் முற்றுச் சொல்லாதல் திரியாது.

அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர் (சொல்.204)

என்பது நூற்பா. வினைமுற்றுக்கள் அனைத்தும் பெயர்கொண்டு முடிதலையே இலக்கணமாக உடையன. இதனை ஆசிரியர் ‘எத்திறத் தானும் பெயர் முடிபினவே’ (சொல். 429) எனப் பின்னர் கூறுவர். இம்முற்றுக்கள் பெயர்கொண்டு முடிவுழி முற்றென்றும், வினைகொண்டு முடிவுழி முற்றெச்சம் என்றும் பெயர் பெறும். எனினும் இவ்விலக்கணத்திற்கு மாறாக ‘செய்கு’ என்னும் வினைமுற்றோ வினையொடு முடிவுழியும் முற்று என்றே பெயர் பெறும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும்.
எ.கா: காண்கு வந்தேன்.

### 7.3.1.3 படர்க்கையொருமை வினைமுற்று

அன், ஆன், அள், ஆள் என்னும் ஈற்றையுடைய நான்கு சொல்லும் உயர்திணை ஒருமை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாகும்.

அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே (சொல். 205)

என்பது நூற்பா. இந் நான்கு ஈறுகளும் மூன்று காலமும் பற்றி வரும். எ.கா:

- உண்டனன், உண்ணா நின்றனன், உண்பன்
- உண்டான், உண்ணா நின்றான், உண்பான்
- உண்டனள், உண்ணா நின்றனள், உண்பள்
- உண்டாள், உண்ணா நின்றாள், உண்பாள்

### 7.3.1.4 படர்க்கைப்பன்மை வினைமுற்று

❖ அர், ஆர், ப என்னும் ஈற்றையுடையவாய் வரும் மூன்று சொல்லும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாகும்.

அர்ஆர் பஎன வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே (சொல்.206

என்பது நூற்பா. இவற்றுள் ரகார ஈறு மூன்று காலமும் பற்றி வரும். பகாரம் எதிர்காலம் பற்றி வரும். எ.கா:

- உண்டனர், உண்ணா நின்றனர், உண்பர்
- உண்டார், உண்ணா நின்றார், உண்பார்
- உண்ப

❖ அர், ஆர், ப ஈறுகளோடு மாரீற்றுச் சொல்லும் பல்லோர் படர்க்கையை உணர்த்தும். அஃது அவை போல பெயர் கொள்ளாது வினை கொண்டு முடியும்.

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப (சொல். 207)

என்பது நூற்பா. எ.கா: எள்ளுமார் வந்தார், கொண்மார் வந்தார்.

❖ இவ்வாறு பன்மையும் ஒருமையுமாகிய பாலுணர வந்த இருபத்து மூன்று ஈற்று வினைச்சொல்லும் உயர்திணைக்குரியனவாகும்.

பன்மையும் ஒருமையும் பாலறிவந்த
அந்நா லைந்தும் மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே (சொல். 208)

என்பது நூற்பா.

### 7.3.1.5 தன்மைப்பன்மை வினை – ஒரு வேறுபாடு

❖ பன்மையும் ஒருமையுமாகிய பாலுணர வந்த இருபத்து மூன்று ஈற்று வினைச் சொற்களுள் பன்மை உணர்த்தும் தன்மைச்சொல் எண்ணுகின்றவழி அஃறிணையை உளப்படுத்துத் திரிவனவும் உள.

அவற்றுள்
பன்மை யுரைக்கும் தன்மைக் கிளவி
எண்ணியன் மருங்கின் திரிபவை உளவே (சொல். 209)

என்பது நூற்பா. எ.கா: யானும் என் எஃகமும் சாறும்.

தன்மைப் பன்மை வினைச்சொல் உயர்திணை வினைக்குரியது. எனவே உயர்திணையையே உளப்படுத்தும். அப்படியிருக்க, அஃறிணை வினையை உளப்படுத்தல் வழுவாயினும் அமைக என்பார் 'திரிபவை உள' என்றார். இதனால் எல்லாம் திரியாது; சிலவே திரியும் என்று பொருள்படும்.

❖ 'யார்' என்னும் வினாப் பொருளை உணர்த்தும் சொல் உயர்திணையிடத்து மூன்று பாற்கும் உரியதாகும்.

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே (சொல். 210)

என்பது நூற்பா. எ.கா: அவன் யார்?, அவள் யார்?, அவர் யார்?

### 7.3.1.6 வினைமுற்றுக்களின் ஈறுகளில் சில திரிதல்

❖ பால் விளங்க வரும் இயல்பையுடைய ஆன், ஆள், ஆர் என்னும் மூன்று ஈற்றின்கண்ணும் நிற்கும் ஆகாரம் செய்யுளிடத்து ஓகாரமாகும்.

பாலறி மரபின் அம்மூ ஈற்றும்
ஆஓ ஆகுஞ் செய்யு ளுள்ளே (சொல். 211)

என்பது நூற்பா. எ.கா:

- வினவி நிற்றந் **தோ**னே
- நல்லை மன்னென நகூஉப் பெயர்ந்**தோ**ளே
- பாசிலை வாடா வள்ளியங் காடிறந்**தோ**ரே

❖ முன்னிலை ஈற்றுள் 'ஆய்' என்னும் ஈறு மேற்கூறப்பட்டன போல செய்யுளுள் வரும் ஆகாரம் ஓகாரமாகும்.

ஆயென் கிளவியும் அவற்றோடு கொள்ளும் (சொல். 212)

என்பது நூற்பா. எ.கா: வந்**தோய்** மன்ற தண்கடற் சேர்ப்ப

## 7.3.2 உயர்திணைக்குரிய குறிப்பு வினை

❖ தொல்காப்பியர் இதற்கான ஈறுகளை விதந்து கூறவில்லை. பன்மையும் ஒருமையுமாகிய பால் விளக்கிக் குறிப்புப் பொருண்மையுடையவாய் வரும் வினைச்சொல், மேல்வரும் உயர்திணைக்கட் கூறிய தெரிநிலை வினையோடு ஒக்கும் என்பர். இதனால் தெரிநிலை வினைக்குக் கூறப்பட்ட ஈறுகளே குறிப்பு வினைக்கும் ஈறாக வரும் என்பது விளங்கும்.

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே (சொல். 215)

என்பது நூற்பா. தெரிநிலை வினை ஈறுகளுள் அம், ஆம், எம், ஏம், என், ஏன் என்னும் தன்மை ஈறுகளும் அன், ஆன், அள், ஆள், அர், ஆர் என்னும் படர்க்கை ஈறுகளும் ஆகப் பன்னிரண்டு ஈறுகள் குறிப்பு வினைக்கும் ஏற்கும். இவற்றுள்ளும் ஆன், ஆள், ஆர் என்பன நிலப்பொருண்மைக்கண் அல்லது பிற பொருட்கண் பயின்று வாரா என்பர் சேனாவரையர். எ.கா:

- கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியென், கரியேன் – தன்மைக் குறிப்பு வினை
- கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார் – படர்க்கைக் குறிப்பு வினை

❖ ஆறாம் வேற்றுமைக்குரிய உடைமைப் பொருள் பற்றி வருவனவும், ஏழாம் வேற்றுமைக்குரிய நிலப்பொருள் பற்றி

வருவனவும், ஒப்புப் பொருள் பற்றி வருவனவும் உயர்திணைக் குறிப்பு வினையில் வரும்.

அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானும் என்று
அப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும் (சொல்.213)

என்பது நூற்பா. எ.கா:

- கச்சினன், கழலினன் – உடைமைப் பொருள்
- இல்லத்தன், புறத்தன் – நிலப்பொருள்
- பொன்னன்னன், புலிபோல்வன் – ஒப்புப் பொருள்
- கரியன், செய்யன் – பண்புப் பொருள்

தன்னின முடித்தல் என்பதனால் ஐயாட்டையன், துணங்கையன் எனச் சிறுபான்மை காலமும் வினைசெய்யிடமும் பற்றி வருவனவும் கொள்க என்பர் சேனாவரையர்.

❖ அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்னும் பொருள் பற்றி வருவனவும், அவை போல்வன பிறவும் குறிப்புப் பொருண்மையோடு பொருந்தும் எல்லாச் சொல்லும் காலம் குறிப்பால் உணரப்படும்.

அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியுங் குறிப்பே காலம் (சொல். 214)

என்பது நூற்பா. தொல்காப்பியர் இவையும் வினைக்குறிப்பாகும் என்பதை இந்நூற்பாவால் உணர்த்துவர். எ.கா:

- அல்லன், அல்லள், அல்லர் – அன்மை
- இலன், இலள், இலர் – இன்மை
- உளன், உளள், உளர் – உண்மை
- வல்லன், வல்லள், வல்லர் – வன்மை

பொதுப்படக் கூறியவதனால், பொருளிலன், பொருளிலள், பொருளிலர் என உடைமைக்கு மறுதலையாகிய இன்மையும் கொள்ளப்படும் என்றும், 'அன்ன பிறவும்' என்றதனால் நல்லன், நல்லள், நல்லர்; தீயன், தீயள், தீயர்; உடையன், உடையள்,

உடையர் என்னும் தொடக்கத்தனவும் கொள்க என்றும் கூறுவர் சேனாவரையர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. வினைச்சொல்லின் இலக்கணம் யாது?

…………………………………………………………………………………
……………………

2. வினைச்சொல்லின் வகைகளைச் சுட்டுக.

…………………………………………………………………………………
……………………

3. தன்மைப் பன்மை வினைமுற்று ஈறுகள் யாவை?

…………………………………………………………………………………
………………………

4. தன்மையொருமை வினைமுற்று ஈறுகள் யாவை?

…………………………………………………………………………………
………………………..

5. படர்க்கை ஒருமை வினைமுற்று, படர்க்கைப்பன்மை வினைமுற்று ஈறுகள் யாவை?

…………………………………………………………………………………
………………………..

## தொகுத்தறிவோம்

வினைச்சொல் வேற்றுமை உருபினை ஏற்காது. இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலத்தையும் பொருந்தி வரும். வினைச்சொல் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரு வகைப்படும். இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்தையும் வெளிப்படக் காட்டுவது தெரிநிலை வினை; முக்காலத்தையும் வெளிப்படக் காட்டாதது குறிப்பு வினை. அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும் ஆகிய எட்டு ஈறுகளும் தன்மைப் பன்மைக்கு உரியனவாகும். கடதற வென்னும் நான்கு மெய்யை ஊர்ந்து வரும் குற்றியலுகரத்தை ஈறாக உடைய சொல்லும் என், ஏன், அல் என்னும் ஈற்றவாகிய சொல்லும் என அவ்வேழும் ஒருமை உணர்த்தும் தன்மைச் சொல்லாகும். அன், ஆன், அள், ஆள் என்னும் ஈற்றையுடைய நான்கு சொல்லும் உயர்திணை ஒருமை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாகும். அர், ஆர், ப என்னும் ஈற்றையுடையவாய் வரும் மூன்று சொல்லும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாகும். தெரிநிலை வினைக்குக் கூறப்பட்ட ஈறுகளே குறிப்பு வினைக்கும் ஈறாக வரும்.

### அருஞ்சொற்பொருள்

எஃகம் – படை; கச்சு – ஆண்கள் இடையில் அணியும் ஆடை; கழல் – ஆண்கள் காலில் அணியும் அணி.

## உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. வேற்றுமை கொள்ளாமை, காலமொடு தோன்றுதல் ஆகிய இரண்டும் வினைச்சொல்லின் இலக்கணம் ஆகும்.

2. வினைச்சொல் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரு வகைப்படும்.

3. அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும் .

4. கு, டு. து, று, என், ஏன், அல் .

5. அன், ஆன், அள், ஆள் - படர்க்கையொருமை வினைமுற்று ஈறுகள்; அர், ஆர், ப - படர்க்கைப்பன்மை வினைமுற்று ஈறுகள்

## இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

1. வினைச்சொல்லின் பொதுவிலக்கணத்தை எழுதுக.
2. வினைச்சொல்லின் பாகுபாடு குறித்தெழுதுக.
3. உயர்திணைக்குரிய தெரிநிலை வினை வகைகளையும் அவற்றின் ஈறுகளையும் கட்டுரைக்க.
4. உயர்திணைக்குரிய குறிப்பு வினை குறித்தெழுதுக.

# கூறு – 8

## தொல்காப்பியம் – சொல் – வினையியல் – அஃறிணை வினை, விரவு வினை

**அமைப்பு**

அறிமுகம்
நோக்கங்கள்
8.1 அஃறிணை வினை
8.1.1 அஃறிணைக்குரிய தெரிநிலை வினை
8.1.1.1 படர்க்கைப் பன்மை வினைமுற்று
8.1.1.2 படர்க்கை ஒருமை வினைமுற்று
8.1.2 அஃறிணைக்குரிய குறிப்பு வினை
8.2 விரவு வினை
8.2.1 முன்னிலை வினைமுற்று
8.2.2 முன்னிலை வினைமுற்று ஒழிந்தவற்றுக்குப் பொது விதி
8.2.3 வியங்கோள் வினைமுற்று
8.2.4 வினையெச்சம்
8.2.5 இல்லை, வேறு, செய்ம்மன என்பன

8.2.6 செய்யும், செய்த என்னும் பெயரெச்சம்
8.3 பெயரெச்ச, வினையெச்சங்களுக்குரிய பொது விதி
8.4 கால வழுவமைதி
8.5 வினைச்சொல் பற்றிய பொது மரபுகள்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.
தொகுத்தறிவோம்
அருஞ்சொற்பொருள்
உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்



**அறிமுகம்**

தொல்காப்பியர் வினையியலில் அஃறிணை வினை, விரவு வினை ஆகியவற்றையும் வரையறுத்து விளக்குவர். அஃறிணை வினையைத் தெரிநிலை வினை, குறிப்பு வினை என்னும் இரு வகையாகப் பாகுபடுத்தி எடுத்துரைப்பர். விரவு வினையை முன்னிலை, வியங்கோள், வினையெஞ்சு கிளவி, இன்மை செப்பல், வேறென் கிளவி, செய்ம்மன, செய்யும், செய்த என்னும் வாய்பாட்டுக் கிளவி என எட்டு வகையாகப் பாகுபடுத்தி விளக்குவர். கால வழுவமைதி குறித்தும் வினைச்சொல் பற்றிய பொதுவான மரபுகளையும் இவ்வியலில் எடுத்துரைப்பர்.

**நோக்கங்கள்**

- அஃறிணைக்குரிய தெரிநிலை வினை, குறிப்பு வினைகளை விளக்குதல்
- விரவு வினையின் வகைகளை எடுத்துரைத்தல்
- பெயரெச்ச, வினையெச்சங்களுக்குரிய பொது விதிகளை விளக்குதல்
- கால வழுவமைதிகளை உணர்த்துதல்
- வினைச்சொல்லின் பொது மரபுகளை விளக்குதல்

## 8.1 அஃறிணை வினை

இது தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரு வகைப்படும்.

### 8.1.1 அஃறிணைக்குரிய தெரிநிலை வினை

தொல்காப்பியர் படர்க்கை வினைமுற்றுக்குரிய இலக்கணத்தையே அஃறிணைக்குரிய தெரிநிலை வினையில் வரையறுத்துக் கூறுவர்.

#### 8.1.1.1 படர்க்கைப் பன்மை வினைமுற்று

அ, ஆ, வ ஆகிய மூன்றும் அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்றுகளாகும்.

அஆ வஎன வரூஉம் இறுதி
அப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை (சொல். 216)

என்பது நூற்பா.

அகரம் மூன்று காலமும் பற்றி வரும். இறந்த காலம் பற்றி வருங்கால் கடதற என்னும் நான்கன் முன் ‘அன்’ பெற்றும் பெறாதும் வரும். எ.கா: தொக்கன, உண்டன, வந்தன, சென்றன – ‘அன்’ பெற்று வந்தன; தொக்க, உண்ட, வந்த, சென்ற – ‘அன்’ பெறாது வந்தன.

அகரம், கடதற தவிர்த்த ஏனையெழுத்தின் முன் ‘ங, ழ்’ என்னும் இரு புள்ளிகள் ஒழித்து ‘இன்’ பெற்று வரும். எ.கா: அஞ்சின

அகரம், யகரத்தின் முன் சிறுபான்மை இன்னேயன்றி அன் பெற்றும் பெறாதும் வரும். எ.கா: போயின – ‘இன்’ பெற்றது; போயன – ‘அன்’ பெற்றது; போய – ‘அன்’ பெறாது வந்தது.

அகரம், நிகழ்காலத்தின்கண் நில், கின்று என்பனவற்றோடு ‘அன்’ பெற்றும் பெறாதும் வரும். எ.கா: உண்ணா நின்றன, உண்ணா நின்ற; உண்கின்றன, உண்கின்ற.

அகரம், எதிர்காலத்தின்கண் பகரவகரத்தோடு 'அன்' பெற்றும் பெறாதும் வரும். எ.கா: உண்பன, உண்ப; வருவன, வருப.

ஆகாரம், எதிர்மறை வினையாய் மூன்று காலத்திற்கும் உரித்தாயினும் எதிர்காலத்துப் பயின்று வரும். காலவெழுத்துப் பெறாது உண்ணா, தின்னா என வரும்.

வகரம், உண்குவ, தின்குவ என எதிர்காலத்திற்குரித்தாய்க் குகரமடுத்தும், ஓடுவ, பாடுவ எனக் குகர மடாதும் வரும். உரிஞுவ, திருமுவ என உகரம் பெறுதலும் ஏற்றவழிக் கொள்க.

### 8.1.1.2 படர்க்கை ஒருமை வினைமுற்று

❖ தறட என்பவற்றை ஊர்ந்து நின்ற குற்றியலுகரத்தை ஈறாக உடைய சொல் ஒன்றனை உணர்த்தும் படர்க்கை வினைமுற்றாகும்.

ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும் (சொல். 217)

என்பது நூற்பா. இதனால், து, று, டு என்ற மூன்றும் படர்க்கை வினைமுற்றுகள் என்பது விளங்கும்.

தகரவுகரம், மூன்று காலத்திற்கும் உரியது. இது இறந்த காலத்து வருங்கால் கடதறவும் யகரமுமாகிய உயிர்மெய்யின் பின் வரும். எ.கா: புக்கது, உண்டது, வந்தது, சென்றது, போயது, உரிஞியது. நிகழ்காலத்தின்கண் நில், கின்று என்பனவற்றோடு அகரம் பெற்று வரும். எ.கா: நடவா நின்றது, நடக்கின்றது, உண்ணா நின்றது, உண்கின்றது. எதிர்காலத்தின்கண் பகர வகரம் பெற்று வரும். எ.கா: உண்பது, செல்வது.

றகரவுகரம், இறந்த காலத்திற்கு உரியது. இது க, ட, த, ற என்பனவற்றின் முன் 'அன்' பெற்று வரும். எ.கா: புக்கன்று, உண்டன்று, வந்தன்று, சென்றன்று. க, ட, த, ற தவிர்த்த ஏனைய எழுத்தின் முன் 'இன்' பெற்று வரும். அப்பொழுது இன்னின் னகரந்

திரிந்தும் வரும்; திரியாதும் வரும். எ.கா: கூயின்று, கூயிற்று; போயின்று, போயிற்று.

டகரவுகரம் மூன்று காலத்திற்குமுரிய வினைக்குறிப்பிற்கு மட்டுமே வரும். எ.கா: குண்டுகட்டு, குறுந்தாட்டு.

❖ இவ்வாறு பன்மையும் ஒருமையுமாகிப் பாலறிய வந்த அ, ஆ, வ, து, று, டு என்னும் ஆறு ஈற்றுச் சொல்லும் அஃறிணைக்கு உரியனவாகும்.

> பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
> அம்மூ விரண்டும் அஃறிணை யவ்வே (சொல். 218)

என்பது நூற்பா. அஃறிணைச் சொல் ஆறே தவிரப் பிறிது இல்லை என வரையறுத்தல் இந்நூற்பாவின் பயனாகும்.

## 8.1.2 அஃறிணைக்குரிய குறிப்பு வினை

❖ தொல்காப்பியர் அஃறிணைக்குரிய ஈறுகளை விதந்து கூறவில்லை. தெரிநிலை வினைக்குக் கூறப்பட்ட ஈறுகளே குறிப்பு வினைக்கும் உரிய ஈறாக நின்று பால் உணர்த்தும் என்பர்.

> பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
> அன்ன மரபின் குறிப்பொடு வரூஉங்
> காலக் கிளவி அஃறிணை மருங்கின்
> மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே (தொல்.221)

என்பது நூற்பா. தெரிநிலை வினைக்குரிய ஈறுகளுள் குறிப்பு வினைக்கு ஏற்பன து, று, அ என்னும் மூன்றுமாகும்.

❖ இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, உள, என்பனவும் பண்புகொள் கிளவியும், பண்பினாகிய சினைமுதற் கிளவியும், ஒப்பு பற்றி வரும் சொல்லும் ஆகிய இப் பத்தும் அஃறிணைக் குறிப்பு வினைக்கு உரியனவாகும்.

> இன்றில உடைய என்னுங் கிளவியும்
> அன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்
> பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்

பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும் (சொல். 220)

என்பது நூற்பா. அஃறிணைக்குரிய வினைக்குறிப்புச் சொற்களைத் தொல்காப்பியர் வழக்குப் பயிற்சி நோக்கிப் பத்து என வரையறை செய்தார் என்பர் சேனாவரையர்.

எ.கா: இன்று; இல; கோடுடைய; அதுவன்று; கோடுடைத்து; அவையல்ல; உள; கரிது, கரிய, செய்யது செய்ய – பண்புகொள் கிளவி; நெடுஞ்செவித்து, நெடுஞ்செவிய – பண்பினாகிய சினைமுதற் கிளவி; பொன்னன்னது, பொன்னன்ன – ஒப்புப் பொருள்.

❖ 'எவன்' என்னும் வினாச்சொல் அஃறிணை இரண்டு பாற்கும் உரித்து என்று சொல்லுவர் ஆசிரியர்.

அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினாவே (சொல். 219)

என்பது நூற்பா. எ.கா: அஃதெவன்?, அவையெவன்?

'எவன்' என்பதோர் பெயரும் உண்டு; அஃது இக்காலத்து 'என்' என்றும் 'என்னை' என்றும் நிற்கும். ஈண்டுக் கூறப்பட்டது வினைக்குறிப்பு முற்று என்க என்பர் சேனாவரையர்.

## 8.2 விரவு வினை

உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகளுக்கும் உரிய வினைகளை விரவு வினை என்பர். இதனைத் தொல்காப்பியர் முன்னிலை வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, வினையெச்சம், இல்லை என்னும் சொல், வேறு என்னும் சொல், செய்ம்மன என்னும் வாய்பாட்டு முற்று, செய்யுமென்னும்

வாய்பாட்டுச் சொல், செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் என எட்டு வகையாகப் பிரித்து விளக்குவர்.

முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யுஞ் செய்த வென்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
திரிபு வேறுபடூஉஞ் செய்திய வாகி
இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமைய (சொல். 222)

என்பது நூற்பா.

### 8.2.1 முன்னிலை வினைமுற்று

எதிர்முகமாய் நின்றான் தொழிலை உணர்த்துவது முன்னிலை வினைமுற்றாகும். இது ஒருமை, பன்மை என்னும் இரண்டிலும் வரும். இ, ஐ, ஆய் ஆகிய மூன்று ஈறுகளும் உயர்திணை ஆண் ஒருமை, பெண் ஒருமை, அஃறிணை ஒருமை ஆகிய முப்பாற்கும் உரியவாகும்.

அவற்றுள்
முன்னிலைக் கிளவி
இ ஐ ஆயென வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும் (சொல். 223)

என்பது நூற்பா. இவற்றுள் இகரம் தடற ஊர்ந்து எதிர்காலம் பற்றி வரும். எ.கா: உரைத்தி, உண்டி, தின்றி. ஐகாரம் ‘அம்’ ஈற்றிற்குரிய எழுத்துப் பெற்று மூன்று காலமும் பற்றி வரும். எ.கா: உண்டனை, உண்ணா நின்றனை, உண்பை. ‘ஆய்’ ஈறு ‘ஆம்’ ஈற்றிற்குரிய எழுத்துப் பெற்று மூன்று காலமும் பற்றி வரும். எ.கா: உண்டாய், உண்ணா நின்றாய், உண்பாய்.

இர், ஈர், மின் ஆகிய மூன்று ஈறுகளும் உயர்திணைப் பலர்பால், அஃறிணைப் பலவின் பால் ஆகிய இரு பாலுக்கும் உரியவாகும்.

இர்ஈர் மின்னென வரூஉம் மூன்றும்

பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர் (சொல். 224)

என்பது நூற்பா. இவற்றுள் 'இர்' ஈறு 'அர்' ஈற்றிற்குரிய எழுத்துப் பெற்று மூன்று காலமும் பற்றி வரும். எ.கா: உண்டனிர், உண்ணா நின்றனிர், உண்குவிர். 'ஈர்' ஈறு 'ஆர்' ஈற்றிற்குரிய எழுத்துப் பேறு பற்றி மூன்று காலமும் பற்றி வரும். எ.கா: உண்டீர், உண்ணா நின்றீர், உண்குவீர். 'மின்' ஈறு பிற எழுத்துப் பெறாது, ஏற்றவழி உகரம் பெற்று எதிர்காலம் பற்றி வரும். எ.கா: உண்மின், தின்மின், உரினுமின்.

இவ்வாறு தொல்காப்பியர் முன்னிலைத் தெரிநிலை வினைக்குரிய ஈறுகளை வரையறுத்துக் கூறியது போல முன்னிலைக் குறிப்பு வினைக்குரிய ஈறுகளை விதந்து கூறவில்லை. ஆனால், முன்னிலை வினைக்குறிப்பு உயர்திணை வினைக்கு ஓதிய பொருள் பற்றி ஐ, ஆய், இர், ஈர் என்னும் நான்கு ஈற்றவாய் வரும் என்பர் சேனாவரையர். எ.கா: கழலினை, கழலினாய், கழலினிர், கழலினீர் – உடைமைப்பொருள்; நாட்டை, நாட்டாய், நாட்டினிர், நாட்டினீர் – நிலப்பொருள்; பொன்னன்னை, பொன்னன்னாய், பொன்னன்னிர், பொன்னன்னீர் – ஒப்புப்பொருள்; கரியை, கரியாய், கரியிர், கரியீர் – பண்புப்பொருள்.

### 8.2.2 முன்னிலை வினைமுற்று ஒழிந்தவற்றுக்குப் பொது விதி

முன்னிலை வினை ஒழித்து ஒழிந்த, வியங்கோள், வினையெச்சம், இன்மை செப்பல், வேறென் கிளவி, செய்ம்மன, செய்யும், செய்த ஆகிய ஏழு வினைச்சொல்லும் தத்தம் பொருட்கண் தோன்றுமிடத்து, மூன்று இடத்திற்கும் ஐந்து பாலுக்கும் உரியவாகும்.

எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே (சொல். 225)

என்பது நூற்பா.

*தொல்காப்பியம் – சொல் – சேனாவரையம்*

**குறிப்பு**

### 8.2.3 வியங்கோள் வினைமுற்று

ஏவற்பொருட்டாய் வருவது வியங்கோள் வினைமுற்று எனப்படும். வியம் –ஏவல்; கோள் –கொள்ளுதல். வியங்கோளுக்கு வாழ்த்துதல், வேண்டிக்கோடல், வைதல் எனப் பலபொருள்கள் உண்டு. இருப்பினும், ஏவற்பொருட்டாய் வருதல் மிகுதியாகையால் அது நோக்கி வியங்கோள் என்றார். இது முன்னிலையும் தன்மையுமாகிய இரண்டு இடத்தோடும் வராது. எனவே, பெரும்பான்மை படர்க்கைக் கண் வரும் என்பது விளங்கும்.

அவற்றுள்
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்
மன்னா தாகும் வியங்கோட் கிளவி (சொல்.226)

என்பது நூற்பா. எ.கா: அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க – படர்க்கையில் ஐந்து பாலும் பற்றி வந்தன.

ஆயீரிடத்தொடும் கொள்ளாது என்று கூறாது 'மன்னாதாகும்' என்றதனான் சிறுபான்மை, தன்மை, முன்னிலையிலும் வருதல் கொள்க என்றும் இவ்வாறு தன்மை, முன்னிலைக்கண் வாழ்த்துதற் பொருளிலும் வேண்டிக்கோடற் பொருளிலும் வியங்கோள் வருதலின்றி ஏவல் பொருளில் வருதலில்லை என்றும் கூறுவர் சேனாவரையர்.

### 8.2.4 வினையெச்சம்

❖ ஒரு வினையைத் தனக்கு முடியும் சொல்லாகக் கொண்டு, தான் எச்சமாய் நிற்கும் சொல்லிற்கு வினையெச்சம் என்று பெயர். இவ்வினையெச்சம் செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு ஆகிய ஒன்பது வாய்பாடுகளை உடையது.

செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி (சொல். 228)



என்பது நூற்பா. வினையெச்ச வாய்பாடுகள் ஒன்பதும் விகுதியாகிய இடைச்சொல்லான் வேறுபட்டனவாகும். உகரம், ஊகாரம், புகரம், என, இயர், இய, இன், அகரம், குகரம் என்பன அவ்விடைச் சொற்களாகும்.

- உகரம் கடதற ஊர்ந்து இறந்த காலம் பற்றி இயல்பாக வரும்; கடதற எஞ்சிய எழுத்துகளில் ஊர்ந்து இகரமாய்த் திரிந்து இறந்த காலம் பற்றி வரும். எ,கா: நக்கு, உண்டு, வந்து, சென்று; எஞ்சி, உரிஞி, ஓடி.
- ஊகாரம் உண்ணூ வந்தான், தின்னூ வந்தான் எனப் பின்வருந் தொழிற்கு இடையின்றி முன்வருந் தொழின்மேல் இறந்த காலம் பற்றி வரும். அஃது உண்ணா என ஆகாரமாயும் வரும்.
- பகரவுகரம் நகுபு வந்தான் என நிகழ்காலம் பற்றி வரும். ஈண்டு நிகழ்காலம் என்பது முடிக்கும் சொல்லால் உணரப்படும் தொழிலோடு உடன்நிகழ்தலாகும். உரிஞுபு என உகரமும், கற்குபு எனக் குகரமும் ஏற்றவழிப் பெறுதல் கொள்க என்பர் சேனாவரையர்.
- என என்பது கடதற ஊர்ந்து இறந்த காலம் பற்றி வரும். அவ்வாறு வரும்போது முடிக்கும் சொல்லால் உணர்த்தப்படும் தொழிற்குத் தன் முதனிலைத் தொழில் காரணம் என்பதுபட வரும். எ.கா: சோலை புக்கென வெப்ப நீங்கிற்று, உண்டெனப் பசி கெட்டது, உரைத்தென உணர்ந்தான், மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று. எஞ்சியென எனவும் உரிஞியென எனவும் ஏனை எழுத்தோடும் வரும்.

- இயர், இய என்பன எதிர்காலம் பற்றி வரும். எ.கா: உண்ணியர், தின்னியர்; உண்ணிய, தின்னிய. போகியர், போகிய என ஏற்றவழிக் ககரம் பெற்றும் வரும்.
- ‘இன்’ எதிர்காலம் பற்றிக் காரணப்பொருட்டாய் வரும். எ.கா: மழை பெய்யிற் குள நிறையும், மெய்யுணரின் வீடு எளிதாம். நடப்பின், உரைப்பின் என ஏற்றவழிப் பகரமும் பெற்று வரும்.
- அகரம் மூன்று காலமும் பற்றி வரும். எ.கா: மழை பெய்யக் குளம் நிறைந்தது, ஞாயிறு பட வந்தான், உண்ண வந்தான். உரைப்ப, உரைக்க என ஏற்றவழிப் பகரமும் ககரமும் பெறுதல் கொள்ளப்படும்.
- குகரம் எதிர்காலம் பற்றி வரும். எ.கா: உணற்கு வந்தான், தினற்கு வந்தான்.

❖ பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும் ஈற்றவாய் வருவனவும், அவை போலக் காலங் குறித்து வருவன பிறவும் வினையெச்சமாகும்.

> பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
> அன்ன மரபின் காலங் கண்ணிய
> என்ன கிளவியும் அவற்றியல் பினவே (சொல்.229)

என்பது நூற்பா.

- ‘பின்’ ஈறு இறப்பும் நிகழ்வும் பற்றி வரும். எ.கா: நீயிர் பொய் கூறிய பின் மெய் கூறுவர் யார்?, நீயிவ்வாறு கூறுகின்றபின் உரைப்பதுண்டோ.
- ‘முன்’ ஈறு இறந்த காலம் பற்றி வரும். எ.கா: மருந்து தின்னா முன் நோய் தீர்ந்தது.
- ‘கால்’ ஈறு மூன்று காலமும் பற்றி வரும். எ.கா: வலனாக வினையென்று வணங்கிநாம் விடுத்தக்கால் (கலித்.35), அகன்றவர் திறத்தினி நாடுங்கால் (கலித்.16).
- ‘கடை’ ஈறு இறந்த காலம் பற்றி வரும். எ.கா: தொடர் கூரத் துவ்வாமை வந்தக்கடை (கலித்.22)

- ‘வழி’ என்னும் ஈறு மூன்று காலமும் பற்றி வரும். எ.கா: உரைத்த வழி, உரைக்கும் வழி.
- ‘இடத்து’ என்னும் ஈறு மூன்று காலமும் பற்றி வரும். எ.கா: உரைத்த விடத்து, உரைக்குமிடத்து.

கால், வழி, இடத்து என்னும் ஈறுகளில் நிகழ்காலத்து வாய்பாடு எதிர்காலத்திற்கும் ஏற்கும்.

❖ மேற்கூறப்பட்ட பதினைந்து வினையெச்சங்களுள் முதற்கண் நின்ற செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும் தம் வினைமுதல் வினையான் முடியும்.

> அவற்றுள்
> முதல்நிலை மூன்றும் வினைமுதல் முடிபின

என்பது நூற்பா. எ.கா:

- உண்டு வந்தான், உண்ணூ வந்தான், உண்குபு வந்தான் – தெரிநிலை வினை
- கற்று வல்லனாயினான், கல்லூ வல்லனாயினான், கற்குபு வல்லனாயினான் – குறிப்பு வினை.

❖ வினைமுதல் முடிபினவாகிய செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்று சொல்லும் சினைவினை நின்று, சினை வினையோடு முடியாது முதல் வினையோடு முடியினும் வினையான் ஒரு தன்மையவாகும்.

> அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றின்
> சினையொடு முடியா முதலொடு முடியினும்
> வினையோ ரனைய வென்மனார் புலவர் (சொல். 231)

என்பது நூற்பா. சினைவினை சினையொடும் முடியும்; முதலொடும் முடியும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். எ.கா: கையிற்று வீழ்ந்தான், கையிறூ வீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான்.

❖ செய்து, செய்யூ, செய்பு என்னும் முதனிலை மூன்றுமல்லாத பிற வினையெச்சம் வினைமுதல் வினையானும், ஆண்டு வந்து பொருந்தும் பிற வினையானும் வரையறையின்றித் தாம் இயலுமாற்றான் முடியும்.

ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினைநிலை யானும்
தாமியல் மருங்கின் முடியும் என்ப (சொல். 232)

என்பது நூற்பா. எ.கா:

- மழை பெய்தெனப் புகழ் பெற்றது – வினைமுதல் வினை; மழை பெய்தென மரங் குழைத்தது – பிறவினை – செய்தென
- மழை பெய்யிய ரெழுந்தது – வினைமுதல் வினை; மழை பெய்யியர் பலி கொடுத்தார் – பிறவினை – செய்யியர்
- மழை பெய்யிய முழங்கும் – வினைமுதல் வினை; மழை பெய்யிய வான் பழிச்சுதும் – பிறவினை – செய்யிய
- மழை பெய்யிற் புகழ் பெறும் – வினைமுதல் வினை; மழை பெய்யிற் குளம் நிறையும் – பிறவினை – செயின்
- மழை பெய்யப் புகழ் பெற்றது – வினைமுதல் வினை; மழை பெய்ய மரங் குழைத்தது – பிறவினை – செய
- மழை பெய்தற்கு முழங்கும் – வினைமுதல் வினை; மழை பெய்தற்குக் கடவுள் வாழ்த்தும் – பிற வினை – செயற்கு
- இறந்தபின் இளமை வாராது – வினைமுதல் வினை; கணவன் இனிதுண்டபின் காதலி முகமலர்ந்தது – பிற வினை – பின்

பிற எச்சங்கள் இருவகை வினையுங் கொள்ளுதல் வழக்கினுள் கண்டு கொள்க என்பர் சேனாவரையர்.

❖ ஒரு வாய்பாட்டானும் மற்றப் பல வாய்பாட்டானும் வினையெஞ்சு கிளவி அச்சொற்கண் முறையான் முடியாது அடுக்கிவரினும், முன்னின்ற எச்சம் முடிய ஏனையவும் பொருள் முடிந்தனவாம் என்பர் தொல்காப்பியர்.

பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியாது அடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே (சொல். 233)

என்பது நூற்பா. வினையெச்சங்கள் தனித்தனி வினை கொண்டு முடிதல் இயல்பு. அவ்வாறின்றி, பல அடுக்கி ஒரு வினையையே

கொண்டு முடிதலும் உண்டு என்பது இந் நூற்பாவின் கருத்தாகும். எ.கா:

- உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான் - இதில் செய்து என்னும் ஒரு வாய்பாட்டுச் சொற்கள் பல அடுக்கி 'வந்தான்' என்னும் ஒரு வினை கொண்டு முடிந்தன.
- உண்டு பருகூத் தின்குபு வந்தான் – இதில் செய்து, செய்யூ, செய்பு என்னும் பல வாய்பாட்டுச் சொற்கள் அடுக்கி 'வந்தான்' என்னும் ஒரு வினை கொண்டு முடிந்தன.

### 8.2.5 இல்லை, வேறு, செய்ம்மன என்பன

இவை பற்றிய இலக்கணத்தைத் தொல்காப்பியர் தனியே கூறவில்லை. விரவு வினைகளுள் முன்னிலை வினை நீங்கலாக ஏனைய ஏழு சொற்களும் மூன்றிடத்திற்கும் ஐம்பாலுக்கும் உரியன எனக் கூறப்பட்ட பொது விதியினால் இம்மூன்று சொற்களும் ஐம்பாலுக்கும் மூவிடத்திற்கும் உரியன என்பது விளங்கும். இவற்றுள் இல்லை, இல் என்பன 'இன்மை செப்பல்' ஆகும். தன்னை உணர்த்தி நின்றது 'வேறு' எனப்படும். 'செய்ம்மன' என்பது 'மன' ஈற்று முற்றாய் எதிர்காலம் உணர்த்தும். எ.கா: உண்மன

### 8.2.6 செய்யும், செய்த என்னும் பெயரெச்சம்

ஒரு பெயரைத் தனக்கு முடியும் சொல்லாகக் கொண்டு தான் எச்சமாக நிற்கும் சொல்லிற்குப் பெயரெச்சம் என்று பெயர். அது, நிலம், பொருள், காலம், கருவி, வினைமுதல், வினை என்னும் அறுவகைப் பெயர்களையும் கொண்டு முடியும். அவ்வாறு வரும் பெயரெச்சங்கள் செய்யும்,செய்த என்னும் இரு வாய்பாடுகளாக வரும்.

நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய
செய்யும் செய்த வென்னுஞ் சொல்லே (சொல். 234)

என்பது நூற்பா. செய்யும், செய்த என்னும் சொற்கள் தொழில் முதனிலைகள் எட்டனுள் இன்னதற்கு, இது பயனாக என்னும் இரண்டு ஒழித்து ஏனைய ஆறு பொருட்கும் ஒத்த உரிமையவாகும் என்பது இந் நூற்பாவின் பொருளாகும். எ.கா:

- வாழும் இல், கற்கும் நூல், துயிலும் காலம், வனையும் கோல், ஓதும் பார்ப்பான், உண்ணும் ஊன் – இவற்றில் ‘செய்யும்’ என்னும் பெயரெச்சத்து ‘உம்’ ஈறு, கால எழுத்துப் பேறு பெறாது ஆறு பொருட்கும் உரித்தாய் வந்தது.
- புக்க இல், உண்ட சோறு, வந்த நாள், வென்ற வேல், ஆடிய கூத்தன், போயின போக்கு – இவற்றில் ‘செய்த’ என்னும் பெயரெச்சத்து இறுதி யகரம் கடதற வும் யகர னகரமும் ஊர்ந்து ஆறு பொருட்கும் உரித்தாய் வந்தது.

செய்யும், செய்த என்னும் சொற்கள் இன்னதற்கு, இது பயனாக என்னும் இரண்டனுக்கும் சிறுபான்மை வரும் என்பர் சேனாவரையர். எ.கா:

- அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான், ஆ கொடுத்த பார்ப்பான் – இவற்றில் செய்யும், செய்த என்பன இன்னதற்கு என்னும் பொருளில் வந்தன.
- ஆடை யொலிக்கும் கூலி, ஆடை யொலித்த கூலி – இவற்றில் செய்யும், செய்த என்பன இது பயன் என்னும் பொருளில் வந்தன.

❖ நிலம் முதலாகிய பொருளோடு வருங்கால் ‘செய்யும்’ என்னும் சொல் விலக்கப்பட்ட பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை என்னும் மூவகைக்கும் உரியதாகும்.

> அவற்றொடு வருவழி செய்யுமென் கிளவி
> முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே (சொல். 235)

என்பது நூற்பா.

❖ பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையுமாகிய அவ்வயின் மூன்றும், நிகழ்காலத்து வரும் 'செய்யும்' என்னும் சொல்லோடு பொருந்தாது.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு பொருந்தா (சொல்.227)

என்பது நூற்பா.

❖ மேற்சொல்லப்பட்ட எச்சங்களுள் 'செய்யும்' என்னும் பெயரெச்சத்திற்கு ஈற்றுமிசை நின்ற உகரம் தன்னால் ஊரப்பட்ட மெய்யொடும் கெடும். இவ்விடத்தை அறிதல் வேண்டும்.

அவற்றுள்
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகரம்
அவ்விட னறித லென்மனார் புலவர் (சொல். 238)

என்பது நூற்பா. எ.கா: வாம் புரவி போம் புழை – இவற்றில் வாவும் புரவி, போகும் புழை என்பன ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெட வாம்புரவி, போம்புழை என நின்றன.

செய்யும் என்னும் முற்றுச் சொற்கு ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெடும், மெய்யொழித்துங் கெடும் என்பது பெறப்படும் என்பர் சேனாவரையர். எ.கா:

- அம்பல் ஊரும் அவனொடு **மொழிமே** (குறுந்.51) - ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெட்டது.
- சார னாடவென் றோழியுங் **கலுழ்மே** - ஈற்றுமிசை உகரம் மெய்யொழித்துக் கெட்டது.

## 8.3 பெயரெச்ச, வினையெச்சங்களுக்குரிய பொது விதி

❖ பெயரெச்ச, வினையெச்சங்கள் எதிர் மறுத்துச் சொல்லினும் தத்தம் பொருள்நிலையில் வேறுபடாது.

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா
(சொல். 236)

என்பது நூற்பா. தம் எச்சமாகிய பெயரையும் வினையையும் கொண்டல்லது அமையாத நிலையைப் ‘பொருணிலை’ என்றார் என்பர் சேனாவரையர். எ.கா:

- உண்ணா இல்லம், உண்ணாச் சோறு, உண்ணாக் காலம், வனையாக் கோல், ஓதாப் பார்ப்பான், உண்ணா வூன் – பெயரெச்சம்
- உண்ணாது வந்தான், உண்ணாமைக்குப் போயினான் - வினையெச்சம்

❖ பெயரெச்ச, வினையெச்சங்கள் தாம்தாம் கொண்டு முடிக்கும் சொற்களின் இடையே பொருந்துவதற்கேற்ற பிற சொற்கள் வரின் அவற்றையும் ஏற்றுக்கொண்டு அவ்வாறு இடைநிற்றலை நீக்கார்.

தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார் (சொல்.237)

என்பது நூற்பா. எ.கா:

- கொல்லுங் காட்டுள் யானை, கொன்ற காட்டுள் யானை – பெயரெச்சம்
- உழுது சாத்தன் வந்தான், உழுது ஏரொடு வந்தான் – வினையெச்சம்

‘எச்சொல்லாயினும்’ என்றதனான் உழுது ஓடி வந்தான், கவளங் கொள்ளாக் களித்த யானை என எச்சமும் இடைநிலையாதல் கொள்க என்பர் சேனாவரையர்.

## 8.4 கால வழுவமைதி

தொல்காப்பியர் ஏழு வகை வழுவமைதிகளுள் கால வழுவமைதி நீங்கலாகப் பிறவற்றைக் கிளவியாக்கத்துள் விரித்துக்

கூறினார். வினைச்சொல் காலமொடு வருதலை இலக்கணமாக உடையதாகையால் அதற்கு இயைபுடைய கால வழுவமைதியை வினையியலில் விரித்துக் கூறியுள்ளார்.

❖ செய்து என்னும் வினையெச்சத்தினது இறந்த காலம், எதிர்காலத்தை உணர்த்தும் சொல்லோடு இயைந்து வருதலும் உண்டு.

செய்தெ னெச்சத் திறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம் (சொல்.239)

என்பது நூற்பா. இதனால் இறந்த காலத்துச் சொல் எதிர்காலத்து வந்ததாயினும் அமைக என்க் கால வழுவமைதி கூறினார்.

எ.கா: நீ யுண்டு வருவாய், உழுது வருவாய் – இவற்றில் செய்தென் எச்சம் பொருள் சிதையாமல் எதிர் காலத்து வந்தது.

❖ மூன்று காலத்திற்கும் ஒத்து இயங்கும் இயல்பினையுடைய பொருள்களை நிகழ்காலத்திற்குரிய ‘செய்யும்’ என்னும் சொல்லால் கிளத்தல் வேண்டும்.

முந்நிலைக் காலந் தோன்று மியற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்
(சொல். 240)

என்பது நூற்பா. முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை எம்முறைப் பொருள்களாவன மலையது நிலையும் ஞாயிறு, திங்களது இயக்கமும் முதலாயினவாகும். அவற்றை இறந்தகாலச் சொல்லானும் எதிர்காலச் சொல்லானும் சொல்லாது, இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் அகப்படுத்து மூன்று காலத்திற்கும் பொதுவாய் நிற்கும் ‘செய்யும்’ என்னும் சொல்லால் சொல்லுக என்பது இந் நூற்பாவின் பொருளாகும். ‘பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்’ என்பதால் முற்றானும் எச்சத்தானும் கிளத்தல்

வேண்டும் என்பது பெறப்படும். எ.கா: மலை நிற்கும், ஞாயிறு இயங்கும், திங்கள் இயங்கும்.

இவ்வாறு நிகழ்காலச் சொல் இறந்த காலமும் எதிர் காலமும் உணர்த்துதல் வழுவாயினும் அமைக என வழுவமைத்தார்.

❖ எதிர்காலத்திலும் நிகழ்காலத்திலும் சொல்ல வேண்டிய வினைச்சொற்களை விரைவு பற்றி இறந்த காலத்தாற் சொல்லுதல் உண்டு.

வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர் (சொல். 241)

என்பது நூற்பா. எ.கா: சோறு பாணித்த (காலம் நீட்டித்த) வழி உண்ணாதிருந்தானைப் போகல் வேண்டும் குறையுடையான் ஒருவன், இன்னும் உண்டிலையோ என்றவழி, உண்டேன் போந்தேன் என்பான்; உண்ணா நின்றானும் உண்டேன் போந்தேன் என்பான். இதில் எதிர்காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் உரிய பொருளை விரைவு பற்றி இறந்த காலத்தாற் கூறியவாறு கண்டு கொள்க.

இவ்வாறு வருதல் வழுவாயினும் வழுவமைதியாகக் கொள்க என்பது கருத்தாகும்.

❖ உலகத்தாரால் சிறந்ததென்று மதிக்கப்பட்டதொரு வினையது பயனைச் சொல்லுங்கால், ஒருவனைக் குறித்துச் சொல்லின் எதிர் காலத்திலோ அல்லது இறந்த காலத்திலோ சொல்லுதல் மரபு. அவ்வாறு ஒருவனைக் குறித்து சொல்லாது அவ்வினையது பயனை மட்டும் சொல்லின், நிகழ் காலத்தால் சொல்லினும் வழுவில்லை. இதனை,

மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து

மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே (சொல். 242)

என்னும் நூற்பா உணர்த்தும். மிக்கதன்கண் நிகழும் வினைச்சொல்லை நோக்கி, திரிபின்றிப் பயக்கும் அம்மிக்கதனது பண்பைக் குறித்து வரும் வினைமுதற் சொல், சுட்டிச் சொல்லப்படுவதோர் வினைமுதல் இல்லாதவிடத்து நிகழ் காலத்தான் யாப்புறுத்த பொருளையுடைத்தாம் என்பது இந்நூற்பாவின் பொருளாகும்.

எ.கா: யாவன் தவஞ்செய்தான் அவன் சுவர்க்கம் புகும்; யாவன் தாயைக் கொன்றான் அவன் நிரயம் புகும் எனவும், ஒருவன் தவஞ் செய்யிற் சுவர்க்கம் புகும்; தாயைக் கொல்லின் நிரயம் புகும் எனவும், மிக்கதன் வினைச்சொல் நோக்கி, அம்மிக்கதன் திரிபால் பண்பு குறித்த வினைமுதற் கிளவி நிகழ் காலத்தான் வந்தது.

இந்நூற்பாவால் தொல்காப்பியர் தவஞ் செய்யிற் சுவர்க்கம் புகுவான் என எதிர் காலத்தாற் சொல்லப்படுவதனை நிகழ்காலத்தால் சொல்லுதல் வழுவாயினும் அமைக என வழுவமைத்தார்.

❖ எதிர்காலத்திற்குரிய வினைச்சொற் பொருண்மை, இயற்கையாதலும், தெளியப்படுதலும் சொல்லுமிடத்து இறந்தகாலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானும் விளங்கத் தோன்றும்.

> வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
> இறப்பினும் நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்றும்
> இயற்கையும் தெளிவுங் கிளக்குங் காலை (சொல். 245)

என்பது நூற்பா. இயற்கை என்பது, பெற்றி (இயல்பு) முதலாயினவற்றால் உணரப்படுவது. அதாவது வழக்காற்றில் இதுவரை நிகழ்ந்த நிகச்சி பற்றி அறியப்படுவதாகும். தெளிவு என்பது, நூல் தெளிவான் வருவது. அதாவது, இதுவரை நிகழ்ந்தது பற்றி இனியும் நிகழும் என நூல்களால் அறியப்படுவதாகும். எ.கா:

- ஒரு காட்டின்கட் போவார் கூறை (ஆடை) கோட்படுதல் ஒருதலையாகக் கண்டு இஃது இயற்கை என்று துணிந்தான், கூறை கோட்படா முன்னும், இக்காட்டுட் போகிற் கூறை கோட்பட்டான்; கூறை கோட்படும் என்று கூறுதல் – இயற்கை
- எறும்பு முட்டை கொண்டு தெற்றி (மேட்டு நிலம்) ஏறின் மழை பெய்தல் நூலாற் றெளிந்தான், அவை முட்டை கொண்டு தெற்றி ஏறியவழி, மழை பெய்யா முன்னும் மழை பெய்தது; மழை பெய்யும் என்று கூறுதல் –தெளிவு

❖ இறப்பும் எதிர்வுமாகிய இரண்டு காலமும் மயங்குமொழிப் பொருளாய் விளங்கத் தோன்றும்.

இறப்பே எதிர்வே ஆயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி (சொல். 247)

என்பது நூற்பா. இது வழுவாயினும் தொல்காப்பியர் வழுவமைதியாகக் கொள்க என்பர். எ.கா: இவர் பண்டு இப்பொழிலகத்து விளையாடுவர்; நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தால் பின், நீயென் செய்குவை – இதில் பண்டு விளையாடினார் என்றும் நாளை வருவன் என்றும் கூறாமல் இறந்த காலமும் நிகழ்காலமும் மயங்குமாறு கூறப்பட்டுள்ளது.

❖ இறப்பும் எதிர்வும் மட்டுமல்லாமல் நிகழ் காலமும் அவற்றோடு மயங்கும்.

ஏனைக் காலமும் மயங்குதல் வரையார் (சொல். 248)

என்பது நூற்பா. எ.கா: இவள் பண்டு இப்பொழிலகத்து விளையாடும் எனவும் நாளை வரும் எனவும் வரும்.

## 8.5 வினைச்சொல் பற்றிய பொது மரபுகள்

இது செயல் வேண்டும் என்பதுபட வருஞ் சொல், தன்பாலானும் பிறன் பாலானும் என ஈரிடத்தும் நிலைபெறும் பொருண்மையை உடையதாகும்.



இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி

இருவயி னிலையும் பொருட்டா கும்மே
தன்பா லானும் பிறன்பா லானும் (சொல். 243)

என்பது நூற்பா. எ.கா: ஓதல் வேண்டும் என்றவழி வேண்டும் என்பது ஓதற்கு வினைமுதலாயினாற்கும் அவன் ஓதலை விரும்பும் தந்தைக்கும் ஏற்றவாறு கண்டு கொள்க.

- ❖ துணிந்து திட்பமெய்துதற்கு வரும் வினாவெழுத்தினை ஈற்றிலே கொண்டு நிற்கும் வினைச்சொல் வினைநிகழ்வு உணர்த்தாது எதிர்மறுத்து உணர்த்துதற்கு உரித்தாதலும் உண்டு.

வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்
எதிர்மறுத் துணர்த்தற் குரிமையும் உடைத்தே (சொல். 244)

என்பது நூற்பா. வினாவாவன, ஆ, ஏ, ஓ என்பனவாகும். எ.கா: கதத்தானாக (சினம்) களியானாக ஒருவன் தெருளாது ஒருவனை வைதான்; அவன் தெருண்டக்கால் வையப்பட்டான், நீ என்னை வைதாய் என்றவழித் தான் வைததை உணராமையின் 'வைதேனே' என்னும். ஆண்டு அவ்வினாவொடு வந்த வினைச்சொல் 'வைதிலேன்' என்னும் எதிர்மறைப் பொருள்பட வந்தவாறு கண்டு கொள்க.

- ❖ செயப்படுபொருளைச் செய்த வினைமுதல் போளாத் தொழிற்படச் சொல்லுதலும் வழக்கின்கண் இயலும் மரபாகும்.

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே (சொல்.246)

என்பது நூற்பா. எ.கா: திண்ணை மெழுகிற்று, கலங் கழீஇயிற்று.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

---

**குறிப்பு:**

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக

- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. படர்க்கைப் பன்மை வினைமுற்று ஈறுகள் யாவை?

……………………………………………………………………………
……………………

2. படர்க்கையொருமை வினைமுற்று ஈறுகள் யாவை?

……………………………………………………………………………
……………………

3. அஃறிணை வினை என்றால் என்ன?

……………………………………………………………………………
…………………….

4. முன்னிலை வினைமுற்று என்றால் என்ன?

……………………………………………………………………………
……………………..

5. வியங்கோள் வினைமுற்று என்பது யாது

……………………………………………………………………………
……………………..

**தொகுத்தறிவோம்**

அ, ஆ, வ ஆகிய மூன்றும் அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்றுகளாகும். தறட என்பவற்றை ஊர்ந்து நின்ற குற்றியலுகரத்தை ஈறாக உடைய சொல் ஒன்றனை உணர்த்தும் படர்க்கை வினைமுற்றாகும். தொல்காப்பியர் அஃறிணைக்குரிய ஈறுகளை விதந்து கூறவில்லை. தெரிநிலை வினைக்குக் கூறப்பட்ட ஈறுகளே குறிப்பு வினைக்கும் உரிய ஈறாக நின்று பால் உணர்த்தும் என்பர். இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, உள, என்பனவும் பண்புகொள் கிளவியும், பண்பினாகிய சினைமுதற் கிளவியும், ஒப்பு பற்றி வரும் சொல்லும் ஆகிய இப் பத்தும் அஃறிணைக் குறிப்பு வினைக்கு உரியனவாகும். 'எவன்' என்னும் வினாச்சொல் அஃறிணை இரண்டு பாற்கும் உரியதாகும். உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகளுக்கும் உரிய

வினைகளை விரவு வினை என்பர். இதனைத் தொல்காப்பியர் முன்னிலை வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, வினையெச்சம், இல்லை என்னும் சொல், வேறு என்னும் சொல், செய்ம்மன என்னும் வாய்பாட்டு முற்று, செய்யுமென்னும் வாய்பாட்டுச் சொல், செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் என எட்டு வகையாகப் பிரித்து விளக்குவர். வினைச்சொல் காலமொடு வருதலை இலக்கணமாக உடையதாகையால் அதற்கு இயைபுடைய கால வழுவமைதியை விரித்துக் கூறியுள்ளார்.

**அருஞ்சொற்பொருள்**

பாணித்தல் – காலம் நீட்டித்தல்; பெற்றி – இயல்பு; கூறை – ஆடை; தெற்றி – மேட்டு நிலம்

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. அ, ஆ, வ.
2. து, று, டு.
3. உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகளுக்கும் உரிய வினைகளை விரவு வினை என்பர்.
4. எதிர்முகமாய் நின்றான் தொழிலை உணர்த்துவது முன்னிலை வினைமுற்றாகும்.
5. ஏவற்பொருட்டாய் வருவது வியங்கோள் வினைமுற்று எனப்படும்.

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. முன்னிலை வினைமுற்று குறித்தெழுதுக.
2. வியங்கோள் வினைமுற்று குறித்து விளக்குக.
3. வினையெச்சம் பற்றி எடுத்துரைக்க.
4. பெயரெச்சம் குறித்துக் கூறுக.
5. காலவமைதி குறித்த வினையியல் இலக்கணங்களைக் கட்டுரைக்க.

# பிரிவு -3

## இடையும் உரியும்

### கூறு – 9:

### தொல்காப்பியம் – சொல் – இடையியல் – முதல் 21 நூற்பாக்கள்

**அமைப்பு**

அறிமுகம்

நோக்கங்கள்

9.1 இடைச்சொல்லின் இலக்கணம்

9.2 இடைச்சொல்லின் வகைகள்

9.3 இடைச்சொல் நிற்கும் இடமும் வேறுபடும் இடமும்

9.4 தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொற்கள்

9.4.1 மன்

9.4.2 தில்

9.4.3 கொன்

9.4.4 உம்

9.4.5 ஓகாரம்

9.4.6 ஏகாரம்

9.4.7 என, என்று

9.4.8 மற்று

9.4.9 எற்று

9.4.10 மற்றையது

9.4.11 மன்ற

9.4.12 தஞ்சம்

9.4.13 அந்தில்

9.4.14 கொல்

9.4.15 எல்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்



## அறிமுகம்

இடை என்பதற்கு இடம் என்பதும் இடை (நடு) என்பதும் பொருள். பெயர்ச்சொல் இடமாகவும், வினைச்சொல் இடமாகவும் வரும் காரணத்தால் அச்சொற்கள் 'இடைச்சொல்' எனப் பெயர் பெற்றன என்பர் சிலர். இன்னும் சிலர் மொழிக்கு முன்னும் பின்னுமாக வரினும் பெரும்பான்மையும் இடையில் வருதலின் இடைச்சொல் எனப் பெயர் பெற்றன என்பர்.

## நோக்கங்கள்

- இடைச்சொல்லின் இலக்கணம் கூறுதல்
- இடைச்சொல்லின் வகைகளை எடுத்துரைத்தல்
- இடைச்சொல் நிற்கும் இடமும் வேறுபடும் இடமும் சுட்டுதல்
- தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொற்களை விளக்குதல்

## 9.1 இடைச்சொல்லின் இலக்கணம்

இடைச்சொற்கள் பெயரைச் சார்ந்து பெயர்ப் பொருளையும் வினையைச் சார்ந்து வினைப் பொருளையும் உணர்த்த வல்லன. இவை தமக்கெனத் தனித்த பொருளுடையன அல்ல.

> இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
> நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே (சொல். 249)

என்பது நூற்பா. எ.கா:

- அதுகொல் தோழி காம நோயே (குறுந்.5) – இதில் ‘கொல்’ என்னும் இடைச்சொல் பொருளைச் சார்ந்து பொருளை வெளிப்படுத்தியது.
- வருகதில் லம்மவெஞ் சேரி சேர (அகநா. 276) – இதில் ‘தில்’ ‘அம்ம’ என்னும் இடைச்சொற்கள் வினையைச் சார்ந்து பொருளை வெளிப்படுத்தின.

## 9.2 இடைச்சொல்லின் வகைகள்

சொற்கள் ஒன்றொடொன்று புணர்கின்ற பொழுது அவற்றின் பொருள்நிலைக்கு உதவி செய்து வருவனவாகிய சாரியைகள், வினைச்சொற்களில் காலங் காட்டுவனவாய் வரும் இடைநிலைகளும் விகுதிகளும், வேற்றுமை உருபுகள், தாம் சார்ந்த பொருளை வேறுபடுத்தி வரும் அசைநிலைகள், செய்யுட்களில் இசை நிறைத்தலே பொருளாக வரும் இசைநிறைச் சொற்கள், கூறுவார் தாம் தாம் குறித்த குறிப்பினாலே அவரவர் குறித்த பொருளை விளக்கி நிற்கும் குறிப்புச் சொற்கள் என இடைச்சொல் ஏழு வகைப்படும்.

அவைதாம்
புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்று
அப்பண் பினவே நுவலுங் காலை (சொல். 250)

என்பது நூற்பா. இவற்றுள் சாரியைகள் எழுத்ததிகாரத்துப் புணரியலில் கூறப்பட்டன. கால இடைநிலைகளும் விகுதிகளும் வினையியலில் கூறப்பட்டன. உவம உருபுகள் உவமவியலில் கூறப்படும். எஞ்சிய அசைநிலை, இசைநிறை, தத்தம் குறிப்பிற் பொருள் செய்குவன ஆகிய மூன்றும் இவ்விடையியலில் கூறப்பட்டுள்ளன.

## 9.3 இடைச்சொல் நிற்கும் இடமும் வேறுபடும் இடமும்

இடைச்சொற்கள் தம்மால் சாரப்படும் பெயர், வினை ஆகிய சொற்களுக்கு முன்னும் பின்னும் வருதலும், தத்தம் ஈறு திரிந்து வருதலும், ஓர் இடைச்சொல்லுடன் பிறிதோர் இடைச்சொல் சேர்ந்து வருதலும் ஆகிய இயல்புகளைக் கொண்டதாகும்.

அவைதாம்
முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை யெல்லாம் உரிய வென்ப (சொல்.251)

என்பது நூற்பா.

- அது**மன்**, கேண்**மியா** – முன்னடுத்து வருதல்
- **கொன்**னூர், **ஓஒ**வினிதே – பின்னடுத்து வருதல்
- உடனுயிர் போகுக**தில்ல** - ஈறு திரிந்து வருதல்
- வருக**தில் லம்ம**வெஞ் சேரி சேர – பிறிதவண் நிற்றல்

## 9.4 தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொற்கள்

தத்தம் குறிப்பில் பொருள் செய்குவன மன், தில் போல்வனவாகும். குறிப்பு சொல்லுவான்கண்ணதாயினும் அவன் குறித்த பொருளை இவ்விடைச்சொற்கள் குறித்து நிற்கும்.

### 9.4.1 மன்

இது கழிவு, ஆக்கம், ஒழியிசை என்னும் மூன்று பொருளில் வரும்.

கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று
அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே (சொல். 252)

என்பது நூற்பா. எ.கா:

- சிறியகட் பெறினே யெமக்கீயு **மன்னே** – கழிவு

- பண்டு காடு**மன்** இன்று கயல் பிறழும் வயலாயிற்று – ஆக்கம்
- கூரியதோர் வாள்**மன்** – திட்பமின்று என்று வந்த ஒழியிசை

### 9.4.2 தில்

இது விழைவு, காலம், ஒழியிசை என்னும் மூன்று பொருளில் வரும்.

விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்று
அம்மூன் றென்ப தில்லைச் சொல்லே (சொல். 253)

என்பது நூற்பா.

- வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப், பெறுக**தில்** லம்ம யானே - விழைவு
- பெற்றாங் கறிக**தில்** லம்மவிவ் வூரே - காலம்
- வருக**தில்** லம்மவெஞ் சேரி சேர – இன்னது செய்வல் என்னும் ஒழியிசைப் பொருள்

### 9.4.3 கொன்

இது அச்சம், பயனின்மை, காலம், பெருமை என்னும் நான்கு பொருளில் வரும்.

அச்சம் பயமிலி காலம் பெருமையென்று
அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே (சொல்.254)

என்பது நூற்பா. எ.கா:

- **கொன்**முனை யிரவூர் போலச், சிலவா குகநீ துஞ்சு நாளே – அச்சம்
- **கொன்னே** கழிந்தன் றிளமை – பயனின்மை
- **கொன்**வரல் வாடை – காலம்
- **கொன்**னூர் துஞ்சினும் – பெருமை

## 9.4.4 உம்

❖ இது எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருளில் வரும்.

எச்சஞ் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை யாக்கமென்று
அப்பால் எட்டே உம்மைச் சொல்லே (சொல். 255)

என்பது நூற்பா. எ.கா:

- சாத்த**னும்** வந்தான் – இதில் உள்ள உம்மை கொற்றனும் வந்தான் என எச்சம் குறித்து நிற்றலின் எச்சவும்மை
- குறவ**ரும்** மருளுங் குன்றத்துப் படினே – இதில் குன்றத்து மயங்காது இயங்குதற்குக் குறவர் சிறந்தமையாற் சிறப்பும்மை
- ஒன்று இரப்பான்போ லிளிவந்துஞ் சொல்லு முலகம், புரப்பான் போல்வதோர் மதுகை**யும்** உடையன் – இதில் இன்னான் என்று துணியாமைக்கண் வருதலின் ஐயவும்மை
- சாத்தன் வருதற்**கும்** உரியன் – இதில் வாராமைக்கும் உரியன் என்னும் எதிர்மறையை ஒழிபாக உடைத்தாய் நிற்றலின் எதிர்மறையும்மை
- தமிழ்நாட்டு மூவேந்த**ரும்** வந்தார் – இதில் எஞ்சாப் பொருட்டாகலான் முற்றும்மை
- **நிலனும் நீரும் தீயும்** வளி**யும்** ஆகாய**மும்** எனப் பூதமைந்து – இதில் எண்ணுதற்கண் வருதலின் எண்ணும்மை
- இருநிலம் அடிதோய்தலிற் திருமக**ளும்** அல்லள் அரமக**ளும்** அல்லள் இவள் யாராகும்? – இதில் தெரிதற் பொருட்கண் வருதலின் தெரிநிலை உம்மை. திருமகளே அரமகளே என ஐயுறாது அவரை நீக்குதலின் ஐயவும்மையிலிருந்து வேறுபட்டது.
- நெடிய**னும்** வலிய**னும்** ஆயினான் – இதில் வரும் உம்மை ஆக்கம் குறித்தது.

❖ இவற்றுள் எச்சப் பொருளில் வரும் உம்மையும் எதிர்மறைப் பொருளில் வரும் உம்மையும் தம்முள் மயங்குதல் இல்லை.

எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையுந்

தம்முள் மயங்கும் உடனிலை யிலவே (சொல். 283)

என்பது நூற்பா. எ.கா: சாத்தனும் கொற்றனும் வரலுமுரியன் – இதில் இரு உம்மையும் இயையாமை விளங்கும்.

❖ எச்சவும்மையால் தழுவப்படும் எஞ்சுபொருட் கிளவி, உம்மை இல் சொல்லாயின் அவ்வும்மை இல் சொல்லை அவ்வும்மைத் தொடருக்குப் பின் சொல்லாது முன் சொல்லுதல் வேண்டும்.

எஞ்சுபொருட் கிளவி செஞ்சொல் ஆயின்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல் (சொல். 283)

என்பது நூற்பா. தொல்காப்பியர் உம்மை இல்லாத சொல்லைச் 'செஞ்சொல்' என்றார்.

எ.கா: சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான்.

❖ முற்றும்மைப் பொருளில் வருகின்ற தொகைச்சொல் ஒரோவழி எச்சப் பொருளையும் தரும்.

முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கின்
எச்சக்கிளவி யுரித்தும் ஆகும் (சொல். 285)

என்பது நூற்பா. எ.கா: பத்துங் கொடால், அனைத்துங் கொடால் என்புழி முற்றும்மை தம்பொருள் உணர்த்தாது சில எஞ்சக் கொடு என்னும் பொருள் தோன்றி நின்றது.

### 9.4.5 ஓகாரம்

இது பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு ஆகிய ஆறு பொருளில் வரும்.

பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகா ரம்மே (சொல். 256)

என்பது நூற்பா. எ.கா:

- யா**னோ** தேறே னவர்பொய் வழங்கலரே - பிரிநிலை
- சாத்தன் உண்டா**னோ** - வினா

- யா**னோ** கொள்வேன் – எதிர்மறை
- கொள**லோ** கொண்டான் – இதில் கொண்டுய்யப் போயினான் என்பது முதலாய ஒழியிசை நோக்கி நிற்றலின் ஒழியிசை
- திருமக**ளோ** அல்லள் அரமக**ளோ** அல்லள் இவள் யாற்? – இதில் தெரிதற்கண் வருதலின் தெரிநிலை
- **ஓஒ** பெரியன் – பெருமை மிகுதி உணர்த்தலின் சிறப்பு

## 9.4.6 ஏகாரம்

இது தேற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை என்னும் ஐந்து பொருளில் வரும்.

தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே (சொல். 257)

என்பது நூற்பா. எ.கா:

- உண்**டே**ள மறுமை – தெளிவின்கண் வருதலின் தேற்றேகாரம்
- நீ**யே** கொண்டாய் – வினாப்பொருளில் வருதலின் வினாவேகாரம்
- அவருள் இவ**னே** கள்வன் – பிரித்தலிற் பிரிநிலை ஏகாரம்
- நில**னே** நீ**ரே** தீ**யே** வளி**யே** – எண்ணுதற்கண் வருதலின் எண்ணேகாரம்
- கடல்போற் றோன்றல காடிறந் தோ**ரே** - செய்யுள் இறுதிக்கண் வருதலின் ஈற்றசை

## 9.4.7 என, என்று

இவ்விரு சொற்களும் வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் என்னும் ஆறு பொருளில் வரும். இதனை,

வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரோடு அவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி (சொல்.258)

என்றென் கிளவியும் அதனோ ரற்றே (சொல். 259)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும்.

- மலைவான் கொள்**கென** உயர்பலி தூஉய் ; நரைவரு **மென்றெ**ண்ணி - வினை
- துண்**ணெனத்** துடித்தது மனம்; விண்**ணென்று** விசைத்தது – குறிப்பு
- ஒல்**லென** ஒலித்தது; ஒல்**லென் றொ**லிக்கும் ஒலிபுன லூர - இசை
- வெள்**ளென** விளர்த்தது; பச்**சென்று** பசுத்தது – பண்பு
- நில**னென நீரெனத் தீயென** வளி**யென**; நில**னென்று நீரென்று தீயென்று** - எண்
- அழுக்கா **றென**வொரு பாவி; பாரி**யென் றொ**ருவன் உளன் - பெயர்

## 9.4.8 மற்று

இது வினைமாற்று, அசைநிலை என்னும் இரு பொருளில் வரும்.

> மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
> அப்பா லிரண்டென மொழிமனார் புலவர் (சொல். 262)

என்பது நூற்பா. எ.கா:

- **மற்ற**றிவா நல்வினை யாமிளையம் – இதில் அறஞ்செய்தல் பின்னறிவாம் என அக்காலத்து வினைமாற்றுதலான் ‘மற்று’ என்பது வினைமாற்றாகும்.
- அது**மற் ற**வலங் கொள்ளாது நொதுமற் கலுழும் – கட்டுரையிடையும் (வழக்கு) ‘மற்றோ’ என அசைநிலையாய் வரும்.

## 9.4.9 எற்று

இது கழிந்தது என்ற பொருளில் வரும்.

> எற்றென் கிளவி இறந்த பொருட்டே (சொல். 263)

என்பது நூற்பா. எ.கா: எற்றென் உடம்பின் எழில்நலம் – இதில் நலம் இறந்தது என்னும் பொருள்பட நின்றது.



### 9.4.10 மற்றையது

மற்றையதெனப் பெயர்க்கு முதனிலையாய் வரும் 'மற்றை' என்னும் ஐகார ஈற்று இடைச்சொல் சுட்டடப்பட்டதனை ஒழித்து அதன் இனங்குறித்து நிற்கும்.

மற்றைய தென்னுங் கிளவி தானே

சுட்டுநிலை யொழிய இனங்குறித் தன்றே (சொல். 264)

என்பது நூற்பா. எ.கா: ஆடை கொணர்ந்தவழி அவ்வாடை வேண்டாதான் 'மற்றையது கொணா' எனல் - அஃது அச்சுட்டிய ஆடை ஒழித்து அதற்கு இனமாகிய பிற ஆடை குறித்து நின்றது.

### 9.4.11 மன்ற

இது தெளிவுப் பொருளில் வரும்.

மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும் (சொல். 265)

என்பது நூற்பா. எ.கா: கடவு ளாயினு மாக, மடவை **மன்ற** வாழிய முருகே – இதில் மடவையே எனத் தெளிவாகக் கூறுதல்.

### 9.4.12 தஞ்சம்

இது எளிது என்ற பொருளில் வரும்.

தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே (சொல். 266)

என்பது நூற்பா. எ.கா: முரசுகெழு தாயத் தரசோ **தஞ்சம்** – இதில் 'தஞ்சக்கிளவி' அரசு கொடுத்தல் எளிது என எண்மைப் பொருள் உணர்த்தியது.

### 9.4.13 அந்தில்

இது ஆங்கு என்னும் இடப்பொருளில் வரும்.

அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்று

ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப (சொல். 267)

என்பது நூற்பா. எ.கா: வருமே, சேயிழை **யந்திற்** கொழுநற் காணிய – இதில் அந்தில் என்பது ஆங்கு என்னும் இடப்பொருளில் வந்தது,

### 9.4.14 கொல்

இது ஐயப்பொருளில் வரும்.

கொல்லே ஐயம் (சொல்.268)

என்பது நூற்பா. எ.கா: குற்றி**கொல்லோ** மகன்**கொல்லோ**

### 9.4.15 எல்

இது விளக்கப் பொருளில் வரும்.

எல்லே இலக்கம் (சொல். 269)

என்பது நூற்பா. எ.கா: **எல்**வளை – இதில் ‘எல்’ என்பது இலங்குதற் பொருளில் வந்தது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

**குறிப்பு:**

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. மன்னைச் சொல்லுக்குரிய பொருள்கள் யாவை?

……………………………………………………………………………
……………………

2. கொன்னைச் சொல்லுக்குரிய பொருள்களைக் கூறுக.

………………………………………………………………………………
……………………

3. உம்மைச் சொல்லுக்குரிய பொருள்களைச் சுட்டுக.

………………………………………………………………………………
…………………….

4. தஞ்சம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள் யாது?

………………………………………………………………………………
……………………..

5. கொல் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருளைச் சுட்டுக.

………………………………………………………………………………
……………………..

**தொகுத்தறிவோம்**

இடைச்சொற்கள் பெயரைச் சார்ந்து பெயர்ப் பொருளையும் வினையைச் சார்ந்து வினைப் பொருளையும் உணர்த்த வல்லன. இவை தமக்கெனத் தனித்த பொருளுடையன அல்ல. சொற்கள் ஒன்றொடொன்று புணர்கின்ற பொழுது அவற்றின் பொருள்நிலைக்கு உதவி செய்து வருவனவாகிய சாரியைகள், வினைச்சொற்களில் காலங் காட்டுவனவாய் வரும் இடைநிலைகளும் விகுதிகளும், வேற்றுமை உருபுகள், தாம் சார்ந்த பொருளை வேறுபடுத்தி வரும் அசைநிலைகள், செய்யுட்களில் இசை நிறைத்தலே பொருளாக வரும் இசைநிறைச் சொற்கள், கூறுவார் தாம் தாம் குறித்த குறிப்பினாலே அவரவர் குறித்த பொருளை விளக்கி நிற்கும் குறிப்புச் சொற்கள் என இடைச்சொல் ஏழு வகைப்படும். இவற்றுள் சாரியைகள் எழுத்ததிகாரத்துப் புணரியலில் கூறப்பட்டன. கால இடைநிலைகளும் விகுதிகளும் வினையியலில் கூறப்பட்டன. உவம உருபுகள் உவமவியலில் கூறப்படும். எஞ்சிய அசைநிலை, இசைநிறை, தத்தம் குறிப்பிற்

பொருள் செய்குவன ஆகிய மூன்றும் இவ்விடையியலில் கூறப்பட்டுள்ளன.

**அருஞ்சொற்பொருள்**

கண்ணிய – பொருந்திய; கட்டுரை – வழக்கு.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. கழிவு, ஆக்கம், ஒழியிசை.
2. அச்சம், பயனின்மை, காலம், பெருமை.
3. இது எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டுப் பொருளில் வரும்.
4. எளிது.
5. ஐயம்.

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. இடைச்சொல்லின் பொதுவிலக்கணம் கூறுக.
2. இடைச்சொல்லின் வகைகள் யாவை?
3. தத்தம்குறிப்பில் பொருள்செய்குவனவற்றைத் தொகுத்துரைக்க.

## கூறு – 10:

## தொல்காப்பியம் – சொல் – இடையியல் – நூற்பா 22 முதல் 48 வரை

**அமைப்பு**

அறிமுகம்

நோக்கங்கள்

10.1 அசைநிலையாய் வரும் இடைச்சொற்கள்

10.1.1 யா, கா முதலிய ஏழு சொற்கள்

10.1.2 முன்னிலை அசைச்சொற்கள்

10.1.3 மா என்னும் சொல்

10.1.4 ஆர் என்னும் சொல்

10.1.5 அந்தில் என்னும் சொல்

10.1.6 ஏ, குரை என்னும் சொற்கள்

10.1.7 அம்ம என்னும் சொல்

10.1.8 ஆங்க, போலும் என்னும் சொற்கள்

10.1.9 ஆக, ஆகல், என்பது ஆகிய சொற்கள்

10.2 இசை நிறையாய் வரும் இடைச்சொற்கள்

10.2.1 ஏ,குரை என்னும் சொற்கள்

10.3 தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொற்கள்

10.3.1 ஔகாரம்

10.3.2 நன்றே, அன்றே, அந்தோ, அன்னோ

10.4 எண்ணிடைச்சொற்கள்

10.4.1 உம், என

10.4.2 எனா, என்றா, செவ்வெண், ஏ

10.4.3 என்று, என, ஒடு

10.4.4 எண்ணிடைச் சொற்கள் வினையொடு வருதல்

10.5 இடைச்சொற்களின் பொருள் அறிதல்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான

விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

**அறிமுகம்**

தொல்காப்பியர் இடையியலில் அசைநிலையாய் வரும் இடைச்சொற்கள், இசை நிறையாய் வரும் இடைச்சொற்கள், தத்தம் குறிப்பில் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் ஆகிய மூன்றையும் வரையறுத்து விளக்குவர்.

**நோக்கங்கள்**

- அசைநிலையாய் வரும் இடைச்சொற்களை விளக்குதல்
- இசை நிறையாய் வரும் இடைச்சொற்களை எடுத்துரைத்தல்
- தத்தம் குறிப்பில் பொருள் உணர்த்தும் இடைச்சொற்களை உணர்த்துதல்

## 10.1 அசைநிலையாய் வரும் இடைச்சொற்கள்

அசைத்தல் என்பதற்கு சார்த்துதல் என்பது பொருள். அசைச்சொற்கள் பொருள் உணர்த்தாது பெயரோடும் வினையோடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின் அவை 'அசைநிலை' எனப்பட்டன.

### 10.1.1 யா, கா முதலிய ஏழு சொற்கள்

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என்ற ஏழும் அசைநிலைச் சொற்களாக வரும்.

> யாகா
> பிறபிறக் கரோபோ மாதென வரூஉம்
> ஆயேழ் சொல்லு மசைநிலைக் கிளவி (சொல். 279)

என்பது நூற்பா. எ.கா:

- **யா** பன்னிருவர் மாணாக்கருளர் அகத்தியனார்க்கு
- புறநிழற் பட்டாளோ விவளிவட் காண்டி**கா**
- தான் **பிற**வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
- அது **பிறக்கு**
- நோதக விருங்குயில் ஆலு**மரோ**

- பிரியின் வாழா தென்**போ** தெய்ய
- விளிந்தன்று **மாது** அவர்த் தெளிந்த என் நெஞ்சே

## 10.1.2 முன்னிலை அசைச்சொற்கள்

❖ மியா, இக, மோ, மதி, இகும், சின் என்ற ஆறும் முன்னிலைக்கண் வருகின்ற அசைச்சொற்களாகும்.

மியாஇக மோமதி இகுஞ்சின் என்னும்

ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல் (சொல். 274)

என்பது நூற்பா. எ.கா:

- கேண்**மியா**
- கண்பனி யான்**றிக** வென்றி தோழி
- காமஞ் செப்பாது கண்டது மொழி**மோ**
- உரை**மதி** வாழியோ வலவ
- மெல்லப் புலம்ப காண்**டிகும்**
- காப்பும் பூண்டி**சிற்** கடையும் போகலை

❖ இவற்றுள் இகும், சின் என்ற இரண்டு சொற்களும் தன்மையிலும் வரும்; படர்க்கையிலும் வரும்.

அவற்றுள்  
இகுமுஞ் சின்னும் ஏனை யிடத்தொடும்  
தகுநிலை யுடைய என்மனார் புலவர் (சொல்.275)

என்பது நூற்பா. எ.கா:

- கண்**டிகு ம**ல்லமோ; கண்ணும் படுமோ வென்றி**சின்** யானே – தன்மை
- புகழ்ந்**திகு ம**ல்லரோ பெரிதே; யாரஃதறிந் தி**சினோ**ரே - படர்க்கை

## 10.1.3 மா என்னும் சொல்

'மா' என்னும் சொல் வியங்கோளில் வரும்பொழுது அசைநிலையாய் வரும்.

மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல் (சொல்.273)

என்பது நூற்பா. எ.கா: புற்கை யுண்க**மா** கொற்கை யோனே

## 10.1.4 ஆர் என்னும் சொல்

❖ இயற்பெயர் முன்னர் வரும் 'ஆர்' என்னும் சொல் பலர்பால் வினையைக் கொண்டு முடியும்.

இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே
(சொல்.270)

என்பது நூற்பா. இதில் இருதிணைக்கும் அஃறிணை இருபாற்கும் உரிய பெயரை 'இயற்பெயர்' என்றார். எ.கா: பெருஞ்சேந்**தனார்** வந்தார், முடவ**னார்** வந்தார், முடத்தாமக்கண்ணி**யார்** வந்தார், தந்தை**யார்** வந்தார் எனவும் நரி**யார்** வந்தார் எனவும் வரும்.

நம்பியார் வந்தார், நங்கையார் வந்தார் எனச் சிறுபான்மை உயர்திணைப்பெயர் முன்னர் வருதல் 'ஒன்றென முடித்தல்' என்பதனால் கொள்ள வேண்டும்.

❖ இந்த 'ஆர்' என்னும் சொல் அசைநிலையாய் வருதலும் உண்டு.

அசைநிலைக் கிளவி ஆகுவழி அறிதல் (சொல். 271)

என்பது நூற்பா. அவ்வாறு வரும்பொழுது உம்மை முன்னரும் உம்மீற்று வினை முன்னருமல்லது வாராது. சிறுபான்மை பிறவாறும் வரும். எ.கா:

- பெயரி னாகிய தொகையு**மா** ருளவே (சொல். 67) – உம்மை முன்னர்
- எல்லா வுயிரொடுஞ் செல்லு**மார்** முதலே (எழுத். 61) – உம்மீற்று வினை முன்னர்

## 10.1.5 அந்தில் என்னும் சொல்

அந்தில் என்னும் சொல் தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொல்லாய் 'ஆங்கு' என்னும் பொருளில் வருவதோடு மட்டுமல்லாமல் அசைநிலையாகவும் வரும்.

அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்று
ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப (சொல்.267)

என்பது நூற்பா. எ.கா: **அந்திற்** கச்சினன் கழலினன் – அசைநிலை

### 10.1.6 ஏ, குரை என்னும் சொற்கள்

ஏ, குரை என்னு இரண்டு சொற்களும் அசைநிலையாய் வரும்.

ஏயுங் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண் டாகும் இயற்கைய வென்ப (சொல்.272)

என்பது நூற்பா. எ.கா: **ஏஎ**யென் சொல்லுக, பல்**குரைத்** துன்பங்கள் சென்று படும்.

### 10.1.7 அம்ம என்னும் சொல்

'அம்ம' என்னும் சொல் கேட்பாயாக என்னும் பொருளில் வரும்.

அம்ம கேட்பிக்கும் (சொல். 276)

என்பது நூற்பா. 'அம்ம' என்னும் இச்சொல் அசைநிலையாக வரும் என்பதைத் தொல்காப்பியர் விளிமரபிலேயே (சொல்.153) கூறியுள்ளார். அதனால் மீண்டும் அசைநிலையாய் வரும் என்பதைக் கூறாமல் 'கேள்' என்னும் பொருளைக் குறிக்கும் என்பதை மட்டும் இந் நூற்பாவில் கூறியுள்ளார். எ.கா: **அம்ம** வாழி தோழி

### 10.1.8 ஆங்க, போலும் என்னும் சொற்கள்

'ஆங்க' என்னும் இடைச்சொல்லும் ஒப்புமை உணர்த்தாத 'போலும்' என்னும் இடைச்சொல்லும் உரையசைகளாக வரும். உரையசை என்பது சிறிது பொருளுணர்த்துவதாகும். இதனை,

ஆங்க உரையசை (சொல். 277)
ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும் (சொல். 278)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். போலும், போல்வது என்னும் தொடக்கத்துப் பல வாய்பாடுகளையும் தழுவுவதற்குப் 'போலி' என்றார். எ.கா: **ஆங்க**க் குயிலு மயிலுங் காட்டி, மங்கலம் என்பதோர் ஊருண்டு **போலும்**, நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்**போல்வதூஉம்** .

## 10.1.9 ஆக, ஆகல், என்பது ஆகிய சொற்கள்

ஆக, ஆகல், என்பது ஆகிய மூன்று சொற்களும் அசைநிலையாகின்ற பொழுது இரட்டித்து நிற்கும். அந்நிலையில் அவை பிரிநிலை அசைநிலை எனப்படும். இதனால் இவை தனித்து நின்று அசைநிலை ஆகாது என்பது பெறப்படும்.

> ஆக ஆகல் என்பது என்னும்
> ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை (சொல்.280)

என்பது நூற்பா. எ.கா:

- ஒருவன் 'யான் இன்னேன்' என்ற வழிக் கேட்டான் 'ஆக ஆக' , 'ஆகல் ஆகல்' என்றல் – ஒருவன் கூறுவதனை உடன்படாதபொழுதும் ஆதாரம் இல்லை என எண்ணுகின்ற பொழுதும் இவ்வாறு கூறப்படும்.
- ஒருவன் ஒன்றுரைப்பக் கேட்டான் 'என்பது என்பது' எனல் – நன்கு உரைத்தற்கண்ணும் இழித்தற்கண்ணும் இவ்வாறு கூறப்பெறும். பிறவாறு வரினும் வழக்கு நோக்கி உணர்ந்து கொள்க என்பர் சேனாவரையர்.

## 10.2 இசை நிறையாய் வரும் இடைச்சொற்கள்

இசை நிறைத்தற் பொருட்டு ஒரு சொல்லோடு ஒட்டி வரும் இடைச்சொற்கள் இசைநிறை இடைச்சொற்கள் எனப்படும்.

### 10.2.1 ஏ, குரை என்னும் சொற்கள்

ஏ, குரை என்னும் இரண்டு சொற்களும் அசைநிலையாய் வருவதோடு இசைநிறையாகவும் வரும். எ.கா: **ஏஎ** யிஃதொத்தன் நாணிலன் தன்னொடு, அளிதோ தானேயது பெறலருங் **குரைத்தே.**

## 10.3 தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொற்கள்

### 10.3.1 ஔகாரம்

இரண்டு மாத்திரையை உடைத்தாய மொழிக்கு ஈறாகாது எனப்பட்ட ஔகாரம் பிரிவில் அசைநிலை என மேற்கூறப்பட்டன போல இரட்டித்து நிற்குமிடத்தும், இரட்டியாது அளபெடையாய் நிற்குமிடத்தும், அளபெடையின்றித் தான் வருமிடத்தும் பொருள் வேறுபடுதலுள; அப்பொருள் வேறுபாடு சொல்லுவான் குறிப்பிற்குத் தகும் ஓசை வேறுபாட்டாற் புலப்படும்.

ஈரளபு இசைக்கும் இறுதியில் உயிரே
ஆயியல் நிலையுங் காலத் தானும்
அளபெடை நிலையுங் காலத் தானும்
அளபெடை யின்றித் தான்வருங் காலையும்
உளவென மொழிப பொருள்வேறு படுதல்
குறிப்பின் இசையால் நெறிப்படத் தோன்றும் (சொல். 281)

என்பது நூற்பா. பொருள் வேறுபாடாவன, வழக்கு நோக்கச் சிறப்பும் மாறுபாடுமாம் என்பர் சேனாவரையர். அதாவது, சொல்லுவான் குறிப்பிற்கேற்ப சிறப்புப் பொருளையோ மாறுபாட்டுப் பொருளையோ தரும். எ.கா:

- **ஔஔ** வொருவன் தவஞ்செய்தவாறு , ஒரு தொழில் செய்வானை ‘**ஔஔ** இனிச் சாலும்’ எனல் – இவற்றில் ஔ

இரட்டித்து முறையே சிறப்புப் பொருளையும் மாறுபாட்டுப் பொருளையும் உணர்த்தின.

- **ஔஉ** வொருவ னிரவலர்க் கீந்தவாறு, **ஔஉ** வினி வெகுளல் – இவற்றில் ஔகாரம் இரட்டிக்காது அளபெடையாய் நின்று, முறையே சிறப்புப் பொருளையும் மாறுபாட்டுப் பொருளையும் உணர்த்தின.
- **ஔ**வவன் முயலுமாறு, **ஔ**வினித் தட்டுப்புடையல் – இவற்றில் ஔகாரம் அளபெடை இன்றித் தானேயாய் வந்து, முறையே சிறப்புப் பொருளையும் மாறுபாட்டுப் பொருளையும் உணர்த்தின.

## 10.3.2 நன்றே, அன்றே, அந்தோ, அன்னோ

நன்றே, அன்றே, அந்தோ, அன்னோ என்னும் நான்கு சொற்களும் சொல்லுவான் குறிப்போசைக்கேற்ப பொருள் உணர்த்தும்.

> நன்றீற்று ஏயும் அன்றீற்று ஏயும்
> அந்தீற்று ஓவும் அன்னீற்று ஓவும்
> அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும் (சொல். 282)

என்பது நூற்பா. நன்றீற்று ஏயும் அன்றீற்று ஏயும் ஆவன நன்றே, அன்றே என்பன. அந்தீற்று ஓவும் அன்னீற்று ஓவும் ஆவன அந்தோ, அன்னோ என்பன. எ.கா:

- ஒருவன் ஒன்று உரைத்தவழி அதற்கு மேவாதான் நன்றே நன்றே, அன்றே அன்றே என அடுக்கிக் கூறுதல். அவை மேவாமைக் குறிப்பு விளக்கும். ‘அவனன்றே யிதுசெய்வான்’ என அடுக்காது நின்றவழி, அன்றீற்றய் ஏவுக்குத் தெளிவு முதலிய பிற பொருளும் படும்.

- ஒருவன் ஒன்று உரைத்தவழி அந்தோ அந்தோ என்றோ, அன்னோ அன்னோ என்றோ அடுக்கியும் அடுக்காதும் வந்து இரங்கற் குறிப்பை வெளிப்படுத்தும்.

'அன்ன பிறவும்' என்றதனான், அதோ அதோ, சோசோ, ஒக்கும் ஒக்கும் என்னும் தொடக்கத்தனவும் கொள்க என்பர் சேனாவரையர்.

## 10.4 எண்ணிடைச்சொற்கள்

ஒன்றனொடு ஒன்றனை எண்ணுகின்ற பொழுது அவ்வெண்ணினைக் குறிப்பதற்கு அவற்றிடையே வரும் சொற்களை எண்ணிடைச் சொற்கள் என்பர். உம், என, எனா, என்றா, செவ்வெண், ஏ, என்று, ஒடு என்னும் எட்டும் எண்ணிடைச் சொற்களாகும்.

### 10.4.1 உம், என

❖ இவை எண்ணின்கண் வருகின்றபொழுது தொகை பெற்றும் வரும்; பெறாதும் வரும்.

உம்மை எண்ணும் எனவென் எண்ணும்
தம்வயின் தொகுதி கடப்பா டிலவே (சொல்.287)

என்பது நூற்பா. எ.கா:

- உயர்திணைக் குரிமை**யும்** அஃறிணைக் குரிமை**யும்**, **ஆயிரு** திணைக்குமோ ரன்ன வுரிமை**யும்**, **அம்மூ**வுருபின; நில**னென நீரென தீயென** வளி**யென**, **நான்கும்** – தொகை பெற்றமை
- இசையி**னும்** குறிப்பி**னும்** பண்பி**னுந்** தோன்றி; உயி**ரென** வுட**லென** வின்றி யமையா – தொகை பெறாமை

❖ உம்மை, எண்ணின்கண் வருகின்ற பொழுது வேற்றுமை உருபுகள் இடையே மறைந்தும் வரும்.

உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார் (சொல். 291)

என்பது நூற்பா. எ.கா: பாட்**டுங்** கோட்டி**யு ம**றியாப் பயமில், தேக்கு மரம்போல் நீடிய வொருவன் – இதில் பாட்டும் கோட்டியும் என்ற உம்மை எண் பாட்டையும் கோட்டியையும் என விரியும். இதனால் வேற்றுமை உருபு தொக்கு வந்துள்ளமை விளங்கும்.

### 10.4.2 எனா, என்றா, செவ்வெண், ஏ

உம்மை தொக்கு நின்ற எனாவென்னும் இடைச்சொல்லும் என்றாவென்னும் இடைச்சொல்லும் இரண்டும் எண்ணுமிடத்து வரும்.

உம்மை தொக்க எனாவென் கிளவியும்
ஆவீ றாகிய என்றென் கிளவியும்
ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன (சொல். 289)

என்பது நூற்பா. எ.கா: நிலனெனா நீரெனா; நிலனென்றா நீரென்றா.

❖ எனா, என்றா என்பனவற்றுள் வரும் எண்ணினிறுதியும் இடைச்சொல்லானன்றிப் பெயரான் எண்ணப்படும் செவ் வெண்ணிறுதியும் ஏகாரத்தான் வரும் எண்ணின் இறுதியும் எண்ணிடைச் சொற்களாக வரும்பொழுது தொகை பெற்றே வரும்.

அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குரி மரபிற் செவ்வெண் இறுதியும்
ஏயி னாகிய எண்ணின் இறுதியும்
யாவயின் வரினுந் தொகையின் றியலா (சொல். 290)

என்பது நூற்பா. பெயர் வினைகளில் எண்ணிடைச்சொல் தொக்கு நிற்பது செவ்வெண் எனப்படும். அவற்றுள் ஈண்டு கூறப்பட்டது பெயர்ச் செவ்வெண் ஆகும்.

எ.கா: நிலனெனா நீரெனா விரண்டும் எனவும், நிலனென்றா நீரென்றா விரண்டும் எனவும், நிலநீரென விரண்டும் எனவும் நிலனே நீரே யென விரண்டும் எனவும் தொகை பெற்று வந்தன.

## 10.4.3 என்று, என, ஒடு

இவை எண்ணின்கண் வரும்பொழுது ஓரிடத்தில் நின்று பிறிதோரிடத்தில் சென்று ஒன்றும்.

என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி
ஒன்றுவழி உடைய எண்ணுனுட் பிரிந்தே
(சொல்.294)

என்பது நூற்பா. எ.கா:

- வினைபகை யென்றிரண்டினெச்சம் – இது வினையென்று பகையென்று எனப் பிரிந்து பிறவழிச் சென்று ஒன்றும்.
- கண்ணிமை நொடியென – இது கண்ணிமையென நொடியென எனப் பிரிந்து பிறவழிச் சென்று ஒன்றும்.
- பொருள் கருவி காலம் வினை யிடனொடைந்தும் – இது பொருளொடு, கருவியொடு, காலத்தொடு, வினையொடு, இடத்தொடு எனப் பிரிந்து பிறவழிச் சென்று ஒன்றும்.

## 10.4.4 எண்ணிடைச் சொற்கள் வினையொடு வருதல்

எண்ணிடைச் சொற்கள் பெயரொடு வருதலேயன்றி, வினையொடு வரினும் தத்தம் நிலையினின்றும் திரியாது.

வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா
நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே
(சொல்.293)

என்பது நூற்பா. எ.கா: உண்டுந் தின்றும் பாடியும் வந்தான்; உண்ணவெனத் தின்னவெனப் பாடவென வந்தான்.

## 10.5 இடைச்சொற்களின் பொருள் அறிதல்

❖ இடையியலில் கூறப்பட்ட இடைச்சொற்கள் அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருள் என நிலைபெறச் சொல்லப்பட்ட இயல்பையுடையன. ஆயினும், அவை வினையொடும் பெயரொடும் ஆராய்ந்து உணரத் தோன்றி வேறு பொருளவாயும் அசைநிலையாயும் திரிந்து வரினும் ஆராய்ந்து கொள்க என்பர் தொல்காப்பியர்.

அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல ஆயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினுந் தெரிந்தனர் கொளலே (சொல். 295)

என்பது நூற்பா.

❖ இடையியலில் சொல்லப்பட்டனவன்றி அவை போல்வன பிறவரினும் அவற்றைக் கிளந்த சொல்லின் இயல்பைக் கொண்டு உணர்ந்து கொள்க என்பர் தொல்காப்பியர்.

கிளந்த அல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே
(சொல்.296)

என்பது நூற்பா.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

---

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. அசைநிலைச் சொற்கள் யாவை?

……………………………………………………………………………
……………………

2. முன்னிலை அசைச்சொற்களைச் சுட்டுக.

……………………………………………………………………………
……………………

3. வியங்கோள் அசைச்சொல் யாது?

……………………………………………………………………………
……………………..

4. அசைநிலையாகவும் இசைநிறையாகவும் வரும் இடைச்சொற்களைக் கூறுக.

……………………………………………………………………………
……………………..

5. எண்ணிடைச் சொற்கள் யாவை?

……………………………………………………………………………
……………………..

**தொகுத்தறிவோம்**

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என்ற ஏழும் அசைநிலைச் சொற்களாக வரும். மியா, இக, மோ, மதி, இகும், சின் என்ற ஆறும் முன்னிலைக்கண் வருகின்ற அசைச்சொற்களாகும். இசை நிறைத்தற் பொருட்டு ஒரு சொல்லோடு ஒட்டி வரும் இடைச்சொற்கள் இசைநிறை இடைச்சொற்கள் எனப்படும். ஏ, குரை என்னும் இரண்டு சொற்களும் அசைநிலையாய் வருவதோடு இசைநிறையாகவும் வரும். ஒன்றனொடு ஒன்றனை எண்ணுகின்ற பொழுது அவ்வெண்ணினைக் குறிப்பதற்கு அவற்றிடையே வரும் சொற்களை எண்ணிடைச் சொற்கள் என்பர். உம், என, எனா, என்றா, செவ்வெண், ஏ, என்று, ஒடு என்னும் எட்டும் எண்ணிடைச் சொற்களாகும்.

**அருஞ்சொற்பொருள்**

மேவாமை – பொருந்தாமை; கோட்டி – பேச்சு.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது.
2. மியா, இக, மோ, மதி, இகும், சின்.
3. மாவென் கிளவி.
4. ஏ, குரை.
5. உம், என, எனா, என்றா, செவ்வெண், ஏ, என்று, ஒடு.

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. அசைநிலைச் சொற்கள் குறித்து விளக்குக.
2. இசைநிறைகள் குறித்தெழுதுக.
3. எண்ணிடைச்சொற்கள் குறித்துக் கூறுக.
4. இடைச்சொற்களின் பொருள் உணர்தல் குறித்தெழுதுக.

## கூறு – 11

## தொல்காப்பியம் – சொல் – உரியியல்

**அமைப்பு**

அறிமுகம்

நோக்கங்கள்

11.1 உரிச்சொல்லின் பொது இலக்கணம்

11.2 குறிப்புப் பற்றி வரும் உரிச்சொற்கள்

11.2.1 ஒரு சொல் ஒரு பொருட்குரியது

11.2.2 ஒரு சொல் பல பொருட்குரியது

11.2.3 பலசொல் ஒரு பொருட்குரியன

11.3 பண்பு பற்றி வரும் உரிச்சொற்கள்

11.3.1 ஒரு சொல் ஒரு பொருட்குரியது

11.3.2 ஒரு சொல் பல பொருட்குரியது

11.3.3 பலசொல் ஒரு பொருட்குரியன

11. 4 இசை பற்றி வரும் உரிச்சொற்கள்

11.4.1 ஒரு சொல் ஒரு பொருட்குரியது

11.4.2 பலசொல் ஒரு பொருட்குரியன

11.5 உரிச்சொல் பொருள் உணர்தல்

11.6 சொற்களுக்குப் பொருள் காணும் முறைமை

11.7 சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள இயைபு

11.8 உரிச்சொல்லின் இயல்புகளுள் ஒன்று

11.9 புறனடை

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்



**அறிமுகம்**

உரிச்சொற்களின் இலக்கணம் கூறுவதால் இவ்வியல் உரியியல் எனப் பெயர் பெற்றது. தமக்கியல்பில்லாத இடைச்சொற்களைப் போல இல்லாமல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்குத் தாமே உரியவாகலின் உரிச்சொல் எனப் பெயர் பெற்றது. பெரும்பான்மையும் செய்யுட்கு உரித்தாய் வருதலின் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

**நோக்கங்கள்**

- உரிச்சொல்லின் பொது இலக்கணத்தை விளக்குதல்
- குறிப்புப் பற்றி வரும் உரிச்சொற்களை எடுத்துரைத்தல்
- பண்பு பற்றி வரும் உரிச்சொற்களை உணர்த்துதல்
- இசை பற்றி வரும் உரிச்சொற்களைக் கூறுதல்
- உரிச்சொல்லின் பொது இயல்புகளைச் சுட்டுதல்

## 11.1 உரிச்சொல்லின் பொது இலக்கணம்

❖ உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருண்மேல் தோன்றி, பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் தம்முருபு தடுமாறி வரும். ஒருசொல் பல பொருட்கு உரித்தாகவும் பல சொல் ஒரு பொருட்கு உரித்தாகவும் வரும். அவ்வாறு வரும்பொழுது கேட்போனால் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக்குரிய நிலைக்களத்தின்கண் யாதானுமொரு சொல்லாயினும் வேறுவேறு பொருள் உணர்த்தப்படும்.

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றி
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல் (சொல்.297)

என்பது நூற்பா. ஒருசொல் ஒரு பொருட்கு உரித்தாதல் இயல்பு என்பதால் அதனைத் தொல்காப்பியர் சுட்டவில்லை. மெய்தடுமாறல் (உரிச்சொற்களின் பகுதிகள் திரிதல்), ஒரு சொல் பல பொருட்கு உரித்தாதல், பல சொல் ஒரு பொருட்கு உரித்தாதல் ஆகியன உரிச்சொற்கு உரியனவேணும் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்கு உரியவாய் வருதலே உரிச்சொற்கு இலக்கணமாகும்.

❖ பயின்ற உரிச்சொற்களை மறுபடியும் கூறுதல் பயன் இன்மையால் அதனை விலக்கிப் பயிலாத உரிச்சொல்லே இவ்வியலில் கிளக்கப்படுகிறது என்பர் தொல்காப்பியர்.

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன (சொல். 298)

என்பது நூற்பா.

## 11.2 குறிப்புப் பற்றி வரும் உரிச்சொற்கள்

மனத்தால் குறித்துணரப்படுவது குறிப்பு எனப்படும். இதனை ஒரு சொல் ஒரு பொருட்குரியது, ஒரு சொல் பல பொருட்குரியது, பலசொல் ஒரு பொருட்குரியன என மூன்றாகப் பாகுபடுத்திக் காண இயலும்.

### 11.2.1 ஒரு சொல் ஒரு பொருட்குரியது

❖ உரு – உட்கு (அச்சம்); புரை – உயர்பு.

உருவுட் காகும் புரையுயர்பு ஆகும் (சொல். 300)

என்பது நூற்பா. எகா: **உரு**கெழு கடவுள்; புரைய மன்ற **புரை**யோர் கேண்மை.

❖ மல்லல் – வளன்; மல்லல் வளனே (சொல். 303)என்பது நூற்பா.

எ.கா: **மல்லன்** மால்வரை

❖ ஏ –பெற்று (பெருக்கம்); ஏ பெற்றாகும் (சொல். 304)என்பது நூற்பா.

எ.கா: **ஏ** கல்லடுக்கம்

❖ உகப்பு – உயர்தல்; உவப்பு – உவகை.

உகப்பே உயர்தல் உவப்பே உவகை (சொல். 305)

என்பது நூற்பா.

எ.கா: விசும்**புகந் தா**டாது; **உவந்து**வந்து ஆர்வநெஞ்சமொ டாய்நல னளைஇ

❖ பயப்பு – பயன்; பயப்பே பயனாம் (சொல். 306) என்பது நூற்பா.

எ.கா: **பயவாக்** களரனையர் கல்லாதவர்

❖ இயைபு – புணர்ச்சி; இயைபே புணர்ச்சி (சொல். 308)என்பது நூற்பா.

எ.கா: **இயைந்** தொழுகும்

❖ *சீர்த்தி* - மிகுபுகழ்; *சீர்த்தி* மிகுபுகழ் (சொல். 312)என்பது நூற்பா.

எ.கா: வயக்கஞ்சால் ***சீர்த்தி***

❖ மாலை – இயல்பு; மாலை இயல்பே (சொல். 313) என்பது நூற்பா.

எ.கா: இரவரன் **மாலை**யனே

❖ பழுது – பயனின்மை; பழுது பயமின்றே (சொல். 324) என்பது நூற்பா.

எ.கா: **பழுது**கழி வாழ்நாள்

❖ முழுது – எஞ்சாமை

முழுதென்கிளவி எஞ்சாப் பொருட்டே (சொல். 326)

என்பது நூற்பா. எ.கா: மண்**முழுதா**ண்ட

❖ வம்பு – நிலையின்மை; வம்பு நிலையின்மை(சொல். 327)என்பது நூற்பா.

எ.கா: **வம்ப**மாரி

❖ மாதர் – காதல்; மாதர் காதல் (சொல். 328)என்பது நூற்பா.

எ.கா: **மாதர்** நோக்கு

❖ புலம்பு – தனிமை; புலம்பே தனிமை (சொல். 331) என்பது நூற்பா.

எ.கா: புலிப்பற் கோத்த **புலம்பு**மணித் தாலி

❖ துவன்று -நிறைவு; துவன்று நிறைவாகும் (சொல். 332) என்பது நூற்பா.

எ.கா: ஆரியர் **துவன்றிய** பேரிசை முள்ளூர்

❖ முரஞ்சல் – முதிர்வு; முரஞ்சன் முதிர்வே (சொல். 333) என்பது நூற்பா.

எ.கா: சூன்**முரஞ் செ**ழிலி

❖ பொற்பு – பொலிவு; பொற்பே பொலிவு (சொல். 335)என்பது நூற்பா.

எ.கா: பெருவரை யடுக்கம் **பொற்ப**

❖ வறிது –சிறிது; வறிதுசிறி தாகும் (சொல். 336) என்பது நூற்பா.

எ.கா: **வறிது**வடக் கிறைஞ்சிய

❖ எய்யாமை – அறியாமை

எய்யா மையே அறியா மையே (சொல். 342)

என்பது நூற்பா. எ.கா: **எய்யா** மையலை நீயும் வருந்துதி

❖ நன்று – பெரிது; நன்றுபெரி தாகும் (சொல். 343)என்பது நூற்பா.

எ.கா: **நன்று**, மரிதுமற் றனையார் பெரும

❖ தெவு – கொளல்; தெவுக்கொளல் பொருட்டே (சொல். 345) என்பது நூற்பா.

எ.கா: நீர்த்**தெவு** நிரைத்தொழுவர்

❖ தெவ்வு – பகை; தெவ்வுப் பகையாகும் (சொல். 346) என்பது நூற்பா.

எ.கா: **தெவ்வுப்** புலம்

- கழும் – மயக்கம்

  கழுமென் கிளவி மயக்கம் செய்யும் (சொல். 351)

என்பது நூற்பா. எ.கா: **கழுமிய** நட்பு

- கருவி – தொகுதி; கருவி தொகுதி (சொல். 354) என்பது நூற்பா.

  எ.கா: **கருவி** வானம்

- கமம் – நிறைவு; கமம் நிறைந் தியலும் (சொல். 355) என்பது நூற்பா.

  எ.கா: **கமஞ்**சூன் மாமழை

- அரி – ஐம்மை (மென்மை); அரியே ஐம்மை (சொல். 356)என்பது நூற்பா.

  எ.கா: **அரி**மயிர் திரண்முன்கை

- கவவு – அகத்தீடு; கவவகத் திடுமே (சொல். 357) என்பது நூற்பா.

  எ.கா: கழூஉவிளங் காரம் **கவைஇய** மார்பே

- இரங்கல் – பொருளது கழிவு

  அவற்றுள்
  இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும் (சொல். 351)

என்பது நூற்பா. எ.கா: செய்**திரங்கா** வினை

- கவர்வு – விருப்பு; கவர்வு விருப்பாகும் (சொல்.362)என்பது நூற்பா.

  எ.கா: **கவர்**நடைப் புரவி

- சேர் –திரட்சி; சேரே திரட்சி (சொல். 363) என்பது நூற்பா.

  எ.கா: **சேர்ந்து** செறி குறங்கு

- வியல் –அகலம்

வியலென் கிளவி அகலப் பொருட்டே (சொல். 364)

என்பது நூற்பா. எ.கா: **வியலு**லகம்

- வய – வலி; வய வலியாகும் (சொல். 366) என்பது நூற்பா.

எ.கா: துன்னருந் துப்பின் **வய**மான்

- துயவு – அறிவின் திரிபு

துயவென் கிளவி அறிவின் திரிபே (சொல். 368)

என்பது நூற்பா. எ.கா: **துயவு**ற்றேம் யாமாக

- உயா – உயங்கல் (வருந்துதல்) ; உயாவே உயங்கல் (சொல். 369)என்பது நூற்பா.

எ.கா: பருந்திருந் **துயா**விளி பயிற்று மியாவுயர் நனந்தலை

- உசா – சூழ்ச்சி; உசாவே சூழ்ச்சி (சொல். 370) என்பது நூற்பா.

எ.கா: **உசா**த்துணை

- வயா – வேட்கைப்பெருக்கம்

வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம் (சொல்.371)

என்பது நூற்பா. எ.கா: **வய**வுறு மகளிர்

- புனிறு – ஈன்றணிமை

புனிறென் கிளவிஈன்றணிமைப்பொருட்டே (சொல்.375)

என்பது நூற்பா. எ.கா: **புனிற்றா**ப் பாய்ந்தெனக் கலங்கி

- யாணர் – புதிது

புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி (சொல். 379)

என்பது நூற்பா. எ.கா: மீனொடு பெயரும் **யாணர்** ஊர

❖ அமர்தல் – மேவல் ; அமர்தல் மேவல் (சொல். 380) என்பது நூற்பா.

எ.கா: அகன் **அமர்ந்து** செய்யாள் உறையும்

❖ யாண் – கவின்

யாணுக் கவினாம் (சொல். 381)

என்பது நூற்பா. எ.கா: **யாண**து கவின்

❖ ஐ – வியப்பு; ஐவியப் பாகும் (சொல். 385) என்பது நூற்பா.

எ.கா: **ஐ**தே காமம் யானே

❖ முனைவு – முனிவு; முனைவுமுனி வாகும் (சொல். 386) என்பது நூற்பா.

எ.கா: சேற்று நிலை**முனை**இய செங்கட் காரான்

❖ வை- கூர்மை; வைவே கூர்மை (சொல். 387)என்பது நூற்பா.

எ.கா: **வை**நுனைப் பகழி

❖ எறுழ் – வலி; எறுழ் வலியாகும் (சொல். 388)என்பது நூற்பா.

எ.கா: பே**ரெறுழ்**த் திணிதோள்

❖ நளி – செறிவு

நளியென் கிளவி செறிவும் ஆகும் (சொல். 323)

என்பது நூற்பா. எ.கா: **நளி**யிருள்

---

## 11.2.2 ஒரு சொல் பல பொருட்குரியது

---

❖ ஏற்றம் - துணிவு, நினைவு

ஏற்றம் துணிவும் நினைவு மாகும் (சொல்.337)

என்பது நூற்பா.

எ.கா:

- எற்**றேற்ற மி**ல்லாருள் யானேற்ற மில்லாதேன் – துணிவு
- கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி – நினைவு

❖ பணை – பிழைத்தல், பெருப்பு

பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும் (சொல். 339)

எ.கா: **பணைத்து**வீழ் பகழி – பிழைத்தல்; வேய்மருள் **பணைத்**தோள் – பெருப்பு

❖ படர்- உள்ளல், செலவு

படரே உள்ளல் செலவும் ஆகும் (சொல். 340)

என்பது நூற்பா. எ.கா:

- வள்ளியோர்ப் **படர்ந்து** புள்ளிற் போகி – உள்ளல்
- கறவை கன்றுவயிற் **படர** – செலவு

❖ தா – வலி, வருத்தம்

தாவே வலியும் வருத்தமும் ஆகும் (சொல். 344)

என்பது நூற்பா. எ.கா:

- **தா**வி னன்பொன் றைஇய பாவை – வலி
- கருங்கட் **டாக்**கலை பெரும்பிறி துற்றென – வருத்தம்

❖ விறப்பு – செறிவு, வெருவுதல் . இதனை,

விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே (சொல். 347)

அவற்றுள்
விறப்பே வெரூஉப்பொருட்டும் ஆகும் (சொல். 348)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். எ.கா:

- **விறந்த** காப்போ டுண்ணின்று வலியுறுத்தும் - செறிவு
- அவலெறி உலக்கைப் பாடு**விறந் த**யல -வெருவுதல்

❖ அழுங்கல் – இரக்கம், கேடு

அவற்றுள்

அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும் (சொல். 350)

என்பது நூற்பா. எ.கா:

- பழங்க ணோட்டமு நலிய **வழுங்கின** னல்லனோ – இரக்கம்
- குண**னழுங்கக்** குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்கு – கேடு

❖ விழுமம் – சீர்மை, சிறப்பு, இடும்பை

விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பும் இடும்பையும் (சொல். 353)

என்பது நூற்பா. எ.கா:

- விழுமியோர்க் காண்டொறுஞ் செய்வர் சிறப்பு – சீர்மை
- வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து – சிறப்பு
- நின்னுறு விழுமம் களைந்தோள் – இடும்பை

❖ நனவு – களன், அகலம்

நனவே களனும் அகலமுஞ் செய்யும் (சொல். 376)

என்பது நூற்பா.

எ.கா: **நனவுப்**புகு விறலியிற் றோன்று நாடன் – களன்; **நனந்**தலை யுலகம் – அகலம்

❖ மத – மடன், வலி, மிகுதி, வனப்பு . இதனை,

மதவே மடனும் வலியும் ஆகும் (சொல். 377)

மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே (சொல். 378)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். எ.கா:

- பதவு மேய்ந்த **மதவு**நடை நல்லான் – மடன்
- கயிறிடு கதச்சேப் போல **மத**மிக்கு – வலி
- **மத**விடை – மிகுதி
- மாதர்வாண் முக**மதைஇ**ய நோக்கே – வனப்பு

❖ கடி – வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்தேற்று, ஐயம் . இதனை,

கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்ச முன்தேற்று ஆயீரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே (சொல். 383

ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே (சொல். 384)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். இவற்றுள் முன்தேற்று என்பது, புறத்திலன்றித் தெய்வம் முதலாயினவற்றின் முன்நின்று தெளிதலைக் குறிக்கும். ஐயமும் கரிப்பும் என்பனவற்றுள் கரிப்பு என்னும் பொருள் பண்பு பற்றி வரும். எ.கா:

- **கடிந்த** கடிந்தொரரார் செய்தார்க்கு – வரைவு
- **கடி**நுனைப் பகழி – கூர்மை
- **கடி**கா – காப்பு
- **கடி**மலர் – புதுமை
- **கடு**மான் – விரைவு
- **கடும்**பகல் – விளக்கம்
- **கடுங்**கா லொற்றலின் – மிகுதி
- **கடு**நட்பு – சிறப்பு
- **கடியை**யா னெடுந்தகை செருவத் தானே – அச்சம்
- கொடுஞ்சுழிப் புகார்த் தெய்வ நோக்கிக், **கடுஞ்**சூ டருகுவ னினக்கே – முன்தேற்று
- **கடுத்தன** ளல்லளோ வன்னை - ஐயம்

## 11.2.3 பலசொல் ஒரு பொருட்குரியன

❖ உறு, தவ, நனி – மிகுதி

உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப (சொல். 299)

என்பது நூற்பா. எ.கா:

- **உறு**புனல் தந்துல கூட்டி
- ஈயாது வீயு முயிர்**தவப்** பலவே
- வந்து**நனி** வருந்தினை வாழியென் நெஞ்சே

❖ செல்லல், இன்னல் – இன்னாமை

செல்லல் இன்னல் இன்னா மையே (சொல். 302)

என்பது நூற்பா. எ.கா:

- மணங்கமழ் வியன்மார் பணங்கிய **செல்லல்**
- வெயில்புறந் தரூஉம் **இன்ன லி**யக்கத்து

❖ அலமரல், தெருமரல் – சுழற்சி

அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ் சுழற்சி (சொல்.310)

என்பது நூற்பா.

எ.கா: **அலமர** லாயம்; **தெருமர** லுள்ளமோ டன்னை துஞ்சாள்.

❖ மழ, குழ – இளமை

மழவுங் குழவும் இளமைப் பொருள (சொல்.311)

என்பது நூற்பா. எ.கா: **மழ** களிறு, **குழக்** கன்று.

❖ கூர்ப்பு, கழிவு – சிறத்தல்

கூர்ப்புங் கழிவும் உள்ளது சிறக்கும் (சொல். 314)

என்பது நூற்பா. எ.கா: துனி**கூ ரெ**வ்வமொடு; **கழி**கண்ணோட்டம்

❖ கதழ்வு, துனைவு – விரைவு

கதழ்வுந் துனைவும் விரைவின் பொருள (சொல்.315)

என்பது நூற்பா. எ.கா: **கதழ்**பரி நெடுந்தேர்; **துனை**பறை நிவக்கும் புள்ளின மான.

❖ அதிர்வு, விதிர்ப்பு – நடுக்கம்

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும் (சொல். 316)

என்பது நூற்பா. எ.கா: **அதிர** வருவதோர் நோய்; **விதிர்ப்புற** வறியா யேமக் காப்பினை.

❖ தீர்தல், தீர்த்தல் – விடுதல்

தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும் (சொல்.318)

என்பது நூற்பா.

எ.கா: துணையிற் **றீர்ந்த** கடுங்கண் யானை ; தீர்த்தலுக்கு வந்தவழிக் கண்டு கொள்க.

❖ கெடவரல், பண்ணை – விளையாட்டு

கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு (சொல். 319)

என்பது நூற்பா. எ.கா: **கெடவர லாய**மொடு; **பண்ணைத்** தோன்றிய.

❖ நம்பு, மேவு – நசை

நம்பும் மேவும் நசையா கும்மே (சொல். 329)

என்பது நூற்பா.

எ.கா: நயந்து நாம்விட்ட நன்மொழி **நம்பி**; பேரிசை நவிர**மேள** யுரையுங் காரியுண்டி.

❖ ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் – உள்ளதன் நுணுக்கம்

ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம் (சொல். 330)

என்பது நூற்பா. எ.கா:

- வேனிலுழந்த வறிதுவயங்கு **ஓய்**களிறு;

- பாய்ந்**தாய்ந்த** தானைப் பரிந்தானா மைந்தினை
- **நிழத்த** யானை மேய்புலம் படர
- கயலறல் எதிரக் கடும்புனற் **சாஅய்**

❖ பிணை, பேண் – பெட்பு (புறந்தருதல்)

பிணையும் பேணும் பெட்பின் பொருள (சொல். 338)

என்பது நூற்பா.

எ.கா: அரும்**பிணை** யகற்றி வேட்ட ஞாட்பினும் ; அமரர்ப் **பேணி**யு மாவுதி யருத்தியும்.

❖ பையுள், சிறுமை – நோய்

பையுளுஞ் சிறுமையும் நோயின் பொருள (சொல். 341)

என்பது நூற்பா.

எ.கா: **பையுள்** மாலை; **சிறுமை** யுறுபவே செய்பறி யலரே.

❖ விறப்பு, உறப்பு, வெறுப்பு – செறிவு

விறப்பும் உறப்பும் வெறுப்புஞ் செறிவே (சொல். 347)

என்பது நூற்பா. எ.கா:

- **விறந்த** காப்போ டுண்ணின்று வலியுறுத்தும்
- **உறந்த** விஞ்சி
- **வெறுத்த** கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்

❖ இலம்பாடு, ஒற்கம் – வறுமை

இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை (சொல். 360)

என்பது நூற்பா. எ.கா: **இலம்பாடு** புலவ ரேற்றகை நிறைய; ஒக்க **லொற்கஞ்** சொலிய.

❖ ஞெமிர்தல், பாய்தல் – பரத்தல்

ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள (சொல். 361

என்பது நூற்பா. எ.கா: தருமணன் **ஞெமிரிய** திருநகர் முற்றத்து; **பாய்**புணல்.

❖ பேம், நாம், உரும் – அச்சம்

பேநாம் உருமென வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள (சொல். 365)

என்பது நூற்பா.

எ.கா: மன்ற மராஅத்த **பே**முதிர் கடவுள்; **நாம** நல்லார்; **உருமி**ல் சுற்றம்.

❖ கறுப்பு, சிவப்பு – வெகுளி

கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள (சொல். 372)

என்பது நூற்பா.

எ.கா: நிற்**கறுப்பதோ** ரருங்கடி முனையள்; **நீசிவந் தி**ருந்த நீரழி பாக்கம்.

❖ பரவு, பழிச்சு – வழுத்துதல்

பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள (சொல். 382)

என்பது நூற்பா. எ.கா: நெல்லுகுத்துப் **பரவுங்** கடவுளு மிலவே; கைதொழூஉ **பழிச்சி**.

## 11.3 பண்பு பற்றி வரும் உரிச்சொற்கள்

பொறியால் உணரப்படும் குணம், பண்பு எனப்படும். இதனை ஒரு சொல் ஒரு பொருட்குரியது, ஒரு சொல் பல பொருட்குரியது, பலசொல் ஒரு பொருட்குரியன என மூன்றாகப் பாகுபடுத்திக் காண இயலும்.

### 11.3.1 ஒரு சொல் ஒரு பொருட்குரியது

❖ பசப்பு – நிறம்; பசப்பு நிறனாகும் (சொல். 307) என்பது நூற்பா.

எ.கா: மையில் வாண்முகம் **பசப்பூ** ரும்மே

❖ சாயல் - மென்மை; சாயல் மென்மை (சொல்.325) என்பது நூற்பா.

எ.கா: **சாயன்** மார்பு.

❖ வெம்மை – வேண்டல்; வெம்மை வேண்டல்(சொல். 334) என்பது நூற்பா.

எ.கா: **வெங்** காமம்

❖ வாள் –ஒளி; வாளொளி யாகும் (சொல்.367) என்பது நூற்பா.
எ.கா: **வாண்** முகம்.

❖ கடி – கரிப்பு; ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே (சொல்.384) என்பது நூற்பா.

இது 'கடியென் கிளவி' என்னும் நூற்பாவைத்தொடர்ந்து வருவதாகும். இவற்றுள் 'ஐயம்' என்பது குறிப்புப் பொருள் பற்றி வருவனவற்றுள் காட்டப்பட்டுள்ளது. எ.கா: **கடி**மிளகு தின்றகல்லா மந்தி

## 11.3.2 ஒரு சொல் பல பொருட்குரியது

❖ வார்தல், போகல், ஒழுகல் – நேர்மை, நெடுமை

வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையுஞ் செய்யும் பொருள (சொல். 317)

என்பது நூற்பா. எ.கா:

- **வார்ந்தி**லங்கு வையெயிற்று; **போகு**கொடி மருங்குல்; **ஒழுகு**கொடி மருங்குல் – நேர்மை
- **வார்**கயிற் றொழுகை; வெள்வேல் விடத் தேரொடு காடுடை **போகி**; மால்வரை **யொழுகிய** வாழை – நெடுமை

❖ தட – பெருமை, கோட்டம்; கய – பெருமை, மென்மை.
இதனை,

தடவுங் கயவும் நளியும் பெருமை (சொல். 320)

அவற்றுள்
தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும் (சொல். 321)

கயவென் கிளவி மென்மையும் ஆகும் (சொல். 322)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். இவற்றுள் ‘நளி’ என்பது பண்பு பற்றி ‘பெருமை’ என்னும் ஒரு பொருள் குறித்து வருவதாகும். எ.கா:

- வலிதுஞ்சு **தடக்**கை வாய்வாட் குட்டுவன்; **கய**வாய்ப் பெருங்கை யானை – பெருமை.
- **தட**மருப் பெருமை – கோட்டம்
- **கயந்**தலை மடப்பிடி – மென்மை

❖ செழுமை – வளன், கொழுப்பு

செழுமை வளனுங் கொழுப்பும் ஆகும் (சொல். 352)

என்பது நூற்பா.

எ.கா: **செழும்**பல் குன்றம் – வளன்; **செழுந்**தடி தின்ற செந்நாய் – கொழுப்பு.

### 11.3.3 பலசொல் ஒரு பொருட்குரியன

❖ குரு, கெழு – நிறம்; குருவுங் கெழுவும் நிறனா கும்மே (சொல். 301) என்பது நூற்பா.

எ.கா: **குரு**மணித் தாலி; செங்**கேழ்** மென்கொடி

❖ தட, கய, நளி – பெருமை

தடவுங் கயவும் நளியும் பெருமை (சொல். 320)

என்பது நூற்பா. எ.கா: வலிதுஞ்சு **தடக்**கை வாய்வாட் குட்டுவன்; **கய**வாய்ப் பெருங்கை யானை; **நளி**மலை நாடன்.

❖ கறுப்பு, சிவப்பு - நிறம்

கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள (சொல். 372)

நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப (சொல். 373)

என்பன நூற்பாக்கள். எ.கா: **கறுத்த** காயா; **சிவந்த** காந்தள்.

❖ நொசிவு, நுழைவு, நுணங்கு – நுண்மை

நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை (சொல். 374)

என்பது நூற்பா.

எ.கா: **நொசி**மட மருங்குல்; **நுழை**நூற் கலிங்கம்; **நுணங்கு** துகில் நுடக்கம் போல.

## 11. 4 இசை பற்றி வரும் உரிச்சொற்கள்

இதனை ஒரு சொல் ஒரு பொருட்குரியது, பலசொல் ஒரு பொருட்குரியன என இரண்டாகப் பாகுபடுத்திக் காண இயலும். ஒரு சொல் பல பொருட்குரிய சொல்லாக ஒன்றும் சுட்டப்பெறவில்லை.

### 11.4.1 ஒரு சொல் ஒரு பொருட்குரியது

❖ இசைப்பு – இசை; இசைப்பிசை யாகும் (சொல். 309)

என்பது நூற்பா.

எ.கா: யா**ழிசை**யூப் புக்கும்

### 11.4.2 பலசொல் ஒரு பொருட்குரியன

❖ கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் – அரவம் (ஒலி)

கம்பலை சும்மை கலியே அழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள (சொல்.349)

என்பது நூற்பா. எ.கா: **கம்பலை** மூதூர்; ஒருபெருஞ் **சும்மை**யொடு; **கலி**கொள் ஆய மலிபுதொகு பெடுத்த; உயர்வுப் புணர்ந் தன்றிவ் **வழுங்க லூ**ரே.

❖ துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் – இசைத்தல்

துவைத்தலுஞ் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்
இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர் (சொல். 358)

என்பது நூற்பா. எ.கா: வரிவளை **துவைப்ப**; ஆமா நல்லேறு **சிலைப்ப**; கடிமரந் தடியுமோசை தன்னூர், நெடுமதில் வரைப்பிற் கடிமனை **யியம்ப**; ஏ**றிரங் கி**ருளிடை.



## 11.5 உரிச்சொல் பொருள் உணர்தல்

❖ தொல்காப்பியர் உரிச்சொற்களுக்கு இவையிவை பொருள் எனக் கூறியிருந்தாலும் அவ்வவ் வுரிச்சொற்களுக்கு முன்னும் பின்னும் இயைந்த சொற்களைக் கொண்டு அவற்றிற்குப் பொருந்தும் பொருளையே கொள்ளவேண்டும்.

மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தத்த மரபில் தோன்றுமன் பொருளே (சொல். 389)

என்பது நூற்பா.

❖ அவ்வாறு முன்னும் பின்னும் வருபவை நாடியவழி, உரிச்சொற்குக் கூறப்பட்ட பொருளேயன்றிப் பிறபொருள் தோன்றுமாயினும் கூறப்பட்டவற்றோடு அவற்றையும் கொள்க என்பர் தொல்காப்பியர்.

கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடுங் கொளலே (சொல்.390)

என்பது நூற்பா. எ.கா: **கடி**நாறும் பூந்துணர்.

தொல்காப்பியர் ‘கடி’ என்பதற்கு வரைவு முதலாகப் பன்னிரெண்டு பொருள் கூறினார். ஆனால் ‘கடிநாறும்’ என்பதில் வரும் ‘கடி’ என்பது அவற்றில் அடங்காது ‘மணம்’ என்னும்பொருளில் வந்தது.

## 11.6 சொற்களுக்குப் பொருள் காணும் முறைமை

❖ வழக்கில் பயிலாத ஒரு சொல்லிற்குப் பொருள் உணர்த்த வேண்டின், பிறிதொரு சொல்லைக் கொண்டே பொருள் உணர்த்த

வேண்டும். அவ்வாறு பொருள் உணர்த்த வந்த சொல்லுக்கும் பொருள் தெரியாதாயின் மேன்மேலும் அவ்வச் சொல்லையும் விளக்குவதற்காகப் பொருள் சொல்லிக் கொண்டு போதல் தவறாகும். ஆதலின் பொருள் உணர்த்த வந்த சொல்லுக்குப் பொருள் சொல்ல வேண்டாம் என்பர் தொல்காப்பியர்.

பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம் பின்றே (சொல். 391) என்பது நூற்பா.

❖ அவ்வாறு ஒரு சொல்லிற்குப் பொருள் கூறின், அச்சொல்லிற்கும் பொருள் தெரியானாயின் அவனுக்கு எவ்வாறு விளக்க வேண்டும் என்பதை,

பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின் (சொல்.392)

என்னும் நூற்பா விளக்கும். ஒரு சொல்லிற்குரிய பொருளைப் பிறிதொரு சொல்லால் விளக்குக; அச்சொல்லிற்கும் பொருள் அறியானாயின், அதனை ஒரு சொற்றொடரில் அமைத்துக் காட்டி விளக்குக; அப்பொழுதும் விளங்கிக் கொள்ளானாயின் அப்பொருளை நேரே காட்டி விளக்குக என்பர் சேனாவரையர்.

❖ இவ்வாறு பலநிலைகளில் பொருள் உணர்த்தியும் பொருள் விளங்கானாயின், அவனுக்கு உணர்த்தும் வழியில்லை. ஒன்றை உணர்தற்கும் அவரவர்க்கு அடிப்படையாக உணர்ச்சி வேண்டுதலின், அஃது இல்லையெனில் உணர்த்தும் வழியில்லை என்பர் தொல்காப்பியர்.

உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே (சொல். 393)

என்பது நூற்பா.

## 11.7 சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள இயைபு

உறு, தவ முதலாயின சொற்களுக்கு மிகுதி முதலாயின பொருளாதல் வரலாற்று முறைமையாற் கொள்வதாகும். அவை அப்பொருளாவதற்குக் காரணம் விளங்கத் தோன்றாது.

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா (சொல். 394)

என்பதுநூற்பா.

## 11.8 உரிச்சொல்லின் இயல்புகளுள் ஒன்று

முதனிலையும் இறுதி நிலையுமாக எழுத்துக்கள் பிரிந்து வேறுவேறு பொருள் உணர்த்துதல் உரிச்சொல்லின் இயல்பு அன்று.

எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல்
பின்றே(சொல்.395) என்பது நூற்பா.

## 11.9 புறனடை

சொல்லப்பட்டனவேயன்றி அவை போல்வன பிறவும் பலவாற்றானும் பரந்து வரும் உரிச்சொல் எல்லாம், பொருளொடு புணர்த்து உணர்த்திய இசை, குறிப்பு, பண்பு பற்றித் தாம் இயன்ற நிலத்து இத்துணை என வரையறுத்து உணரும் எல்லை, தமக்கு இன்மையான் எஞ்சாமை கிளத்தல் அரிது. எனவே தரப்பட்ட பாதுகாவலாணையிற் கிளந்தவற்று இயல்போடு மரீஇயவற்றை முறைப்பட உணர்க எனப் புறனடை கூறுவர் தொல்காப்பியர்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. 'கமம்' என்னும் உரிச்சொல் உணர்த்தும் குறிப்புப் பொருள் யாது?

……………………………………………………………………………
……………………

2. ‘தா’ என்னும் உரிச்சொல் உணர்த்தும் குறிப்புப் பொருள்கள் யாவை?

…………………………………………………………………………… ……………………

3. இளமை என்னும் பொருளைக் குறிக்கும் உரிச்சொற்களைக் கூறுக.

…………………………………………………………………………… …………………….

4. ‘வாள்’ என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்புப்பொருள் யாது?

…………………………………………………………………………… ……………………..

5. ‘அரவம்’ என்னும் பொருளைச் சுட்டும் இசை பற்றி வரும் உரிச்சொற்கள் யாவை?

…………………………………………………………………………… ……………………..

**தொகுத்தறிவோம்**

உரிச்சொற்களின் இலக்கணம் கூறுவதால் இவ்வியல் உரியியல் எனப் பெயர் பெற்றது. தமக்கியல்பில்லாத இடைச்சொற்களைப் போல இல்லாமல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்குத் தாமே உரியவாகலின் உரிச்சொல் எனப் பெயர் பெற்றது. பெரும்பான்மையும் செய்யுட்கு உரித்தாய் வருதலின் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருண்மேல் தோன்றி, பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் தம்முருபு தடுமாறி வரும். ஒருசொல் பல பொருட்கு உரித்தாகவும் பல சொல் ஒரு பொருட்கு உரித்தாகவும் வரும். ஒருசொல் ஒரு பொருட்கு உரித்தாதல் இயல்பு என்பதால் அதனைத் தொல்காப்பியர் சுட்டவில்லை. மெய்தடுமாறல் (உரிச்சொற்களின் பகுதிகள் திரிதல்), ஒரு சொல் பல பொருட்கு

உரித்தாதல், பல சொல் ஒரு பொருட்கு உரித்தாதல் ஆகியன உரிச்சொற்கு உரியனவேணும் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்கு உரியவாய் வருதலே உரிச்சொற்கு இலக்கணமாகும்.



**அருஞ்சொற்பொருள்**

உட்கு – அச்சம்; பெற்று – பெருக்கம்; ஐம்மை – மென்மை; பெட்பு – புறந்தருதல்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. நிறைவு

2. வலி, வருத்தம்

3. மழ, குழ

4.ஒளி

5. கம்பலை, சும்மை, கலி, அழுங்கல்

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தை விளக்குக.

2. குறிப்புப் பற்றி வரும் உரிச்சொற்களைத் தொகுத்துரைக்க.

3. பண்பு பற்றி வரும் உரிச்சொற்களைக் கட்டுரைக்க.

4. இசை பற்றி வரும் உரிச்சொற்கள் யாவை?

5. உரிச்சொற்களின் பொருள் உணர்ந்து கொள்ளுதல் குறித்தெழுதுக.

# பிரிவு – 4

# எஞ்சிய சொல் மரபுகள்

## கூறு – 12:

## தொல்காப்பியம் – சொல் – எச்சவியல் – முதல் 25 நூற்பாக்கள்

**அமைப்பு**

அறிமுகம்

நோக்கங்கள்

12.1 செய்யுள் ஒழிபு

12.1.1 செய்யுளீட்டச்சொற்கள்

12.1.1.1 இயற்சொல்

12.1.1.2 திரிசொல்

12.1.1.3 திசைச்சொல்

12.1.1.4 வடசொல்

12.1.2 செய்யுள் விகாரம்

12.1.3 மொழிபுணர் இயல்பு (பொருள்கோள்)

12.1.3.1 நிரல்நிறைப் பொருள்கோள்

12.1.3.2 சுண்ணப் பொருள்கோள்

12.1.3.3 அடிமறிப் பொருள்கோள்

12.1.3.4 மொழிமாற்றுப் பொருள்கோள்

12.2 வழக்கிணைத்தது ஒழிபு

12.2.1 கிளைநுதற் பெயர்கள்

12.2.2 தொகைச்சொற்கள்

12.2.2.1 வேற்றுமைத்தொகை

12.2.2.2 உவமத்தொகை

12.2.2.3 வினைத்தொகை

12.2.2.4 பண்புத்தொகை

12.2.2.5 உம்மைத்தொகை

12.2.2.6 அன்மொழித்தொகை

12.2.2.7 தொகைச்சொற்கள் பொருள் சிறத்தல்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

**அறிமுகம்**

கிளவியாக்கம் முதலாக உரியியல் ஈறாக உள்ள எட்டு இயல்களிலும் சொல்லுதற்கு இடனில்லாது எஞ்சி நின்ற இலக்கணங்களையெல்லாம் இவ்வியல் உணர்த்துவதால் எச்சவியல் எனப் பெயர் பெற்றது. இங்கு எச்சம் என்பது எஞ்சி நிற்பது என்ற பொருளைத் தந்தது. எச்சவியலில் செய்யுள் ஒழிபு, வழக்கிலக்கணத்தது ஒழிபு, மரபு ஒழிபு ஆகிய மூன்று ஒழிபுச் செய்திகள் உணர்த்தப்பட்டுள்ளன.

**நோக்கங்கள்**

- செய்யுள் ஒழிபுகளை உணர்த்துதல்
- செய்யுளீட்டச் சொற்களை விளக்குதல்
- செய்யுள் விகாரம் பற்றிக் கூறுதல்
- மொழிபுணரியல்புகளை எடுத்துரைத்தல்
- வழக்கிலக்கணத்தது ஒழிபுகளைச் சுட்டுதல்
- தொகைச்சொற்களை விளக்குதல்

## 12.1 செய்யுள் ஒழிபு

செய்யுளீட்டச் சொற்கள், செய்யுள் விகாரம், மொழிபுணர் இயல்பு தொடர்பான செய்திகள் செய்யுள் ஒழிபாகும்.

### 12.1.1 செய்யுளீட்டச்சொற்கள்

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கும் செய்யுள் ஈட்டச் சொற்களாகும்.

> இயற்சொல் திரிசொல் திசைச்சொல்லென்று
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே (சொல். 397)

என்பது நூற்பா.

#### 12.1.1.1 இயற்சொல்

செந்தமிழ் நிலத்து வழங்கி வருவதாகிக் கொடுந்தமிழ் நிலத்தும் தமக்குரிய பொருள் வழுவாமல் வழங்கும் இயல்பினையுடையது இயற்சொல்லாகும். திரிபின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல் எனப்பட்டது.

> அவற்றுள்
> இயற்சொற் றாமே
> செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
> தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே (சொல். 398)

என்பது நூற்பா. வையை ஆற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும் செந்தமிழ் நிலம் எனப்படும். எ.கா: நிலம், நீர், தீ, வளி, சோறு, கூழ், பால், தயிர், மக்கள், மா, தெங்கு, கமுகு என்னுந் தொடக்கத்தன.

#### 12.1.1.2 திரிசொல்

இயற்சொல்லினின்று திரிந்து வருவது திரிசொல்லாகும். இது ஒரு பொருள் குறித்த வேறு சொல்லாகியும், வேறு பொருள் குறித்த ஒரு சொல்லாகியும் வரும்.



> ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
> வேறுபொருள் குறித்த வேறுசொல் லாகியும்

இருபாற் றென்ப திரிசொற் கிளவி (சொல். 399)

என்பது நூற்பா. எ.கா:

- வெற்பு, விலங்கல், விண்டு – ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க்கிளவி
- எகினம், உந்தி – வேறு பொருள் குறித்த ஒரு சொல். இவற்றுள் எகினம் என்பது அன்னம். கவரிமா, புளிமா, நாய் ஆகிய பொருள்களை உணர்த்தும். உந்தி என்பது யாழ்ப்பத்தர் உறுப்பு, கொப்பூழ், தேர்த்தட்டு, கான்யாறு ஆகிய பொருள்களை உணர்த்தும்.



### 12.1.1.3 திசைச்சொல்

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களிலும் அவ்வந்நாட்டார் தாம்தாம் குறித்த பொருளை விளக்கும் சொற்கள் செந்தமிழ் நாட்டில் வந்து வழங்குமாயின் அவை திசைச்சொல் எனப்படும்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப்பினவே திசைச்சொற் கிளவி (சொல். 400)

என்பது நூற்பா. செந்தமிழ் நாட்டுத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பால் இறுதியாக உள்ள பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு என்னும் பன்னிரண்டும் செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலங்களாகும். எ.கா: தென்பாண்டி நாட்டார் ஆ, எருமை என்பனவற்றைப் 'பெற்றம்' என்றும் 'தம்மாமி' என்பதனை 'தந்துவை' என்றும் வழங்குதல்.

### 12.1.1.4 வடசொல்

❖ வடசொற்கே உரிய எனப்படும் சிறப்பெழுத்தினின்றும் நீங்கி, தமிழ், வடமொழி ஆகிய இருமொழிக்கும் பொதுவாகிய எழுத்தால் ஆன சொல் வடசொல் எனப்படும்.

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே (சொல். 401)

என்பது நூற்பா. எ.கா: வாரி, மேரு, குங்குமம், மணி என்னுந் தொடக்கத்தன.

❖ பொதுவெழுத்தான் இயன்ற சொற்கள் மட்டுமின்றி வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்களினின்றும் திரிந்து வரும் சொற்களும் வடசொல் எனப்படும். இவையும் செய்யுட்கண் ஏற்றுக்கொள்ளப்படும்.

சிதைந்தன வரினும் இயைந்த வரையார் (சொல். 402)

என்பது நூற்பா. எ.கா: **அரமிய** வியலகத் தியம்பும்; **தச**நான் கெய்திய பணைமரு ணோன்றாள்.

## 12.1.2 செய்யுள் விகாரம்

❖ இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நால்வகைச் சொற்களையும் கொண்டு செய்யுள் செய்யும்பொழுது வலித்தல், செலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் ஆகிய அறுவகை விகாரங்கள் தோன்றும்.

அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழி தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர் (சொல். 403)

என்பது நூற்பா. எ.கா:

- குறுக்கையிரும்புலி – இதில் குறுங்கை என்பது குறுக்கை என வலிக்கும்வழி வலித்தல்
- குன்றியலுகரத்திறுதி – குற்றியலுகரம் என்பது குன்றியலுகரம் என மெலிக்கும்வழி மெலித்தல்
- தண்ணந்துறைவன் –தண்துறைவன் என்பது தண்ணந்துறைவன் என விரிக்கும்வழி விரித்தல்
- மழவரோட்டிய- மழவரையோட்டிய என்பது மழவரோட்டிய எனத் தொகுக்கும்வழி தொகுத்தல்

- வீடுமின் – விடுமின் என்பது வீடுமின் என நீட்டும்வழி நீட்டல்
- உண்டருந்து – உண்டார்ந்து என்பது உண்டருந்து எனக் குறுக்கும்வழிக் குறுக்கல்

❖ செய்யுளுள் நிறைச்சொற்கள் மட்டுமல்லாமல் குறைச்சொற்களும் பயின்று வரும். அவ்வாறு குறைந்து வருதல் முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என மூவகைப்படும். அவை குறைச்சொற்களாக இருந்தாலும் நிறைச்சொற்களாகவே கருதப்படும். இதனை,

குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல் (சொல். 453)

குறைத்தன ஆயினும் நிறைப்பெயர் இயல (சொல். 454)

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். எ.கா:

- மரையிதழ் புரையும் அஞ்செஞ்சீறடி – இதில் ‘தாமரை’ முதற்குறை
- வேதின வெரிநினோ திமுது போத்து – இதில் ‘ஓந்தி’ இடைக்குறை
- நீலுண்டு கிலிகை கடுப்ப – இதில் ‘நீலம்’ கடைக்குறை

## 12.1.3 மொழிபுணர் இயல்பு (பொருள்கோள்)

பல சொற்களால் பொருட்கு இடனாக உணர்வினில் வல்லோர் அழகுபடச் செய்வது செய்யுளாகும். இவ்வாறு பல சொற்கள் சேர்ந்து செய்யுளாகும் பொழுது அவற்றில் காணும் சொற்களை நின்றாங்கு அப்படியே பொருள் கொள்வதும் உண்டு; அப்படியல்லாமல் சொற்களை மாற்றியோ அல்லது அடிகளை மாற்றியோ பொருள் கொள்வதும் உண்டு. இவ்வாறு சொற்கள் ஒன்றோடொன்று இயைந்து பொருள்படும் இயல்பை ‘ மொழிபுணர் இயல்பு’ என்றும் ‘பொருள்கோள்’ என்றும் கூறுவர். இது நான்கு வகைப்படும். அவையாவன,

1. நிரனிறைப் பொருள்கோள்
2. சுண்ணப் பொருள்கோள்
3. அடிமறிப் பொருள்கோள்

4. மொழிமாற்றுப் பொருள்கோள்

என்பனவாகும். இதனை,

நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே (சொல்.404)

என்னும் நூற்பா விளக்கும்.

## 12.1.3.1 நிரல்நிறைப் பொருள்கோள்

முடிக்கும் சொல்லையும் முடிக்கப்படும் சொல்லையும் நிரல்பட வேறுவேறு நிறுத்திப் பொருள் கொள்ளுதல் நிரல்நிறைப் பொருள்கோள் எனப்படும். தொல்காப்பியர் அவற்றுள் நிரல்நிறையாவது, வினையானும் பெயரானும் ஆராயத் தோன்றிச் சொல்வேறு நிற்பப் பொருள் வேறு நிற்றலாம் என்பர்.

அவற்றுள்
நிரல்நிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல் (சொல்.405)

என்பது நூற்பா. இதனால் வினை நிரல்நிறை, பெயர் நிரல்நிறை, அவ்விரண்டானும் வரும் நிரல்நிறை என்னும் மூவகை விளங்கும். இதனோடு சொல்லும் பொருளும் வேறுவேறு நிற்குங்கால் நிரல்பட நில்லாது மயங்கி வரும் எதிர் நிரல்நிறையையும் சேர்த்து நிரல்நிறைப் பொருள்கோள் நான்கு வகைப்படும் என்பர்.

எ.கா:

- மாசு போகவும் காய்பசி நீங்கவும், கடிபுனன் மூழ்கி யடிசில்கை தொட்டு - இதில் மாசு போகப் புனல் மூழ்கி, பசி நீங்க அடிசில் கைதொட்டு என முடிவனவும் முடிப்பனவுமாகிய வினைச்சொற்கள் நிரல்நிறையாக நின்று இயைந்து வருவதால் இது வினை நிரல்நிறையாயிற்று.
- கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி – இதில் முடிவனவும் முடிப்பனவுமாகிய பெயர்ச்சொற்கள் நுசுப்புக் கொடி, உண்கண் குவளை, மேனி கொட்டை என நிரல்

நிறையாக நின்று இயைந்து வருவதால் இது பெயர் நிரல் நிறையாயிற்று.

- உடலு முடைந்தோடு மூழ்மலரும் பார்க்குங், கடலிரு ளாம்பல்பாம் பென்ற – கெடலருஞ்சீர்த், திங்கள் திருமுகமாச் செத்து – இதில் முடிப்பனவாகிய வினையும் முடிவனவாகிய பெயரும் வேறுவேறு நின்று கடல் உடலும், இருள் உடைந்தோடும், ஆம்பல் ஊழ் மலரும் பாம்பு பார்க்கும் என நிரல்நிறையாக இயைந்து வருவதால் இது பொது நிரல்நிறையாகும்.
- களிறுங் கந்தும் போல நளிகடற், கூம்புங் கலனுந் தோன்றுந், தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே – இதில் முடிவனவும் முடிப்பனவுமாகிய சொற்கள் நிரல்பட நில்லாது மயங்கி வந்துள்ளன. களிறு போலும் கலன், கந்து போலும் கூம்பு என மயங்கி முடிவதால் எதிர் நிரல்நிறையாகும்.



### 12.1.3.2 சுண்ணப் பொருள்கோள்

முடிக்கும் சொல்லும் முடிக்கப்படும் சொல்லும் எண்சீரிலும் சிதறிக் கிடக்க இப்பொருள்கோள் அமைந்திருப்பதால் இது சுண்ணப் பொருள்கோள் எனப்பட்டது. சுண்ணம் என்பது பொடியைக் குறிக்கும். பொடி அங்குமிங்கும் பரந்து கிடப்பது போலச் சொற்களும் பொருட்கு இயைபின்றி அங்குமிங்குமாகத் துண்டு துண்டாய்ப் பரந்து கிடக்க அவற்றை இயைத்துப் பொருள் கொள்ளுதல் இதன் இயல்பு. இப்பொருள்கோள் ஒவ்வொரு அடியிலும் நான்கு நான்கு சீராக ஈரடிக்கண் வரும்; எண் சீர்களில் மட்டுமே அமையும்.

சுண்ணம் தானே
பட்டாங் கமைந்த ஈரடி யெண்சீர்
ஒட்டுவழி யறிந்து துணித்தனர் இயற்றல் (சொல்.406)

என்பது நூற்பா. எ.கா:

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை

இதில் ஆழ, மிதப்ப, நீத்து, நிலை என்பனவும் சுரை, அம்மி, யானைக்கு, முயற்கு என்பனவும் சுண்ணம்போலச் சிதறி உள்ளன. இவற்றைச் சுரை மிதப்ப, அம்மியாழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து என இயைத்துப் பொருள் கொள்வதால் சுண்ணப் பொருள்கோள் எனப்பட்டது.

### 12.1.3.3 அடிமறிப் பொருள்கோள்

❖ ஒரு செய்யுளில் சீர்கள் நின்றாங்கு நிற்ப, அதில் எவ்வித மாறுதலுமின்றி, அடிகள் ஒவ்வொன்றும் ஒன்று நிற்க வேண்டிய இடத்தில் பிற அடி நிற்பினும் பொருள் மாறாது வருவது அடிமறிப் பொருள்கோளாகும். இப்பொருள்கோள் பெரும்பாலும் நாலடிச் செய்யுட்களிலேயே வரும்.

அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே (சொல்.407)

என்பது நூற்பா. எ.கா:

மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே

இப்பாடலில் எந்த அடியை எங்கு வைத்துப் படித்தாலும் பொருள் இயைந்து வரும்.

❖ அடிமறிப் பொருள்கோளில் ஈற்றடியது இறுதிச் சீர் ஈற்றயலடியில் சென்று திரிதலும் உண்டு.

பொருள்தெரி மருங்கின்
ஈற்றடி இருசீர் எருத்துவயின் திரிபுந்
தோற்றமும் வரையார் அடிமறி யான (சொல்.408)

என்பது நூற்பா.

### 12.1.3.4 மொழிமாற்றுப் பொருள்கோள்

ஒரு செய்யுளின்கண் சொற்கள் நின்றவாறு நிற்பப் பொருள் கொள்ளாது, சொற்களை முன்னும் பின்னும் கூட்டிப் பொருள் இயைய அமைத்துப் பொருள் கொள்வது மொழிமாற்றுப் பொருள்கோள் எனப்படும்.

மொழிமாற் றியற்கை
சொல்நிலை மாற்றிப் பொருளெதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்
(சொல்.409)

என்பது நூற்பா. எகா:

ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேல் தண்ணுமை – காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தான்நாணுந் தோளாள்
நிறன்உள்ளூர் உள்ளது அலர்

இப்பாடலில் பாரி பறம்பின் மேல் தண்ணுமை தான் நாணும் தோளாள் எனவும் நிறன் விறன் முள்ளூர் வேங்கை வீ எனவும் உள்ளூர் உள்ளதாகிய அலர் ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும் எனவும் முன்னும் பின்னும் கூட்டிப் பொருள் இயைந்து வந்துள்ளது மொழிமாற்றுப் பொருள்கோளாகும்.

## 12.2 வழக்கிணத்தது ஒழிபு

கிளைநுதற் பெயர்கள், தொகைச் சொற்கள், அடுக்கு, வினைமுற்று, எச்சங்கள் தொடர்பான செய்திகள் ஆகியன எச்சவியலில் அமைந்துள்ள வழக்கிலக்கணத்தது ஒழிபாகும்.

### 12.2.1 கிளைநுதற் பெயர்கள்

த, ந, நு, எ என்பனவற்றை முதலாக உடையதாய் ஒருவரோடு ஒருவர்க்குள்ள தொடர்பாகிய கிளைமையைக் குறிக்க வருகின்ற பெயர்கள் பிரிப்பப் பிரியாதனவாகும்.

தநநுஎ எனும் அவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா (சொல். 410)

என்பது நூற்பா. கிளைநுதற் பெயர்கள் தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர்; தம்மான், தம்மாள், தம்மார்; நம்மான், நம்மாள், நம்மார்; நும்மான், நும்மாள், நும்மார்; எம்மான், எம்மாள், எம்மார் என வரும். 'உம்மையால்' தாய், ஞாய், தந்தை, தன்னை என்னுந் தொடக்கத்துக் கிளைநுதற் பெயரும் பிரிக்கப் பிரியா என்பது பெறப்படும்.

### 12.2.2 தொகைச்சொற்கள்

வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை எனத் தொகைச் சொல் ஆறு வகைப்படும்.

வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று
அவ்வா றென்ப தொகைமொழி நிலையே (சொல். 412)

என்பது நூற்பா.

### 12.2.2.1 வேற்றுமைத்தொகை

முதல் வேற்றுமை பெயராதலானும் விளி வேற்றுமை பெயருமன்றி அதனின் வேறுமன்றி நிற்றலானும் அவ்விரண்டுமொழிய, இரண்டு முதல் ஏழாம் வேற்றுமை முடிய ஆறு உருபுகளும் தம் பொருள் ஒட்டிய சொல்லால் தோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாது நிற்கும் தொகைச் சொற்களை வேற்றுமைத் தொகை என்பர். இவ்வேற்றுமைத் தொகை, அவ் வேற்றுமை உருபு தொடர்பொருள் உணர்த்தியது போல உணர்த்தும்.

அவற்றுள்
வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல (சொல். 413)

என்பது நூற்பா. எ.கா:

- நிலங்கடந்தான் → நிலத்தைக் கடந்தான்; குழைக்காது → குழையையுடைய காது – இரண்டாம் வேற்றுமைத்தொகை
- தாய்மூவர்→ தாயொடு மூவர்; பொற்குடம் → பொன்னானியன்ற குடம் – மூன்றாம் வேற்றுமைத்தொகை
- கருப்பு வேலி → கரும்பிற்கு வேலி; கடிசூத்திரப்பொன் → கடிசூத்திரத்திற்குப் பொன் –நான்காம் வேற்றுமைத்தொகை
- வரைபாய்தல் → வரையினின்றும் பாய்தல்; கருவூர்க்கிழக்கு → கருவூரின் கிழக்கு – ஐந்தாம் வேற்றுமைத்தொகை
- சாத்தன் புத்தகம் → சாத்தனது புத்தகம்; கொற்றனுணர்வு → கொற்றனதுணர்வு – ஆறாம் வேற்றுமைத்தொகை
- மன்றப்பெண்ணை→ மன்றத்தின்கண் பெண்ணை; மாரியாமா → மாரிக்கண் உளது ஆமா – ஏழாம் வேற்றுமைத்தொகை

## 12.2.2.2 உவமத்தொகை

போல, புரைய முதலிய உருபுகள் உவம உருபுகளாகும். இவ்வுருபுகள் வெளிப்பட வாராது மறைந்து நிற்க இயங்கும் சொற்கள் உவமத்தொகை எனப்படும். இது உவம உருபு தொடர்ப்பொருள் உணர்த்துவது போலப் பொருளுணர்த்தும்.

உவமத் தொகையே உவம இயல (சொல். 414)

என்பது நூற்பா. எ.கா: புலிப்பாய்த்துள் → புலிப்பாய்த்துளன்ன பாய்த்துள்; மழைவண்கை → மழையன்ன வண்கை; துடிநடுவு → துடியன்ன நடுவு; பொன்மேனி → பொன்னன்ன மேனி.

## 12.2.2.3 வினைத்தொகை

வினைச்சொற்கும் வினைப்பெயர்க்கும் முதனிலையாய் உண், தின், செல், சொல் என வினையை மட்டும் உணர்த்தி நிற்பன ‘வினை’ எனப்படும். இத்தகைய வினைகள் நிலம், இடம், காலம், கருவி, வினைமுதல் உரைக்குங் கிளவி, தொழில் ஆகிய அறுவகைப் பெயருடனும் சேருகின்ற பொழுது மூன்று

காலத்திற்கும் பொதுவாய்த் தோன்றும். இவ்வாறு வரும் சொற்கள் வினைத்தொகை எனப்படும். இவ்வினைத்தொகை காலத்தின்கண் நிகழும்.

வினையின் தொகுதி காலத் தியலும் (சொல். 415)

என்பது நூற்பா. தொகுதி காலத்தியலும் என்றதனால், அவ்வினை பிரிந்து நின்றவழித் தோன்றாது. தொக்கவழித் தொகையாற்றலாற் காலந் தோன்றும் என்பது பெறப்படும். எ.கா: ஆடரங்கு, செய்குன்று, புணர்பொழுது, அரிவாள், கொல்யானை, செல்செலவு.

### 12.2.2.4 பண்புத்தொகை

வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலிய பண்புகளைக் குறிக்கும் சொல் முன்னரும் அப்பண்பினை உடைய பொருள் பின்னரும் இயைந்து இன்னது இதுவென ஒன்றனையொன்று சிறப்பித்து அவ்விரு சொல்லும் ஒருபொருள் மேல் வரும் இயல்புடைய தொகைச்சொல் பண்புத்தொகையாகும்.

வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று
அன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்னது இதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே (சொல். 416)

என்பது நூற்பா. எ.கா: கருங்குதிரை – வண்ணப்பண்பு; வட்டபாகை- வடிவு; நெடுங்கோல் – அளவு; தீங்கரும்பு – சுவை.

### 12.2.2.5 உம்மைத்தொகை

❖ ‘உம்’ என்ற சொல் மறைந்து நிற்பது உம்மைத் தொகையாகும். இது இருபெயர், பலபெயர், அளவுப்பெயர், எண்ணியற் பெயர், நிறைப்பெயர், எண்ணின் பெயர் ஆகிய அறுவகைப் பெயர்க்கண்ணும் வரும்.

இருபெயர் பல்பெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின் பெயரோடு அவ்வாறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே (சொல். 417)

என்பது நூற்பா. எ.கா: உவாப்பதினான்கு – இருபெயரானாய உம்மைத்தொகை; புலிவிற்கெண்டை – பலபெயரானாய உம்மைத்தொகை; தூணிப்பதக்கு – அளவுப் பெயரானாய உம்மைத்தொகை; முப்பத்துமூவர் – எண்ணியற் பெயரானாய உம்மைத்தொகை; தொடியரை – நிறைப்பெயரானாய உம்மைத்தொகை; பதினைந்து – எண்ணுப்பெயரானாய உம்மைத்தொகை. இவை விரியுங்கால், உவாவும் பதினான்கும் எனவும், புலியும் வில்லுங் கெண்டையும் எனவும் தூணியும் பதக்கும் எனவும்முப்பதின்மரும் மூவரும் எனவும், தொடியும் அரையும் எனவும் பத்தும் ஐந்தும் எனவும் விரியும்.

❖ உம்மைத்தொகை உயர்திணைக்கண் வருங்கால் பலர் பாலுக்குரிய ஈற்றைக் கொண்டு முடியும்.

உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர் (சொல்.421)

என்பது நூற்பா. எ.கா: மாமூலப் பெருந்தலைச்சாத்தர் –இருபெயர் உம்மைத்தொகை, கபில பரண நக்கீரர் – பல்பெயர் உம்மைத்தொகை.

### 12.2.2.6 அன்மொழித்தொகை

பண்புச்சொல் தொகும் சொல்லிலும் உம்மை தொக்க பெயர்க்கண்ணும் வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும் இறுதிச்சொற்கண் நின்று நடக்கும் அன்மொழித்தொகை.

பண்புதொக வரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே (சொல். 418)

என்பது நூற்பா. எ.கா: வெள்ளாடை, அகரஈறு – பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழிதொகை; தகரஞாழல் – பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பொற்றொடி – வேற்றுமைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த

அன்மொழித்தொகை. இவை வெள்ளாடையுடுத்தாள், அகரமாகிய ஈற்றையுடைய சொல் எனவும், தகரமும் ஞாழலுமாகிய சாந்து பூசினாள் எனவும் பொற்றொடி தொட்டாள் எனவும் விரியும்.

சிறுபான்மை உவமத்தொகை நிலைக்களத்தும் வினைத்தொகை நிலைக்களத்தும் அன்மொழித்தொகை பிறக்கும். எ.கா: பவளவாய்- உவமத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை; திரிதாடி – வினைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இவை பவளம் போலும் வாயையுடையாள் எனவும் திரிந்த தாடியையுடையாள் எனவும் விரியும்.

### 12.2.2.7 தொகைச்சொற்கள் பொருள் சிறத்தல்

❖ அறுவகைத் தொகைச்சொற்களும் முன்மொழி, பின்மொழி, இருமொழி, இருமொழியிலுமன்றிப் பிறமொழி என நான்குவகையாய்ப் பொருள் சிறக்கும்.

அவைதாம்
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குட னிலையலும்
அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள்நிலை மரபே (சொல். 419)

என்பது நூற்பா. எ.கா: வேங்கைப்பூ – முன்மொழி நிலையல்; அடைகடல் – பின்மொழி நிலையல்; உவாப்பதினான்கு – இருமொழி நிலையல்; வெள்ளாடை – அன்மொழி நிலையல்.

❖ அறுவகைத் தொகைச் சொல்லும் ஒரு சொல்லாய் நடக்கும் இயல்பினையுடையது.

எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய (சொல்.420)

என்பது நூற்பா.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. இயற்சொல் என்றால் என்ன?

…………………………………………………………………………………
……………………

2. திசைச்சொல் என்பது யாது?

…………………………………………………………………………………
……………………

3. நிரல்நிறைப் பொருள்கோள் என்றால் என்ன?

…………………………………………………………………………………
……………………

4. உவமத்தொகை என்பது யாது?

…………………………………………………………………………………
……………………..

5. உம்மைத்தொகை பொருந்தி வரும் பெயர்கள் யாவை?

…………………………………………………………………………………
……………………..

**தொகுத்தறிவோம்**

கிளவியாக்கம் முதலாக உரியியல் ஈறாக உள்ள எட்டு இயல்களிலும் சொல்லுதற்கு இடனில்லாது எஞ்சி நின்ற இலக்கணங்களையெல்லாம் இவ்வியல் உணர்த்துவதால் எச்சவியல் எனப் பெயர் பெற்றது. செய்யுளீட்டச் சொற்கள்,

செய்யுள் விகாரம், மொழிபுணர் இயல்பு தொடர்பான செய்திகள் செய்யுள் ஒழிபாகும். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கும் செய்யுள் ஈட்டச் சொற்களாகும். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நால்வகைச் சொற்களையும் கொண்டு செய்யுள் செய்யும்பொழுது வலித்தல், செலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் ஆகிய அறுவகை விகாரங்கள் தோன்றும். சொற்கள் ஒன்றோடொன்று இயைந்து பொருள்படும் இயல்பை ‘ மொழிபுணர் இயல்பு’ என்றும் ‘பொருள்கோள்’ என்றும் கூறுவர். இது நிரனிறைப் பொருள்கோள், சுண்ணப் பொருள்கோள், அடிமறிப் பொருள்கோள்,மொழிமாற்றுப் பொருள்கோள் என நான்கு வகைப்படும். கிளைநுதற் பெயர்கள், தொகைச் சொற்கள், அடுக்கு, வினைமுற்று, எச்சங்கள் தொடர்பான செய்திகள் ஆகியன எச்சவியலில் அமைந்துள்ள வழக்கிலக்கணத்தது ஒழிபாகும். கிளைநுதற் பெயர்கள் தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர்; தம்மான், தம்மாள், தம்மார்; நம்மான், நம்மாள், நம்மார்; நும்மான், நும்மாள், நும்மார்; எம்மான், எம்மாள், எம்மார் என வரும். வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை எனத் தொகைச் சொல் ஆறு வகைப்படும்.

---

**அருஞ்சொற்பொருள்**

---

சுண்ணம் – பொடி; உவா- நிறை மதி

## உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்



1. செந்தமிழ் நிலத்து வழங்கி வருவதாகிக் கொடுந்தமிழ் நிலத்தும் தமக்குரிய பொருள் வழுவாமல் வழங்கும் இயல்பினையுடையது இயற்சொல்லாகும்.

2. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களிலும் அவ்வந்நாட்டார் தாம்தாம் குறித்த பொருளை விளக்கும் சொற்கள் செந்தமிழ் நாட்டில் வந்து வழங்குமாயின் அவை திசைச்சொல் எனப்படும்.

3. முடிக்கும் சொல்லையும் முடிக்கப்படும் சொல்லையும் நிரல்பட வேறுவேறு நிறுத்திப் பொருள் கொள்ளுதல் நிரல்நிறைப் பொருள்கோள் எனப்படும்.

4. உவம உருபுகள் வெளிப்பட வாராது மறைந்து நிற்க இயங்கும் சொற்கள் உவமத்தொகை எனப்படும்.

5. உம்மைத்தொகை இருபெயர், பலபெயர், அளவுப்பெயர், எண்ணியற் பெயர், நிறைப்பெயர், எண்ணின் பெயர் ஆகிய அறுவகைப் பெயர்க்கண்ணும் வரும்.

## இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

1. செய்யுளீட்டச் சொற்கள் யாவை? விவரி.

2. செய்யுள் பெறும் விகாரங்களை விளக்குக.

3.பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துரைக்க.

4. கிளைநுதற்பெயர்கள் குறித்தெழுதுக.

5. தொகைச் சொற்களின் வகைகளைக் கட்டுரைக்க.

# கூறு – 13:

## தொல்காப்பியம் – சொல் – எச்சவியல் – நூற்பா 26 முதல் 44 வரை

**அமைப்பு**

அறிமுகம்

நோக்கங்கள்

13.1 அடுக்கு

13.1.1 ஒரு சொல் அடுக்கு

13.1.1.1 இசைநிறை

13.1.1.2 அசைநிலை

13.1.1.3 பொருளொடு புணர்தல்

13.1.2 அசைநிலை அடுக்கு

13.2 வினைமுற்று

13.3 எச்சங்கள்

13.3.1 பிரிநிலையெச்சம்

13.3.2 வினையெச்சம்

13.3.3 பெயரெச்சம்

13.3.4 ஒழியிசை யெச்சம்

13.3.5 எதிர்மறையெச்சம்

13.3.6 உம்மையெச்சம்

13.3.7 எனவென் எச்சம்

13.3.8 குறிப்பெச்சம்

13.3.9 இசையெச்சம்

13.3.10 சொல்லெச்சம்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்



## அறிமுகம்

தொல்காப்பியர், வழக்கிலக்கணத்தது ஒழிபுச் செய்திகளை எச்சவியலில் வரையறுத்து விளக்குவர். அவற்றுள் அடுக்கு, வினைமுற்று, எச்சங்கள் என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

## நோக்கங்கள்

- அடுக்கு, அதன் வகைகள் பற்றி விளக்குதல்
- வினைமுற்று குறித்து உணர்த்துதல்
- எச்சங்களின் வகைகளை எடுத்துரைத்தல்

## 13.1 அடுக்கு

சொற்கள் ஒன்றோடொன்று அடுக்கி வரின் அது 'அடுக்கு' எனப்படும். அது ஒருசொல் அடுக்கு, அசைநிலை அடுக்கு என இரு வகைப்படும்.

## 13.1.1 ஒரு சொல் அடுக்கு

இது இசை நிறை, அசை நிலை, பொருளொடு புணர்தல் என மூவகைப்படும்.

> இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று அவைமூன் றென்ப ஒருசொல் லடுக்கே (சொல். 411)

என்பது நூற்பா.

### 13.1.1.1 இசைநிறை

இது ஒரு செய்யுளின்கண் இசை நிறைப்பதற்காக வரும். இது நான்கு முறை அடுக்கி வருதலை எல்லையாக உடையது. எனவே இது மூன்று முறையும் இரண்டு முறையும் கூட அடுக்கி வரலாம்.

இசைப்படு பொருளே நான்குவரம் பாகும் (சொல். 423)

என்பது நூற்பா. எ.கா: ஏஏஏஏ யம்பல் மொழிந்தனள், பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ

### 13.1.1.2 அசைநிலை

இசை நிறைத்தற்கன்றிச் செய்யுட்கண் இன்பம் குறித்தற்காக அடுக்கி வருவது அசை நிலையாகும். இது அடுக்கி வருவதற்கு ஆசிரியர் எல்லை கூறாராயினும் உரையாசிரியர்கள் இரு முறையே அடுக்கி வரும் என்பர்.

எ.கா: மற்றோ மற்றோ, அன்றே அன்றே

### 13.1.1.3 பொருளொடு புணர்தல்

- யாதானும் ஒரு பொருள் குறித்தற்காக அடுக்கி வருவதனைப் பொருளொடு புணர்தலின்கண் வந்த அடுக்கு என்பர். இது விரைவு, துணிவு, உடன்பாடு, ஒரு தொழில் பலகால் நிகழ்தல் ஆகிய பொருள் வேறுபாட்டின்கண் வரும் என்பர்.

எ.கா: பாம்பு பாம்பு – விரைவு; அவன் அவன் – துணிவு; வைதேன் வைதேன் – உடன்பாடு; உண்டு உண்டு, போம் போம் – ஒரு தொழில் பலகால் நிகழ்தல்.

- இவற்றுள் விரைவுப் பொருளில் வரும் அடுக்குக்கு மூன்று வரம்பாகும்.

விரைசொல் லடுக்கே மூன்று வரம்பாகும் (சொல். 424)

என்பது நூற்பா. எ.கா: *தீத் தீத் தீ.*

### 13.1.2 அசைநிலை அடுக்கு

❖ கண்டீர், கொண்டீர், சென்றீர், போயிற்று என்ற சொற்கள் ஆ, ஓ என்னும் வினா எழுத்துக்களை ஈற்றில் கொண்டுநின்றவழி அசைநிலை எனப் பெயர் பெறும்.

கண்டீர் என்றா கொண்டீர் என்றா
சென்றது என்றா போயிற்று என்றா
அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி அசைக்குங் கிளவி என்ப (சொல். 425)

என்பது நூற்பா. எ.கா: கட்டுரையகத்து ஒருவன் ஒன்று சொல்லியவழி, அதற்கு உடம்படாதான் கண்டீரே கண்டீரே என்று கூறுதல். இதில் அச்சொல் வினைச்சொற் பொருண்மையும் வினாப்பொருண்மையும் இல்லாததால் அசைநிலை ஆயின.

❖ கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்ற நான்கு சொற்களும் முன்னிலைப் பொருளை உணர்த்தாதவழி அசைநிலையாகும்.

கேட்டை என்றா நின்றை என்றா
காத்தை என்றா கண்டை என்றா
அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே (சொல். 426)

என்பது நூற்பா. இவையும் கட்டுரைக்கண் அடுக்கியும் சிறுபான்மை அடுக்காதும் அசைநிலையாய் வரும். இவற்றுள் நின்றை, காத்தை என்பன இக்காலத்துப் பயின்று வாரா என்பர் சேனாவரையர்.

## 13.2 வினைமுற்று

பிறிதோர் சொல்லை நோக்காது தானே தொடராதற்கு ஏற்கும் சொல் ‘வினைமுற்று’ எனப்படும். அது இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்காலத்திலும் வரும். தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடத்திலும் வரும். உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என முத்திணையிலும்வரும். வினையைத்

தெரிநிலை வினை, குறிப்பு வினை ஆகிய இரண்டிடத்தும் உறழ ஆறு வகைப்படும்.

> இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்
> சிறப்புடை மரபின் அம்முக் காலமும்
> தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
> அம்மூ இடத்தான் வினையினும் குறிப்பினும்
> மெய்ம்மை யானும் இவ்விரண் டாகும்
> அவ்வா றென்ப முற்றியன் மொழியே (சொல். 427)

என்பது நூற்பா. எ.கா:

- சென்றனன் – உயர்திணை; சென்றது – அஃறிணை; சென்றனை – விரவுத்திணை – இவை தெரிநிலை வினைமுற்று.
- கரியன் – உயர்திணை; கரியது – அஃறிணை; கரியை – விரவுத்திணை – இவை குறிப்பு வினைமுற்று.

❖ மேற்கூறப்பட்ட இலக்கண வரையறையில் அடங்காது பிறவாறு வரும் வினைச்சொற்களும் முற்று என்றே பெயர் பெறும்.

> எவ்வயின் வினையும் அவ்வியல் நிலையும் (சொல். 428)

என்பது நூற்பா. எ.கா: யார், எவன், இல்லை, வேறு – இவை இடம் உணர்த்தாமையின் மேற்கூறிய இலக்கண வரையறையில் அடங்காது.

❖ முற்றுச் சொற்கள் பல தொடர்ந்து ஒரு பெயரையே முடிபாகக் கொண்டாலும் வழுவில்லை.

> அவைதாம்
> தத்தம் கிளவி அடுக்குந வரினும்
> எத்திறத் தானும் பெயர்முடி பினவே (சொல். 429)

என்பது நூற்பா. எ.கா: உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் சாத்தன்; நல்லன் அறிவுடையன் செவ்வியன் சான்றோர் மகன். அடுக்காது பெயரோடு முடிதலே பெரும்பான்மை. எ.கா: வந்தான் வழுதி, கரியன் மால்.

## 13.3 எச்சங்கள்

தாமே தொடராதற்கு உரிய நிலையின்றிப் பிற சொற்களின் உதவியால் முற்றுப் பெற நிற்பன எச்சமாகும். அவை பிரிநிலையெச்சம், வினையெச்சம், பெயரெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறையெச்சம், உம்மையெச்சம், எனவென் எச்சம், சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் எனப் பத்து வகைப்படும்.

பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி
(சொல்.430) என்பது நூற்பா.

### 13.3.1 பிரிநிலையெச்சம்

பல பொருளில் ஒன்று பிரிந்த வழி, பிரிக்கப்பட்ட பொருண்மையும் தோன்ற நிற்பது பிரிநிலையெச்சமாகும். இது பிரிக்கப்பட்ட பொருளை உணர்த்தும் சொல்லோடு முடியும். இது ஏகாரப் பிரிநிலையும் ஓகாரப் பிரிநிலையும் என இரு வகைப்படும்.

அவற்றுள்
பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின (சொல். 431)

என்பது நூற்பா. எ.கா: தானே கொண்டான் – ஏகாரப் பிரிநிலையெச்சம், தானோ கொண்டான் – ஓகாரப் பிரிநிலையெச்சம். இவை பிறர் கொண்டிலர் எனப் பிரிக்கப்பட்ட பொருளை உணர்த்தும் சொல்லால் முடிந்துள்ளன.

### 13.3.2 வினையெச்சம்

❖ ஒரு சொல் தனக்கு முடிக்கும் சொல்லாகத் தெரிநிலை வினைச் சொல்லையோ, அன்றிக் குறிப்பு வினைச் சொல்லையோ கொண்டு நிற்பின் அது வினையெச்சமாகும்.

இவ்வினையெச்சத்தில் குறிப்பு வினை ஆக்க வினையோடு வரும்.

**குறிப்பு**

வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே (சொல். 432)

என்பது நூற்பா. எ.கா: உழுது வந்தான் – தெரிநிலை வினையெச்சம்; மருந்துண்டு நல்லனாயினான் – குறிப்பு வினையெச்சம்.

❖ வினையெச்சங்கள் வினையியலிற் கூறிய இலக்கணத்தனவன்றிப் பிறவாறும் தோன்றும்.

வினையெஞ்சு கிளவி வேறுபல் குறிய (சொல். 457)

என்பது நூற்பா. மேற்கூறப்பட்ட வினையெச்சமும் வேறுபட்ட பல இலக்கணத்தை யுடையது என்பது இந்நூற்பாவின் பொருளாகும். செய்தென் எச்சம் வினைமுதல் வினையேயன்றிப் பிற வினையும் கொள்ளுதல், உகர ஈறாக வரும் செய்தென் எச்சம் ஓடி, எஞ்சி என இகர ஈறாகத் திரிந்தும் ஆய், போய் என யகர வொற்றாகத் திரிந்தும் வருதல், முற்றுப் பொருளையே தரும் வினைமுற்று எச்சமாகத் திரிந்து வருதல், வினையைக் கொண்டு முடியும் வினையெச்சம் முடிக்குஞ் சொல்லை விசேடித்து வருதல் ஆகியன அவ்வகையினவாகும்.

## 13.3.3 பெயரெச்சம்

ஒரு சொல் தனக்கு முடிக்குஞ் சொல்லாகப் பெயரைக் கொண்டு நிற்பின் அது பெயரெச்சமாகும். இது செய்யும், செய்த என்னும் வாய்பாட்டில் வரும்.

பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே (சொல். 433)

என்பது நூற்பா. எ.கா: உண்ணுஞ் சாத்தன், உண்ட சாத்தன்.

## 13.3.4 ஒழியிசை யெச்சம்

சொல்லப்பட்ட பொருளையன்றி ஒழிந்து நின்ற பொருளை எச்சமாகக் கொண்டு நிற்பது ஒழியிசை யெச்சமாகும்.

ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின (சொல். 434)

என்பது நூற்பா. இது மன்னை ஒழியிசை, தில்லை ஒழியிசை, ஓகார ஒழியிசை என முன்று வகைப்படும். எ.கா: கூரியதோர் வாள்மன், வருகதில் லம்ம வெம்சேரி சேர, கொளலோ கொண்டான்.

### 13.3.5 எதிர்மறையெச்சம்

ஒரு பொருளைக் கூறியவழி அதற்கு மாறுபட்ட பொருளையும் அதனாலே உணர நிற்பது எதிர்மறை எச்சமாகும். இது எதிர்மறையில் வரும் சொல்லைத் தமக்கு முடிபாகக் கொண்டு வரும்.

எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின (சொல். 435)

என்பது நூற்பா. இதனை 'மாறுகொள் எச்சம்' என்றும் வழங்குவர். இது ஏகார எதிர்மறை, ஓகார எதிர்மறை, உம்மை எதிர்மறை என மூன்று வகைப்படும். எ.கா: யானே கொள்வேன், யானோ கள்வன், வரலுமுரியன்.

### 13.3.6 உம்மையெச்சம்

❖ உம்மை கொடுக்க வேண்டிய வழி, அது எஞ்சி நிற்பின் உம்மையெச்சமாகும். அவ்வாறு ஒன்றற்கொன்று முடிவதும், முடிக்கப்படுவதுமாகிய உம்மையெச்சம் இரண்டனுள் ஓர் உம்மைக்குப் பொருந்திய வினையே மற்றொரு உம்மைக்கும் முடிபாய் வரும்.

உம்மை எச்சம் இருவீற் றானுந்
தன்வினை ஒன்றிய முடிபா கும்மே (சொல். 436)

என்பது நூற்பா. எ.கா: சாத்தனும் வந்தான் கொற்றனும் வந்தான்

❖ உம்மை எச்சத்தின் முன்னர் இருக்கும் சொல் உம்மை இல்லாத சொல்லாகவும், பின்னர் இருக்கும் சொல் உம்மையுடையதாகவும் வரின் நிகழ்காலத்தோடு எதிர்காலமும், இறந்த காலத்தோடு எதிர்காலமுமாக மயங்கி வரும். அவ்வாறு மயங்கி வரினும் இழுக்கில்லை.

தன்மேல் செஞ்சொல் வரூஉங் காலை

நிகழுங் காலமொடு வாராக் காலமும்
இறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலை யான (சொல். 437)

என்பது நூற்பா. உம்மையில்லாத சொல் 'செஞ்சொல்' எனப்படும். எ.கா: கூழுண்ணா நின்றான் சோறுமுண்பன் – நிகழ்காலத்தோடு எதிர்காலம் மயங்கி நின்றது; கூழுண்டான் சோறுமுண்பன் – இறந்தகாலத்தோடு எதிர்காலம் மயங்கி நின்றது.

### 13.3.7 எனவென் எச்சம்

எனவென்னும் சொல் எஞ்சி நிற்பது எனவென் எச்சமாகும். இது வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் ஆகிய ஆறு பெயரோடு வரும். வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்றாகிய செய்தென என்பதோடும் வரும். எனவே எனவென் எச்சம் ஏழு வகைப்படும். இவற்றுள் எண், பெயர் ஆகியவற்றோடு வரும் எனவென் எச்சம் வினை கொள்ளாது. செய்தென என்னும் வாய்பாட்டில் வரும் எனவென் எச்சம் வினையொடு முடிதல் வினையியலுள் கூறப்பட்டது. எனவே வினை, குறிப்பு, இசை, பண்பு என்னும் நான்கு சொற்களொடும் வரும் எனவென் எச்சம் வினையொடு முடிதலையே தொல்காப்பியர்,

எனவென் எச்சம் வினையொடு முடிமே (சொல். 438)

என இவ்வியலில் கூறியுள்ளார். எ.கா: கொள்ளெனக் கொடுத்தான் – வினை; துண்ணெனத் துடித்தது – குறிப்பு; ஒல்லென ஒலித்தது – இசை; காரெனக் கறுத்தது – பண்பு.

### 13.3.8 குறிப்பெச்சம்

குறிப்பெச்சம், இசையெச்சம், சொல்லெச்சம் ஆகிய மூன்றையும் தொல்காப்பியர்,

எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி யிலவென மொழிப (சொல். 439)

அவைதாம்

தத்தம் குறிப்பின் எச்சஞ் செய்யும் (சொல். 440)

என்னும் நூற்பாக்களில் விளக்குவர்.

சொற்படு பொருளன்றிச் சொல்லுவான் குறித்த பொருள் எஞ்சி நிற்பது குறிப்பெச்சமாகும். இது தானே எச்சமாக நிற்பதன்றித் தனக்கொரு முடிக்குஞ் சொல்லை வேண்டாதது. எ.கா: இளைதாக முள்மரங் கொல்க களையுநர், கைகொல்லுங் காழ்த்த விடத்து – இதில் தீயாரைக் காலத்தாற் களைக என்னும் தொடர்மொழி, எச்சமாய் நின்று குறிப்புப்பொருளை வெளிப்படுத்தலால் குறிப்பெச்சமாகும்.

## 13.3.9 இசையெச்சம்

ஒரு தொடர்மொழி எஞ்சி நிற்பது இசையெச்சமாகும். இது தானே எச்சமாக நிற்பதன்றித் தனக்கொரு முடிக்குஞ் சொல்லை வேண்டாதது. எ.கா: அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே உலகு – இதில் 'அதுபோல' என்னும் தொடர் எஞ்சி நிற்பது இசையெச்சமாகும்.

## 13.3.10 சொல்லெச்சம்

யாதானுமொரு சொல் எஞ்சி நிற்பது சொல்லெச்சமாகும். இது தானே எச்சமாக நிற்பதன்றித் தனக்கொரு முடிக்குஞ் சொல்லை வேண்டாதது. இது ஒரு சொற்கு முன்னும் பின்னும் எஞ்சி நிற்கும்.

சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்லது எஞ்சுதல் இன்றே (சொல். 441)

என்பது நூற்பா. எ.கா: உயர்திணையென்மனார் – இதில் 'ஆசிரியர்' என்னும் சொல் முன்னால் எஞ்சி நின்றது; மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே – இதில் 'எமக்கு' என்னும் சொல் பின்னால் எஞ்சி நின்றது.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. இசைநிறை அடுக்குக்கு எல்லை யாது?

…………………………………………………………………………………
……………………

2. வினைமுற்று என்றால் என்ன?

…………………………………………………………………………………
……………………

3. பிரிநிலையெச்சம் என்பதன் வரையறை கூறுக.

…………………………………………………………………………………
…………………….

4. ஒழியிசையெச்சம் என்பது யாது?

…………………………………………………………………………………
……………………..

5. சொல்லெச்சம் என்றால் என்ன?

…………………………………………………………………………………
……………………..

## தொகுத்தறிவோம்

சொற்கள் ஒன்றோடொன்று அடுக்கி வரின் அது 'அடுக்கு' எனப்படும். அது ஒருசொல் அடுக்கு, அசைநிலை அடுக்கு என இரு வகைப்படும். இவற்றுள் ஒருசொல் அடுக்கு இசை நிறை, அசை நிலை, பொருளொடு புணர்தல் என மூவகைப்படும். பிறிதோர் சொல்லை நோக்காது தானே தொடராதற்கு ஏற்கும் சொல் 'வினைமுற்று' எனப்படும். அது இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்காலத்திலும் வரும். தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடத்திலும் வரும். உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை என முத்திணையிலும்வரும். வினையைத் தெரிநிலை வினை, குறிப்பு வினை ஆகிய இரண்டிடத்தும் உறழ ஆறு வகைப்படும். தாமே தொடராதற்கு உரிய நிலையின்றிப் பிற சொற்களின் உதவியால் முற்றுப் பெற நிற்பன எச்சமாகும். அவை பிரிநிலையெச்சம், வினையெச்சம், பெயரெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறையெச்சம், உம்மையெச்சம், எனவென் எச்சம், சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் எனப் பத்து வகைப்படும்.

## அருஞ்சொற்பொருள்

அம்பல் – முகிழ்த்தல், அரும்பல்; வைப்பு - சேமநிதி

## உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. இசைநிறை அடுக்கு நான்கு முறை அடுக்கி வருதலை எல்லையாக உடையது. எனவே இது மூன்று முறையும் இரண்டு முறையும் கூட அடுக்கி வரலாம்.

2. பிறிதோர் சொல்லை நோக்காது தானே தொடராதற்கு ஏற்கும் சொல் 'வினைமுற்று' எனப்படும்.

3. பல பொருளில் ஒன்று பிரிந்த வழி, பிரிக்கப்பட்ட பொருண்மையும் தோன்ற நிற்பது பிரிநிலை எச்சமாகும்.

4. சொல்லப்பட்ட பொருளையன்றி ஒழிந்து நின்ற பொருளை எச்சமாகக் கொண்டு நிற்பது ஒழியிசை யெச்சமாகும்.

5. யாதானுமொரு சொல் எஞ்சி நிற்பது சொல்லெச்சமாகும்.

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. ஒருசொல் அடுக்கு, அசைநிலை அடுக்கு பற்றி விவரி.

2. வினைமுற்று என்றால் என்ன? அதன் இயல்புகளை எடுத்துரைக்க.

3. எச்சத்தின் வகைகளைக் கட்டுரைக்க.

## கூறு – 14:

## தொல்காப்பியம் – சொல் – எச்சவியல் – நூற்பா 45 முதல் 67 வரை

**அமைப்பு**

அறிமுகம்

நோக்கங்கள்

14.1 மரபு ஒழிபு

14.1.1 அவையல் கிளவி

14.1.2 இரத்தல் கிளவி

14.1.3 இலக்கண நெறியாலன்றி வழக்கு நெறியால் வருவன

14.1.4 குறிப்பு மொழி

14.1.5 முன்னிலைச்சொல்

14.1.6 சிறப்பிக்கும் சொல்லும் சிறப்பிக்கப்படும் சொல்லும்

14.1.7 உடனிலை போற்றல்

14.1.8 குறிப்பில் தருமொழி

14.1.9 ஒரு பொருள் இரு சொல்

14.1.10 ஒருமை சுட்டிய பெயர்

14.1.11 முன்னிலை சுட்டிய பெயர்

14.1. 12 கடிசொல்

14.2 புறனடை

உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.

தொகுத்தறிவோம்

அருஞ்சொற்பொருள்

உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்

## அறிமுகம்

தொல்காப்பியர் எச்சவியலில் அவையல் கிளவி, இரத்தல் கிளவி, இலக்கண நெறியாலன்றி வழக்கு நெறியால் வருவன, குறிப்பு மொழி, முன்னிலைச் சொல், சிறப்பிக்கும் சொல்லும் சிறப்பிக்கப்படும் சொல்லும், உடனிலை போற்றல், குறிப்பில் தருமொழி, ஒரு பொருள் இரு சொல், ஒருமை சுட்டிய பெயர், முன்னிலை சுட்டிய பெயர், கடிசொல் ஆகியவற்றை மரபு ஒழிபுகளாக மொழிவர்.

## நோக்கங்கள்

- மரபு ஒழிபுகளை விளக்குதல்
- புறனடையை எடுத்துரைத்தல்

## 14.1 மரபு ஒழிபு

### 14.1.1 அவையல் கிளவி

பெரியோர் அவைக்கண் வழங்கத்தகாத சொற்களை வழங்க வேண்டிய இன்றியமையாமை வந்தால் அச்சொற்களை மறைத்துச் சொல்ல வேண்டும்.

அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல் (சொல்.442)

என்பது நூற்பா. எ.கா: ஆன்முன் வரூஉம் ஈகார பகரம், கண்கழீஇ வருதும் கான்மேல் நீர் பெய்து வருதும், கருமுக மந்தி, செம்பினேற்றை, புலிநின் றிறந்த நீரல்லீரத்து என்பன இடக்கர் வாய்பாடு மறைத்து பிறவாய்பாட்டாற் கூறப்பட்டன.

### 14.1.2 இரத்தல் கிளவி

ஒருவன் ஒரு பொருளை இரக்கும் பொழுது வழங்கும் சொற்களில் ஈ, தா, கொடு என்னும் மூன்றும் வரையறுத்துச் சொல்லும் நெறியுடையன. இரந்து நிற்போனுள் இழிந்தோன் 'ஈ' என்ற சொல்லாலும், ஒப்போன் 'தா' என்ற சொல்லாலும், உயர்ந்தோன் 'கொடு' என்ற சொல்லாலும் சொல்லுதல் வேண்டும். இவற்றுள் கொடு என்பது படர்க்கைச் சொல்லாகும். அது தன்னைப் பிறன்போற் கூறுமிடத்துத் தன்மை இடத்திற்குரியதாய் வருதலும் உண்டு. இதனை,

ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி யாகிட னுடைய (சொல்.444)

அவற்றுள்
ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே (சொல். 445)

தாவென் கிளவி ஒப்போன் கூற்றே (சொல். 446)

கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே (சொல். 447)

கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்
தன்னைப் பிறன்போல் கூறுங் குறிப்பில்
தன்னிடத் தியலும் என்மனார் புலவர் (சொல். 447)

என்னும் நூற்பாக்கள் விளக்கும். எ.கா: சோறு ஈ, ஆடை தா, சாந்து கொடு.

## 14.1.3 இலக்கண நெறியாலன்றி வழக்கு நெறியால் வருவன

ஒரு திணைச் சொல்லை ஏனைத் திணைச் சொல்லால் வழங்கும் பெயர்நிலைக் கிளவியின் ஆகுநவும், திசைச்சொற்களில் வாய்பாடு திரிந்து வரும் திசைநிலைக் கிளவியின் ஆகுநவும், முதுசொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வரும் தொன்னெறி மொழிவயின் ஆகுநவும், பொருண்மயக்கமாகிய பிசிச் செய்யுட்கண் திணை முதலாயின திரிந்து வரும் மெய்ந்நிலை மயக்கின் ஆகுநவும் மந்திரப் பொருட்கண் அப்பொருட்குரிய சொற்களால் வரும் மந்திரப் பொருள்வயின் ஆகுநவும் ஆகிய இவையனைத்தும் இலக்கண நெறிக்குப் பொருத்தமிலவேனும் வழக்கில் அவை கடியப்படாது.

பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்
அன்றி யனைத்துங் கடப்பா டிலவே (சொல். 449)

என்பது நூற்பா. எ.கா: ஓரெருத்தை நம்பி எனல், ஒரு கிளியை நங்கை எனல் – பெயர்நிலை வழக்கு; புலியான், பூசையான் – திசை நிலைக் கிளவி; யாற்றுட் செத்த எருமையீர்த்தல் ஊர்க்குயவர்க்குக் கடன் – தொன்னெறி மொழி; சிலேடையாக அமைவது மெய்ந்நிலை வழக்கு; மந்திரம் வல்லார்வாய்க் கேட்டுணர்க என்பர் சேனாவரையர்.

## 14.1.4 குறிப்பு மொழி

வாராதனவற்றை வருவனவாகக் கூறுவனவும், சொல்லாதனவற்றைச் சொல்லுவனவாகக் கூறுவனவும் வழுவாயினும் சொல்லுவான் கருத்து வகையான் வழுவற்றன என்று கருதப்படும்.

வாரா மரபின வரக்கூ றுதலும்

என்னா மரபின எனக் கூ றுதலும்
அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன என்னுங் குறிப்புரை யாகும் (சொல்.422)

என்பது நூற்பா. எ.கா: அந்நெறி யீண்டு வந்து கிடந்தது – வாரா மரபின வரக் கூறுதல்; அவல் அவல் என்கின்றன நெல் – என்னா மரபின எனக் கூறுதல்.

### 14.1.5 முன்னிலைச்சொல்

❖ 'செய்யாய்' என்னும் வாய்பாட்டதாகிய முன்னிலை முற்றுச்சொல் 'ஆய்' என்னும் ஈறு கெட 'செய்' என்னும் சொல்லாய் நிற்றலும் உண்டு.

செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்என் கிளவி யாகிடன் உடைத்தே (சொல். 450)

என்பது நூற்பா. 'ஆகிடனுடைத்து' என்றதனால் 'செய்யாய்' என ஈறு கெடாது நிற்றலே பெரும்பான்மை என்பதாம்.

எ.கா: உண்ணாய், தின்னாய், கிடவாய், நடவாய், தாராய், வாராய், போவாய் என்பன ஈறுகெட உண், தின், கிட, நட, தா, வா, போ எனச் செய்யென் கிளவி ஆயின.

❖ முன்னிலை வினைச்சொல் முன் வரும் ஈகாரமும் ஏகாரமும் அம்முன்னிலை வினைச்சொற்கு ஏற்ற மெய்யெழுத்தை ஊர்ந்து வரும்.

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே (சொல். 451)

என்பது நூற்பா. எ.கா: **சென்றீ** பெருமநிற் றகைக்குநர் யாரே, அட்டிலோலை தொட்டனை **நின்மே.**

## 14.1.6 சிறப்பிக்கும் சொல்லும் சிறப்பிக்கப்படும் சொல்லும்



❖ சிறப்பிக்கும் சொல், சிறப்பிக்கப்படும் சொல் என சொல் இருவகைப்படும். உதாரணமாக, கருங்குதிரை என்பதில் ‘கருங்’ சிறப்பிக்கும் சொல் ‘குதிரை’ சிறப்பிக்கப்படும் சொல். சிறப்பிக்கும் சொல்லை வேறுபடுக்கும் சொல் என்றும் விசேடிக்கும் சொல் என்றும் கூறுவர். சிறப்பிக்கப்படும் சொல்லை வேறுபடுக்கப்படும் சொல் என்றும் விசேடிக்கப்படும் சொல் என்றும் கூறுவர். அவ்வகையில் இடைச்சொற்கள் எல்லாம் சிறப்பிக்கும் சொல்லாகவே வரும்.

இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே (சொல். 455)

என்பது நூற்பா. இதனால் இடைச்சொல் ஒரு ஞான்றும் சிறப்பிக்கப்படும் சொல்லாக ஆகா என நியமித்தவாறு என்பர் சேனாவரையர்.

❖ உரிச்சொற்கள் சிறப்பிக்கும் சொல்லாகவும் வரும்; சிறப்பிக்கப்படும் சொல்லாகவும் வரும்; இரண்டற்கும் பொதுவாகவும் வரும்.

உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய (சொல். 456)

என்பது நூற்பா. உறு, தவ, நனி, ஏ என்பன போல்வன சிறப்பிக்கும் சொற்களாகவே வரும். எ.கா: உறுபொருள், தவப்பல, நனிசேய்த்து, ஏகல்லடுக்கம். குரு, கெழு, செல்லல், இன்னல் போல்வன சிறப்பிக்கும் சொல்லாகவும் சிறப்பிக்கப்படும் சொல்லாகவும் வரும். எ.கா: குருமணி, கேழ்கிளரகலம், செல்லனோய், இன்னற் குறிப்பு – சிறப்பிக்கும் சொல்லாக வருதல்; விளங்கு குரு. செங்கேழ், அருஞ்செல்லல், பேரின்னல் – சிறப்பிக்கப்படும் சொல்லாக வருதல்.

### 14.1.7 உடனிலை போற்றல்

வழக்கினுள் ஒருங்கு நிற்றற்குத் தகுதி இல்லாத மாறுபாடுடைய சொற்கள் ஒருங்கு நிற்பினும் இழுக்கில்லை.

உரையிடத் தியலும் உடனிலை அறிதல் (சொல். 458)

என்பது நூற்பா. எ.கா: இந்நாழிக் கிந்நாழி சிறிது பெரிது – இதில் சிறிது, பெரிது என்பன மாறுபாடுடைய சொற்கள். இவை ஒருங்கு நிற்பதற்குரியன அல்ல. இருப்பினும் பொருளில் வழுவின்றி வந்துள்ளன. 'மாறுபாடுடையன உடனிற்றல்' எழுவகை வழுவினுள் ஒன்று அன்மையான், இதனைக் கிளவியாக்கத்துட் கூறாது ஈண்டுக் கூறினார்.

### 14.1.8 குறிப்பில் தருமொழி

சொல்லானன்றி சொல்லுவான் குறிப்பினால் பொருள் உணரப்படும் சொற்களும் பல உள. அவற்றையும் அறிந்து போற்றுக.

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே
இன்ன வென்னுஞ் சொன்முறை யான (சொல். 459)

என்பது நூற்பா. எ.கா: குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர் – இதனால் பெருஞ் செல்வத்தர் என்பது குறிப்பால் பெறப்படும்.

### 14.1.9 ஒரு பொருள் இரு சொல்

ஒரு பொருளைக் குறிக்கும் இரண்டு சொற்கள் பொருள் வேறுபாடின்றித் தொடர்ந்துவரின் அவற்றையும் ஏற்றுக் கொள்க.

ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார் (சொல். 460)

என்பது நூற்பா. எ.கா: நிவந்தோங்கு பெருமலை – இதில் நிவத்தல், ஓங்கல் இரண்டும் 'உயர்தல்' என்னும் ஒரு பொருள் குறித்து வந்தன.

## 14.1.10 ஒருமை சுட்டிய பெயர்

ஒருமையைக் குறிக்கும் பெயர்ச்சொற்களில் சில பன்மைக்கும் உரியனவாகும்.

> ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
> பன்மைக் காகும் இடனுமா ருண்டே (சொல். 461)

என்பது நூற்பா.எ.கா: ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப – இதில் ‘தாய்’ என்னும் ஒருமைப்பெயர் ‘இளையர்’ என்பதனால் ‘தாயர்’ என்னும் பன்மை உணர்த்தியது.

## 14.1.11 முன்னிலை சுட்டிய பெயர்

முன்னிலை குறித்த ஒருமைச்சொல் பன்மைச் சொல்லோடு முடிதலும் உண்டு. இம்முடிபு ஆற்றுப்படைச் செய்யுளிடத்துப் போற்றி உணரப்படும்.

> முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
> பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே
> ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும் (சொல். 462)

என்பது நூற்பா. எ.கா: கூத்தராற்றுப்படையுள் ‘கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ’ என நின்ற ஒருமைச்சொல் ‘ இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்’ என்னும் பன்மைச் சொல்லோடு முடிந்தது.

## 14.1. 12 கடிசொல்

அவ்வக் காலத்துத் தோன்றி வழங்கப்படுமாயின் அச்சொற்களைத் தொன்றுதொட்டு வழங்கப்படுவன அல்ல என்று கடியப்படுதல் இல்லை.

> கடிசொல் இல்லைக் காலத்துப் படினே (சொல்.452)

என்பது நூற்பா. எ.கா: சம்பு, சள்ளை, சட்டி, சமழ்ப்பு – இவை தொன்று தொட்டு வந்தனவாயின் முதலாகாதனவற்றின்கண், ‘சகரக் கிளவியு மவற்றோ ரற்றே, அ ஐ ஔ வெனு மூன்றலங்

கடையே' (எழுத். 62) என விலக்கார் ஆசிரியர். அதனான் அவை பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாம்.

## 14.2 புறனடை

இவ்வதிகாரத்தில் வழக்கு, செய்யுள் ஆகிய இரண்டிற்கும் கூறப்பட்ட சொற்கள் பலவுள. அவற்றுள் பல விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சில நுண்ணுணர்வுடையோர் உய்த்துணருமாறு கூறப்பட்டுள்ளன. அவற்றைத் தொன்னூல்களின் துணை கொண்டு உரை கூறியும் சொற்களைப் பிரித்துக் காட்டியும் அமைத்துக் கொள்க.

செய்யுள் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பல்வேறு செய்தியின் நல்நெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரிந்தனர் காட்டல் (சொல்.463)

என்பது நூற்பா.

---

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

---

குறிப்பு:

- உங்கள் பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடத்திலோ அல்லது வெற்றிடத்திலோ எழுதுக
- நீங்கள் எழுதிய பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு உங்கள் முன்னேற்றத்தை அறிக.

1. அவையல் கிளவி என்றால் என்ன?

……………………………………………………………………………
……………………

2. இரத்தல் கிளவிகளைச் சுட்டுக.

……………………………………………………………………………
……………………

3. குறிப்பில் தருமொழி என்பது யாது?

………………………………………………………………………………
……………………….

4. ஒருபொருள் இருசொல் தொடர்ந்து வருதலுக்குச் சான்று கூறுக.

………………………………………………………………………………
………………………..

5. முன்னிலை குறித்த ஒருமைச்சொல் பன்மைச் சொல்லோடு முடிதல் எந்த இலக்கியத்தில் போற்றி உணரப்படும்?

………………………………………………………………………………
………………………..

**தொகுத்தறிவோம்**

அவையல் கிளவி, இரத்தல் கிளவி, இலக்கண நெறியாலன்றி வழக்கு நெறியால் வருவன, குறிப்பு மொழி, முன்னிலைச் சொல், சிறப்பிக்கும் சொல்லும் சிறப்பிக்கப்படும் சொல்லும், உடனிலை போற்றல், குறிப்பில் தருமொழி, ஒரு பொருள் இரு சொல், ஒருமை சுட்டிய பெயர், முன்னிலை சுட்டிய பெயர், கடிசொல் என்பன தொல்காப்பியர் எச்சவியலில் குறிப்பிடும் மரபு ஒழிபுகளாகும்.

**அருஞ்சொற்பொருள்**

கருமுகமந்தி – பெண்குறி; செம்பினேற்றை – ஆண்குறி; நீரல்லீரம் – மூத்திரம்.

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்**

1. பெரியோர் அவைக்கண் வழங்கத்தகாத சொற்கள் அவையல் கிளவி எனப்படும்.

2. ஈ, தா, கொடு.

3. சொல்லானன்றி சொல்லுவான் குறிப்பினால் பொருள் உணரப்படும் சொற்கள் குறிப்பில் தருமொழி எனப்படும்.

4. நிவந்தோங்கு.

5. ஆற்றுப்படை.

**இறுதித் தேர்வு மாதிரி வினாக்கள்**

1. அவையல் கிளவி, இரத்தல் கிளவி – விளக்குக.

2. இலக்கண நெறியாலன்றி வழக்கு நெறியால் வருவனவற்றைத் தொகுத்துரைக்க.

3. குறிப்பு மொழி, முன்னிலைச்சொல் – விளக்குக.

4. சிறப்பிக்கும் சொல்லும் சிறப்பிக்கப்படும் சொல்லும் குறித்து எழுதுக.

5. குறிப்பில் தருமொழி - விளக்குக.

**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**

தொலைநிலைக் கல்வி இயக்ககம்

**தாள்: 10754 – தொல்காப்பியம் – சொல் – சேனாவரையம்**

**(**மாதிரி வினாத்தாள்**)**

காலம்: 3.00 மணி மொத்த மதிப்பெண்: 75

**பகுதி - அ**

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.**

(10 X2= 20)

1. பலவின்பால் ஈறுகளைச் சுட்டுக.
2. செயப்படுபொருளைப் பொருளாகக் கொண்டு வரும் வேற்றுமை எது?
3. பொருள் மயக்கப் பொருள்கள் இரண்டினைச் சுட்டுக.
4. விளியேற்கும் உயிரீறுகள் யாவை?
5. நம்மூர்ந்து வரும் இகர ஐகாரப் பெயர்களைக் கூறுக.
6. வினைச்சொல்லின் பொதுவிலக்கணம் யாது?
7. பெயரெச்ச வாய்பாடுகளைச் சுட்டுக.
8. எண்ணிடைச்சொற்கள் இரண்டினைக் கூறுக.
9. மிகுதிப் பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள் யாவை?
10. சொல்லெச்சம் என்றால் என்ன?

**பகுதி – ஆ**

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

(5 X5= 25)

11. அ) ‘பால்பிரிந்திசையா உயர்திணை மேன’ – விளக்குக.

(அல்லது)

ஆ) மூன்றாம் வேற்றுமை குறித்தெழுதுக.

12. அ) ஒரு பொருளில் ஈருருபு மயங்குதலைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) புள்ளியீற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்றலை எழுதுக.

13. அ) காரணம் பற்றி வரும் உயர்திணைப்பெயர்கள் குறித்தெழுதுக.

(அல்லது)

ஆ) படர்க்கைப் பன்மை வினைமுற்று பற்றி விளக்குக.

14. அ) அசைநிலையாக வரும் இடைச்சொற்கள் பற்றிக் கூறுக

(அல்லது)

ஆ) 'கடி' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்களைச் சான்றுடன் விளக்குக.

15. அ) இயற்சொல், திசைச்சொல் – வரையறை கூறுக.

(அல்லது)

ஆ) வினைமுற்றின் இலக்கணங் கூறுக.

**பகுதி –இ**

**எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க**
(3 X 10 = 30)

16. செப்பு, வினா வழுவமைதிகள் குறித்துக் கட்டுரைக்க.
17. விரவுப்பெயர்கள் குறித்து விவரி.
18. உயர்திணைக்குரிய தெரிநிலை வினை பற்றி எடுத்துரைக்க.
19. தத்தம் குறிப்பில் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் குறித்துக் கட்டுரைக்க.
20. மொழிபுணர் இயல்பு பற்றி விவரிக்க.

**நூலாக்கம்:**

முனைவர் சு.இராசாராம்
பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி – 630 003